

# திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய தேவாரம்

## திருஎருக்கத்தம்புலியூர்

---

பண். குறிஞ்சி. 3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனாயிடு கங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த்தகு கோயில்,
விடையான் அடியேத்த மேவா வினைதானே. (1)

இலையார் தருசூலப் படையெம் பெருமானாய்
நிலையார் மதில்மூன்று நீறாய் விழவெய்த
சிலையான் எருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையான் அடியேத்தக் கருதா வினைதானே. (2)

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தி
பெண்ணாண் அலியாகும் பித்தா பிறைசூடி
எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற
அண்ணா எனவல்லார்க்கு அடையா வினைதானே. (3)

அரையார் தருநாகம் அணிவான் அலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையான் எருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே. (4)

வீருர் முலேயாளேப் பாகம்மிக வைத்துச்
சீருவரு காலன் சினத்தை யழிவித்தான்
ஏருன் எருக்கத்தம் புலியூர் இறையானே
வேரு நினேவாரை விரும்பா வினேதானே. (5)

நகுவெண் டலேயேந்தி நானுவிதம் பாடிப்
புகுவர னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவான் எருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினேதானே. (6-7)

ஆவாவென அரக்கன் அலற அலர்த்திட்டுத்
தேவாஎன அருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே எருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவேஎன அல்லல் தீர்தல் திடமாமே. (8)

மறையான் நெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத்தின் தொத்தே
இறையான் எருக்கத்தம் புலியூரிடங் கொண்ட
கறையார் மிடற்ருனைக் கருதக்கெடும் வினேயே. (9)

புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையும் சோதி யுமையோடும்
நித்தன் எருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்தன் அறவன்றன் அடியே அடைவோமே. (10)

ஏரார் எருக்கத்தம் புலியூர் உறைவானேச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா அருந்தமிழ் மாலேயிவை வல்லார்
பாரா ரவரேத்தப் பதிவான் உறைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்: திருநீலகண்டர்.
தேவி: நீலமலர்க்கண்ணி.

## அருணகிரிநாதர் அருளிச்செய்த
## திருப்புகழ்.

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன்—விடுதூதும்

போற்ருய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்ரு ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியினர் — அமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமதம் — அகிலாரும்

மாப்பூ ணாரங் கச்சாணி முலேயினர்
வேட்பூ ணுகங் கெட்டன னுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட —அருளாயோ

ஆத்தாள் மால்தங் கைச்சிக ளிகையுமை
கூத்தா டானந் தச்சிவ திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி — புவனேசை

ஆக்கா யாவும் பற்றிய திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளே
யாட்டா வீசன் பக்கம துறைபவள் — பெறுசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு—முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வர்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணயன் பட்டின மருவிய — பெருமாளே

## திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாறு

திருஎருக்கத்தம்புலியூரிலே பாணர் குலத்திலே திருநீலகண்ட யாழ்ப்பாணரென்று ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனின் திருப்புகழை யாழிலிட்டுப் பாடுவாராகி சோழநாட்டுத்தலங்களுக்கெல்லாம் சென்றுபாடி, பாண்டி நாட்டிலுள்ள மதுரை சென்று சொக்கலிங்கமூர்த்தியின் சந்நிதியில் நின்று யாழ் வாசித்தார், அதனை சொக்கலிங்கமூர்த்தி கேட்டு அன்றிரவு அடியார்களுடைய சொப்பனத்தில் யாழ்ப்பாணரை தன் சந்நிதிக்கு நாளை காலையில் அழைத்துவரக் கட்டளையிட அங்ஙனமே அவர்கள் அழைத்து வந்தார்கள். அப்போது ஈரத்தில் நின்று யாழ் வாசித்தால் கீதம் கெடுமாதலால் ஒரு பொற் பலகையிடுங்களென்று அசரீரி சொல்ல அதன்படி இடப்பட்ட பலகைமேலிருந்து யாழ் வாசித்தார். சில காலம் இங்கு இப்படி பாடி திருவாரூர் திருக்கோயிலை யடைந்து யாழ் வாசிக்கக்கேட்டு பரமசிவன் வடதிசையில் ஒரு திருவாயில் வகுக்க அதன்வழி உட்சென்று வணங்கினார் நெடுநாளான பின் அவ்வூரைவிட்டு நீங்கி சீர்காழி வந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது திருவடிகளை வணங்கி அவர் பாடியருளிய திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசிக்கும் பெரும்பேறு பெற்று, பிறகு பல தலங்களுக்குச் சென்று பாடி அவருடன் தம் பதியாகிய திருஎருக்கத்தம்புலியூருக்கு வந்து வீருமுலையம்மை சமேதராகிய திருக்குமரேசுரரின் பதிகத்தை யாழிலிட்டுப்பாடி தரிசித்து பின் பல தலங்கள் சென்று நல்லூர் பெருமணத்தில் திருஞானசம்பந்தருடைய திருமணத்தில் எழுந்த சோதியுள் திருஞானசம்பந்தருடன் கலந்தார்.

இங்ஙனம்,

12, பழஞ்சாலியத்தெரு,
சிதம்பரம்.
27—6—1961.

சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர்
**சபா. சிவப்பிரகாசம் பிள்ளை.**

## பதிப்பாளர் வரலாறு.

உலகில் மக்களாகப் பிறந்த நாம் 'பணி செய்து கிடப்பதே' என்பதை உணர்ந்து சிவத் திருப்பணி செய்ய திரு உளம் கொண்ட திரு எருக்கத்தம்புலியூர் வாசியாகிய ஆட்கொண்டநத்தம் பெருமாள் பிள்ளை திருமகனார் விஸ்வராய உயர்திருவாளர் கோவிந்தராஜம் பிள்ளை அவர்கள் வைணவராய் இருந்தும் நாடோறும் வழுவாது திரு எருக்கத்தம்புலியூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள வீருமுலையம்மை சமேதராகிய திருக்குமரேஸ்வரர் ஆலயத்தை வழிபட்டு வந்த சிவபுண்ணியத்தாலே தனக்கு நடக்கும் அறுபானாண்டு பொன் விழாவில் யாவருக்கும் பயன்படும்படி ஏதாமொரு சிவபுண்ணியம் செய்ய எண்ணி திரு எருக்கத்தம்புலியூர் புராணத்தை அச்சிட விரும்பி அவ்வூர் முன்னோர்களால் தேடி பனை ஏட்டில் எழுதிவைத்திருந்த புராணத்தைப் பார்த்து சிலர் எழுதிவைத்திருந்த கையெழுத்துக் காகிதப் பதிப்பை அச்சிட்டு உதவ தனது உடல் பொருள்களால் பெருமுயற்சியுடன் சிவப்பணி செய்த அவர்களுக்கு நீடிய ஆயுளும் நிறைந்த செல்வமும் வழிவழி விளங்கவரும் சந்ததியும் உண்டாக வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
நன்றிமறவாத

சிதம்பரம்
12, பழஞ்சாலியத் தெரு
26—7—1961.

**சபா. சிவப்பிரகாசம் பிள்ளை**
சுத்தாத்துவித சைவ
சித்தாந்தப் பேராசிரியர்.

ஸ்ரீ கற்பகந் துணை.
மெய்கண்டமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருஎருக்கத்தம்புலியூர் புராண மூலமும்-உரையும்
என்னும் நூலை திருத்தியருளிய

## உயர்திரு சபா. சிவப்பிரகாசம் பிள்ளையவர்களின்

## வரலாறு.

தரிசித்தமாத்திரத்திலே முத்தியளிக்கவல்ல சிதம்பரத்தையடுத்த வீரசோழகன் என்னும் ஊரில் கார்காத்த சைவ வேளாளர் பெரிய குடும்பத்தில் சபாபதிப் பிள்ளைக்கும் அம்புஜம்மையாருக்கும் ஆறாவது மகவாக 1872-ல் (ஆங்கிரச) ம. உடையூரில், அம்மான் இல்லத்தில் மெய்கண்டார் சிவப்பேறு அடைந்த தினமான ஐப்பசி அமாவாசை சுவாதியில் தோன்றினர்.

ஒன்றைவிட்ட அம்மானாகிய மகாவித்வான் பெருங்கிலக்கிழார் சுப்பிரமணியப் பிள்ளை என்பார் இவருக்கு ஏழுவயதில் சிவதீட்சையும் செய்வித்து பன்னிரண்டு வயதிற்குள் சிறிது ஆங்கிலமும், தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் கற்பிக்க கற்று வல்லர் ஆனார். அப்போதே சித்திரக்கவி முதலான பலகவிகளும் இயற்றும் ஆற்றல் பெற்றார். அரசாங்கத்திரவிய சகாயம்பெறும் தமிழ்க்கல்விச்சாலை வைத்தார்.

1890-ல் ஆசிரியர் போதனாமுறை நற்சாட்சியும் பெற்றார். பல கிராமங்களில் தமிழ் பயிற்றி கல்யாணசுந்தர அம்மையை திருமணம் செய்து கொண்டார். அவ்வம்மையார் கணவர் எண்ணியவெலாம் குறிப்பினாலேயுணர்ந்து பணிசெய்து கற்புக்கரசியென வாழ்ந்துவர ஞானானந்தவல்லி என்னும் ஒரு பெண் மகவையும், நடனசபேசன் என்னும் ஒரு ஆண் மகவையும் பெற்றார். இவ்வாறு இப்பெரியார் இல்லறம் நடத்திக்கொண்டு சிதம்பரத்தில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் கல்விச்சாலையில் தலைமை ஆசிரியர் பதவிபெற்று, ஆறுமுகநாவலர் மாணவரான தர்க்க



குடாரதாலுதாரி என்கின்ற திருஞானசம்பந்தம் பிள்ளையிடம் தருக்கநூல் கேட்டு, ஆடூரில் தமிழ்க்கல்விச்சாலை வைத்து எங்கும் தமிழையும், சைவத்தையும் வளர்த்து சில ஊர்களிலே சிவாலயங்களையும் கட்டுவித்தார்.

விசேட நிர்வாண தீட்சைபெற்று சிவபூசை வழுவாது செய்வாராயினர். செப்பறைச் சுவாமிகளென்னும் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளிடம் சித்தாந்த நூல்களைக் கேட்டார். சிதம்பரம் பச்சையப்பன் உயர்தரக்கல்விச்சாலையில் தமிழாசிரியராகவும், ஆறுமுகநாவலர் தமிழ்கல்லூரியில் தலைமைத்தமிழாசிரியராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். சித்தாந்த நூல்களை வேதனம் (சம்பளம்) பெறாது பிறருக்குக் கற்பித்து வந்தார். பலரை சிவபூசை செய்யுமாறு இயற்றுவித்தார்.

22—6—1930 விக்ருதியாண்டு ஆனித்திருமஞ்சனத் தேர் திருநாளன்று தில்லை நடராசர் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் தில்லைவாழந்தணர்கள் புகழ குடந்தை சைவப் புரவலர் திரு. ப. தி. சோ. குமாரசுவாமி செட்டியார் அவர்களால் இப்பெரியாருக்கு சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர் என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. முன்னம் சென்னை அறநிலையப் பாதுகாப்பாளராயிருந்த உயர்திரு. அ. உத்தண்டராமப் பிள்ளை, பி. ஏ. பி. எல்., ஐ. ஏ. எஸ். அவர்கள் கட்டளையின்மேல் திருப்பெண்ணாகடம் மெய்கண்டார் ஆலயத்தில் மெய்கண்டார் திருநட்சத்திரத்தில் ஆண்டுதோறும் சிவஞானபோதம் பன்னிரெண்டு சூத்திரங்களையும் பதினைந்து நாட்கள் சொற்பொழிவு செய்துவந்தார். திருக்கழிப்பாலை வார வழிபாட்டுச் சங்கத்தார் தில்லை சாதுக்கூடத்தில் கோடை விடுமுறையில் ஆசிரியர்களுக்கென சித்தாந்தப்பாடம் இப்பெரியாரைக்கொண்டு ஆண்டுதோறும் நடத்திவந்தார்கள்.

திருக்கழிப்பாலை வாரவழிபாட்டுச் சங்கத்தினருள் ஒருவராகிய திரு. சொக்கலிங்க முதலியாரின் முயற்சியால் சித்தாந்த நூல் யாவரும் எளிதில் கற்கவேண்டி, சிவஞான முனிவர் செய்தருளிய சிற்றுரைக்கு மாறுபடாது, சிவஞானபோதச் சிற்றுரைச் சுருக்கம் என்னும் ஒரு சிறுநூலை தமது எண்பதாவது

வயதில் இயற்றினர். அதனைச் சென்னை அறநிலையப் பாது காப்பாளராய் முன்னர் பணியாற்றிய திரு. அ. உத்தண்ட ராமப் பிள்ளையவர்கள் அரங்கேற்றினர். பின்னர் அச்சிறு நூலைக்கொஞ்சம் விரித்து சிவஞானபோதச் சிற்றுரையும், விளக்கமும் என்று எழுதியருள அது திருவெண்காட்டு ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான வெளியீடாக அச்சிட்டு வெளிவந்துள்ளது. பின் சிவஞான சித்தியாரை கல்வியில் வல்லவரே யன்றி ஏனைய எளியோரும் கற்றுணர்ந்து தமிழுலகம் உய்யும் வண்ணம் சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினாவிடை என்னும் ஓர் அரிய நூலை தனது எண்பத்தெட்டாவது வயதில் எழுதியருள, அது திருத்துறையூரிலே, அருணந்தி சிவாச்சாரியரின் சந்நிதியிலே முன்னுள் அறநிலையப் பாதுகாப்பாளராய் பணியாற்றிய திரு. அ. உத்தண்டராமப் பிள்ளையவர்கள் தலைமை வகிக்க 7—10—1960 அரங்கேற்றப்பெற்றது. அவர்களாலேயே இந்த ஸ்தலபுராண நூலும் திருத்தி யச்சிடப் பெற்றதால் இந்த தமிழுலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இத்துணை அரிய பெரிய சித்தாந்தச் செயலுடைய பெரியார் அவர்கள் இதற்கு மேலும் நூறாண்டு சந்ததியுடன் விளங்க இருந்து, இதுபோன்ற பல நூல்களை ஆக்கித்தரவும், திருத்தஞ் செய்யவும், வேண்டிய ஆற்றலுடன், சகல நன்மைகளையும் பெற்று நோயின்றி வாழ எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென முழுமுதலாகிய கடவுளை மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

இன்னணம்

**ஆதி. தியாக. தண்டபாணிச் செட்டியார்,**
சித்தார்த்த சிகாமணி,
பரங்கிப்பேட்டை.



சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் :
சபா. சிவப்பிரகாசம் பிள்ளை.

## இத்தலத்திற்குள்ள பெயர்க்காரணம்.

1. திருமுதுகுன்றத்திற்கு அருகே தேவகணங்கள் வந்து பழமலைநாதரை வணங்கி அதிகமான வரங்களும் எளிதில் முத்தியும் அடையக்கூடிய சிவஸ்தலம் எது என்று கேட்க பழமலையார் எருக்கத்தம்புலியூர் என்று சொல்ல அத்தேவகணங்களெல்லாம் ஆங்குச் சென்று அங்குள்ள சிவலிங்கத்தைப் பூசித்து வந்தபடியால் அத்தலத்திற்கு கணேசுரம் என்று பெயர்.

2. பரமசிவன் வேதப்பொருளைச் சொல்லும்போது பாராமுகமாகக் கேட்ட பார்வதியை வலைச்சியாகவென இட்ட சாபத்தைக் கேட்டு குமாரக்கடவுள் கோபித்து அங்கிருந்த அந்த ஏட்டை சமுத்திரத்திலே எறிய பரமசிவன் இட்ட சாபத்தால் ஊமையான குமரேசுரர் இங்கு வந்து பூசித்துத் தன் ஊமைத்தன்மை நீங்கிய படியால் குமரேசுரம் என்று ஒருபெயர் உண்டாயிற்று.

3. ஒரு புத்திரனைப் பெற விரும்பி இத்தலத்தில் வந்து தவஞ்செய்துகொண்டிருந்த பிராமணனைக்கொல்ல வந்த புலியைக்கொன்ற வேடன் அப்புண்ணியத்தால் புலிக்கால் முனிவராகப் பிறந்து இங்கு வந்து பூசித்த படியால் இத்தலத்திற்குப் புலியூரென்று ஒரு பெயர்.‡

4. மதுராபுரி அரசன் ஒருவன் புத்திரப்பேற்றை விரும்பி பல தலங்களில் வசித்து தரிசனம் செய்தும் புத்திரப்பேறு கிடைக்காமல், இத்தலத்திற்கு வந்து வசித்து தரிசித்தபடியால் ஒரு புத்திரன் பிறக்க அவனுக்கு இராஜேந்திரன் என்று பெயரிட்டான் அதனால் இத்தலத்திற்கு இராஜேந்திரபுரம் என்று ஒரு பெயர்.

‡ பரஞ்சோதி திருவிளையாடலிலும், இறையனர் அகப்பொருளுரையிலும் சொன்ன உருத்திரசன்மர் என்பதற்கு இது மாறுபாடுள்ளதாயிருக்கிறது.



5. இத்தலத்தின் பெருமையைக் கேட்ட நைமிசாரணிய முனிவர்களில் பலர் மரங்களாக இங்கு உருக்கொண்டு வசிக்க சில வேடர்கள் அம்மரங்களை வெட்டி விற்க ஆரம்பித்தபோது குமரேசர் எவரும் விற்பனைக்கென்று வெட்டாத வெள்ளெருக்க மரமாயிருக்கவெனக்கூறி மறைய அம்முனிவர்கள் வெள்ளெருக்க மரமாய் அங்கிருந்தார்கள் அதனால் இத்தலத்திற்கு எருக்கத்தம்புலியூர் என்று ஒரு பெயர். இது 12-வது சருக்கம்.

## எருக்கத்தம்புலியூர் தலபுராணத்திலுள்ளவை.

| | | சருக்கங்கள் |
|---|---|---|
| | பாயிரம் | 28 |
| 1. | நாட்டுச் சருக்கம் | 23 |
| 2. | நகரச் சருக்கம் | 35 |
| 3. | தேவகணச் சருக்கம் | 43 |
| 4. | குமாரர்பூசைச் சருக்கம் | 37 |
| 5. | திருப்பணிச் சருக்கம் | 15 |
| 6. | நகரணிச் சருக்கம் | 17 |
| 7. | திருவிழாச் சருக்கம் | 35 |
| 8. | சுவேதச் சருக்கம் | 38 |
| 9. | சுவேதனன் தவச் சருக்கம் | 37 |
| 10. | உச்சினி வேந்தன் குட்டந் தீர்ந்த சருக்கம் | 95 |
| 11. | இராசேந்திரச் சருக்கம் | 26 |
| 12. | முனீசுரர் சருக்கம். | 47 |
| | | 476 |

# பதிப்புரை

பிலவ ஆண்டு ஆடித்திங்கள் 11-ம் நன்னாள் (26—7—1961) புதன்கிழமை எனது மணிவிழா என்னும் அறுபானாண்டு நினைவுத் திருநாளின் நினைவு மலராக எல்லாம்வல்ல இறைவனது புண்ணிய மாகி பலருக்கும் உதவும்படி திருஎருக்கத்தம்புலியூர் புராணம் மூலமும்-உரையும் என்னும் ஒரு நூலை வெளியிடயெண்ணி இவ் வூர் அறிஞர்களாகிய முன்னோர்கள் தேடிவைத்திருந்த ஷைபுராணத் தின் பனையேட்டுச் சுவடியைப் பார்த்து எழுதி வைத்திருந்த கையெழுத்துக் காகிதபுத்தகத்தை யான் கொடுக்க ஏற்று திருத்தி அச்சிடக்கொடுத்தும், அச்சிட அச்சிட பிழைகளைத்திருத்தி அச்சிட்டு உதவிய சிதம்பரம் பழஞ்சாலியத்தெரு 12-ஆம் எண் இல்லத்தில் வாழும் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர் உயர்திரு. சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களுக்கும், அச்சிட உதவிய ஏனைய கிராமவாசிகளுக்கும், அச்சிட்ட சிதம்பரம் பாண்டியன் அச்சகத்தினர்க்கும் எனது மனமார்ந்த வந்தனம். இவர்களின் நன்றி மறக்கற்பாலதன்று. இவர்கள் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

இங்ஙனம்,

இராசேந்திரபட்டணம்
26—7—1961. } பெருமாள். கோவிந்தராஜுப் பிள்ளை.

# நூலாசிரியர் வரலாறு.

இராஜேந்திரப்பட்டணம் என்கிற திரு எருக்கத்தம்புலியூர் புராணம் மூலமும், உரையும் செய்தருளியவர் சிவப்பிரகாசர் என்பது மாத்திரம். அந்நூல் பாயிரம் 29-வது செய்யுளால் தெரியவருகிறது. ஏனையவை ஒன்றும் புலப்படவில்லை. ஆயினும் அப்புராணத்தைப் படித்துப் பார்த்ததில் அவர் மிக்க சைவரென்றும், திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாட்சரப் பற்று மிக்குடையவரென்றும் பரஞ்ஜோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் மிக்க பயிற்சி உடையவரென்றும் யாழ்ப்பாணம் நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் போன்று மக்கட்கு நன்னெறி போதிக்கவேண்டு மென்னும் விருப்பமுடைய ரென்றும் இசையிலும் சோதிடத்திலும் வல்லவரென்றும் சிறிது வேதாந்த பழக்கமுடையவரென்றும் தெரியவருகிறது. இவர் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை நோக்காமல் இசையொடு பாடுபவர் என்று தெரியவருகிறது.

அவர்கள் செய்த நன்றிக்குப் பல வணக்கம்.

இங்ஙனம்,

சிதம்பரம்
12 பழஞ்சாலியத்தெரு
26—7—1961. } சபா. சிவப்பிரகாசம் பிள்ளை
சுத்தாத்துவித சைவ
சித்தாந்தப் பேராசிரியர்.

## 9-வது சருக்கம் சுவேதன் தவச்சருக்கம்.

விந்த பர்வதத்தின் மேற்கேயுள்ள கேதார மென்னும் பட்டணத்திலிருந்த தீர்க்க தரிசனன் என்ற ஒரு பிராமணிரின் மகனான சுவேதன் என்பான் தீர்த்த யாத்திரை செய்யுங்கால் திரு எருக்கத்தம்புலியூருக்கு வந்து கந்த தீர்த்தத்தில் முழுகி பிதிர்பிண்டம் கொடுத்தான். அதை அவனுடைய பிதிர்கள் நேரில்வந்து வாங்கிக்கொண்டு கந்த தீர்த்தத்தின் பெருமையை சுவேதனுக்குச் சொல்ல சுவேதன் வெள்ளாற்றில் முழுகி குமரேசுரரைத் தரிசித்து கந்த தீர்த்தத்தில் பல தானங்களைச் செய்து வெள்ளாற்றங் கரையில் தவஞ் செய்துகொண்டிருந்தான்.

## 10-வது சருக்கம் உச்சினிவேந்தன் குட்டங் தீர்த்த சருக்கம்.

உச்சினி என்னும் பட்டணத்தில் சுவேதன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் மனைவி சுசீலை யென்பவள். இவ்விருவரும் நற்குண நற்செய்கையில் எல்லாரிலும் மேம்பட்டவர்கள். ஒருநாள் இவர்களிடத்துக்கு அகத்திய மகாரிஷி வர அவரை இவர்கள் வணங்கி மாதர்களின் கற்பிலக்கணங்களைக் கேட்டு மனைவி அங்ஙனமே யிருக்க மகிழ்ந்து பின் மகப்பேறின்மையால் வருந்தி தங்களின் குருவினிடம் சொல்ல குருவானவர் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்யச் சொல்ல மந்திரியிடம் அரசை ஒப்புவித்துவிட்டு மனைவியுடன் சுவேதன் வனஞ்சென்று தவஞ்செய்ய சிவபெருமான் ஒரு விருத்தராய் வந்து ஒரு மாங்கனியைச் சுசீலையிடம் கொடுக்க சுசீலை அதனை சாப்பிட்டு கருப்பமாகி ஒரு மகவினைப் பெற்றாள். அவனுக்கு காமவன்மன் என்று பெயரிட்டார். அதனை யறிந்த மந்திரிகள் சுவேதனிடம் வந்து அரசுபுரியும்படி பட்டணத்துக்கு அழைக்க அரசனும் மனைவியுடன் சென்று மகனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாஞ் செய்து திருமணமும் செய்வித்து திருமுடி



யுஞ் சூட்டி மகிழ்ந்திருந்தான். அரசனுக்கு முற்பிறவியில் செய்த தீவினையினாலே வெண்குட்டம் உண்டாக அரசன் வருந்தி சதாகாலமும் சிவனைத் தியானஞ் செய்துகொண்டிருந்தான். அப்போது சிவபெருமான் கனவில் தோன்றி நீ திரு எருக்கத்தம்புலியூருக்கு வந்து கந்த தீர்த்தமாடி சிவதரிசனஞ் செய்தால் இந்த வெண்குட்டம் தீருமெனக் கூற அங்ஙனமே மனைவியுடன் எருக்கத்தம்புலியூருக்குச் சென்று அங்ஙனமே செய்திருந்தபோது பின்னும் ஓர் கனவின்படி வீருமுலையம்மை சகிதம் திருக்குமரேசுரருக்கு திருவிழாவை சிறப்புடன் செய்து தரிசித்திருக்க வெண்குட்டம் தீர்ந்து மகிழ்ச்சியுற்று தன் பட்டணஞ்சென்று சிவத்தியானத்துடன் சிவபதமடைந்தான்.

## 11. இராஜேந்திர சருக்கம்.

பாண்டிய நாட்டிலே மதுரையிலே நரேந்திரன் என்றொரு அரசன் இருந்தான். அவனுக்கு புத்திரப்பேறு இல்லை. அதனால் தனது அரசுரிமையை மந்திரிமார்களிடம் ஒப்புவித்துவிட்டு தீர்த்தயாத்திரை, தலயாத்திரை செய்யப் புறப்பட்டு பல தலங்களை தரிசித்தும் தீர்த்தமாடியும் குமரேஸ்வரம் என்னும் திரு எருக்கத்தம்புலியூருக்கு வந்து பலநாள் தங்கி நாடோறும் கந்த தீர்த்தத்தில் முழுகி குமரேசரை வணங்கி பல தானங்களைச் செய்து வந்தான். பின் மதுரைக்குச் செல்ல எத்தனப்பட்டபோது நீ இத்தலத்திலிருந்து வசித்தால் உனக்கு ஓர் புத்திரன் பிறப்பான் என்று அசரீரி சொல்ல மனமகிழ்ந்து அங்கேயே வசித்துக்கொண்டு பலதானங்களையும் செய்து குமரேஸ்வரரை விழிபட்டு திருவிழாவும் திருப்பணியும் செய்து வந்தான். அப்போது அவனுக்கு ஓர் புத்திரன் பிறந்தான். அவனுக்கு சித்திராங்கதன் என்று பெயரிட்டு செய்யும் சடங்குகளைச் செய்து திருமணம் செய்துவித்து திருமுடியும் சூட்டி இங்கேயே வசிதது வந்தான். இதனால் இவ்வூருக்கு இராஜேந்திரபட்டணம் என்று பெயருண்டாயிற்று.

## 12. முனீஸ்வரர் சருக்கம்.

திரு எருக்சத்தம்புலியூர் பெருமையைக் கேட்ட முனிவர்கள் தேவர்கள் மனிதர்கள் விஷ்ணு முதலானவர்கள் திருஎருக்கத்தம்புலியூருக்கு வந்து யாவரும் உணராதபடி பலப்பல பறவைகளாகவும் மரங்களாகவும் இருந்து வந்தார்கள். அந்நாளில் அவ்வூருக்கு அநேக வேடர்கள் வந்து பறவைகளைப் பிடித்து கொன்று தின்றும் மரங்களை வெட்டி விற்றுண்ண எண்ணினார்கள். முனிவர்கள் முதலானவர்கள் அதனை அறிந்து இத்தலத்தைவிட்டு நீங்காமல் குமரேஸ்வரரை தர்சனம் செய்துகொண்டு எப்படி இருப்பது என வருந்தினபோது எவர்களும் வெட்டாத மரங்களாகவும் எந்த மிருகங்களும் பறவைகளும் விஷஜந்துக்களும் அணுகாத வெள்ளெருக்கஞ் செடியாக இருக்க என பரமசிவனார் கட்டளை இட அங்ஙனமே அனைவரும் அவ்வூர் ஆலயத்தில் வெள்ளெருக்க மரமாக இருந்துகொண்டு சதாதியானம் செய்துகொண்டிருந்தார்கள். அதனால் அந்தத்தலத்திற்கு திரு எருக்கத்தம்புலியூர் என்று ஒரு பெயர் வழங்கிற்று.



உ

ஓம் நமசிவாய:

# திருஎருக்கத்தம்புலியூர்
# ஸ்தலபுராணம்
## (மூலமும்-உரையும்)

### பாயிரம்.

### விநாயகர் துதி.

திங்களார் செஞ்சடைச் சிவனும் வெற்பிறை
மங்கையு முதவுமா மணியை மாசிலாத்
துங்கவே டுணவனைத் தும்பி மாமுகத்
தெங்கணு யகன்றனை யிதயத் தேத்துவாம்.

(இதன் பொருள்) திங்களாகிய மூன்றும்பிறைச் சந்திரனை சிவந்த சடையில் தரித்தருளிய பரமசிவனும் பர்வதராஜ புத்திரியாகிய பார்வதிதேவியும் தந்தருளிய இரத்தினம்போலும் பிரகாசமுடையவரும் குற்றம் தீர்ந்த வெற்றி பொருந்திய வேளாகிய குமாரசாமியின் சகோதரனும் ஆகிய யானைமுகம் பொருந்திய மகா கணபதியை எமது இருதய கமலத்தில் வைத்து தோத்திரம் செய்வாம் (எ—று)

### பரமசிவன் துதி.

2. பூமேவுங் கங்கைசேர் சடையி னானைப்
போதனமா றேடுதற்கு மெட்டா தானை
மாமேவு மிதழியணி மார்பி னானை
மாமறையி னகத்தானை மன்றுளானைக்
காமேவுங் கிளிமொழிசே ரிடத்தி னானைக்
கருதுமன்பற் குரியானைக் கங்கை யானை
தேமேவு மெருக்கத்தம் புலியூ ரானைச்
சிந்தைதனி னீங்காமற் றியானஞ் செய்வாம்.

பசியநிற மால்தங்கைப் பாலனை
பதாயுத கேதனம் விளங்கும் பாலகனை
இசையதனிவே லுமெழின்பத்துமுயர் மயிலினனை
இதயத்தில் என்னாளும் இருத்துவோமே.

(இ—ள்) சூரபதுமன் முதலிய இராக்கதர் குலங்களை யெல்லாம் சங்கரிக்கும் வேலாயுதம் உடையவரை, அந்தகார விருள்தீர விழித்துப்பார்க்கும் நேத்திரம் உள்ளவரை, மோக முள்ள வள்ளியம்மையை விவாகம் செய்து கொண்டவரை, வெற்றி பொருந்திய வாகைமாலையை அணிந்த மார்பையுடைய வரை, மரகத மேனியான மகாவிஷ்ணுவின் தங்கையாகிய பார்வதிதேவியின் குமாரனை கோழிக்கொடி விளங்கிய கையனை, மயில்வாகனக் கடவுளை எப்போதும் நமது இருதயத்தில் இருத்துவாம். (எ-று)

## நந்திதேவர் துதி.

6. செய்ய நெற்றியிற் கண்ணனே திங்கள்வே ணியனே
மையம்மேவிய கண்டனே மான்மழு வேந்தும்
தையல்பாகனே யெனத்தொழு தவர்க்கருள் புரியும்
ஐயன் சந்நிதி நந்திதன் அடிகளைப் பணிவாம்.

(இ—ள்) நெற்றியில் அக்கினி நேத்திரம் உள்ளவனே, சந்திரசேகரனே, நீலகண்டனே, மான் மழுவேந்திய கையனே, பார்வதி சமேதனே என்று தோத்திரம் செய்து வணங்கிய பேர்களுக்கு நினைத்த வரங்களெல்லாம் கொடுக்கும் பரமசிவன் சந்நிதி விளங்கச் செய்யும் நந்திகேசுவரரின் மலர்ப்பாதங்களைப் பணிந்து வணங்குவாம். (எ-று)

## தண்டியடிகள் துதி.

7. முந்துபூசனைக் காம்பொருள் முழுதையும் ஈட்டி
வந்திறைஞ்சிடும் முன்னமே வல்லையி னெய்திக்
கந்தநாண் மலர்சிந்திப் பாற்கடம் கவிழ்த்த
தந்தை தாளெறி தண்டியை வணங்குதல்செய்வாம்,

(இ—ள்) தினந்தோறும் செய்யும் பூசைக்குகந்த திரவியங்களையும், பூசை செய்வதற்கு முன்னாக சீக்கிரமாக



வந்து முன்னம் வைத்திருந்த அன்று அலர்ந்த வாசனை பொருந்திய புஷ்பங்களையும் இறைத்து, பாலுடனே குடத்தையும் கவிழ்த்த தகப்பனுடைய காலைவெட்டி அனேக வரங்களும் பெற்ற தண்டேசுரசுவாமி பாதத்தை வணங்குவாம். (எ-று)

## வீரபத்திரர் துதி. தக்ஷிணாமூர்த்தி துதி.

8. செருக்குள தக்கன் வேள்வியைச் சிதைத்தவிகொண்டோர்
வருக்கந்துன்புற வரத்தினை அசுரருக் குதவும்
கருத்தினு லவருக்கப் பொருள் காட்டியகல்லா
லிருக்கும் ஞான தேசிகன் திருவடியேத்துவாம்.

(இ—ள்) செருமிதமாய் வாழ்ந்த தக்கன் வேள்வியை வீரபத்திர அவதாரமாகி அழித்து அந்த வேள்வியில் அவி கொண்ட தேவர்கள் உபாதைப்பட சூரனுக்கு அதிக வரத்தைக் கொடுத்த பரமசிவன், தட்சிணாமூர்த்தமாய் சனகன், சனாதனர், சனந்தரர், சனற்குமாரர் இவர்களுக்குக் கல்லாலடியிலிருந்து ஞான உபதேசம் பண்ணிய குருமூர்த்தமான கர்த்தனை, இருதயத்திலே தியானம் பண்ணுவாம். (எ-று)

## வயிரவர் துதி.

9. சூட்டித் தீதுறு மந்தகா சூரனைச்சூ லத்தின்
மாட்டி யாதித்தன் கனல்விட மதமெலா நீங்க
நீட்டி யாட்டியு மவன்துதி நினைத்தருள் காரித்
தாட்டின மணிய பத்தியால் தலையினிற் பரிப்பாம்

(இ—ள்) பாவமும் பழியுமுடைய அந்தகாசூரனை சூலத்தினால் குத்தி சூரியமண்டலமட்டும் நீட்டி சூரிய கிரணாக்கினியினாலே பலங்கெடவாட்டியபோது அவன் அனேகம் துதி செய்ய மகிழ்ந்து கிருபை செய்தருளிய வைரவருடைய பாதாரவிந்தங்களை நமஸ்கரிப்பாம். (எ—று)

## திருஞானசம்பந்தர் துதி.

10. மாறு கொண்டெதிர் அமணர்கள் மரபு நூலதுகீழ்
ஆறு கொண்டவர் கழுவினில் ஏறிப் பாசுரம்மேல்

(இ—ள்) உயர்ச்சி பொருந்திய கங்கையை சடையிலே தரித்தருளியவரை பிர்ம்மா அன்ன ரூபமாய் முடியைத்தேடவும், விஷ்ணு வராஹ ரூபமாய் பாதத்தைத் தேடவும் அனந்த காலம் காணாத மகா ரூபமானவரை, வண்டுகள் கீதம் பாடும் கொன்றைமாலையைத் தரித்தருளிய மார்பனை, பெருமையுள்ள ருக், யஜுர், சாம, அதர்வணம் என்னும் நான்கு வேதத்தின் இடமாய் இருந்தவரை, கனகசபையில் நர்த்தனம் பண்ணுகின்றவரை, வனங்களில் சஞ்சரிக்கும் கிளி போலும் வசனமுள்ள பார்வதி தேவியை இடப்பாகத்தில் வைத்தவரை அன்பாக தியானம் செய்கின்ற அடியார்களின்மேல் கிருபையுள்ளவரை, பிர்ம்ம கபாலத்தைத் தரித்த கையையுள்ளவரை தெய்வத்தன்மை பொருந்திய எருக்கத்தம் புலியூரில் நீங்காமல் வாசம் செய்யும் பரமசிவனைத் தியானம் செய்குவாம். (எ—று)

## வீருமுலை அம்மை துதி.

3. ஆறுரும் வேணியான் வலத்தி னளை
அகண்டபரி பூரணமாய் நிறைந்து ளாளை
பேருக உலகமெலாந் தந்து ளாளைப்
பேசரிய மனவாக்குக் கெட்டா தாளைக்
கூறுதார் தமக்குயர்ச்சி கொடுத்தி லாளைக்
குமர னே ரம்பனையுங் கொடுத்துள்ளாளை
மாறுத எருக்கத்தம் புலியூ ராளை
மகிழ்வீரு முலையாளை வணக்கஞ் செய்வாம்.

(இ—ள்) கங்கையை சடையிலே தரித்திருக்கும் பரமேஸ்வரனை வலப்பாகத்தில் மகிழ்ந்திருந்தவளை, அண்ட பிண்ட சராசரம் சகலத்திலும் பரிபூர்ணமாக நிறைந்திருந்தவளை, சகல லோகத்தையும் பெற்ற தாயானவளை சொல்லுதற்கரிதாகிய மனதுக்கும் வாக்குக்கும். காயத்திற்கும் எட்டாதவளை, தன்னைத் தோத்திரம் பண்ணுதவர்களுக்கு மேலாகிய யோகம் கொடாதவளை, எருக்கத்தம்புலியூரில் அமர்ந்துள்ள பரமேசுவரன் மகிழும் வீருமுலை அம்மையை வணங்குவாம் (எ-று)



## விநாயகப்பெருமான் துதி.

4. ஒருகோட்ட னிருசெவியன் முக்க ணல்வா
யொளிருமைங் கரத்தானை உமையாள் தந்த
திருமுகமா றுடையார்க்கு மூத்தோன் தன்னை
தேசமெலாம் புகழ்ந்தேத்தும் தேசுளானை
பெருஞ்சித்தி யெட்டொன்பான் பெருவியாகரணம்
பேசுபொருள் போற்றுவார்தம் பேற்றினனைக்
குருகாரு மெருக்கத்தம் புலியூர்மேவிக்
கூத்தாடும் குரிசிலைக்கை கூப்புவோமே.

(இ—ள்) ஒரு கொம்பும், இரண்டு செவியும், மூன்று கண்ணும், தொங்குகின்ற வாயும், ஐந்து கையுமுடையவனை, ஆறுமுகமுடைய முருகப்பெருமானுக்கு முன்னுக வந்தவனை, ஏழுலகமும் தோத்திரம் பண்ணற்குரியவனை, எட்டு சித்திகளும் தானுகநின்றவனும், ஒன்பதுவியாகரணத்திற்கு முட்பொருளாகி நின்றவனும், தன்னைத் துதிக்கும் அன்பர்களைப் போற்றுபவனை பறவைகள் சூழ்ந்திருக்கும் எருக்கத்தம்புலியூரில் வாசமாகக் கூத்தாடும் விநாயகப்பெருமானை வணங்கித் துதிப்பாம். (எ-று)

ஏழுலகம் என்றதனுல் அதல, விதல, சுதல, நிதல, நிராதல, தராதல, பாதாலம் என்பதன்றி, பூலோக, புவலோக, சுபலோக, சனலோக, தபோலோக, மகாலோக, சத்தியலோகம் என்றதனையும் கொள்க: பெரும்சித்தி எட்டு என்பது அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பதாம்: வியாகரணங்கள் ஒன்பதாவன பாணினி, பிராகிருதம், பாண்டீரம், சவுரசெனிவியாகரணம், பைசாசம், மாகதி, சூளிகா, அப்பிரமசவ்வியம், சூளிகாபைசாசம் என்பதாம்.

## சுப்பிரமணியர் துதி.

5. அசுரர்குலம் வேரறுக்கும் அயிலினனை
அண்டவிருள் வெளிசெய்யும் விழியினனை
வசியமொடு வள்ளிதோள் மணந்துளானை
வாகைமலர் தொங்கலணி மார்பினனை

ஏற வைகையில் சைவமும் தமிழும் ஈடேற
கூறு மெய்ம்மைசேர் காழியின் குருவை வாழ்த்துவமே.

(இ—ள்) மாறுபாடாய் எதிர்த்த சமணர் நூலை கீழாறு கொள்ளவும் அவர்களைக் கழுவில் ஏற்றி, பாடிய பாசுரம் வைகை ஆற்றின் எதிர் ஓடவும் சைவ சமயமும் தமிழும் உயர்ந்து ஏறச்செய்து, மெய்யாய் விளங்கிய சீகாழி ஞான சம்பந்த மூர்த்தியை தோத்திரம் பண்ணுவாம். (எ—று)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

11. நீற்றை மேலணி முதுகுன் றனருள் நிறைந்தே
மாற்றி ஞற்றிகழ் நிதிமணி முத்தமா நதியாம்
ஆற்றிடத் துய்த்தலும் அவனருள் அமையுமாறுகித்
தேற்றநற் றமிழ்பாடிய நம்பி தாள் தொழுவாம்.

(இ—ள்) விபூதி தூளிதரான விருத்தகிரீஸ்வரர் அன்பானது நிறைந்து பத்துமாற்றுத் தங்கபாளத்தைக் கொடுக்க அதை மணிமுத்தா நதியிலே போட்டு திருவாரூர் கமலாலயத்திலே கண்டெடுக்கத் ‡தமிழ்பாடிய சுந்தரமூர்த்தி பாதத்தை நமஸ்கரிப்பாம். (எ—று)

திருநாவுக்கரசர் துதி.

12. நடக்கு மாமலை முட்டியே நஞ்சமு மூட்டி
கடைக்கோ ணீற்றறை கூட்டியே கனலையு மூட்டி
அடைக்கற் றூணொடும் கூட்டியே அலைகடற் போட்டும்
விடைபரா பரன் மேன்மைசேர் விருத்தரைப் பணிவாம்

(இ—ள்) நடக்கும் மலையன்ன யானையை விட்டு இடறச் செய்தும், விஷத்தைக் கலந்து குடிக்கச் செய்தும், நீற்றறையிலே போட்டும், அக்கினியை மூட்டியும், கற்றூணோடு சேர்த்துக் கட்டி அலை பொருந்திய சமுத்திரத்திலே போட்டும், ரிஷபாரூடரான பரமசிவனைப் பாடவே இந்த இடுக்கண்களெல்லாம் நீங்கி, மேலான நலம் பெற்ற திருநாவுக்கரசரென்னும் சுவாமிகள் பாதத்தை நமஸ்கரிப்பாம். (எ—று)



மாணிக்கவாசகர் துதி.

13. அடல்செய் வேகத்தின் நரிபரி யாகவும் அந்த
வடிவமே வடி வாகவும் வைகைநீர் மிகவும்
திட மதாம் பிட்டுக் காளாகவுஞ் செய்யும்
அடிக ணீறணி வாதவூ ரண்ணலைப் புகழ்வாம்.

(இ—ள்) பாண்டியனிடத்திலே தென்னவன் பிரமராயர் என்னும் பெயருடனே மந்திரியாகி நாற்பத்தி ஒன்பது கோடி திரவியம் குதிரை கொள்ள வாங்கி அத்தனையும் சிவ திருப்பணி வேலையிலும், சிவனடியார் விஷயத்திலும் செலவுசெய்து அவனுக்குக் குதிரை கொண்டுபோக அதிகவேகம் பொருந்திய நரிகளை குதிரைகளாக்கியும் பின்னும் குதிரைகளை எல்லாம் நரிகளாக்கியும் வைகையாறு கரைபுரண்டு மதுராபுரியை நீர் கொள்ளப் பண்ணியும், தமக்கு இப்படியாக கிருபைசெய்த பரமசிவனை பிட்டுக்கு மண் சுமக்க ஆளாகவும் அன்பினாலே விபூதி அணிந்து வாதவூரில் அவதரித்த மாணிக்கவாசக சுவாமிகளை வணங்குவாம். (எ—று)

தலவரலாறு.

14. பொன்னதாங் கொன்றை வேணியான் எருக்கத்தம்புலியூர்
மன்னு மாக்கதை வடமொழி தமிழினல் வகுத்துச்
சொன்ன தம்மலரிற் றோன்றிடும் நன்மணம் போல
இன்னிலத்திற் பரவிய தென்வே முனிவரர்
[இசைப்பார்.

(இ—ள்) பொன்போலும் புஷ்பத்தையுடைய கொன்றை மாலை தரித்த சடாமகுடதாரரான பரமசிவன், மகிழ்ந்தருளிய எருக்கத்தம்புலியூர் ஸ்தல புராண மகாத்மியத்தை தென்மொழியினல் செய்தது எப்படியெனில் புஷ்ப விமானத்திலிருந்தும் வாசனையுண்டாகி எங்கும் பரிமளிக்கிறதுபோல, கிரந்த வாக்கியமான புராணமிருந்தும் தமிழ்ப்புராணமாக விளங்கியதென்று நல்லறிவாளர்கள் சொல்லுவார்கள் (எ—று)

15. வெள்ளெருக்கணி வேணியர் நாட்டினிற் சிறப்பும்
கள்ளரு மலர் பொன்னமர் நகரினின் கவினும்

தெள்ளருநற் தேவர்கள் சேர்ந்திடு தொகுதியின்சீரும்
வள்ளலாகிய குமரர்செய் பூசனை வகையும்.

(இ—ள்) வெள்ளித் தளிர்போலும் இதழினையுடைய வெள்ளெருக்கம் பூவை சடையிலே தரித்தருளிய திருக் குமரேசுவரரது நாட்டின் சிறப்பையும், அந்த நாட்டில் தேன் பொருந்திய செந்தாமரை புஷ்பத்தில் வாசமான மகாலட்சுமி யும், தங்கியிருக்கும் பட்டணமான ஸ்தல மஹிமையையும், அந்தஸ்தலத்தில் தெளிந்த அறிவினையுடைய தேவர்கூட்டம் வந்த கதையும், குமார சுவாமியான முருகன் பரமசிவனை பூஜை செய்து சாப நிவர்த்தியானதும், சொல்லிப் பின்னும் சொல்லுவாம்.

16. வெல்லு மாமழு வணிந்தவன் திருப்பணி விதமும்
மல்லல் தீர்நக ரத்தினை அலங்கரித்ததுவும்
மல்ல மேவிய மணிமிடற் றினர்விழா வளமும்
சொல்லு தற்கரிதாகிய சுவேதனன் செய்தொழிலும்.

(இ—ள்) ஜெயம் பொருந்திய மழுவை கரத்தில் தரித் திருக்கும் திருக்குமரேசுரருக்குத் திருப்பணி செய்தவகையும், அந்தப் பட்டணத்தின் அலங்காரமும், திருவிழாவின் சிறப்பும் சொல்லுதற்கரிதாகிய சுவேதராஜாவின் கதையும் சொல்லு வாம். (எ-று)

17. மான மேவிய சுவேதன் செய்தவமும்
ஊன மேவிய உச்சினிகுட்டந் தீர்திறனும்
தானமேவு ராசேந்திரன் வரம்பெற்ற தகவும்
ஞானமேவிய முனிவரர் சரிதமும் நவில்வாம்.

(இ—ள்) பெருமையான சுவேதராஜன் தவம் செய்த தும், நன்மையான மகிழ்ச்சிபொருந்திய உச்சினி ராஜாவுக்கு வெள்ளைக்குட்டம் தீர்த்ததுவும், தர்மதானமுள்ள இராஜேந்தி ரன் வரம் பெற்றதுவும், ஞான சொருபமான ரிஷீஸ்வரரின் சரித்திரமும் சொல்லுவாம். (எ-று)



18. கல்விமா முனிவர் குமரேசரின் நற்கதைகள்
சொல்விசே ஷமும் கேட்டவர் தொகுதிகள்
பல்பகற் றவஞ்செய் பரனவர்க்கருளும்
நல் வரங்களும் சூதரைத்தொழுதுநாம் நவில்வாம்.

(இ—ள்) சகல சாஸ்திரமும் தெளிந்த முனிவோர்கள் குமாரசுவாமி கதையைக்கேட்டு அவர்கள் கூட்டங் கூட்டமாக வந்து அநேகநாள் தவம் செய்ததும், அவர்களுக்கு பரமசிவன் அனுக்கிரகம் செய்ததும், நைமிசாரண்யவாசிகளான முனீஸ் வரர்களுக்கு சொல்லி அருளிய சூதமகாமுனி உபயபாதார விந்தங்களையும் தொழுது சொல்லுவாம். (எறு.)

19. பணம்கொளு மார்முடிய சைத்தெருக் கத்தம் பதியிற்
குணங்கடனை முதுகுன்றநும் சொலுமுறை கொண்டு
மணங்கொ ளும்மல ராகும் மந்தாரமாதிகளார்
கணங்கொ ளுந்தவர்பூ சிப்ப கணேசுவர மாமால்.

(இ—ள்) பழமலையார் சன்னிதியிலே அனேக சிவ கணங்கள் வந்து தெரிசனம் பண்ணி சிவஸ்தலங்களில் அதிகமான வரங்களும் எளிதிலே முத்தியும் கொடுக்கின்ற ஸ்தலங்களுக்கு திருவுளம் பற்றவேண்டும் என்று கேட்க, படம்பொருந்திய சர்ப்பத்தை சிரசிலே தரித்த சிவன் சிரக்கம் பிதமாக முடியை அசைத்து எருக்கத்தம்புலியூர் மகிமையை விருத்தகிரீஸ்வரர் அதிகமாக சொல்லக்கேட்டு, வாசனையுள்ள மந்தாரம், கோங்கு, சண்பகம் முதலான புஷ்பங்கள் கொண்டு பூசை பண்ணினபடியினாலே இந்த ஸ்தலத்திற்கு கணேச்வரம் என்னும் ஒரு பெயர் உண்டாம். (எ-று.)

20. உமிழும் வான்மதி முடித்தவன் புத்தகமுவரி
அமிழ வேளறிந் ததற்கிடும்சா பம்விட் டகலத்
தமிழி னுட்டினில் அவதரித் தித்தலம் சார்ந்து
குமரன் பூசனைசெய்திட குமரேசுர மாமால்.

(இ—ள்) பிரகாசத்தைக்கொடுக்கும் சந்திரனை சடையில் தரித்த பரமசிவன் பார்வதிக்குச் சொல்லும்போது, ஈஸ்வரி

வேறு ஒரு பராக்காக இருந்ததினாலே பரமேஸ்வரனுக்குக் கோபமுண்டாகி சாபம்பிடி என்று சொல்ல, அப்போது சுப்பிரமணியசுவாமி அந்த புஸ்தகத்தை சமுத்திரத்திலே முழுக எறிந்தார். அது கண்டு ஈஸ்வரன் கோபித்து பூலோகத்திலே தமிழ் நாட்டினில் ஊமையாக அவதாரம்செய்து இந்தஸ்தலத்தில்வந்து பூஜை செய்வாய் என்ன, அப்படியே பிறந்து பூசைபண்ணின படியினாலே குமரேசுவரம் என்றும் ஒரு பெயர் உண்டு. (எ-று)

21. மாதல மிதனிற் றவஞ்செயு மந்தணன் வருந்த
மீதெழும் புலியைக் கொன்றநல் வேடனும் மேம்பட
ஓதிடும் புலிக்கால் முனியென வந்து பின்னுற்று
நாதனைப் பணிந்திட நற்புலியூரென நவில்வாம்.

(இ—ள்) இந்த மகத்தாகிய ஸ்தலத்தில் அறிவுடனே வண்டு முகராத புஷபம் கொண்டு சிவபூஜை பண்ணி ஒரு புத்திரனைப் பெறவேண்டும் என்று ஒரு பிராமணன் தவசு பண்ணின பலத்தினால் அவன்மேல் எதிர்த்த புலியைக் கொன்ற வேடன் மேம்பாடாய் புலிக்கால் முனியாய் இவனிடத்தில் வந்து பிறந்து இந்த சிவனை பூஜை செய்தபடியால் புலியூர் என்று ஒரு பெயர் உண்டாயிற்று. (எ-று).

22. இந்தமா தலத்தி லன்புடனிருந்திடு மிறைமுன்
முந்துமா மதுரைப்பதி தனைப் புரந்திடும் முதல்வன்
வந்துவாழ் சந்ததி வாஞ்சையால் வாழ்த்திட வாய்க்க
அந்தநாள் முதலா அதன்பெய ராஜேந்திர புரமே.

(இ—ள்) மதுராபுரியிலே இருந்து இராஜ்ய பரிபாலனம் செய்த பாண்டிய ராஜனானவன் புத்திரனில்லாமல் அனேக தலங்கள் எல்லாம் தரிசனம் செய்து, அனேக ஸ்தலங்களில் வாசம் செய்தும் பலனில்லாமல் இந்த ஸ்தலத்தில் வந்து சிவ தரிசனம் செய்து அன்புடன் இருந்ததினால் நல்ல புத்திரன் உண்டாகி அவனுக்கு இராஜேந்திரன் என்னும் பெயரும் இட்டான் அந்த நாள் முதலாக இந்த ஸ்தலம் இராஜேந்திர புரம் என்றும் பெயர் உண்டாகி விளங்கியது. (எ-று).



23. நற்றருக் கள்சேர் நைமிசா ரண்ய நன்முனி வோர்கள்
கற்றை வார் சடைக் கடவுள் மாதலம் சூதன்
சொற்றல் கேட்டுடல் மறைத்து வெள்ளெருக் கெனவே
நிற்றலா லிந்ததலத்தினுக் கப்பெயர் நிகழ்த்தும்.

(இ—ள்) உத்தம விருட்சங்கள் சேர்ந்த நைமிசாரண்யத்தில் வாசம் செய்கின்ற முனிவரர்கள் நெருங்கி நீண்ட சடா மகுடத்தையுடைய பரமசிவன் மிகுந்த மகிழ்ச்சிகொண்ட இந்த ஸ்தல மகிமையை சூதமகாரிஷி சொல்லக்கேட்டு தங்கள் சரீரம் பிறருக்குத் தோன்றாமல் வெள்ளெருக்காக வந்து தவம் செய்த படியினால் இந்த ஸ்தலத்திற்கு எருக்கத்தம் புலியூர் என்று பெயர் உண்டாயிற்று. (எ-று).

வேறு.

24. கருதரு பத்தியின் அடியார் காண நடம்புரி அடிகள்
உருகிடும் மனமிலா மதியிலார் உளமணு காச்சடையார்
பெருகிடும் நாகபூஷணர் பேற்றினைப் பேசிடும் பெரி
[யோர்
அருள்செயும் கந்தமாதடந் தோய்ந்தார் அரும்பிற
[விக்கடல் தோயார்

(இ—ள்) சொல்லுதற்கரிய பக்தியுடைய அடியார்கள் காண நடனம் செய்த பாதாரவிந்தம் உள்ளவரான அன்பில்லாத வன்னெஞ்சராகிய ஈனமான புத்தியை உடையவர்கள் இதயத்தில் சேராமல் இருக்கும் பரமசிவன், சடையிலே சந்திரனைத் தரித்து, விஷம் பொருந்திய சர்ப்பமே ஆபரணமாகத் தரித்து, தம்மை பக்தியாக ஸ்தோத்திரம் செய்கின்ற அடியார்களிடத்தில் வாசமாகி இருப்பவர். பெருமை உள்ளதாகவும் கிருபை மிகுந்துள்ள கந்த தீர்த்தத்தில் மூழ்கினவர்கள், பிறவியாகிய கடலைக் கடந்து கரை ஏறினவராவார்கள். (எ-று)

25. நன்னி லத்தில் கதலிவனம் நற்றேரிற் கதலிவனம்
மன்னு கணேசுர பதிவாழ்வார் மருகுபிற வியிற்
[பதியார்

மின்னு பொன்னகை வீறுமுலை யாள்பூணணி வீறு
[முலையாள்
முன்னு சன்னிதி யை முன்னிநின்றவர் முத்தியாங்
[கரை கண்டவரே.

(இ—ள்) நல்ல நிலமாகிய அந்த பூமியில் வாழைத் தோப்புகள் மிகுந்திருக்கும் அது அந்த ஸ்தலத்தில் விளங்கிய தேர்களிடக்தில் கட்டியிருக்கும், கணேசுவர பதியாகிய அந்த ஸ்தலத்தில் வசித்துவந்தவர்கள் பிறவியாகிய ஜெனனத்தில் அழுந்தார்கள். அதிலிருக்கும் பூஷணலங்காரமான வீறுமுலை அம்மனிடத்தில் பல்வரிசை எப்படி யென்னில் அழகு பொருந்திய மலர்ந்த முல்லை அரும்புபோல இருக்கும் அந்த மகாதேவியினுடைய சந்நிதியைக் கண்டவர்கள் அந்திய காலத்தில் மோட்சவீடு கண்டவர்களாவார்கள். (எ-று).

வேறு.

26. சுத்த கங்கையுஞ் சோமனு மணிமுடி மீதின்
மத்தம் பாம்பணி வோனென தாகும்புன்கவியும்
நித்த வானந்த வேதமும் கீதமு னிறைவாகி
ஒத்த தாகுவ தெனஎடுத் துரைக்க லுற்றனவே.

(இ—ள்) இப்படி அனேக பெருமையும், அனேக நாமகரணங்களும், தீர்த்தவிசேஷமும், மூர்த்திவிசேஷமும், தல விசேஷமும் நன்மையுடனே விளங்கிய ஸ்தலத்தில் நீங்காமல் வாசம் செய்கின்ற பரமசிவன் நிர்மலமாய் தெளிவுள்ள கங்கையும், வெண்மையுமான சந்திரனைத்தரித்த சடையிலே ஊமத்தம் பூவையும், பாம்பையும், தரித்தவரானபடியினலே வேதானந்த கீதம் கேட்டும் மகாசந்தோஷமான உலக நாயகருக்கு அடியேன் சொன்ன கொஞ்சப் பாடலும் அவர் செவிக்கு என்று சொன்னதாகும். (எ-று)

27. பல்வி தங்களாங் கலைகளும் கடவுளும் பாரிற்
கல்வி மாக்களும் கணக்கில வாதலாற் கருத்தே
சொல்வி சேடத்திற் சிவசரித்திரங்குறை சொல்லார்
நல்வி வேவிகள் குணமென நவிலலுற் றனவே.



(இ—ள்) சாஸ்திரம் கலை ஞானங்கள் அனேகவிதமாக இருக்கும். தெய்வமும் அனேக ரூபமாக இருக்கும். பூமி யில் வித்துவ ஜனங்கள் மட்டில்லாத பேர்கள். இப்படிப்பட்ட வித்துவ ஜனங்களில் எழுத்து, சொல், யாப்பு, பொருள், அலங் காரம் சகலமும் தெளிந்த மகாவித்துவ ஜனங்கள் நடுவில் அடியேன் சொல்லியது புன் சொல்லாக இருந்தாலும் சிவசரித் திரம் என்று மனம் பொறுத்து, குன்றக்கூறல், மிகைபடக்கூறல் என்ற பத்துவித குற்றங்கள் இருந்தாலும் அவைகளை நீக்கி பொறுத்தருள்வார்கள் என்று சொல்லலுற்றேன். (எ-று)

28. தேசுபெறு நைமிசத்தின் முனிவரெலாம்சூதனரின்
[திருத்தாள் போற்றி
மாசகன்ற சிவதலத்தின் மகிமையெலாம் எமக்
[குரைத்தீர் மகிழ்ந்தோ மிப்பால்
பேசரிய லூமைபிணி யிடரகற்றுந் தலமுளதோ
[பெரியோ யென்ன
ஆசகல கேட்பவர்க்கம் முனிவனக மகிழ்ச்சியினல்
[அருள்வதானன்.

(இ—ள்) சிவத்தியானமே பிரகாசமாகிய நைமிசாரண்ய முனிவர்கள் சூதமகாரிஷி பாதத்தை வணங்கி ஸ்தோத்தரித்து குற்றமற்ற வரங்களைக் கொடுக்கும் சிவஸ்தலங்களின் மகத்து வங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியும்படி அருளிச்செய்து அதனலே மிகுதியும் சந்தோஷத்தை அடைந்தோம். இப்பாரு லகத்தில் ஆயிரத்தெட்டு 'சிவஸ்தலங்களில் பேசுதற்கரிதாகிய ஊமைமுதலான வியாதிகளுடன் சகலபாவங்களையும் தீர்க்கின்ற தலம் உண்டோ என்று கேட்க, அந்த சூதமகாரிஷி மகா சந்தோஷத்துடனே சொல்லுவார். (எ-று)

29. வரிசைபெறும் பிரமாண்ட மதில்நூற்று முப்பத்
[தொன்றதனிலுள்ள
இருமைதரு குமரபுரி மகிமைதனை யுரைசெய்வே
[னிதயத் தெண்ணி
துருசகல சூதமுனி யிசைத்தவட மொழியதனைச்
[சொல்வே னன்பால்
தரையதனில் வசையகன்றவி லக்கணத்தால்
[வளர்ந்திடுஞ்செந் தமிழினலே.

(இ—ள்) தர்மார்த்தகாமிய மோக்ஷங்களையும் சொல்லிய பிரும்மாண்ட புராணத்தில் நூற்றுமுப்பத்து ஒன்றும் அத்தியாயத்தில் சொல்லிய கு ம ர பு ரி மகிமையைச் சொல்லவேண்டும் என்று மனதில் எண்ணி மனம், வாக்கு, காயங்களினாலே வந்த தோஷந்தீர சூதமகாரிஷி சி ற ந் த வாக்கியத்தினால் சொல்லி இருப்பதை அன்பினால், இலக்கணத்தில் நால்வகைப் பாவிலும் எடுத்து வி ரு த் த மா க சிவப்பிரகாசன் சொல்லியது இது என்பதாம். (எ-று)

பாயிரம் முற்றும்.

---

## நாட்டுச் சருக்கம்.

1. நற்குணத்தவர் சிறியர் சேரினும் நாளும்நன்மையை
[நவில்வர்
துற்குணத்தினைத் துடைத்தல் போற்கடற் றோன்றுநீ
[ருவர் போக்கியே
பற்குணத்தொடு முயர்ந்த மால்வரை பரவிய
[நகைமுக மழுதாய்
விற்குணத்திசை கொண்டு மம்பினை வழங்குமா
[முகின் மேன்மையே.

(இ—ள்) நல்ல குணமாகிய பேரறிவையுடையோர்கள் சிறிய அறிவினர் சேர்ந்தாலும் அவர் சிற்றறிவைப் போக்கி மேலான அறிவை போதிப்பார்கள். அதுபோல மேகமானது சமுத்திர ஜலத்தைக்குடித்து அதிலுள்ள துவராகிய உப்பை நீக்கி அமிர்தமான ஜலமாக்கி பற்பலவிதமான விருட்சஜாதிகள், ரத்தினங்கள், முத்துக்களையுமுடைய பர்வதத்தின்மேல் பரவி மின்னல் இடிகளோடும், பிரகாசத்தோடும் கூடி மேன்மையுடனே வருஷிக்கும். (எ-று)

2. குடகவெற் பென்னும் லிங்கந் தன்னை குறித்துபூ
[சனைசெய்வதுபோற்
கடுகியே சொரிபுனல் பரந்தெழில் காட்டிடும்
[தரங்கத்துடன்



கொடுக்குஞ் சுழியற்புதம் கொண்டித் தலம் நண்ணியே
படிகளெங்கணும் புகழ்சோணாட் டினிற் காவிரிப் பெயர்
படைத்ததே.

(இ—ள்) அந்தப் பர்வதமான பரமசிவனுக்கு பக்கங்களிலிருந்த மரங்களெல்லாம் அர்ச்சனை செய்வதுபோல தேன் பொருந்திய புஷ்பங்களைத் தளிராகிய கைகளினாலே சொரிந்தும் அபிஷேகம் செய்வதுபோல, மலையின் சர்வாங்கமும் பரந்து அழகுகாட்டி, கீழே இறங்கி அலைகளுடனே சுழித்து குமிழி கொண்டு இப்பூமியில் இறங்கி ஏழு புவியும் புகழப்பட்ட சோழ நாட்டிற் காவேரி என்னும் பெயர்கொண்டு விளங்கியது. (எ-று)

### வேறு.

3. நறிய குங்குமங் கோட்டமு மேலங் கஸ்தூரி
பொறியபணியணி பொன்னொடு நடைமலைக் கோடும்
வெறிகொள் சந்தன மிளகுடன் கனிவளமெடுத்து
நெறிசெல் வாணிகர் நிகர்த்திடும் அந்தகாவிரியே.

(இ—ள்) குங்கும விருட்சம், கோஷ்டம், ஏலம், கஸ்தூரி பொறி பொருந்திய சர்ப்பத்தினுடைய மாணிக்கம், பொன், யானைக்கொம்புகள், வாசனையுள்ள சந்தன மரங்கள், மிளகு, மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் முதலான கனிகள் இவைகளையெல்லாம் நதியின் வெள்ளம் கொண்டுவருவது பண்டங்கள் கொண்டுவருகிற வணிகர்களுக்குச் சமானமாக இருந்தது காவேரி. (எ-று)

4. மருங்கிற் செம்மலர் சோலைகள் தேன்மலர் வழங்கி
நெருங்கிபூ சிக்கும் நிகரிலா வளமெலாங் கொண்டு
திருந்து மாநகர்ப் புனிதமுஞ் செல்வமும் வழங்கி
கருங்க டற்றுவர் தன்னையு மகற்றுகா விரியே.

(இ—ள்) அந்த பர்வதமான பரமசிவனுக்குப்பக்கங்களில் இருந்த மரங்கள் எல்லாம் அர்ச்சனை செய்வதுபோல தேன் பொருந்திய புஷ்பங்களைத் தளிராகிய கைககளினாலே யுகுக்கவும், மனிதர்க்கு வேண்டிய செல்வங்களையும் புனிதமாகிய

அமிர்தத்தையும் கொடுத்து காவிரி சென்று கருங்கடலில் விழுந்து அந்த உப்பாகிய துவரை மாற்றும். (எ-று)

5. சீத வார்புனற் பொன்னியந் திரைத்தடந் தன்னில்
நாதரும் மாதரும் நல்லணி ஒளிசெய நண்ணி
தாதுலா மலர் விளங்கிய தண்புன லாடி
போது சாந்தமுமே பூசனைத் தொழிலெனப் புனைவார்

(இ—ள்) அப்படிப்பட்ட காவேரியினிடத்தில் அங்கங்கும் அளவிறந்த யௌவன புருடர்கள், யௌவன ஸ்திரீகள் முதலியவர்கள் ஸ்நானம்செய்து ஒருவருக்கொருவர் சந்தனம், சவ்வாது, புஷ்பமாலைகள், ஆபரணங்கள் முதலியனவற்றை சிவபூசனை உபாசனைபோலத் தரித்துக்கொண்டார்கள். (எ-று).

6. வார்புனற் சென்று வாளைகள் பாய வய்றெறும் நிரம்பி
ஏரின மன்னர் எழில்நிறப் பகட்டினை யிசைந்து
சீர்கொளு மேழிதிருத்திப் படைச்சால் திருப்பி
நீரினம் நிறைய நிலங்களைக் கலக்கியே சமம்பெற
[நிறுத்தி.

(இ—ள்) இப்படிப் பிரவாகித்து விளங்கிய காவிரி நீரானது கால்வாய் கொண்டு வயல்கள்தோறும் நிரப்பி, அழகு பொருந்திய மன்னர்கள் மேகநிறம் போன்ற கருமையான எருமைக்கடாக்களை ஏரிலேகட்டி மேழியைப் பிடித்து உழுது வயல்களைச் சமன் செய்வர்ர்கள். (எ-று).

7. பருவ வித்தினை யிந்திரன் றன்னையே பரவி
மருத நன்னிலம் விளங்கிட மன்னர்கள் தூவ
வுருவி யேமுளை மாலுரு வொப்பெனப் பசப்ப
திருவின் ஓங்கிடக் களைகுவர் களைபகைதீர.

(இ—ள்) பருவமான காலத்தில் பருவமான வித்தென்னவே முளையுருவின விரையை மருதநிலத்திற்குத் தெய்வமான தேவேந்திரனைத் தொழுது வயல்கள் விளங்க மன்னர்கள் தெளிய விட்டார்கள். அது முளையுருவி மகாவிஷ்ணு நிறம்



போல பச்சை நிறங்கொண்டு வளர்ந்தது. அது வளர்ந்தவுடன் அந்நெல்லுக்குப் பகையான புல்லுகளை நீக்கி யதன் களையை தெளிவிப்பார்கள். (எ-று).

8. மட்டு மாந்திக் கடைசியர் நாற்றினை
நட்டு கட்டு நலம்செயு நாளையில்
விட்ட லாலது விளைகதிர் கொய்துமே
கட்டி யேற்றி களத்தினிற் சேர்த்துவார்.

(இ—ள்) பின்னும் அவ்வயலின் சிறப்பானது எப்படி யெனில் பள்ள ஸ்திரீகள் கள்ளைக் குடித்துவந்து நாற்றுக்களைச் சேற்றிலே பாடிக்கொண்டு நடுவார்கள். இப்படி நட்டபயிர் மகாசெழுமையாக வளர்ந்து, சூல்கொண்டு, கதிர்வாங்கி, விளைந்து, விளைந்தவுடனே கதிர்கொய்து சுமைகளாக எடுத்துக் கொண்டுபோய் களத்திலே சேர்ப்பார்கள். (எ-று).

9. கதிர்செய் போரினில் கதிரவன் பாற்செலுங்
குதிரை போன்ற பகட்டின் குளம்பினுல்
மிதிசெய் தேவரை மேல்முகி லென்னவே
முதிரும் நெல்லைத் தூற்றிப் பொலி செய்வரே.

(இ—ள்) இப்படிக் கதிரினுலே போடப்பட்ட போரின் மேல் பிணையல் பிணையலாக கடாக்களை மேலேற்றினது, மகா மேருகிரியை சுற்றிவருகின்ற சூரியனுடைய இரதத்திற் கட்டும் குதிரையை எதிர்த்து, சுற்றிவருகின்ற வல்லமையை அறிவோம் என்று தாமும் சுற்றியது. அதன் குளம்புகளில் உதிர்ந்த நெல்லை வைக்கோலுடன் துகளினைப் போக்கி நெல்லைப் பொலி செய்வார்கள். (எ-று).

மகாமேருவுக்கு வைக்கோல் போரும், குதிரைகட்கு பகடுகளும் உவமையாம்.

10. ஆறி லோர்பங் கரசன் கொளவைந்தும்
ஏறு பூட்டிய வண்டியில் கொண்டுபோய்
ஆறு திருத்தியும் அழகுசெய் யரம்பையின்
நாறு பூங்கனி நாட்டினர் நலம்பெற.

(இ—ள்) இப்படி பொலிசெய்த நெற்களில் ஆறில் ஒரு பங்கு அரசன் எடுத்துக்கொண்டு மற்ற ஐந்து பங்கை குடிகளுக்குக் கொடுக்க, அதை எருதின்மேலும் வண்டியின் மேலும் ஏற்றிக்கொண்டு போகின்றபோது, தெருக்களிலெல்லாம் அலங்காரம் செய்து பந்தல்போட்டு பந்தலுக்குக் கருப்பங் கழிகள், வாழைத்தாறுகள், பாக்குக் குலைகள் முதலானவற்றைக்கட்டி அலங்காரம் செய்வார்கள். (எ—று).

11. மல்லன் மிக்கசோ ணாட்டினின் மாந்தரும்
கல்விச் செல்வக் களிப்பி னமரரும்
எல்லை யில்துதி யென்று மிசைத்திடும்
வல்லியொர் பங்கன் வாழ்தல முற்றுமே.

(இ—ள்) நெருங்கி மிகுந்த சோணாட்டில் வசிக்கும் ஜனங்களும், கல்வியாகிய பாக்கியமுடைய தேவர்களும், எண்ணிறந்த துதிகள் செய்யும் பார்வதி சமேதரான சிவன் வாசம் செய்த சிவஸ்தலங்களாம். (எ-று,

12. மண்ணின் மிக்க வழங்குசோ ணாட்டிற்
புண்ணியஞ் செய்த தாற்பதிப் பேறென
விண்ணவர் செய்த நன்றியை விடாமலே
கண்ணி மைத்திலர் காண விரும்பியே.

(இ—ள்) இப்பேர்பட்ட சிவஸ்தலங்கள் அனேகம் உள்ள சோழநாட்டினிற், புண்ணியம் செய்தபடியினாலே நமக்குத் தேவலோகம் கிடைத்தது. இந்த நன்றியை மறக்கலாகாது என்று தேவர்கள் எல்லாம் கண்ணிமையா நாட்டமாய் சந்தோஷத்துடனே சிவனை தெரிசனம் செய்வார்கள். (எ-று

13. ஞானமுங் கல்வியும் செல்வமு நன்மைசேர்
தானமும் மிக்க தயையுடன் வாய்மையும்
போனகம் தானம் பொறுமை யடக்கமும்
மானமும் மிக்கவர் வாழுஞ்சோ ணாட்டுளோர்.

(இ—ள்) இந்த சோழநாட்டில் உள்ளவர்கள் ஞானத்திலேயும், அடக்கத்திலேயும், தானமும், தயவும், பொறுமையும், மானத்திலேயும் மற்றய நாட்டிலுள்ளவர்களை ஈடுசெய்ய முடியாதவர்களாவார்கள். (எ-று)



14. மலை மடந்தையை வாரிச மங்கையை
கலை மடந்தையை கற்பமர் தேவிபோல்
தலை சிறந்துள தன்மையின் மிக்கார்
நிலை நிகர்ப்பவர் நீர்வள மாதரே.

(இ—ள்) இந்த நாட்டிலுள்ள ஸ்திரீகள் தயவிலே பார்வதிதேவியைப்போலவும், அழகிலே திருமகளைப்போலவும், அறிவிலே நாமகளைப்போலவும், கற்பிலே அருந்ததியைப்போலவும் வாழ்கின்றனர். (எ-று)

15. தெய்வ மாதலம் நீர்க்க தரிசனம்
சைவர் மேவுந் தலம்தவத் தோர்க்கிடம்
மெய்மை வாக்குடை யோர்கள் வினையறச்
செய்ய வல்லவர் சேர்வள நாடிதே

(இ—ள்) இந்த நாட்டின் சிறப்பானது அனேக சிவாலயங்கள் உள்ளது. இது தெய்வநாடு, இதில் நிஜதெரிசனம் செய்தவர் வாசம் செய்யும் இடம். செப்பிய வாக்குத்தவறாமல் கொடுக்கின்ற நல்லோர்கள் இருக்குமிடம். ஞானயோக சாதனைகளில் வல்ல மகாத்மாக்கள் இருக்கின்ற இடமுமாகும். (எ-று)

16. தேவர் நாடும் அளகையுஞ் செல்வமும்
மூவ ரோர்வள முற்றுமோர் நாட்டினி
லாவ தாகச் செய்யுநீர் நாட்டணி
ஓவி லாவதற் குவமையுண் டாகுமோ.

(இ—ள்) இந்த நாட்டிற்குச் சமானமாக வேறு ஒரு நாடு உண்டோ? என்றால் தேவேந்திரனுடைய அமராவதிப்பட்டணமும், அளகாபுரியும், திரிமூர்த்திகள் வாசம் செய்யும் பட்டணமும், இதிலுள்ள சகல வஸ்துக்களும் ஒரு நாட்டில் உண்டாகினும் இந்நீர் நாட்டுக்குச் சமானமாகச் சொல்லக்கூடுமோ? முடியாது என்றபடி. (எ-று)

17. பெற்ற மூரும் பெருமான் திருவிழா
கற்ற மேலோர் திதிக்கட வுளோர்கள்
குற்ற மின்றி குருப்பிதிர் பூசனை
முற்றுஞ் செய்வர்சோ ணாட்டின் முழுதுளோர்.

(இ—ள்) இடபாரூடரான பரமசிவன் திருவிழாவிலே சகல சாஸ்திரமும் கற்று மேலான அறிவினையுடையவர்கள் திதி, பூசனை, குருபூசனை, பிதுர்பூசனை முதலானவையெல்லாம் தினந்தோறும் செய்வார்கள் சோணாட்டில் உள்ளவர்கள்: (எ—று)

18. மன்றல் மேவொளி மன்னர்தம் மார்ப்பொலி
வென்றி வேந்தன் முரசொலி மேகங்கள்
குன்றின் மேவி குமுறொலியும் மிகச்
சென்று மாக்கடல் சேர்ஒலி சேருமே.

(இ—ள்) இந்நாட்டில் கலியாண வாத்தியத்தின் சத்தமும் பள்ள ஸ்திரீகள் நாற்று நடுகிறபொழுது எழுப்பும் பாட்டின் சத்தமும், அரசனின் ஆசார வாசற் பேரிகையின் சத்தமும், மேகங்கள் இடித்து மலையின்மேல் மழைபொழிந்து குமுறுகிற சத்தமும் சமுத்திர கோஷத்திற்குச் சமமாக இருக்கின்றது. (எ—று)

19. குறிஞ்சி முல்லையும் கோங்கு மாகஞ்சமும்
நிறைந்து வாரியி னெய்தலுங் கேதகை
யறிந்து வண்டின மாலையாய்ச் சூடவே
செறிந்த நீர்நா டாம்தெரி வைக்கே.

(இ—ள்) நீர்நாடாகிய பெண்ணுக்கு குறிஞ்சி, முல்லை, தேன்பொருந்திய தாமரை, நெய்தல், தாழை முதலானவற்றின் மலர்கள் அடுக்கடுக்கான மாலைகளாகியது. இதில் வண்டுகள் மொய்த்து கீதகானம் செய்கின்ற அலங்காரத்துடனே இருந்தாள் அப்பெண்

20. திரைகடற் கீழ்த்திசை தெற்குவெள் ளாறு
குரைபெறும் மேற்றிசை கோட்டக் கரையுமே
வளர்பெறும் வடக்கில் பெண்ணை யாறுகும்
தரையினில் சோணாடு தகுமிது வாமே.

(இ—ள்) கிழக்கில் கீழ் சமுத்திரமும், தெற்கு வெள்ளாறும், மேற்குக்கோட்டக்கரையும், வடக்குப்பெண்ணையாறும், உடைய நடு சோணாடு என்று சொல்லப்படுகின்றது. (எ-று)



21. ஒப்பி லாவிந் நாட்டி னுயர்ச்சியை
செப்பி னுமைதிச் செஞ்சடை வேதியன்
திப்பி யதனி ராசேந் திரபுரம்
இப்பு விக்குத் திலகம தேத்துவாம்

(இ—ள்) இப்படிச் சொல்லிய காவேரியும், வெள்ளாறும் முத்துமாலையாக இரண்டு பக்கத்திலும் தரித்துக்கொண்டு விளங்கிய நடு நாடாகிய பூமிதேவிக்குத் திலகம்போன்று விளங்கியது இராசேந்திரபுரம். இது சந்திரசேகரரான திருக்குமரேசுவரராலே அதிகமாய் விளங்கியதாம். (எ-று)

இரண்டாவது நாட்டுச்சருக்கம் முற்றும்.

## மூன்றாவது திருநகர்ச்சருக்கம்.

1. மருக்கமழ் மலர்ப்பொழில் வளைத்தநீ ரகழிசூழ்
திருப்பதி யரணெயி லெழிலுளவிண்ணள வெழுந்தே
திருத்திக ழுப்பதி சேர்ந்திடுதேவரும் வந்து
விருப்ப மெய்திரு மங்கல நிறைந்திடு மிகவே.

(இ—ள்) இப்படி விளங்கிய இராசேந்திரபுரத்தைச்சுற்றிலும் இருந்த வாசனை பொருந்திய புஷ்ப வனங்களை பக்கத்தில் வைத்திருந்த ஜலமிகுந்த வழிகளாற்சுற்றிய பட்டணத்தினுடைய கோட்டைமதில் உன்னதமாக ஆகாசமட்டும் உயர்ந்தஅலங்காரமுள்ள தலத்தினுடைய மகிமையினாலே முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தியெண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்டவசுக்களும், கின்னர கிம்புருஷாதிகளும் தெரிசனம்பண்ணும் விருப்பமுள்ள மங்களகரமான ஸ்தலம். (எ-று)

2. கதிக ளைந்தொடும் பதினெட்டு சாரிகைக் கற்ற
குதிரை தன்னொடு மேழுயர் குஞ்சரக் குழாமும்
மதியை ஒப்புறும் வனிதையர் மாடமும் கவிஞர்
எதிர் இருந்திடு கோட்டியு மிடையறு மாளிகையெங்கும்.

(இ—ள்) அந்தப்பட்டணத்திலுள்ள குதிரைகள் எல்லாம் பஞ்சகதியும் பதினெட்டு சாரிகையும் கற்றும், யானைகளெல்லாம் ஏழுமுழம் உயர்ந்தும். இவைகள் சஞ்சரிக்கும் வீதிகளில் பொருந்திய மாட மாளிகைகளில் மூன்றும் பிறைபோலும் நெற்றியினையுடைய பெண்கள் விளையாடிக்கொண்டு இருப்பார்கள். உப்பரிகை மாடமாளிகைகளில் வித்வத்சனங்கள் எதிரெதிரே இருந்து பிரசங்கம் செய்வார்கள். (எ-று)

3. ஐந்து நன்னிலத் துள்ளன வரும் பொருளைந்தும்
மூந்து மாறெனும் சுவையு முன்மூன் றெனுமணியும்
எந்த லாபமுந் தரும்பொரு ளனைத்துமிவ் விடத்தின்
வந்த வாணிபர் சொற்படி வழங்குமங் காடி.

(இ—ள்) ஐந்து நிலத்தினிலுள்ளவை ஐந்து பொருள் என்னவே நாடுபடு திரவியம் ஐந்து, நகர்படு திரவியமைந்து, காடுபடுதிரவியமைந்து, கடல்படுதிரவியமைந்து, மலைபடு திரவியமைந்து ஆக இருபத்தைந்து விதமும், ஆறுவகைருசி பதார்த்தமும், ஒன்பது வகை ரத்தினமும், எந்தெந்த லாபங்களையும் கொடுக்கும் வஸ்துக்களையும், மிகுதியாகக் கடைவீதியில் வைத்துக்கொண்டு குறைவு இல்லாமல் நிறைவாகக் கொடுப்பார்கள் வாணிபர். (எ-று)

4. கற்பக நிறை கதிர்செய் சிந்தாமணி சுரபி
நிற்பதாகிய பதும நன்னிதி சங்க நிதியும்
பொற்பதாக விந்நகர் வந்துதித் தனபோல்
மற்புயாசல மன்னர்கள் மறுகெலாம் வைகும்.

(இ—ள்) இந்தப்பட்டணத்தில் இராஜவீதிகளெல்லாம் கற்பகவிருட்சம், பிரகாசம் பொருந்திய சிந்தாமணி, காமதேனு, பதுமநிதி, சங்கநிதி இவைகளெல்லாம் அதிகமாக விளங்கி இருக்கும். (எ-று)



5. காம மாக்களாம் விலங்கினை கைப்படக் கருதி
தாம மார்குழன் முகப்பொறி விழிவலை தன்னை
ஏலம மாகவே யெயினர் போலவே சியர்களும்
ஏம மாசுகத் தகப்படா தெவர் சொலின் மன்னே.

(இ—ள்) இப்பட்டணத்தில் தாசிகள் மதவிகாரமுள்ள விட புருடர்களாகிய மிருகங்களை கைவசமாக்கவேண்டுமென்று மாலைதரித்த அளகமுள்ள முகப்பொறிக்குள்ளாக்கி கண்ணாகிய வலைகளைக்கட்டி, பொறிகளை வைத்து காட்டிலுள்ள மிருகங்களை உள்ளாக்குவதுபோல் அவர்களையும் பிடித்தனர். (எ-று)

6. கல்விநூல் வல்லார் விற்றிறன் மன்னவர் கவிஞர்
செல்வமிக் கவர்கள் யோகமும் ஞானமுஞ் செங்கோல்
வல்லநல் நீதியும் தருமமு வளமுடன் விளங்கும்
நல்விழா மிதமின் னகர்ப்பெருமை யார்நவில் வார்.

(இ—ள்) இந்த இராஜேந்திரபுரத்தில் சகல சாஸ்திர புராண வித்வத்ஜனங்களும், வில்வித்தையுள்ள இராஜாக்களும் அழகுள்ளவர்களும், செல்வத்தில் மிக்கவர்களும். ஞான யோகமுள்ளவர்களும், செங்கோன்முறைமை, தர்மம், விவாகாதி சந்தோஷங்கள், திருவிழாக்களும் நாள்தோறும் மிக்கு விளங்கும் அதனால் இதன் பெருமையை யாவர் சொல்ல வல்லார்: (எ-று)

வேறு.

7. மிக்குயர் மேனிலை மாடந் தோறும்
கைக்கொளும் வீணையர் இசையும் காட்சியோர்
திக்கெலாம் மகிழ்தரும் மகளிர் தெள்ளிசை
புக்கவே யெவரிவை புகல வல்லரே.

(இ—ள்) மிகுந்த உயர்ச்சியினையுடைய மேல் வீடுகள் தோறும் மாதர்கள் வீணை இசைப்பார்கள். வீணையினுடைய இசையும் அவர்கள் பாடுகிற இசையும் இரண்டையும் கண்டு பகுத்துச் சொல்லவல்லவர்கள் எவர்: எவரும் இல்லையென்றபடி: (எ-று)

8. மாதர்தம் முகனிறை மதியமென் றரா
மீதணு கிட மெல்லமே தினியில்
ஓதரு மயிலெனும் சாயற் கொல்கிவான்
ஆதர வாய்மறைந் தகலு மென்பவே.

(இ—ள்) மேனிலை மாடங்களிலிருந்து விளையாடிய மாதர்களின் முகமானது பூரணச் சந்திரன் என்று ராகுவானது தொடர, அவர்களுடைய சாயலானது மயிலின் சாயல்போன்றிருந்ததினால் மயில் என்று நினைத்து ராகு பயந்து ஆகாயத்திலே போய் மறைந்தது. (எ-று)

9. குழல்கரு முகிலென கொம்பனார் மின்னா
மெழுதரு மேனிலை குன்ற மென்னலாய்
பழுதிலாப் பாடலாம் அமுதம் பதிமழையாக
முழுதுளார் விழைபயிர் தளிர்தரு மத்தரோ.

(இ—ள்) இப்பட்டணத்தில் மேனிலை மாடத்தில் இருக்கும் மாதர்கள் மேகமாகவும், அவர்கள் சரீரமே மின்னலாகவும், மேனிலைமாடமே பர்வதமாகவும், அவர்கள் பாடலே குளிர்ச்சியான அ மி ர் த மழையாகவும், அந்தப் பட்டணத்திலுள்ள புருடர்கள் ஆசையாகிய பயிர்ச்சோலையைஉண்டாக்கி பணைத்து நெருங்கியது. (எ-று)

10. மாயவன் காப்பதும் மலர்க்கண் வைகுவோன்
வேயவன் படைப்பதும் விரைசெய் கொன்றையோன்
றூயவன் னருளினா லென்னதொல் பொரு
ளாயதாஞ் செகத்தினை யாக்கிக் காக்குமூர்.

(இ—ள்) இன்னும் மகாவிஷ்ணுவானவர் பூமியைக் காப்பதும், தாமரையில் வைகும் பிரமன் சகல உலகமும் சிருஷ்டிப்பதும், கொன்றைமாலையைத் தரித்த பரமசிவன் கடாட்ச வீக்ஷண்யத்தினால் அல்லவா என்றும் பழமையாகிய திரவியங்களை உண்டாக்கி எங்கும் ரட்சிக்கும். (எ—று)



11. மேனிலை நிலாச்சிலை வட்டம் வீழ்புனல்
தானநீ ரரிவையர் தோயும் தண்புனல்
ஆனமா நதிமூன் றுனதொன் றென்னப்
போனதின் னகரகழிக் கடற்குளே புகுந்ததே.

(இ—ள்) மேனிலை மாடத்தின் சந்திரகாந்தக் கல்லினால் பதித்த வட்டமாகிய மேடைகளில் அப்பூரண சந்திரனால் உருகி விழுந்த நீரும், புருடர்கள் நித்தியதானம் செய்யும்பொழுது விடும் நீரும் பெண்கள் குளித்து வரும்பொழுது அளகம் முதலானவற்றிலிருந்து விழுந்த நீரும் மூன்றுகச்சென்று அகழியாகிய கடலிலே வீழ்ந்தது. (எ-று)

12. பொறித்திரள் எரித்திடப் போமுன் சீவனை
பறித்திடும் பாசம் சொல் முசலம்பற்றியே
கறுத்தடித் துறக்கிய கால தூதர்கள்
செறுப்ப ரித் திருநகர் சேர்இலாரையே.

(இ—ள்) இந்த தலத்தைச் சேர்ந்து வசிக்காதவர்களை எமதூதர்கள் அக்கினிப்பொறிகளை மேலே சிதறவிடுவார்கள். ஆயுதங்களைவிடாமல் அச்சீவனை பாசம் இருப்புலக்கை இவைகளினால் கோபித்து உறக்கி அடிப்பார்கள். (எ-று)

13. வீரர்க ளழலெழும் வேலினாற் பொறி
போர்செய் விலங்குண வுயிர்விண் போகியும்
மார்வமே கொடுத்திடு மரம்பை மாதரோ
டேர்பெறு தோளினி லிலங்கவே வீறுவார்.

(இ—ள்) இத்தலத்தில் வாசம்புரிந்தவர்களுக்கு இத்தலம் தேவலோக மாகும். ரம்பா ஸ்திரீகள் போகம் உண்டாகும், மற்றுமுள்ளவர்களும் மகாவீரராகியோர் கையில் வேலைக்கொண்டு சண்டை செய்து நரிமுதலான மிருகங்கள் பிடுங்கித்தின்னும்படியுள்ள சீவனும் தேவலோகத்தில் தேவரூபமாகி ரம்பா ஸ் தி ரீ க ள் கையில் பூமாலையாக விளங்கி இருப்பார்கள். (எ-று)

14. கைக்கொளும் வீணையின் இசையும் கண்டத்தின்
மிக்கெழும் ஓசையின் விதமும் வேறென
வொக்கு மென்றிதை யுரைப்ப வரின்றென
மிக்குயர் நாரத ரிசையும் வெள்குமே.

(இ—ள்) அந்தஸ்தலத்தில் வீணை வாசிக்கின்றவர்களின் வீணையின் இசையும், அவர்கள் கண்டத்தின் ஓசையும் வேறுகாணாது வேருகச்சொல்லுகின்றவர்கள் இல்லை. நாரதரும் இந்த இசையைக்கேட்டு நாமும் இப்படி இசைக்கமாட்டோம் என்று சொல்லுவார். (எ-று)

15. தடங்க டோறுளம் தாமரை யழகுளார் தங்கைக்
குடங்க டோறினும் கூடிடும் குடாவளை சொரி முத்தம்
மடங்க டோறினும் மாதவ ராசர் கள்வாழும்
இடங்க டோறினும் முரசொலி இடைவிடா தெழுமால்

(இ—ள்) குளங்கள் தோறும் தாமரைப்பூவில் இருக்கும் லக்ஷ்மியைப்போலும் அழகுள்ள பெண்கள் கூட்டமும் அவர்கள் தண்ணீர் எடுக்கின்ற குடங்களெல்லாம் சங்குகளீன்ற முத்துக்களும் வசனிக்கப்பட்ட மடங்கள்தோறும் மகாதவம் பொருந்திய பெரியோர்களும், இராஜாக்கள் இருக்கும் வீதிகள் தோறும் வாத்திய சப்தங்களும் ஓயாதிருக்கும். (எ-று)

16. பானல்மிக்குள தடந்தொறும் வாளைகள் பாயும்
தேன் பொருந்திடுங் கமலத்தி லிசைவண்டு
[கள்சேரும்
ஊன மின்றிய வயல்களிற் பணிலமுத் துயிர்க்கும்
வான முட்டிய பொதும்பரிற் களிமயில் வாழும்.

(இ—ள்) நெய்தல் அல்லிகள் பொருந்திய தடாகங்களில் வாளைமீன்கள் துள்ளிப்பாயும், தேன் பொருந்திய தாமரை மலர்களில் வண்டுகள் கீதம் பாடும், குற்றம் தீர்ந்தவயல்களில் சங்கினங்கள் முத்துக்களை ஈனும். ஆகாயம் அளாவிய வனங்களில் மயில்கள் விளையாடும். (எ-று)



17. கரும்பி னிற்றிகழ் கணுவெறி முத்தமும் கமலத்
தரும்பவிழ்ந்தநற் கமலங் களளித்திடு முத்தும்
பெரும்புகழ்ப் பெறுசென்னெலின் முத்தமும் பிறங்க
வரும்பிடு நிலவென வல்லியும் மலர்ந்ததெங்கும்.

(இ—ள்) கரும்பினுடைய கணுக்களிற் நெறித்து உதிர்ந்த முத்துக்களும், ஜலத்திலிருந்து மலர்ந்த தாமரைப் பூவிலிருந்த முத்துக்களும், மிகுந்த கீர்த்தியுள்ள நெல்லின் முத்துக்களும் அனேகமாக தலைமயங்கியிருக்கும் நிலாப்போல பிரகாசிக்க, சந்திரோதயமாயிற்றென்று அல்லிகளெல்லாம் மலர்ந்து விளங்கியது. (எ-று)

18. பொன்னுகந்திடு பங்கயப் போதினிற் பொற்பு
மன்னுவெண் பணிலங்களும் வாஞ்சை யோடுயிர்த்த
சொன்னலந் திகழ் பருமுத்துத் தூய்சிறை யதனல்
அன்னம் முட்டை யென்றடை கிடந்தன்பு செய்திடு
[மால்

(இ—ள்) லட்சுமி பொருந்திய தாமரை மலரிலே வெண்மையான சங்கினங்கள் அன்புடன் ஈன்ற முத்துக்களை அன்னங்கள் தங்களது முட்டைகள் என்று சிறகினலே போர்த்தி அடை கிடக்கும். (எ-று)

19. நிகரிலாதுயர் நிலாச்சிலை வட்டமே னிலையில்
அகமகிழ்ந்தம ரரிமதர் விழிமயி லன்னார்
முகம் வளர்ந்திடு முழுமதி யெனபுனல் மல்கி
மிக வீழ்புனற் றடமெலாம் குறைவர மேவும்.

(இ—ள்) உயர்ச்சியுள்ள சந்திரகாந்தக் கல்லினல்செய்த மேனிலை மாடத்தில் இருந்த மனமகிழ்ச்சியுள்ள செவ்வரிகருவரி பரந்த கண்ணையுடைய மயில்போலும் சாயலுள்ள, மாதர்களின் பூர்ணச்சந்திரோதயம்போலும் முகத்தினைக்கண்டு சந்திரகாந்தக் கல்லிலே நீர் ஊறிப்பெருகி ஓடி அத்தலத்திலேயுள்ள குளங்களெல்லாம் நிரம்பிற்று. (எ-று)

20. இந்திலங்கிய முகத்திய ரெதிரெதி ரிருந்து
பந்தை யன்புட னுடவும் பலபணிப் பாரந்
தந்ததா லிந்த ஆட்டமும் தாழ்வெனத் தள்ளி
யந்தளிர்க்கையா லனுதினமும் வேறுவேற ணிவார்.

(இ—ள்) சந்திரன்போலும் முகத்தினையுடைய சனங்கள் அங்கங்கும் எதிரெதிராக இருந்து பந்துகள் ஆடுகின்றபோதெல்லாம் ஆபரண பாரத்தினலே ஆட்டம் தோல்வியடையும் என்று வாங்கியெறிந்து தினம் தினம் வேறு வேறு ஆபரணம் தரித்துக் கொள்வார்கள். (எ-று)

21. அமரர் மங்கையர் பூவினிற் றென்றிசைக் கழகாம்
கமல மாதரைக் கணேசுர பதியினைக் கண்டு
இமய மாதுட னிறையவ ளிருந்திடு நல்ல
சமயம் நோக்கியே தபவொடு தரிசிப்பவரம்மா

(இ—ள்) இத்தலத்தில் இருக்கின்ற ஸ்திரீகள் தெய்வப் பெண்களாகும். அவர்கள் இங்கே வந்ததின் காரணம் தெட்சிண பூமியிலுள்ள சிவஸ்தலங்களில் உன்னதமாக விளங்கியது இந்த கணேசுரபுரம். இதில் திருமகள்வாசம் செய்வாள் பர்வதராஜபுத்திரியாகிய வீருமுலை அம்மையும், திருக்குமரேசுவரரும் கிருபாகடாட்சத்துடனே இருக்கும் சமயம் பார்த்து தெரிசனம் செய்யவேண்டும் என்று காத்திருக்கிறார்கள். (எ-று)

22. விண்டலத் தினைத் தடவுற உயந்திடு மேலா
மண்ட ரும்புக ழணிநகர் கோபுரந் தன்னைக்
கண்ட வரும்மிது மேருவாம் என்னக் கதிரோன்
திண்டிறற் றடந்தேர் நின்று மறுகிடும் திகைத்தே.

(இ—ள்) இவர் சன்னிதி முன்னக இருக்கும் கோபுரம் ஆகாயத்தை அளவுகாண உயர்ந்திருக்கும் அதை கண்ணுக்கும் காணுத உயரமுள்ள மகாமேருவென்று சந்தேகம் கொண்டு சூரியன் திகைத்து நின்றனன் என்பதாம். (எ-று)

23. மாவின மென்கனி மாதடத் தாமரைப்
பூவி னீணிலை வழிவீழல் பூசுரர் பொருந்து



மாவினி னெய்யினை யக்கினிக் குண்டத்தி லன்பாய்
தூவல் போன்றிடு முலகினி லொப்பனை சொல்லே.

(இ—ள்) மாம்பழம் மிகுதியும் கனிந்து அதனுடைய ரசம் மாவிலையிலே விழுந்து, அருகிருந்த தடாகத்தில் குளிர்ச்சியுண்டான கொடியினையுடைய அன்றலர்ந்த செந்தாமரைப் பூவில் இறங்கினது அந்தணர் ஓமகுண்டத்தில் அக்கினியில் மாவிலையினலே நெய்யை வார்த்து ஓமம் செய்வதுபோல இருந்தது. (எ-று)

வேறு.

24. மடன்முருக் கவிழும் பசியதாட் கமல மலரினில்
[யளிமுரல் குளத்திற்
குடவளை யினங்கள் சூன்முதிர்ந் தலறி கொடுத்திடும்
[பசியவெண் முத்தை
கடகரிக் கோட்டை கமலவாண் முகையைக்
[கனகமா மேருவையொத்த
தடமுலை மாஞரிரண்டுகை யாலுந் தாங்கியம்
[மானையா டிடுவார்.

(இ—ள்) அரும்பவிழ்ந்து மலர்ந்த பசிய கொடியினையுடைய தாமரைப்பூவில் வண்டுகள் சீதம்பாடும் தடாகங்களில் பரிய சங்குகள் சூல் முதிர்ந்து ஈன்ற பெரிதாகிய முத்துக்களையும், யானைக்கோட்டையும், தாமரை மொக்கையும் மகா மேருவையும் நிகரான ஸ்தனங்களையுடைய பெண்கள் தன் இரண்டு கையினலும் எடுத்து அம்மானை ஆடுவார்கள். (எ-று)

25. பரமன்றன் சரித்திரம் பாடு வோர்களும்
வருமதிதிக் கன்னம் வழங்கு வோர்களும்
அருமையாங் கேள்வியி னன்பு ளோர்களும்
மருவியே யிருப்ப ரிந்தமா னகர்க்குளே.

(இ—ள்) சிவகதை படிக்கிறவர்களும், கேட்கிறவர்களும், அதிதியாக வந்தவர்களுக்கு அன்னம் கொடுக்கின்றவர்களும் ஆகிய இவர்கள் நிறைந்திருப்பர் இந்நகரில்.

(இ—ள்) இப்படியாக குமரேசுரர் இருக்கின்ற சமயத்தில் வாணுசுரன் ஆயிரம் கைகளினுலும் மத்தளம் அடிக்க, பானு கம்பன் ஆயிரம் வாய்களினுலே ஆயிரம் தவளச் சங்குகளை வைத்து ஊத அந்த சத்தத்தில் ஒலி மட்டாக, நித்தன் என்றும் அத்தன் என்றும் பின்னும் பலபடியாகத் துதித்தும், தும்புரு நாரதர் யாழ்வாசிக்க பக்தர்களாகிய சித்தர்கள் அனேக ஸ்தோத்திரத்துடனே தெரிசனம் பண்ணி இருந்தார்கள்.

32. மானிடர் மன்னர் முனிவருந் துதிக்க
மாலயன் களித்துநின் றேத்தக்
கானகத் திலைநீ ரருந்திய பெரியோர்
களித்துநின் றரகர வென்ன
வினமி லெட்டு திசைக்கிறை யவரும்
இருக்கெடுத் தியம்பவே நந்திக்
கோனடிக் கஞ்சி யவரவ ரெல்லாங்
கோதிலா மனத்தொடு நின்ருர்.

(இ—ள்) நரர், அரசர்கள், முனிவர்கள் ஸ்தோத்திரம் செய்ய, விஷ்ணு, பிரம்மா சந்தோஷமாக தோத்திரம்செய்ய, காய்ந்துபோன இலையை உண்டு, நீரருந்தி தவம் செய்கின்ற முனிவர்கள் அரகரா என்று சேவிகக, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் முதலானவர்கள் ருக்வேதத்தினுலே ஸ்தோத்திரம் செய்ய மற்றுமுள்ளவர்கள் கிட்டி.தெரிசனம் செய்யாமல் நந்தீசுவரர் பிரம்படிக்குப் பயந்து அங்கங்கு நின்ற இடங்களிற்ருனே இருந்து தியானம் பண்ணினுர்கள். (எ-று).

33. வீர மாமணி யொலித்திட சாமரை வீச
பார மாமுலை மங்கையர் பண்ணுடன் பாடி
பேரி தாஞ்சுதி திறம்பிலா நடனமே செய்ய
கோர மாகிய பூதத்தின் கூட்டமு மிகுமால்.

(இ—ள்) கொத்துமணி, கைமணி, பெரியமணி இவைகள் சப்திக்க, வெண்சாமரம் வீச பாரம் மிகுந்த குசகும்பங்களோடு கூடிய பெண்கள் பண்ணுடனே பாடி சுதி தப்பாமல்



நடனம் செய்தார்கள். சிங்கப் பல்லும், பருத்த தேகமும், மேல் நோக்கிய ரோமமும் இப்படி கோரமான அனேக பூத கணங்கள் கூட்டங் கூட்டமாக நெருங்கி நின்றன.

34. களிமலர்ச் சோலை நிழலின் புனித
நதிக்கரை பொய்கையி னுதன்
குளிர்திரு மாடம் மேல்நிலை தோறுங்
குறைவிலா விதான நீழலிலுந்
தளிர்மலர் தனிலே வண்டினம் நிறைந்தே
சாற்றும்நந் தனவனந்தனிலுந்
தெளிவொடு மடியா ரிருந்துகும் பிடுவார்
தினந்தொறு மிகமன முவந்தே.

(இ—ள்) குளிர்ச்சி பொருந்திய தேனையுடைய மலர்சோலைகளுள்ள இடங்களிலும் நிர்மலமான நதிக்கரையிலும், புண்ணிய தீர்த்த தடாகக் கரையிலும் மேகங்கள் சஞ்சரித்து அழகு பொருந்திய மேல் வீட்டிலும் வாசல் சவுக்கைகளிலும் புஷ்ப மாலைகள் கட்டி அலங்காரம் செய்த பந்தலிலும், மலரிலே வண்டுகள் நிறைந்த நந்தவனங்களிலும், தெளிந்த அறிவினையுடைய சிவனடியார்கள் தினம் தினம் இருந்து கும்பிட்டு தோத்திரம் செய்து தியானம் செய்வார்கள். (எ.று).

35. இவ்வித மான யெருச்கத்தம் புலியூ
ரெழிலினை யுரைத்தன மினிதாய்
கொவ்வைவாய் பசிய மலை மயில்வலத்திற்
குடியுள குமரனின் சிறப்பும்
எவ்வமித் தலத்தி னண்ணினோர் பேறும்
மிறையளித் திடுமிகு பேறும்
அவ்விய மகன்ற முனிவரர் கேட்க
வறைகுது மன்புட னினிதே.

(இ—ள்) இப்படி இருந்துள்ள எருக்கத்தம்புலியூர் அலங்காரமும் ஸ்தல மகிமையும் சொன்னேம். இனி கொவ்வைப் பழம் போலும் இதழும் பச்சை நிறமான தேகமும் உள்ள பர்வதராஜ புத்திரியாகிய வீருமுலை அம்மனை வலப்பாகத்தில்

(இ—ள்) இத்தலத்தின் பெருமையை சவுனகாதிரிஷி களுக்குச் சொன்னேம். அதை குற்றம் தீர்ந்த மனந்தெளியக் கேட்டு தடையில்லாமல் யாகம் செய்வீர்கள் என்ருர். (எ-று)

7. என்றுதன் குரவனும் வியாத னென்றிடு
குன்றினை கரதலங் குவித்து மெய்யெலாந்
துன்றிய புளகெழ சொரிய வேவிழி
யொன்றிய நீர்தர வோதுவா னரோ.

(இ—ள்) இவ்வண்ணம் தமது குருவான வேதவியாச மகரிஷியென்னும் ஞான பர்வதத்தை இரண்டு கையினுலும் நமஸ்கரித்து சரீரங்களெல்லாம் புளகாங்கிதமாய் இரண்டு கண்களாலும் ஆனந்தநீர் ஒழுக சூதமகாரிஷி சொல்லுவார்.(எறு)

8. மல்லல்சே ரித்தல மகத்துவந் தன்னைச்
சொல்லுவ தெளிதல தொகுத்துச் சொல்லுவேன்
கல்விசேர் புத்தியால் கருதிக் கேட்பவர்
எல்லையில் புண்ணிய மெய்து வாரரோ.

(இ—ள்) நெருங்கிய மாடமாளிகையோடும் கூடிய இந்த ஸ்தலமகத்தியத்தை எம்மாலும் சொல்லக்கூடாதாலுைம் தெரிந்த மாத்திரம் சொல்லுகின்ரேம். விந்தையினுற் தெளிந்த அறிவினுற் கேளுங்கள். கேட்டவருக்கு அளவில்லாத புண் ணியம் வரும் என்று சொன்னுர். (எ-று)

9. முன்னமோர் காலத்தில் முக்கணு னெம்ம
தன்னையா முமையவட் கன்ப தாகவே
மன்னுவே தாந்த வருக்கத் துண்மையை
சொன்னபோ தின்மனம் சோம்பி னளரோ.

(இ—ள்) முன்னமொரு காலத்திலே சோமசூரியாக்கினி யான பரமசிவன் எமது தாயான பார்வதிதேவிக்குத் தயவுடனே வேதாந்த உபநிடத்தினுடைய உண்மையை திருவுளம் பற்றுகிறபோது ஈஸ்வரி மனச்சோம்பலாய் பராமுகமாய் இருந்தாள். (எ-று)



10. வரைக்கொரு மகள்மேல் மழுவலான் சினந்தே
உரைத்ததிற் பத்தியா யுணர்ந்தி லாமையாற்
திரைக்கடற் பரதவர் தெரிவை யாகென
விரித்துரை செய்தலு மிகவு மஞ்சினுள்.

(இ—ள்) அதுகண்டு பரமசிவன் கோபமாகி நாம் வேதாந்த உபதேசம் செய்கிறபோது பத்தியுடனே கைகட்டி வாய்புதைத்துக் கேளாதபடியினுலே சமுத்திரதீரத்திலிருக்கிற வலையருடைய பெண்ணுக பிறக்கக்கடவாய் என்று சொன்ன மாத்திரத்திலே மிகவும் பயந்தாள் ஈசுவரி. (எ-று)

11. எழுந்திடும் விரைவொடு மென்செய் கோமெனும்
விழுந்திடு மடிமுனம் விரைந்து சாபத்தில்
அழுந்துரு வகையருள் புரிவை யானுற்ருற்
றழைந்திடு மணஞ்செயச் சாருவா யென்னவே.

(இ—ள்) இப்படியாகப் பயந்த ஈசுவரி எழுவாள் என்ன செய்வேன் என்று விழுவாள் திருவடிகளை வணங்கி அடியேன் பிறந்து இந்த சாபத்தில் அழுந்துருமல் கிருபை செய்து சந்தோஷத்துடனே வந்து என்னை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று சொன்னுள். (எ-று)

12. இன்மொழி யாகவே இறைவி கூறலும்
நின்மொழிப் படியேமணம் செய்ய சேருதும்
மென்னவிச் சொல்லால் இளகிய மைந்தரும்
வன்மொழி கூறிய வாறு நன்றரோ.

(இ—ள்) இப்படி ஈஸ்வரியானவள் சொன்ன இனிதாகிய நல்ல சொற்களைக் கேட்டு நல்லது அப்படியே நாம் வந்து விவாகம் செய்து கொள்ளுகிரேம் என்று பரமசிவன் திரு வுளம் பற்றியருளினுர். இவைகளெல்லாம் சொல்லக்கேட்ட விக்னேசுரரும், முருகேசரும் எழுந்து சுவாமியினுடைய பாதார விந்தங்களிற் பணிந்து நின்று தேவரீர் இப்படி கோபம்செய்து சாபம் கொடுக்கலாமா என்று வருந்தி வேண்டினர். (எ-று).

26. முத்தழல் வேள்வியை முயன்று செய்குவார்
சுத்தராய் வேதபா ராயணத்தைச் சொல்லுவார்
நித்திய தானமும் நியமமுஞ் செய்குவார்
பத்தியாங் கணேசுர பதியுளோ ரெல்லாம்.

(இ—ள்) மூன்றுகாலமும் அக்கினி கோத்திரம் செய்கின்றவர்களும், வேதபாராயணம் செய்கின்றவர்களும், நித்திய தானம் செய்கின்றவர்களும் அந்த கணேசுரப் பதியில் இருப்பார்கள். (எ-று).

27. இறையவன் றன்னெதி ரெழில்கொ ணங்கைதான்
முறையி னவின்றிடு மொழியு மின்சொலுந்
துறையதாய்க் கிளியெதிர் பூவை சொற்றலும்
மறைவின்றி கேட்டந்த மாது முவக்குமே.

(இ—ள்) நாயகனும் நாயகியுமாக எதிரெதிராக ஊடல் செய்ததுதீர, அந்த நாயகனே இதமாகிய வார்த்தைகளைச் சொல்லி சமாதானம் செய்ததைக் கிளிப்பிள்ளை முன்பாக நாகணவாய்ப் புட்கள் சொல்ல அந்தப்பெண் கேட்டு சந்தோஷமடைவாள். (எ—று).

28. வினவும் வெள்ளெருக் கத்தம் புலியூர்
குனிவரை வில்லினன் விழாவிற் கூடியே
பனிவிசும் பமரர்நால் வருணப் பாலரும்
முனிவரும் சித்தரும் மொய்த்துப் போற்றுவார்.

(இ—ள்) இவ்விதமான அலங்காரமும் மகத்துவமுமுள்ள எருக்கத்தம்புலியூரில் இருக்கும் குமரேசுவரது திருவிழாவின் தெரிசனம் செய்ய முப்பத்துமுக்கோடி தேவர்கள், அஷ்டதிக்குப் பாலகர்கள், அரிதான தவம் செய்கின்ற ரிஷீஸ்வரர்கள், சித்தர் முதலாகியவர்களும் நெருங்கிவந்து வணங்கி ஸ்தோத்திரம் செய்வார்கள். (எ-று)

29 இந்த மாவள மாகுமித் தலத் தெண்ணி லாயிரம்
[பேர்பெறு
முந்து சூலமும் பாணிகொண்டருள் முளரிமே
[லுளனி னிதாகவே



வந்த நான்முக னேடுமா லுக்கும் வரிசையா
[மும்ப ரீகுவோன்
கந்த னாகிய புதல்வ னைப்பெறு காட்சி யோனெனும்
[மாட்சியோன்.

(இ—ள்) இத்தலத்தில் அனந்தம் ஆயிரம் பேருள்ள சூல பாணியனை பரமசிவன் எமது கர்த்தனானவர், வண்டுகள் கானம் பாடிய தாமரைப்பூவில் எழுந்தருளி இருக்கும் நான்கு முகமுள்ள பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் மேலான வரங்களைக் கொடுத்தவர். கந்தனாகிய புத்திரனைப்பெற்றவர். சகல புவன கர்த்தாவானவர். (எ-று)

30. மலையின் மாதொடு மழுவலத்தன மாசில் சோதியன்
[வடிவதாங்
கலைம திக்கொழுந் தணிந்தவாசமார் கடுக்கை
[மாமலர் வேணியன்
நிலை பெ றுந்தயை விளங்கவேநிறை நிமல மாயரி
[யாசனத்
தலையி லென்கும ரேசன்மந்த காசமுற்றிடும்
[வேலையில்.

(இ—ள்) மலைமகளாகிய பார்வதியோடும் கூடிக்கொண்டு வலது கையில் மழுவைத்தரித்து மகாபிரகாசம் பொருந்திய ரூபத்துடனே மூன்றும்பிறைச் சந்திரனையும், வாசனைபொருந்திய கொன்றை மாலையையும் சடாபாத்திரத்திலே தரித்துக்கொண்டு மந்தகாசத்துடனே நிர்மல சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தார். திருக்குமரேசுவரர். (எ-று)

31. மத்த ளத்தொலி வாணன் செய்திட வளைக
[ளாயிரம் வாய்தொறும்
பத்தி யத்தொனி பாரில்குன்ற பானுகம்பனும்
[ஒலித்திட
நித்தவத்த நிமல வென்றிசை நிறுத்தும்
[யாழ்வலோர் சொல்லிட
சித்த ராகிய பத்தரும்செய விறைவ வென்தெரி
[சிக்கவே.

வைத்தருளிய திருக்குமரேசுவருடைய சிறப்பும், இந்த ஸ்தலத்தில் வசித்தவர்கள் பெற்ற பேறும், பரமசிவன் கடாட்சம் செய்ததும் நாம் உங்களுக்குச் சொல்லுகிறோம் என்று முனிவர்களைப் பார்த்து சூதமகாமுனி சொல்லுவார். (எ-று).

திருநகர்ச் சருக்கம் முற்றும்.

---

## மூன்றாவது தேவகணச் சருக்கம்.

1. செந்தமிழ் முனியுடன் கோதமன் தேர்ந்திடு
சிந்தைநல் வசிட்டனும் வீணைத் தேவனும்
முந்துள நைமிசா ரண்ய முனிகளும்
இன்புறநலந் தருந் தலமதை யியம்பெனவே.

(இ—ள்) அகஸ்தியரும், கௌதமனும், தெளிந்த சிந்தையுள்ள வசிஷ்டரும் நாரதரும் முன்னமே வாசம்செய்து வருகின்ற நைமிசாரண்ய முனிகளும் யாகாதி சிவபூசை முதலானதுகளும் சோடசதானாதி தபசிற்கு யோக்கியமான ஸ்தலம் எதுவென்று சொல்லவேண்டும் என்று கேட்டார்கள். (எ—று).

2. அன்றுநற் சூதனை வினவ வின்றுநீர்
குன்றலி லியாகம் குறித்துச் செய்வதற்
கொன்றிய நற்றல முரைப்ப மெய்த்தவர்
நின்று கேட்குத லுமக்கு நேருமே.

(இ – ள்) இப்படியாகக் கேட்பவர்களுக்குச் சூதமகாரிஷி சொல்லுகிறார் யாகாதி சிவபூஜை முதலானதற்கேற்ற தலம் சொல்லுகிறோம். உறுதியாகக் கேளுங்கள் உமக்கு அவை வந்து கிடைக்கும் என்று சொன்னார். (எ-று)

3 நற்றல மிதிலெந்த நன்மையும் கைவரும்
முற்றுணர் மூவர் புராணமும் முறையினால்



சொற்றரு குணம்பிர மாண்டஞ் சொல்வதற்
குற்றறா மெருக்கத் தம்புலி யூரே.

(இ—ள்) அது எந்தத்தலம் எனில் பதினெட்டு புராணத்திலே பிரமாண்ட புராணத்தில் சொல்லிய எருக்கத்தம் புலியூராம். யாகம் முதலான சகல சித்திகளுக்கும் நல்ல ஸ்தலம், இதில் செய்வது உடனே பலிக்கும் ஆகையால் இது உத்தமஸ்தலம். (எ-று)

4 விரிவதாய் கேட்பவர் களிக்கும் மெய்ம்மையே
பரிவதாய் முருகவேள் முனிவர் பண்ணவர்
தெரிவதாய் தலமிதிற் சிறப்புறப் பூசித்த
பெருமையும் உள்ளதை பேச வல்லரோ.

(இ—ள்) இந்தத்தல மகத்துவம் விஸ்தாரமாகச் சொல்லக் கேட்டவர்களுக்கு சகலபாக்கியமும் சத்தியமும் கைவல்யமாகும். அதைச் சொல்லுகிறோம், சுப்பிரமணிய சுவாமியும், முனீஸ்வரர்களும், தேவாதிகளும் இத்தலத்தில் பூசை செய்த பெருமையும் அதனால் பெற்ற பேற்றையும் சொல்லவல்லவர் உளரோ என்று சூதமகரிஷி சொன்னார். (எ-று)

5. இவ்வுல கத்துமா தலத்தி னேற்றமாஞ்
செவ்விய முறைமையின் சிவனு மப்பதி
திவ்விய வுருவினிற் சேர்ந்து நின்றிடு
மெவ்வமில் தீர்த்தமு மெங்கு மில்லையே.

(இ—ள்) இந்த உலகத்திலுள்ள மகா தலங்களுக்கெல்லாம் அதிகமாக விளங்கும் இந்தத்தலத்தில் எழுந்தருளியிருக்கிற பரமசிவன் திவ்யரூபமும் இதில் குற்றமற்றிருக்கும் தீர்த்தத்திற்குச் சமானமுமாக எங்கும் இல்லை. (எ-று)

6. இத்தலப் பெருமையை சவுனக ரென்றிடு
முத்தமர்க் கன்பினு லுவந்து சொல்லினேம்
நித்தமாஞ் சிந்தையி லமைந்து கேட்டுநீர்
சத்திய மியற்றுவீர் தடையி லாமலே.

வேறு.

13. எத்திறமிச் சாபமதை யிடுவரெனக்
கணபதிமுன் பீடமீதின்
வைத்திடுபுத் தகமெடுப்ப முருகவே
ளுடன்சினந்து வலிதிறேடி
கைத்தலத் தேட்டினைப் பறித்து
கடலிலிட கைலைநாயகன் கனன்றே
புத்தகத்தைப் பறித்தெந்தா யூமையாகென
கடுஞ்சொற் புகன்றனன்றே.

(இ—ள்) என்ன காரியத்திற்காக இவ்விதமான சாபம் கொடுத்தீர்களென்று விக்கினேசுரர் ஓடி பரமசிவன் முன்னே பீடத்தின் மேல் வைத்திருந்த புத்தகத்தை எடுத்தார். அதை குமரசுவாமியானவர் பறித்து சமுத்திரத்திலே எறிந்தார். கோபங்கொண்ட பரமசிவன் முருகனை ஊமையாக என்று சபித்தார் (எ-று).

14. சொல்லற்கருவெஞ் சாபத்சால் துளங்கியுளம்
தூயகங்கை சடையான்பாத
மலர்க்கமலம் பணிந்தெழுந்து கைகுவித்தே
வளர்ஞானக்கடலே சாபம்
விலக்கும்வகை செயவேணும் பிதாவென்று
மெண்ணாதுமிஞ்சிச் செய்தேன்
நிலத்துலக மெங்குமென் மேலன்புடையாயென
மிகநிகழ்த்து வாரே.

(இ—ள்) தெரியாமல் யான்செய்த அபராதத்தை பொறுத் தருளவேண்டும் என்று குமரசுவாமியானவர் சொல்லுதற் கரி தான சாபத்தினாலே மனங்கலங்கி, தெளிந்த கங்கையைச சடையில் தரித்தருளிய பரமசிவன் பாததாமரையிலே நமஸ் கரித்து எழுந்து வணங்கி, கைகட்டி வாய்புதைத்து நின்று கொண்டு அனேகம் தோத்திரத்துடனே ஞானசமுத்திரமே அடியேன் பிதாவென்று எண்ணாமல்செய்த தப்பிதமான காரியம் செய்துகொண்டேன். பூலோக முதலான சகல லோகங்களை யும் ரட்சித்து சகல குற்றங்களையும் பொறுத்த சகல புவன கர்த்தாவே இந்த சாபந்தீரும் வகை செய்யவேணும் என்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறார். (எ-று).



15. அறியாமை யால்சிறிய மைந்தன்செய்
யபராதம் பொறுத்தல் தாதை
நெறியாகும் பிறரிதனை நீக்குவா
ருண்டோவென் றிரந்த லோடும்
வெறியாருங் கொன்றைவேய்ந் தோனிரங்கி
விசாகனையே சபித்த குற்றம்
குறியாமற் பொறுத்தனநா மவைமாற்றும்
வகையினை கூறக் கேண்மோ.

(இ—ள்) அறியாமையினாலே சிறிய தன் பிள்ளைகள் செய்த பிழைகளை தகப்பன் பொறுப்பதே கடன். இதைப் பொறுக்காமல் போனால் அதைப் பரிகரிக்கிறவர்கள் உண்டோ சுவாமி என்று இரண்டு கையையும் ஏந்தி சாபந்தீர்த்தருள வேண்டும் என்று கேட்க தேன்பொருந்திய கொன்றை மாலை யைத் தரித்த பரமசிவன் சந்தோஷமாகி நாம் சபித்த சாபத்தை பொறுத்தோம். அது தீருகிறவகை சொல்லுகிறோம் கேள் என்றார். (எ-று).

16. திருத்தகு தென்றிசை தன்னினமக்கினி
மையான தலம்தெரிய நன்று
யுரைத்திடுவேன் முதுகுன்றமெனுந் தலத்திற்
றென்கீழ் பாலுள தாமப்பே
ரெருக்கத்தம் புலியூ ரென்றிசைப்ப
ரதனினிமையப் பாவை யோடு
மிருப்பதென்றும் தொண்டர் தமக்கெவை
வேணும் அவைவழங்கற் கிச்சையாயே.

(இ—ள்) அழகு பொருந்திய நாவலம் பெருந்தீவில் அத் தெட்சிண திக்கில் நமக்கு மிகுதியும் விருப்பமான ஸ்தலத்தை தெரியச் சொல்லுகிறோம். முதுகுன்றம் என்ற விருத்தாசலத் திற்குத் தென்கிழக்கில் எருக்கத்தம் புலியூரென்னும் பெய ருடனே இருக்கும் ஸ்தலத்தில் பர்வதராஜன் புத்திரியாகிய பார்வதி தேவியுடனே இருந்துகொண்டு நீங்காமல் வாசம் பண்ணுவோம். அதில் நமது அடியார்கள் வேண்டுமென்று

கேட்ட வரமெல்லாங் கொடுக்கவே இச்சையாகி இருப்போம். அது ஆதிகாலத்தில் உண்டாகிய வகையும் சொல்லுவோம். (எ-று).

17. சொற்றதிரு முதுகுன்றத் திடந்தன்னி
ளுதியாய்த் தொன்மையாய் நாம்
உற்றிடுவோ மதன்பின்ன ருயர்தலங்க
டோறுமெய்தி யுலாவல் செய்வோ
மற்றுமந்த குன்றிடத்தி ன்மாபிரள
யங்கடோறு மறைந்து நிற்போம்
வெற்றிவேல் மைந்தனே யம்மலையின்
பெருமை யெவராலும் விளம்பலாமோ.

(இ—ள்) வேத ஆகம புராணங்களில் சொல்லிய விருத்தாசலத்தில் ஆதியாய் பழமையாய் நாம் இருப்போம்: மற்றுமுள்ள உயர்ச்சியாகிய ஸ்தலங்களில் உலாவி வருவோம். பின்னும் அந்த பழமலையிடத்தில் மகாபிரளயங்கள் வரும்போதெல்லாம் மறைந்து ஒருவருக்கும் தெரியாமல் நிற்போம். வெற்றிவேலை கையிலேதரித்த குமாரனாகிய கந்தனே இந்த மலையினுடைய பெருமையை எவராலும் சொல்லமுடியாது. (எ-று)

18. இத்தகமை முதுகுன்றி னெமதிருக்கைச்
சிறப்பதனைக் கடவு ளோர்கள்
சித்தமகிழ் வாய்க்கண்டு தரிசித்துக்
கிரீசனேநந் தேவ தேவே
யுத்தமனே தயாநிதியே வுலக
விஸ்வநாதா நல்ல யெங்கள்
மித்திரனே சதாசிவமே தற்பரனே
செழுந் தவள விடையினனே.

(இ—ள்) இவ்வளவு பெருமையுள்ள திருமுதுகுன்றத்திலே நாம் இருக்கிற சிறப்பினைக்கண்டு தேவர்கள் கைலாசவாசனே, தேவர்களுக்கெல்லாம் கர்த்தனே, உத்தமனே, தயாநிதியே, சர்வலோக கர்த்தனே, விஸ்வநாதனே எங்கள்



மேல் நேசமுள்ளவரே, சதாசிவமே, தற்பரனே, ரிஷபாரூடனே என்று இப்படி அநேக விதமாய் ஸ்தோத்திரம் செய்தார்கள். (எ-று)

19. திருத்தகுநற் சிறப்புடைய திருமுதுகுன்றில்
தேவர்களின் கணங்களெல்லாம்
கருத்துறவி னன்பரெமை போற்று
சிரக் கம்பத்தாலே வெள்
ளெருக்கமலர்ச் சடையின்மிசை யிருந்தொன்று
விசையாலே வலப்பால் வீழ்ந்
துருத்திகழு மிலிங்கவடி வெனத்
தோன்று முலகனைத்து மோங்கத்தானே.

(இ—ள்) இப்படியாக அழகுபொருந்திய திருமுதுகுன்றத்தில் தேவர்களெல்லாம் மனம் ஒருமையுடனே ஸ்தோத்திரம் பண்ணியபோது சந்தோஷமாகி சிரக்கம்பம் செய்தோம். அப்பொழுது சடையிலிருந்த வெள்ளெருக்க மலரொன்று சிதறி வலது பாகத்திலே போய்விழுந்து லிங்க வடிவாகி லோகங்களெல்லாம் ரட்சிக்கும் பொருட்டாய் விளங்கி இருந்தது. (எ-று)

20. முதுகிரிக்குத் தென்கீழ்பால் மூன்றுகுரோ
சத்தளவின் முளைத்த லிங்க
மதுதனையே தேவரொடு மனேகமுனி
வர்கள்மா லயனன் பாகி
விதிமுறைநற் சுத்தராய் வேண்டியமர்
பொருளீட்டி வினையத் தோடு
மதுமலராற் றுதிதன்னுல் மனமகிழ்வாய்
வழிபடற்கு மருவக் கண்டார்.

(இ—ள்) அப்படிப்பட்ட தலம் எங்கேயுள்ளது உரைக்க வேண்டுமென்று கேட்க சுவாமியானவர் நான் வாசமாக இருக்கிற விருத்தாசலத்திற்குத் தென்கிழக்கில் மூன்று குரோச தூரத்தில் நமது எருக்கம்பூ லிங்கமாக முளைத்து விளங்கியது. அந்த ஸ்தலத்திற்கு எருக்கத்தம்புலியூர் என்றுபெயர். அந்தஸ்தலத்தில் தேவகணங்கள், முனீஸ்வரர்கள், பிரம்மா, விஷ்ணு

முதலிய அளவிறந்தவர்கள் வந்து அருளுருவமான சிவலிங்கத்தைக்கண்டு மிகுதியும் அன்பாக பூஜைக்கு வேண்டிய பூஜா திரவியங்கள் அனேகம் கொண்டுவந்து வினையத்துடனே நிர்மலராய் சுத்தராகி அனேக புஷ்பங்களினுலும், அனேக மந்திரங்களினுலும், ஸ்தோத்திரங்களினுலும் பூஜை செய்து வந்தார்கள். (எ-று)

21. வாசநீர் தேனுடனே இளநீர்பா
 னெய்சேர வகையாஞ் சந்தம்
பேசிடுமந் திரத்தோடு மாவினைந்து
 முறையாட்டிப் பின்னீ ராட்டி
தூசணிந்து பொன்மணியா பரணமொடு
 பூமாலை துலங்கச் சாத்திப்
பேசறுசித் திரவன்ன மின்பமொடு
 நிவேதனஞ்செய் திட்டே யன்பாய்.

(இ—ள்) வாசனை பொருந்திய சுத்தஜலம், தேன். கருப்பஞ்சாறு, பால், நெய், சந்தனம் இவைகளை மந்திரத்தினுலே அபிஷேகம் செய்து வஸ்திரம் தரித்து, பொன்மணி முதலான ஆபரணம், புஷ்பமாலைகளை எல்லாம் தரித்து, சந்தனம் பத்திர புஷ்பம் சாத்தி, சித்திரான்னம் நிவேதனம் செய்து பின்னும் செய்கின்ற உபசாரம் சொல்லுகின்ருேம். (எ-று)

22 நறும்புகையுந் தீபவகை மந்திரம்பூ
 வருச்சனையுந் நன்ருய்ச் செய்து
பெருந்திறமுன் னுடியுமே தேவரெலாம்
 முறை முறையே பெருமையாக
வறிந்தறிவை யானந்தச் சுடர்க்கொழுந்தை
 யெருக்கத்தம் புலி யூரானை
பிறிந்தறியாத் தியானத்தால் நனிவலம்கொள
 புகழை யேபேச லுற்ருர்.

(இ—ள்) இப்படிச் செய்த பிறகு தூபம், தீபம், நைவேத்தியம், மந்திர புஷபம், அர்ச்சனையும் செய்து கண்ணுடி முதலான உபசாரம் செய்து ஸ்தோத்திரம் செய்து ஆனந்தக்



கூத்தாடி முறை முறையாக இந்தப்படி செய்து அறிவுக்கறிவாய் இருந்தவனை ஆனந்த விளக்கை எருக்கத்தம்புலியூர் வாசமாய் எழுந்தருளி இருந்த பரமசிவனை விட்டு நீங்கா தியானத்தினுலே வணங்கி பிரதட்சிணம் செய்து ஸ்தோத்திரம் செய்வார்கள். தேவர் முதலியோர் (எ-று).

வேறு

23. தேவதேவனே காயத்திரி செபமெனும் உருவே
 மூவராகிய முக்கணு முக்குண மூர்த்தியே
 யாவையும் தரும்வள்ள லேயிந்து சேகரனே
 மேவுமற்புத விஸ்வநாதா வின்பின முதே.

(இ—ள்) தேவர்களுக் கெல்லாம் தேவனே, காயத்திரி சொருபனே, மூன்று ரூபமாகி, சிருஷ்டி ஸ்திதி சங்காரம் செய்த மூன்று கண்ணுள்ள சிவனே சாத்துவீகராசத தாமசம் என்னும் மூன்று குணத்துக் குடையவரே, அண்டபிண்ட சராசரம் அனைத்தும் உண்டாக்கிய ஆதிமூர்த்தியே, சந்திரசேகரனே, அற்புதமான விஸ்வமூர்த்தியே என்று ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரித்து பின்னையும் சொல்லுகிருர் தேவர் முதலியோர். (எ-று).

24. அருளுருவமே யகில சாட்சியு மப்பாலாகுங்
 கருணைநாயகா வேண்டுஞ் செல்வந்தருங் கடலே
 யுரியதாங் கணநாதனே யுமையொரு பாகா
 அரிதுதித்திடு மரவணியா யன்பி னமுதே.

(இ—ள்) தயவே ஒரு ரூபமானவரே, சீவசாட்சியுமாகி பரசாட்சியுமானவரே, கருணைநாயகா, அடியார்கள் வேண்டியதெல்லாம் கொடுக்கும் கருணைக் கடலே, பூதநாயகா, பார்வதி நாயகா, மகாவிஷ்ணு தோத்திரம் பண்ணிய கர்த்தனே, சர்ப்ப பூஷணு என்று துதித்து வணங்கினுர்கள் தேவர் முதலியோர். (எ-று).

25. வேதவேதியர் முனிவர் பூசித்திடு நிறையே
 நாதனேயுயர் நான்முகன் பூசிக்கு நல்லாய்
 பூதநாதனே புராதனு புண்ணிய மூர்த்தி
 சூதனுர்புர நகைத்த சுவாமிமிகு மன்பினமுதே.

(இ—ள்) வேதாத்தியாயனம் பண்ணுகிற பிராமணர்கள், முனிவர்கள் பூசைசெய்யும் கர்த்தனே நாததத்துவத்துக் குடையரே, பிரமதேவன் பூஜை பண்ண வேண்டிய வரங்கொடுத்தவரே மகாமேருவை வில்லாய் வளைத்தவரே, பழமையானமூர்த்தியே புண்ணிய சொரூபனே, தேவாதிகளை ரட்சித்து விஷ்ணு முதலானவர்களை கர்வபங்கமாக்க திரிபுரங்களை நகைத்தெரித்தவரே, வணங்குகிறோம் என்று அனேக விதமாக ஸ்தோத்திரம் செய்தார்கள். (எ-று).

வேறு.

26. இனைய தாகக் கடவுள ரேத்தலும்
நனைமலர்க் கொன்றை சூடிய நாயகன்
றனைவிற் ரோன்றியும் சொல்லும் வரங்களும்
நினைவின் வண்ணமுந் தரவென நின்றதே.

(இ—ள்) இப்படியாக ஸ்தோத்திரம்செய்து நின்ற தேவர்களுக்கு தேன் பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த பரமசிவன் அனேககோடி சூரியப் பிரகாசத்துடனே வந்து நின்று நீங்கள் கேட்ட வரங்களெல்லாம் தருகிறோம் என்று சொல்ல தேவர்கள் கிருபாசமுத்திரம் பொங்கி வழிந்ததுபோல சந்தோஷித்து நின்றார் (எ-று)

27. உள்ளத் தன்பிற் கணங்க ளுரைத் திடும்
வெள் ளெருக்கம் புரமென்று மேன்மையோ
டெள்ளலில் கணேச்சுர மென்னும் பேரது
கொள்ளக் கொடுத்து லிங்கத் திலுற்றனர்.

(இ—ள்) இதயத்திலே அன்புகூர்ந்து வந்த தேவகணங்களெல்லாம் சொல்லிய எருக்கத்தம்புலியூரென்றும், கணேசுரபுரம்என்றும் பெயர்பொருந்தும்படியாய் என்றைக்கும் உண்டாகதயவுடனே அவர்கள் கேட்ட வரங்களெல்லாம் கொடுத்து லிங்கத்திலே மறைந்து நின்றார் திருக்குமரேசுவரர். (எ-று)

28. அன்பி னோடுயர் தேவர்க ளரசர்க்குத்
துன்ப நீங்கி மகிழ்வொடுந் தூயநல்



லின்ப மூர்த்தியை பூசிப்ப லிவ்விடை
நன்பகற் புனற் பூவையும் நாடவே.

(இ—ள்) இப்படி இருந்துள்ள சுவாமியை பூஜை செய்து பக்தியுடனே சகலதுன்பமும்தீர்ந்து தேகம்நிர்மலமாக சந்தோஷத்துடனே சிவனை பூஜைபண்ண இந்த இடத்தினின்று மத்தியானத்திற்கு ஜலமும்பூவும் வேண்டுமென்று நினைத்தார்கள். (எ-று)

29. மலைய மாமகள் நீலமும் மேற்கி
லிலகித் தோன்றிடும் பொய்கையு மீந்திட
அலரும் நீரு மகிழ்ந்து கொண்டே யன்பாய்
சிலை வில்லாளியை பூசனை செய்துற்றார்.

(இ—ள்) இப்படி நினைத்த மாத்திரத்திலே பர்வதராஜ புத்திரியான ஈஸ்வரி தேவகணங்களுக்கு செங்கழுநீர்ப்பூவும், சகல ரோகங்களையும் தீர்க்கும் தீர்த்தமும், மேற்கே வருண திக்கிலே உண்டாக்கிக் கொடுத்தாள். அதில் மூழ்கி சரீரசுத்தி பண்ணிக்கொண்டு புஷ்பங்கள் எடுத்து வந்து மேருவை வில்லாக வளைத்த திருக்குமரேசுவர சுவாமியை பூஜை பண்ணினார்கள். (எ-று)

30. இனிதி னீலத்தண் பொய்கை யிங்கீந்ததும்
தனிமுத லருளோ வன்றித் தண்களிப்
பனி மொழி அருளோ வெனப்பண்ணவர்
வனிதை தந்தது என்றனள் வாணியே.

(இ—ள்) இந்த செங்கழுநீர்ப் பொய்கை சிவகடாட்சத்தினால் வந்ததோ, மதுர வசனத்தோடும் கூடிய பார்வதிதேவி கொடுத்ததோ என்று சந்தேகப்பட அப்பொழுது இது பரமேஸ்வரி கொடுத்த தீர்த்தம் என்று சரஸ்வதி சொன்னாள். (எ-று)

31. சீர்கொ ணீலத் தடத்திற் றிருவெள்ளி
வாரத் தாடி மலரது கொண்டன்பின்
ஞர்வ மோடவ் லிலிங்கத்தைப் பூசித்தோர்
தேர்த ரும்அஷ்ட சித்தி பெறுவரே.

(இ—ள்) இப்படி பரமேஸ்வரி உண்டாக்கின நீல தீர்த்தத்தில் சுக்கிரவாரத்திலே மூழ்கி திருக்குமரேசுரருக்கும் பூஜையும் செய்துவைத்து தரிசனம் செய்தவர்களுக்கு அஷ்டமா சித்தியும் வரும். (எ-று)

## வேறு.

32. நறுமலர் தேடும் வண்டுபோற் பனச
நறுங்கனி தேடுமீ யதுபோற்
கறைமிடற் றண்ண லாடிடத் தினமுங்
காதலால் வேண்டின ரென்றால்
உறுதவ விமையோர் விஞ்சையர் சித்தரு
மெண்டிசை யாதித்தர்
முறைமையால் வந்து பணிந்ததின் மூழ்கி
முத்திபெற் றனரென்ப தரிதோ.

(இ—ள்) வாசனை பொருந்திய புஷ்பங்களைத்தேடிவருகிற வண்டுபோலவும், பலாச்சுளையைத் தேடி வருகின்ற ஈயைப் போலவும் நீலகண்டரான பரமேஸ்வரன் நிர்த்தனத்தைத் தினமும் வேண்டி தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், அஷ்டதிக்குப் பாலர்கள், துவாதசாதித்தர் முறை முறையே வந்து நமஸ்கரித்து தெரிசனம் செய்தார்களென்றால், இத்தலத்தில் இப்புண்ணிய தடாகத்தில் மூழ்கி முக்தி பெற்றார்கள் என்பது அரிதோ. (எ-று)

33. காலமே யுமையாள் தடத்தினிற் றோய்ந்து
கண்மணி வெண்ணீ றணிந்து
சீலமாய் வணங்கி விடைக் குமரேசன்
திருவிழா வையிரு நாளுங்
கோலமார் வீதிவலமுடன் புரிந்து
கூறுமஞ் செழுத்தையுங் குறித்து
வாலதி சூழ வையகத்துற்றோர்
வணங்கிடும் அண்ணலாங் கடவுள்.

(இ—ள்) சூரிய உதயகாலத்தில் மூழ்கி விபூதி தூளனம் பண்ணிய பின்பு திரிபுண்டரமாக விதி முறையே தரித்துக்



கொண்டு பரமசிவனை தெரிசனம் பண்ணி திருக்குமரேசுரர் திருவிழா பத்துநாளும் சுவாமி பின்னே வீதிவலமாக வந்து பஞ்சாட்சரத்தையும் ஜபிக்கின்றவர்கள் எவர்களோ அவர்கள் இந்த சமுத்திரம் சூழ்ந்த பூமியிலே நமக்கெலாம் பரமசிவனும் என்று சூதமகாரிஷி சொன்னார். (எ-று)

## வேறு.

34. குரவர்சொல் மறந்தா ரேனுங்
குறளைகள் மொழிந்தோ ரேனுஞ்
சுரபியை வதைத்தா ரேனுஞ்
சுருதியைப் பழித்தா ரேனும்
முருகனைப் பெற்ற வன்னை
முன்னி யுண்டாக்குந் தீர்த்தங்
கருதியொரு நாள் மூழ்கினர்
கமலனற் பதத்தைச் சேர்வார்.

(இ—ள்) குருவானவர் சொன்ன வசனத்தை மறந்தவர்களும், கோள்வார்த்தை சொல்லுகின்றவர்களும் பசுக்களைக் கொன்றவர்களும் இப்படிப்பட்ட மகா தோஷங்களும் குமாரசுவாமியைப் பெற்ற தாயாகிய பரமேஸ்வரி உண்டாக்கின நீல தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் சகலதோஷங்களும்தீர்ந்து, அந்திய காலத்தில் பரலோகத்தில் பிரமபதவியை அடைவார்கள்.(எ-று)

35. வசைநறு வருந்தினோரு மாடை கடிருடி னோரும்
திசையெலாம் விளங்குங் குன்றில் செல்விதன்றடத் [தில்மூழ்கி
நசையுடன் வருடமூன்று நண்ணிடிற் துன்பம் நீங்கிப்
பசியதண்டுழாய் முகுந்தன் பதத்தினி லிருந்து [வாழ்வார்.

(இ—ள்) மதுபானம் பண்ணினவர்களும், பொன் பூஷணங்களைத் திருடினோரும் திக்கு தேசங்களில் எல்லாம் கீர்த்தி பரவிய பர்வதராஜ புத்திரியான ஈஸ்வரி தீர்த்தத்தில் மூழ்கினால் எவ்வகைப்பட்ட மகா பாவங்கள் தீர்ந்து புண்ணிய புருஷர்களாவார்கள். இப்படியாக மூன்று வருஷம் தலவாசம் செய்

தால் பசுமையான துளசிமாலையைத் தரித்த விஷ்ணு பதவியை அடைவார்கள் (எ-று).

36. நீறணிந் துருத்தி ராக்கம் நிலைபெற தரித்தன்பினால்
ஊருமஞ் செழுத்து முன்னியுயர் குமரேச் சுரத்தி
லாறணி சடையான் கோயிலாலய மொருக்கால்
[சூழ்ந்த
பேறுடன் வருமேகுன்றம் பெற்றவ ரீர்த்த மூழ்கில்.

(இ—ள்) சாஸ்திரப்படியே வி பூ தி தரித்துக்கொண்டு சிரசு முதலான ஸ்தானங்களில் எண்ணிக்கைப்படி ருத்தி ராக்கம் தரித்து பக்தியுடனே பஞ்சாட்சர தியானம் செய்து குமரேசுரமாகிய ராஜேந்திரபுரத்தில் சடாதரரான திருக்கும ரேசுர சுவாமி ஆலயப் பிரதக்ஷணம் ஒருக்கால் வந்த பலன் ஈசுவரி தீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்காகும். (எ-று).

37. அரியநற் றடத்தி னல்ல வந்தணர் தனக் கோராவை
பிரியமுற் றளித்தால் மற்றும் பேசிய தீர்த்தந் தன்னி
லருமையாய் வேதநான்கு முணர்ந்த வேதியற்கு நன்மை
வரமிகு கோடி தானம் வழங்கிய பலனை யொக்கும்.

(இ—ள்) இப்படி அரிதாகிய தீர்த்தத்திலே ஸ்நானம், சந்தியவந்தனம், காயத்திரி மந்திரமுள்ள பிராமணனுக்கு அன்புடனே ஒரு பசு தானம் பண்ணியவருக்கு பூமியிலுள்ள தீர்த்தங்களில் நாலு வேதமும் சாங்கோபாங்கமாய் வந்த பிராமணர்களுக்கு கோடி பசு தானம் பண்ணிய பலன் வந்து சேரும். (எ-று)

38. வரைவிலா தெவரும் போற்றும்
வசனமா மலரார் தீர்த்தக்
கரையினி லொருவ ருண்ணக்
களித்தனங் கொடுத்தா ரென்றால்
லருமறை தனை யுண்டாக்கு
மயன்றிரு மாலின் மிக்கோர்
பெருகிய முனிவரான பெற்றி
யோர்க் களித்த பேறும்.



(இ—ள்) கணக்கில்லாத மகத்துவத்தைச் சொல்லிய தாமரை நிரம்பிய தீர்த்தக் கரையில் ஒருவர் உண்ணத் தக்க தாக அன்னம் கொடுத்தார்களேயானால் அந்த அன்னம் சதுர் வேதங்களை உண்டாக்கிய பிரும்மா, மகாலக்ஷிமி சமேதரான விஷ்ணு இவர்களிலும் அதிகமாகிய முனிவர்களுக்குக் கொடுத்த பலம் எவ்வளவோ அவ்வளவு பலன் வரும். (எ-று).

39. கும்பமா தத்தின்நீலக் குமுதமா தடத்துண் மூழ்கி
சம்புவான் மகம் விளங்குந் தனிவிழா வினிதுநோக்கி
நம்பியீரைந்து நாளும் நற்றல வாசஞ் செய்தால்
உம்பருங் கண்டு போற்று முருத்திர கணேசராவார்.

(இ—ள்) இத்தலத்தில் மாசிமாதத்தில் நீல தீர்த்தத்தில் மூழ்கி யாகத்தினால் விளங்கிய திருவிழா பத்துநாளும் தெரிச னம் பண்ணி, ஸ்தலவாசமும் செய்தவர்கள் ருத்திர கணேச ராவார்: (எ-று).

40. மீன்மாதத்தில் மேலாய் விளங்கு முத்திர நா டன்னிற்
றேனுறு கமலவாவித் தீர்த்த மதாடி யன்பாய்
கானவிஞ் சையர் துதிக்குங் கணேசுரத் தொருநா
[ளுற்றோ
ரீனமில் திக்குப் பாலரெண்மரும் போற்ற வாழ்வார்.

(இ—ள்) பங்குனி மாதத்தில் பௌர்ணமி தினம் உத்திர நட்சத்திரத்தில் தேன் பொருந்திய தாமரைப் பூவினாலும் அலங் காரமாகிய நீலதீர்த்தத்தில் மூழ்கி கந்தருவர் வீணை வாசிக்க மகிழ்ந்தருளிய கணேசுரபுரத்தில் ஒரு நாள் வாசம் பண்ணின வருக்கு திக்குப்பாலகர் எட்டு பேர்களும் தினந்தோறும் ஸ்தோத் திரம் பண்ண மேலான பதவியிலிருந்து வாழ்வார்கள். (எ-று).

41. மதிநிறைந் திடுநாட் சொலுமய னங்கள்
மற்றையம் மாதத்திற் பிறப்புக்
கதிர்மதி சேர்நா ளாயினு மலாத
காலத்து மித்தடங் தன்னிற்

பிதுர்களைக் குறித்துத் தர்ப்பண முடனே
பிண்டமும் கொடுத்திடி லவர்கள்
எதிருற விருந்து வாங்குவ ரதனு
லினை சொல தீர்த்தம்வே றுண்டோ.

(இ—ள்) அயனமாகிய ஆடிமாதம், தைமாதம் பிறப்புகள், பின்னுமுள்ள மற்றமாதப் பிறப்புகள், அமாவாசை இப்படிக்கொத்த புண்ணிய காலங்களிலும், மற்றும் எந்த காலங்களிலும் இந்த நீலதீர்த்தத்தில் மூழ்கி பிதுர்களைக் குறித்து தர்ப்பணம் பண்ணி பிண்டப்பிரதானமும் கொடுத்தால் அந்தப் பிதுர் தேவதைகள் பிரத்தியக்ஷமாக எதிரேயிருந்து வாங்கிக் கொள்வார்கள் ஆகையால் இந்தத் தீர்த்தத்திற்கு சமானமாக பூமியில் சொல்ல வேறு தீர்த்தம் உண்டோ (எ-று)

42. ஆதலா லிந்த நீலத்த டாகத்தி
னேதந் தீர்வினி துற்றுத் தோய்ந்துநற்
போது கொண் டெமை பூசித்திடினப்
போதுதீர் சாபம் புனிதமும் வந்திடும்.

(இ—ள்) ஆகையினாலே இந்த நீல தீர்த்தத்திலே மூழ்கி நல்ல புஷ்பங்களினாலே நம்மை பூஜைபண்ணினால் அப்போது இந்த சாபம் நீங்கி திவ்ய ரூபம் வரும் என்று பரமேசுவரன் குமாரசுவாமிக்குத் திருவுளம்பற்றி அருளிய கதையையும் உங்களுக்குப்பின் சொல்லுகிறோம் என்று சொன்னார்: (எ-று)

43. இனைய சூத னிசைப்ப முனிவர்க
ளனைவ ரும்மர னன்புள வாய்மையால்
புனைக டம்பணி வேலவன் பூசித்தே
அனல்கொள் சாப மகன்றதைக் கூறென.

(இ—ள்) இந்தக் கதையை சூத மகாரிஷி நைமி சாரண்ய முனிவர்களுக்குச் சொல்ல அவர்களும் எழுந்து நமஸ்கரித்து நின்றுகொண்டு பரமசிவன் திருவுளம்பற்றினபடியினாலே கடம்ப மாலையை யணிந்த குமாரசுவாமியானவர் இந்த ராஜேந்திர



புரத்தில் வந்து பரமசிவனை பூஜைபண்ணினதும் அந்த சாபம் நீங்கியதும் எங்களுக்குத் தெரியும்படி திருவுளம்பற்ற வேண்டுமென்று சொன்னார்கள். (எ-று)

மூன்றாவது தேவகணைச் சருக்கம் முற்றும்.
விருத்தம் 43.

## நான்காவது குமாரபூசைச் சருக்கம்:

1. கல்வி சேர்முனி கூறலாயினன் கருத்துள்நீ ரறியாதது
மில்லை யாகிலு மிறையின் மாண்பினை யியம்புவன் [சாவதானமாய்
வல்லியோர் பங்கன் சபித்தபோதினே மலர்ந்தசெம் [முகம்வாடியே
இல்லதாகி இவ் விடுக்கணு ற்றுயரித யமுந்தாளா [வெல்லையின்

(இ—ள்) கேளுங்கள் முனிவர்களே என்று சூத மகாரிஷி சொல்லுகிறார். பரமசிவன் சபித்தமாத்திரத்திலே என்ன செய்வோம் என்று மனம் கலங்கி முகம் வாடி விசாரமுற்றிருந்தார் முருகேசன் அப்படி இருந்த வெளையில் (எ-று)

2. கண்ணுதற்பிரான் கார்த்திகேயன் மீதருட்
கண்வைத்து இத்தலந் தனின்
நண்ணித்தெய்வ வாண்டொன்று நோற்றிடின்
நன்மை யெய்திடுஞ் சாபம்போம்
சண்முகாவென வக்கணத்தினிற் றந்தை
தாயையும் விடை கொண்டு
பண்ணின் வேதியன் பிரமதத்த
னென்றினிய னுமமே பரித்துளான்.

(இ—ள்) நெற்றிக்கண்ணினையுடைய பரமசிவன் குமாரசுவாமியைப் பார்த்து கிருபாகடாக்ஷம் வைத்துச் சொல்லுவார்

இந்தத் தலமாகிய கணேசுரபுரத்தில் தேவ வருஷத்திலே ஒரு வருஷம் தபசு பண்ணினால் இந்த சாபம் தீரும் என்று சொன்னமாத்திரத்திலே பரமசிவனையும் பார்வதிதேவியையும் வணங்கிவிட்டு விடைகொண்டனன். கணேசுரபுரத்தில் பிரமதத்தன் என்றொரு பிராமணன் இருந்தான். (எ-று)

3. அந்தணா ளதன் றிலகமானவன்
வேத சாத்திரத் தறிவுளோன்
செந்தழன் மகந் தேவபூசனை
நியமத்தால் மிகச் சிறப்புளோன்
கந்தமூல பலன்கள் கொண்டு
கணக்கில்லாது தவஞ் செய்பவன்
சந்திவந் தனை செபங்களுந்தடை
யில்லாமலே நிதம் இயற்றுவோன்.

(இ—ள்) பிராமணகுலத் திலகமானவன், வேதசாஸ்திரங்களில் மிகுந்த அறிவுள்ளவன். யாகாதி முதலாகிய தேவபூசை நியமத்திற் தவறு இல்லாதவன். கந்தமூலாதிகள் உண்டு அளவிறந்த தவங்கள் செய்பவன். சந்தி, சபம் முதலியனவற்றை வழுவுதலில்லாமல் செய்து முடிப்பவன். (எ—று)

4 அன்னவன் காதலி யாமருந் ததியவர்
பொன்னனை யாடனை நிகர்த்த பொற்பினாள்
துன்னிய குணத்தவள் துலைவி லந்தணர்
பன்னியர் தொழு மனுசூயை பார்ப்பனி.

(இ—ள்) இப்பேர்பட்ட பிரமதத்தனுக்கு மனைவியானவள் அருந்ததியைப்போன்ற பதிவிரதாபக்தியும் சாமுத்திரிகா லக்ஷணத்திற் சொல்லியபடி அவயவ லக்ஷணமும் நல்ல சற்குணமும் மிருதுவசனமும், அளவிறந்த பிராமண மங்கையர்கள் வணங்கக்கூடிய பெருமையுள்ளவள் அனுசூயா என்ற பெயருள்ளவள். (எ-று)



வேறு.

5. என்றுசொல்லி யிருவர்தாமு மிரதியு மதனும் போலே
துன்றிய விளமை மேவுஞ் சுகமனு பவித்து வந்த
நன்றி சேர் மறையோர் கட்குநல் லதிதியர்க்கு மிட்டே
யொன்று நாள் மகவிலா மாலுறு துயரத்தே பின்னும்.

(இ—ள்) அந்த பிரமதத்தனை பிராமணன் மனைவியாகிய அனுசூயையுடனே கூடிக்கொண்டு மன்மதனும் ரதியும்போலே இளமையாகிய சுகம் அனுபவித்துக்கொண்டு இருக்கின்ற நாளிலே வருகின்ற பிராமணர்களாகிய அதிதிமுதலானவர்களுக்கு மனோ சந்தோஷமாக வேண்டுவன கொடுத்து வரும் பொழுது புத்திரன் இல்லாமல் விசனித்துச் சொல்கிறார். (எ-று)

6. அன்னையை யரையும் போற்றி
யன்ன மருத்திடாது ண்டேனோ
முன்னை யூழ்வினை யினாலே
குருவைக் கைமுகிழ்த் திலேனோ
வென்ன பாதகஞ் செய்தேனோ
வெத்தவக் குறையோ வென்று
பன்னுநாள் மறையோன் றானும்
பற்பல சிந்திக் கின்றான்.

(இ—ள்) தாயும் தகப்பனும் பசித்திருக்கையில் அவர்களுக்கு அன்னமிடாமல் உண்டேனோ, முன்செய்த தீவினையோ, குருவைக்கண்டு கையெடுத்து வணங்காமல் இருந்தேனோ, என்ன கொடிய பாவம் செய்தேனோ, என்ன தவக்குறை செய்தேனோ என்று பலவாக விசாரம் கொண்டு நான்கு வேதமும் கரைகண்ட பிரமதத்தன் பின்னும் சொல்லுவான். (எ—று)

7. மகவுள பேர்க்குச்செல்வம் வளர்ந்திடுங் கல்வி மேவும்
மகவுள பேர்க்கு முத்திவரும் திருமகிழ்ந்து வாழும்
மகவுள பேர்க்குக் கீர்த்தி மருவிய நன்மை மேவும்
மகவிலா தவற் கீதெலாம் வரல ரிதரிது மாதோ.

(இ—ள்) பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கு ஐசுவரியம் வளர்ந்திடும், கல்விகளெல்லாம் மிகுதியும் வரும், மோக்ஷ முண்டாகும். மகா லக்குமி சேர்ந்து வாழும் கீர்த்தியானது மிகுதியும் சேரும். நன்மையான மற்றைய காரியங்களெல்லாம் பலிக்கும். பிள்ளையில்லாதவர்களுக்கு இவையெல்லாம் ஒன்றும் சேராது. அரிது அரிது என்று இப்படி பலவாறு யோசித்து பின்னும் சிந்திக்கிறார். (எ-று)

8. ஆறிலா நாடும் வெண்மையாம் மதியிலாத வானும்
நீறிலாத நுதலும் மாதரின் னிறை மணமிலாத பூவும்
கூறு செந்தமிழோ ரில்லாச் சபையும் நற்குணமிலாத
நாறு பூங்குழலும் போலும் நன்மக விலாதவன் வீடே.

(இ—ள்) ஆறில்லாத நாடுபோலவும், சந்தரனில்லாத வானம்போலவும், விபூதி தரியாதவன் நெற்றிபோலவும், குண மில்லாத பூ போலவும், தமிழோர்ந்த பல கல்விமான்கள் இல்லாத சபை போலவும், அல்லவோ பிள்ளையில்லாதவன் வீடு என்று சிந்தித்து பின்னையும் எண்ணுகிறார். (எ—று)

9. தள்ளரு மினிய மூவே டலைமுறை யதிற்றன்னி
யுள்ளவர் முத்திசேர்வ ரொருத்த நற்பிண்ட மிட்டுத்
தெள்ளிய திலத்தினோடு தருப்பணஞ் செய்யிற் செய்ய
பிள்ளையில்லாத பேர்கள் பெருநிரயத் துள்ளாழ்வர்.

(இ—ள்) தாய்வர்க்கம், தகப்பன் வருக்கம், மனைவி வர்க்கம் என்ற மூவேழு இருபத்தோரு தலைமுறையிலே யொருவன் இருந்து பிண்டம்போட்டு தர்ப்பணம் செய்தால் அந்த வர்க்கத்தோரெல்லாரும் மோக்ஷம் அடைவார்கள். பிள்ளை யில்லாதவர்கள் நரகத்தில் போய் அழுந்துவார்கள் என்று தனது தெளிந்த அறிவினாலே எண்ணிப் பின்னையும் நினைக் கிறார். (எ—று

10. வையக மிரதங் கோட்டு மதகரி கொடிய வேகக்
கொய்யுளை நிதியனேகங் கோடி தானிருந் திட்டாலு



முய்ய நல்வித மதான விருமைக்கு முறுதிதானே
செய்யுநன் மதலையில்லாச் செல்வமென்
[செல்வமென்னே.

(இ—ள்) பூமி, இரதம், யானைகள், குதிரைகள் அனேக திரவியங்கள் இருந்தாலும் அதனாலே பெருமையுண்டோ, இல்லை. உய்வதற்கு நல்வகையாகிய உத்தம குணமும் அறிவு முள்ள புத்திரன் ஒருவன் இருந்தால் அகத்திலே கீர்த்தியும் பரத்திலே மோக்ஷமும் உண்டாகும் இப்பேர்ப்பட்ட புத்திரன் இல்லாத செல்வம் என்ன செல்வம் என்று எண்ணினான். (எ—று)

11. எனவு மிப்படி அனேக வெண்ணம தெண்ணி நல்ல
தனையனை வேண்டி யினைப் பன்னியுந் தானு மேலான்
மனதொடு விரதந் தானந் தருமஞ் செய்வகை
[மெய்பற்றிக்
கனிவுடன் நடாத்தி ப்பின்னுங் கருத்திலோர்
[நினைவு கொண்டான்.

(இ—ள்) இப்படி அனேக நினைவுகள் எல்லாம் எண்ணி நல்ல புத்திரன் பிறக்கவேண்டும் என்று மேலாகிய அறிவுடனே அனேக விரதங்கள், அனேக தானங்கள், அனேக தருமங் கள், பத்திபுடனே செய்து மற்றுமொரு நினைவு கொண்டான். (எ-று)

12. கந்தனே நமதுள்ளத்தின் கவலைக டீர்க்கவல்லன்
வந்தருள் புரிவனென்று மறைகளா கமங்க ளென்னும்
சிந்தை செய் துரைக்கு மாருந் திதிபுகர் வாரமாக
இந்தமா தினங்க டன்னி னேன்பதே யெடுக்க
[வுற்றான்.

(இ—ள்) கந்தசுவாமியே நமது மனக் கிலேசத்தைத் தீர்க்கவல்லவர். மற்றைய தெய்வங்களாலாகாது ஆகையினாலே அவருக்கு உகந்த விரதம் வேதாகம புராணங்களில் சொல்லிய

பரமசிவனை வணங்கும் அந்தணர்கள் வேதவிதி தப்பாமல் சகல புவன கர்த்தனுன குமாரசுவாமிக் கடவுள் என்று தெரியாமல் .இருவரும் நம்மைப்போல் ஒரு அந்தணச்சிறுவன் என்று அவருக்குச் சிரசிலே சிகையுண்டாக்கினுர். (எ—று)

18\. நன்னூலுங் காரிகையு நவின்றதச நிகண்டுமுதல்
பன்னூலுந் தெளி புலவோர் பாவிலுறை பரமனருள்
சொன்னூன் மின்னிடை யார்கள் சுகவே னுகலம்
[ பூணுல்.
முன்னூலோர் பணிந்தேத்தி முந்நூலுந் தரித்தார்கள்.

(இ—ள்) நன்னூலும் காரிகையும் பத்துவிதமான நிகண்டுகளும் தெளிந்த கல்விமான்கள் பாக்களில் இருந்தருளிய பரமசிவன் அனுக்கிரகத்தினுலே, நூல்போலும் மின்னலைப் போலும் இடையுள்ள பெண்களிடத்து சரச சல்லாப பிரம்மதாடன கலவிகளைச் சொல்லிய மதன சாஸ்திரங்களில் சேராத குமாரசுவாமிக் கடவுளுக்கு வேத சாஸ்திரம் அறிந்த பிராமணர்கள் நமது கர்த்தனென்று ஸ்தோத்திரம் செய்து நமஸ்காரம் பண்ணவும் உபநயனமாகிய பூனூலைப் போட்டார்கள். (எ-று)

19\. வேதங்க ளொரு நான்கும் விளங்கியசாஸ் திரமாறும்
போதங்கண் மிகுந்திடுநற் புராணங்கள் மூவாறுந்
தீதில்கலை யறுபத்து நான்கினையுந் தெளிந்தவர்க்கு
ஆதிமறை யோர்கல்வி யாயிழையை யறிவித்தார்.

(இ—ள்) நான்குவேதமும், ஆறு சாஸ்திரமும். பதினெண் புராணமும், அறுபத்துநான்கு கலைஞானங்களும் தெளியத் திருவுளம்பற்றி அருளிய சுவாமிநாதக் கடவுளுக்கு பிராம்மணர்கள் அனேகர் கூடி வித்தையாரம்பம் செய்வித்தார்கள். (எ-று)

20\. சிலைவிலா னுறைகயிலை செழுந் தலத்தி னிதிருந்து
மலைவிலா வடியவர்க்கு வாய்ப்பறி வித்ததுபோற்
தலைமையா வோதுகுரு தன்னிடத்தி லினிதிருந்து
யுலைவிலாக் கல்வியெலா முணர்ந்து கொண்டார்சின்
[ ஞளில்



(இ—ள்) மகா மேருவை வில்லாக வளைத்த பரமசிவன் கயிலாயத்திலே அடியவர்களுக்கு அறிவித்ததுபோல் பூமியில் சகலசாஸ்திர புராணங்களையும் அறிந்து அனேகருக்குத் தெளியவோதிய குருவானவரிடத்தில் சிவசன்மா இருந்து சகல கல்விகளையும் சீக்கிரத்தில்தானே உணர்ந்துகொண்டார். (எ-று)

21- அதிக விஞ்சையால் வேதசாஸ்திரத்
தாகமமற் றுரை வல்லாராய்
விதியிைேடுநற் பரதநாடக
விதமெலாந்தெரி வல்லாராய்
மதியிைேடுசொற் கணிதநூல்களும்
மந்திரங்களும் வல்லாராய்
துதிசெயும்படி தாதைகல்வியி
னதிகமாகவே துலங்கிஞர்.

(இ—ள்) இப்படி அதிக வித்தையினுலே வேதாகம சாஸ்திரம் இவைகளெல்லாம் கரைகண்டு பரத் நாடகங்களெல்லாம் தெரிந்து, கணித சாஸ்திரமும், மந்திர சாஸ்திரமும் அறிந்து பிரம்மதத்தனைவிட சிவசன்மா அதிகமாக வித்தையில் வெகு சாமர்த்திய வல்லமையுள்ளவராஞர். (எ-று)

22 ஆரும் போற்றவே அழகு கல்வியி
னதிக மாகவே மருவுநாள்
சாரு மூமையாய்க் கண்டபோதுபின்
தாயுந் தந்தையுந் துயருறச்
சேருநாட னிற்சிந்தை தன்னிலே
யாதிஞட் பயன் றேன்றியே
பாருள் எருக்கத்தம் புலியூரிற்
பையவே யவரெய்திஞர்.

(இ—ள்) அழகிலேயும் கல்வியிலும் இப் பிள்ளைக்குச் சமமானவர் எங்கும் கண்டிலேம் என்று சொல்லிக்கொள்ளும் காலத்திலே யாதொரு விஷயமும் இல்லாமல் ஊமையாகி வாய்பேசாமல் இருந்தது. அதுகண்டு தாயும் தந்தை

படி பூருவபக்ஷத்து சஷ்டி, சுக்கிரவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் ஆகிய இந்த விரதம் இருக்கவேண்டும் என்று நினைத்தான்: (எ—று)

13. இவ்வகை விரதமூன்று மியற்றினர் விதியினாலே
யவ்வகை யதனை னோற்ற அடியவர்க் கிரங்கிச்
[செவ்வேள்
சைவமும் தழைக்க வீசன் சாபமு மகல வன்னோர்
செவ்விய விடத்தின் றந்து திருவவதாரஞ் செய்தார்

(இ—ள்) இப்படி இந்த விரதங்கள் மூன்றையும் இரண்டுபேருமாக விதிப்படி செய்தார்கள். அந்த நோன்பு நோற்ற பலத்தினாலே அடியார்களுக்கு எளியவரான கந்தசுவாமியானவர் சைவமாகிய சிவசமயம் விளங்கவும் தமது சாபமும் நிவர்த்தியாகவும் பிரமதத்தனிடத்தில் வந்து திருஅவதாரம் செய்தார். (எ—று)

14. அருட்கரு முகமாறொன்று யாறிருகை யிருகையாகி
யொருபனி ரண்டு கண்ணு மோரிரு கண்ணாய்ச்
[செங்கேழ்க்
குருதிகொப் பளிக்கும் வைவேற் கரந்துமக்
[குவலயத்திற்
பரிதிபோற் பிரமதத்தன் பாலினில் வளரும் நாளில்

(இ—ள்) அடியார்களுக்கெல்லாம் கிருபைசெய்து அருள ஆறுமுகமும் ஒருமுகமாகி, பன்னிரண்டு கையும் இரண்டு கையாகி, பன்னிரண்டு கண்ணும் இரண்டு கண்ணாகி, சூரனுடைய வர்க்கங்களெல்லாம் வேரறுத்து இரத்தமொழுகிய வேலாயுதத்தை மறைத்து பாலசூரியன் பிரகாசித்ததுபோல பிரமதத்தனிடத்திலே வந்து வளர்ந்தார். இப்படி வளரும் நாளில் (எ—று)

15. கவசமார் கரட வேழங் கடும்பரி யசுர ரியாவு
மவசமாய் விழவேல் தொட்ட வறுமுக னென்றுஞ்
[சேவல்



துவசமார் கைய னென்றுஞ் சொல்லும்பே ராயிர
[முளோர்க்குச்
சிவசன்மா வென்று மோர்பேர் சகதலந் தன்னி
[லிட்டார்.

(இ—ள்) மதயானைகள், அதிவேகமான குதிரைகள் முதலானவைகளெல்லாம் அலறி பூமியில் விழுந்துபோக வேலாயுதத்தினாலே யுத்தம் செய்த ஆறுமுகமுள்ளவனென்றும் கோழிக்கொடி தரித்த கையன் என்றும் இப்படி ஆயிரம்பெயர் உள்ள கந்தசுவாமிக்கு சிவசன்மா என்று ஒரு பெயர் இந்த பூமியில் அறியும்படி இட்டார்கள்: (எ-று)

16. பூவில்வரு மறையோனும் புண்டரீகக் கண்ணனு
மேவிய விந்திரனு மேவலருங் களிகூரத்
தேவி சரவணத் தடத்திற் றிருமுலைப் பாலூட்ட
காவிலுட னனுசூயை யமுததனை யூட்டினாள்.

(இ—ள்) தாமரைப்பூவில் வாசமான பிர்ம்மாவும், செந்தாமரைபோல கண்களையுடைய மகாவிஷ்ணுவும், தேவேந்திரனும், தேவர்களும் விசாரம் தீர்ந்து மகிழ்ச்சிபெற சரவணப் பொய்கையில் பரமேசுவரி திருமுலைப்பால் கொடுக்க உண்ட குமாரசுவாமிக் கடவுளுக்கு பிரம்மதத்தனின் மனைவி அனுசூயை முலைப்பால் கொடுத்தாள்: (எ-று)

17. தகுந்தீயி லவிசொரிந்து சமித்துடன்நெய் தனைவிட்டே
யிருந்தீயுந் தருமமுமே யியற்றிடுமா மறையோதிப்
பொருந்தீர மதிவேணிப் புண்ணியனைத் தொழு
[மறையோர்
வருந்துசிகை யில்லார்க்கு மருவுசிகை வருவித்தார்.

(இ—ள்) சகல சித்திகளையுங் கொடுக்கும் யாகாக்கினியில் பொரி சமித்துவர்க்கங்களிட்டு நெய்யினால் ஓமங்கள் செய்து தர்மார்த்த காம மோக்ஷங்களையும் சொல்லிய வேத பாராயணம் செய்து சந்திரனைச் சடையிலே தரித்தருளிய

யும் நாம் என்ன பாவம் செய்தேமோ என்ன தவக்குறை செய் தேமோ இப்படி ஊமையானது என்று விசாரம் கொண்டு இருந்தார்கள். அவ்வேளையில் சிவசன்மாவுக்கு சிவகடாக்ஷத்தி னாலே ஆதி நாளில் பரசிவன் திருவுளம் பற்றினது மனதிலே தோன்றி பூமியிலே தெய்வீகஸ்தலமாகிய எருக்கத்தம்புலியூர் வந்து சேர்ந்தார். (எ-று)

23. தேவதேவனை தெரிசித் தேத்தித் தன்
சக்தி யாலுயர் தீர்த்தந்தா
னாவை தாகச் செய்து மூன்று
காலமு னாடியுயு மன்பொடும்
பூவை பாகனை யங்க மெட்டுற
வணங்கிப் போற்றியும் பத்தியாய்
நாவு ருத்திர மந்திரஞ் செப
நாளும் நடத்தியே வந்தனர்.

(இ—ள்) இப்படிச் சிவசன்மாவென்று அவதாரம்செய்த குமாரசுவாமிக் கடவுள் தனது சக்தியினாலே தீர்த்தமுண்டாக்கி அந்தத் தீர்த்தத்திலே திரிகாலமும் மூழ்கி பக்தியுடனே பார்வதி சமேதராகிய பரமசிவனை அஷ்டாங்கத்துடனே வணங்கித் தோத்திரம் செய்து பின்னும் பத்மாசனமாய் இருந்துகொண்டு ருத்திரமந்திரஜெபம் அநேக உரு ஜபித்து தினம் தினம் ஒரு காலமும் தவறாமல் செய்தார். (எ-று)

24. தக்க தாங்கந்த தீர்த்தத் தாலன்பாய்
சங்கரன் றனையாட்டியு
மிக்கவே வில்வ மாயிரத்தொடு
நீலமாயிர முறை முறை
மிக்க மந்திரம் நினைந்தருச்சனை
விதியினிற் பூசித்துங் கனிகிழங்
கொக்க நீரினை வேதனஞ் செய்து
முண்டும் நாட்பல போக்கினார்.

(இ—ள்) இப்படி சிவ சன்மாவான குமாரசுவாமிக் கடவுள் தமது பேரால் விளங்கிய கந்த தீர்த்தத்தில் அன்



புடனே ஜலம் கொண்டுவந்து சிவனுக்கு அபிஷேகம்பண்ணி மூன்று கிளையான வில்வமும் வாசனையுள்ள செங்கழுநீர்ப்பூவுங் கொண்டு முறை முறையே ஆயிரம் நாமத்துடனே அர்ச்சனை பண்ணி மந்திர தியானத்துடனே பூஜைசெய்து, தண்ணீர், கனி, கிழங்குகள் முதலானவற்றை நிவேதனம் செய்து அந் தப் பிரசாதத்தைத் தான் புசித்து இப்படியாக வெகுதினம் செய்துவந்தார். (எ-று),

25. சுருங்கி டாத்தவ முயன்று மோர்பதந்
தூக்கி மாதமொன் றோர்விரல்
றிருந்த வூன்றியுஞ் சருகுதின்றுமே
திங்கள் நான்குதான் சென்றபின்
வருந்திடாம னீர்வாயு வுண்டுமே
மாத மீரைந்து மருவியொன்
றருந்திடாக் மலகல் காயமேயிட
மாகியே தவமாற்றினார்.

(இ—ள்) மிகுந்த தவத்திலே மனம்வைத்து ஒரு கால் தூக்கி நின்று ஒருமாதம் தவம்செய்து ஒரு விரல் அப்பூமியில் ஊன்றி நின்று சருகு அருந்தி நான்குமாதம் இருந்து, அதன் பிறகு தண்ணீரும், வாயுவும் முறையே அருந்தி பத்துமாதம் தவமியற்றி பின் ஒன்றும் புசியாமல் ஆகாசமிடமாகவும் மகா தவம் செய்தார். (எ-று).

26. நிருவிகற்பராய் நிரஞ்சனரென நிஷ்களஞ் சச்சிதா
[னந்தத்
தருந்தவத்தினாற் சாந்தராய்ச் சகலவாதார
[நிராதாராரகியே
திருந்திடுஞ்சகுண நிர்க்குணஞ் சுத்தநித்தராய்த்
[திகழாதியாய்ப்
பொருந்திடா மமதைசுத்த சித்தமாய்ப் பொலிந்து
[போகியா யீதெனு.

(இ—ள்) விகற்பமில்லாதவராய் நிரஞ்சனமாய், நிஷ்களங் கமாய், சச்சிதானந்த தவத்தனாய், சாந்தராய், சகலவாதர

வாய, நிராதரவாய், சகுணராய், சுத்தராய், நித்தராய்,மமதை நீங்கிய சுத்த சித்தமாய் போகியாக இருந்த அதிசயம் என்ன சொல்லுவோம் என்று யோசித்தார்கள். (எ-று).

27. சுத்தத்தற் பரர்பரம தாயொளிர் சொரூபம் வேறல [வாய்க்கலந்
தொத்திடச் சொலும் வருடமொன்று மொழிய [வானவரோதிடு
முத்தமத்தவமிக சாபமே யொழிய யுமையுநாயக [னெதிர்வதா
மித்தலந்தன்னிற் றிப்பிய உருவம்எய்தி மல்கினரிவ் [வணம்

(இ—ள்) சுத்த தற்பரர் பரமாகிய சொரூபம் வேறல்லாத தாய் கலந்து தானெழிந்து நின்ற தவத்தில் ஒருவருஷம் நின்றார். முனிவராலும், தேவராலும், சொல்லிய தவம் மிகுந்த அதனால் அச்சாபமானது நீங்கி திவ்வியரூபம் அடைந்தார். அப்போது ஈஸ்வரியும் பரமசிவனும் பிரத்தியக்ஷமாய் காக்ஷி கொடுத்தார் இவ்வெருக்கத்தம்புலியூரில். (எ-று).

28. திங்க ளஞ்சடைச் செல்வ னம்பிகை
கையின் மீதினிற்கை வைத்துமே
துங்க மால்விடை மீதிற் தோன்றலும்
புளக மெய்யெலாந் தோன்றவானந்த
மங்கண் மல்கிட மகிழு மன்பொடும்
வணங்கிச் சென்னிமீ தஞ்சலித்துமே
பொங்கு காதலா விமைத்திலா விழி
கொண்டு போற்றுவர் புகழின்மேன்மையே.

(இ—ள்) இளம்பிறைச் சந்திரனையும் கங்கையும் தரித்த சடாமகுடமுள்ள பரமசிவன் ஈஸ்வரி கையின்மேலே கையை வைத்து ரிஷப வாகனத்தின் மேலேறிக்கொண்டு முன்னுகை எழுந்தருளினர். அது கண்டு சரீரம் புளகமாகி ஆனந்த ஜலம் கண்களிலே ஒழுக மனம் மகிழ்ந்து வணங்கி சிரசின் மேலே கைகுவித்து அனேக ஆசையுடனே இமையா நாட்டமாய் அனேக விதமாக பரமசிவனை தோத்திரம் செய்தார். (எ-று).



வேறு.

29. மாதொரு பாகா மகேசனே வெள்ளை
மால்விடை யூர்தியே யெழுத்தைந்
தாதியே யயன்மால் தொழுமுருத் திரனே
யகோரமே யகோரமாம் வடிவே
மீதெழு முருவே யிந்திரன் முதலோர்
மெய்ச்சிர மேற்பதந் தோயுஞ்
சோதியே மிக்கா மெருக்கத் தம்புலியூர்
தோன்றலே சுடர்மணி விளக்கே.

(இ—ள்) பார்வதி சமேதா, மகேசுவரனே, விஷ்ணுவான ரிஷபவாகனனே, பஞ்சாக்ஷர சொரூபனே, பிரம்மா, விஷ்ணு வணங்கும் ருத்திரமூர்த்தியே, அகோரரூபனே, மகாரூபமுள்ள வரே, இந்திரன் முதலானதேவர்கள் வணக்கம் செய்த பாதனே, சோதிரூபமானவனே, எருக்கத்தம்புலியூரில் விளங்கிய கர்த்தனே, இரத்தின தீபமே என்று ஸ்தோத்திரம் செய்து பின்னும் சொல்லுவார். (எ-று).

30. முச்சுடர் கண்ணு வாநந்த நடஞ்செய்
முதல்வனே நுதல்விழி தன்னு
லச்சுதன் சுதனை யட்டவா வைந்து
பிரம்மமே யருவுரு வாகும்
நிச்சயப் பொருளே காலற்குங் காலா
நீரணி சத்தியோ சாதா
வச்சமிலந் தகசுரனுக் கருளுங்
கணேச்சுரத் தாய்பணி வாமே.

(இ—ள்) சந்திர சூரியன் அக்கினி மூன்றும் நேத்திரமான வரே, பஞ்சகர்த்தாவானவரே, அருபமாக நின்றவரே, இயமனை உதைத்து மார்க்கண்டேயரை ரக்ஷித்தருளிய பாதார விந்தமுள்ளவரே, சத்தியோ சாத முகத்துக்குடையவரே, அந்தகாசுரனுக்கு கிருபைசெய்த கர்த்தனே, கணேச்சுரத்தில் வாசஞ்செய்யும் பரமசிவனே என்று ஸ்தோத்தரித்து, பின்னும் சொல்லுவார். (எ-று).

31. இருநிதிக் கிழவனன்பனே யிமையவ
ரேத்திடுஞ் சந்திரசே கரனே
பெருகிடுங் கங்கை முடித்த தற்புருடர
பேசரும் சூலபா ணியனே
யரு மணு மாதியெண் குணத்தவனே
யசலனே பயங்கர வடிவே
பொருவரு நாகம் பூணெருக் கத்தம்
புலிநகர்க் கிறைவனே பணிவாம்.

(இ—ள்) குபேரனுக்குத் தோழரானவரே, தேவர்கள் சகலரும் தோத்திரம் செய்யும் சந்திரசேகரனே, பெருக்கமுள்ள கங்கையைச் சடையிலே தரித்தருளிய தத்புருஷ முகத்தை யுடையவரே, சகலராலும் தோத்திரம் செய்யும் சூலாயுதத் தைக் கையிலே தரித்தவரே, அணுமுதலாகிய சகலமும் ஆன வரே, அனந்த வீரியம், அனந்தஞானம், அனந்த தரிசனம் முதலான எட்டு விதமான குணமும் தானுகி நினறவரே, சகல மானவரே, பயங்கர ரூபமுள்ளவரே, நாகபூஷணரே, 'எருக் கத்தங்புலியூரில் எழுந்தருளி இருக்கும் மகாதேவரே என்று ஸ்தோத்திரம் செய்தார். (எ-று).

32. என்னுமுய ரன்பிற்சிவ சன்மரினி தேற்றிச்
சென்னியினல் வணங்கவரன் சிந்தையினில் மகிழ்ந்தே
யின்னகைய தாயருளு மெமதுமைந் தனேநீ
சொன்னவகை நல்குவோமெனத் தொழுது இவை
[கூறுவார்.

(இ—ள்) இப்படி அனேகவிதமாய் ஸ்தோத்திரம் செய்து வணங்கிய அளவில் பரமசிவன் மனமகிழ்ந்து சிறுநகை செய்து நமது புத்திரனே நீ என்னவரம் கேட்டாயோ அவையெல்லாம் கொடுப்போம் என்று சொல்ல பின்னும் வணங்கிக் கேட்டுக் கொள்வார். (எ-று).

33. அய்ய நின்பெய ருங்கும ரேச னெனவாக
வெய்ய வன்சசி யுள்ளள வும்பெயர் விளேவாக
மெய்யுறு தீர்த்தம் கந்த தீர்த்தமென வியா
மையகல் இவ்வர மகிழ்ந் தருள் செய்தாரே.



(இ—ள்) சகல புவன கர்த்தாவே! அடியேன் கேட்கும் வரம் குமரேசர் என்று தேவரீர் பெயரும், குமாரபுரி என்று இந்த ஸ்தலத்திற்குப் பெயரும், கந்த தீர்த்தம் என்று இந்த தீர்த்தத்திற்குப் பெயரும் சந்திர சூரியர் உள்ளளவும் விளங்கத் தக்கதாக எனக்கு அனுக்கிரகம் செய்வீரென்று கேட்டார். (எ-று).

34. அரனினிய மைந்த உனக்கான வரமளித்தோம்
கருணைமிகு கங்கைமுத லாயநதி யாவுந்
திருவளர்முக் கோடி தீர்த்த மெனுமிவற்றில்
உரிமையுடன் மூழ்கியுயர் வுற்றிடவு மீந்தோம்.

(இ—ள்) நம்முடை புத்திரனை குமரசுவாமியே நீ கேட்ட வரம் எல்லாம் கொடுத்தோம். அநேக பாவங்களெல்லாந் தீர்த்து மோக்ஷம் கொடுக்கும் கங்காநதி முதலான மூன்றுகோடி தீர்த்தங்களும் இந்த கந்த தீர்த்தத்திற் கீடாகாது. இதில் மூழ்கினவர் நிர்மலமனதாய் மேலான உயர்ச்சி பெறவும் வரம் கொடுத்தோம் என்றார் பரமசிவன். (எ-று).

35. மட்டவிழுங் கொன்றைபுனை வள்ளலவர் வழங்கி
விட்டொளி ரிலிங்கமதின் மேவினர் முருகர்க்
கிட்டகொடுஞ் சாப மிறங்கிட வறிந்தே
யுட்டெளிந்து தந்தைதாய் உன்னி மகிழ்வுற்றார்.

(இ—ள்) தேன்பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த பரமசிவன் இப்படியாக வரங்கொடுத்து லிங்கத்திலே மறைந் திருந்தார். குமாரசுவாமிக்கும் சாபவிமோசனம் ஆயிற்று. பரமதத்தனுகிய தந்தையும் அனுசூயையும் இந்த புதுமைகள் எல்லாம் கருதி அதிசயித்து தெளிந்து மகா சந்தோஷம் அடைந் தார்கள். (எ-று .

36. தன்னதாய சாபமகல் சங்கரன் தன்சரிதை
சொன்னவர்கள் கேட்டவர்கள் சொற்பொருள் படைத்தே
மன்னி யிடுமிவ்வுலகில் மாசில் புகழுண்டாய்
மின்மருவு செஞ்சடை யினன் பதமும் மேவும்.

(இ—ள்) பரமசிவன் புத்திரனான குமரசுவாமிக்கு வந்த சாபம் தீர்ந்த இந்த சிவகதையைச் சொன்னவர்களும் கேட்டவர்களும் சொற்பொருள் படைத்தே வாழ்ந்திருந்து பின்பு மின்னலைப்போல் பிரகாசிக்கின்ற சடாதரராகிய பரமேசுரனுடைய பாதமே கதியாக மோக்ஷமடைவார்கள். (எ-று).

37. கண்ணுதற் கடவுள்தலங் கங்கைமக னெய்தி
பண்ணுமுயர் பத்திபல பகர்ந்தன மிதில்தான்
புண்ணியமும் பலபலவே புரிந்தனர தன்பொற்பை
யெண்ணியுரை செய்வதரி தென்னினு மீதுவமே.

(இ-ள்) நெற்றிக் கண்ணினையுடைய பரமசிவன் விற்றிருக்கும் எருக்கத்தம்புலியூர் என்னும் ஸ்தலத்தில் கங்காதேவி புத்திரனான குமாரசுவாமி வந்து பூஜை செய்து பாபவிமோசனமாகி திவ்யசொருபம் அடைந்த கதையைச் சொன்னோம். பின்னும் அந்த தலத்தில் அவர் அநேக சிவ தருமங்கள் செய்த விதங்களையும் நினைந்து சொல்லுவதற்கரிது என்றாலும் என்னால் தெரிந்த மாத்திரம் சொல்லுகின்றேன் என்று சூதமகாரிஷி சொல்லுகிறார். (எ-று)

குமாரபூஜை சருக்கம் முற்றும்.

---

## ஐந்தாவது திருப்பணிச் சருக்கம்.

1. சிறந்தவிக் கதையைக் கேட்பீராகிற் றெளிநெஞ்சம்
புறந்தனிற் போகா திடரது நீங்கும் பொய்கோப
மறந்தொட ராது வஞ்சனை யகலு மகிழ்வுற்றே
யறந்திகழ் வாகு மானந்த மல்கு மளவின்றே.

(இ—ள்) சிறப்பு தங்கிய இந்த சரித்திரத்தை சவுனகாதியர்களே நீங்கள் கேட்பீராகில் உங்கள் தெளிந்த மனம் பக்கத்தில் செல்லாது. இடர்கள் நீங்கும். பொய், கோபம் முதலிய பஞ்சமா பாதகங்களும் அணுகாது. இன்பமுற்று முப்பத்திரண்டு தருமமும் விளங்கும் அளவற்ற மிக்க ஆனந்தம் உண்டாகும். (எ-று)



2. கூர்வை வேலான் குணமா புகல்ழக் கேட்டார்க்
கார்வ முடைய சவுனக முனியீ ரன்பாக
சார்பு முறையு மனமுந் தனுவுந் தலைவன்
சேர்வுறும் வண்மை நிலையாமுமது செயலன்றே.

(இ—ள்) அன்புடைய சவுனகாதி முனிவர்களே நீங்கள் கூர்மை பொருந்திய வேலாயுதத்தைத் தரித்த சண்முகக்கடவுள் இயற்றிய அழகிய திருப்பணியை இன்னும் கேட்க விருப்பமுற்றது தலைவனாகிய பரமசிவனிடத்தில் ஆக்கையும் வாக்கும், மனமும் நிலையாகச் சேருகின்ற வண்மையாம். இஃது உமது செயலன்று. அக்கடவுளின் செயலாகும் (எ-று)

3. உமக்கொப் பவரிவ் வுலகத்தில்லை யுணர்வாலே
யெமக்கொப் பவரிவ் வுலகத்தில்லை யேதென்னிற்
தமக்கொப் பின்றாங் கயனிந்தத் தலந்தன்னை
நமக்கினி தென்றே துதித்தனன் அன்பாலே.

(இ-ள்) இன்பமாக வசிப்பதற்குத் தக்க இடம் என்று துதிசெய்து ஆசித்த திருஎருக்கத்தம்புலியூராகிய இந்த க்ஷேத்திர மகத்துவத்தைக் கேட்க விரும்பும் சவுனகாதி முனிவர்களே அறிவினில் உங்களுக்கு ஒப்பானவர்கள் இந்த உலகத்தில் இல்லை. உணர்வாலே எனக்கொப்பவரும் இவ்வுலகத்தில் இல்லை. (எ-று)

4. இன்னன நைமி சாரணமுனிவர் தமை யேற்றம்
சொன்னபி னவர்கள் சூதரை நோக்கிச்
[சொல்வாரால்
மன்னவன் வாத ராயனெனுநன் மதங் கத்தா
முன்னிய முனியே பணியணி சொல்கென
[மொழிகின்றார்.

(இ—ள்) இவ்வண்ணம் சௌனக முனிவர்களைப் புகழ்ந்து கூறிய சூதபுராணிகரை நோக்கி சௌனகாதியர்கள் கூறுகின்றார்கள். வரதராயனென்னும் அரசனுக்கு தயைபுரிகின்ற உமையவளை வலப்பாகத்தில் வைத்த பரமசிவனை

அமர்ந்து நால்வர்க்கு உபதேசித்த குருமூர்த்தியாய் வந்த தெட்சிணாமூர்த்திக்கும், பிதாவினுடைய குற்றம் தீர்த்த சண்டிகேஸ்வர சுவாமிக்கும் கோயில் அமைத்தான். (எ-)

10. மண்ணினுஞ் சுவர்க்கமான வானினு மனதிடத்தும்
நண்ணிய விருநோய்தீமை பகையற நாளுஞ்செய்யும்
விண்மணி தனக்குந் தொண்டர்க் கென்றென்று
[விருப்பமேவ
கண்ணருள்புரி சூலக்கைக் காளிக்கும் கோயில்
[செய்தான.

(இ—ள்) பூமியினிடத்தும் சுவர்க்கலோகமாகிய ஆகாயத்திலும் யாவருடைய மனத்திலும் விளங்கி நெருங்கிய இருட்டாகிய நோய்களையும், தீமையாகிய பகைகளையும் போக்கி நாட்களை விளக்கஞ்செய்யும் சூரியமூர்த்திக்கும், தொண்டர்களுக்கு எப்போதும் விருப்பம் உண்டாக திருக்கண்ணருள்புரிய சூலத்தைக் கையில் ஏந்திய காலவைரவி நாதமூர்த்திக்கும் கோயில் அமைத்தான். (எ-று)

11. தனியொளிர் வாலதிங்கட் டரித்த சங்கரர்க்கு நீண்ட
குனிவரை விற்கொள் சோமர் கந்தர்க்குங்
[குறைவில்சோதி
யெனுமுய ரம்பிகைக்கும் பரிவார தேவர்க்கெல்லாம்
நனிதெரிகோயிற் செய்துநந்தி மண்டபமுஞ் செய்தான்.

(இ—ள்) ஒப்பற்ற கிரணங்களை வீசுகின்ற பாலசந்திரனை ஜெடாபாரத்திற் தரித்த சிவபெருமானுக்கும், நீண்ட மேரு வரையை வில்லாக கையிற்பிடித்த சோமாஸ்கந்த மூர்த்திக்கும், நிறைந்த சோதி சொரூபமாகிய அம்பிகைக்கும், பரிவார தேவர்களுக்கும், விளங்கும்படியான கோயில்கள் அமைத்து மேலான நந்திகேஸ்வரனுக்கு மண்டபம் ஒன்றும் செய்தான். (எ-று)

12. பலவகைப் பத்திதோன்றப் பருதிமா மதியுற்றென்ன
விலகுமாலய மியற்றி யெழில் வைடூரியத்தான்
விலகி வில்லுமிழ் பதக்கமிளிர் மகுடங்கண்மாலை
வலையமு முமையவட்கு மனத்தினால் வகுத்தணிந்தான்.



(இ—ள்) பலவித மணியினாலே சீர்திருத்தி ஒழுங்குபெற அமைத்த சூரிய சந்திரர்கள் உதயமானதுபோல விளங்காநின்ற கோயிலை நியமித்து வைடூரியத்தால் பிரகாசிக்கின்ற பதக்கங்களும் ஒளிபொருந்திய கிரீடமும், அழகு மிகுந்த ஆரங்களும் அவர்க்குவலயமும் மனதினாலே வகுத்து எம்மை ஆளும் உமாதேவிக்கு அணிவித்தான். (எ-று)

13. தரைபுகழிந்திர தெய்வந் தனக்கு மாபரணமான
நிரைகள் செய்தணிந்தாருக்கே யூர்திகணிய
[மிக்கின்றுன்
வரைநிக ரானைசிங்கங் கபிலைமாமலையே நதியும்
உரைசெயு மவிமானன்னம் மயில் முதலுவப்பச்
[செய்தான்.

(இ—ள்) உலகத்தோர் புகழும்படியான மற்ற இதர பரிவார தேவர்களுக்கும் அவரவர்களுக்குத்தக்க ஆபரணாதிகள் அணிந்தும் சங்கரமூர்த்திக்கு ஊர்தியாகிய ரதம், யானை, சிங்கம், காமதேனு, குதிரை, மலை, நதி, அன்னம், மயில், இன்னும் சொல்லுதற்கரிதாகிய விமானம் முதலாகிய வாகனங்களை மனங்களிக்கச் செய்தான். (எ-று)

14. பைம்பொன்னால் மாணிக்கத்தாற் பலபல மணியாற்
[செய்த
வும்பர்சேர் கொடிகள் சத்திரசாமரையுயர் சேங்கண்டி
வம்புசேர் கலசமோடு பாத்திரவகைகள் தட்டுக்
கும்பங்கள் விளங்கும் வாச்சியப் பலவிதகுழாமுஞ்
[செய்தான்.

(இ—ள்) பசுமை பொருந்திய பொன்னினாலும், மாணிக்கம் முதலிய பலமணிகளாலும் இயற்றிய ஆகாயத்தைஅளாவிய கொடிகளும், பூச்சக்கரக்குடைகளும், வீசுகின்ற சாமரைகளும், சப்திக்கின்ற சேங்கண்டிகளும், மணம் கமழுகின்ற சாம்பிராணி கலசங்களும், இவை முதலாகிய பாத்திரங்களும், தீபத்தட்டுகளும், அழகிய கும்பங்களும் பலவித வாத்தியக்கருவிகளும் அமைத்தான். (எ-று)

வணங்கும் சூதமாமுனியே முன் கூறிய திருப்பணி அலங்காரத்தைச் சொல்லவேண்டும் என்று சௌனகர்கள் கேட்க புராணிகர் சொல்லத் தொடங்கினார். (எ-று)

5. கறைசேர் கண்டன் வானதி லிங்க மதிலுற்று
மறைய வென்னே யென்னே யென்று மறையோது
மிறையோ னின்னரு ணினைந்தாச்சரிய மிசை போதின்
முறைகோ வாணி திருப்பணிசெய் யறுமொழி கேட்டான்

(இ—ள்) ஆலகால விஷத்தைக் கண்டத்தில் அடக்கிய பரமசிவன் காவிரி நதிக்குச் சமானமாகிய சுவேத நதிக்கரை அருகில் லிங்க சொரூபமாய்த் தோன்றி மறையவும், வேதத்திற்குப் பொருள் யாது யாதென்று வினவியோதுகின்ற முருகக் கடவுள் காட்டி ஒளித்த பொருளை நினைந்து ஆச்சரியமடையும் சமயத்தில் ஆகாசவாணி திருப்பணிசெய் என்று ஒலித்த சப்தத்தை இரு செவியினாலும் கேட்டு. எ-று)

6. வைய முய்ய அமராபுரித் தச்சனை வாவென்றே
அய்யன் நினைந்திட வந்தடிதாழ்ந் தவனருள் வாடைக்
கையதினால் மிகமுடியு நிற்கக் கவினாகுஞ்
செய்யநம் மிறைவன் கோயிலை வளமாய்ச்செய்
[யென்றான்.

(இ—ள்) இவ்வுலகத்தில் பிழைக்கும் பொருட்டு குமாரக் கடவுள் தெய்வத் தச்சனை வரவேண்டுமென்று நினைத்ததும் விசுவகர்மாவும் சீக்கிரமாக வந்து வணங்கி வாய்புதைத்து நிற்கக்கண்டு, அழகு வாய்ந்த செவ்விதாகிய நம் இறைவன் திருக்கோயிலை வளம் பொருந்த சிருஷ்டி செய் என்று தேவ சேனாதிபதியான முருகக்கடவுள் ஆக்ஞாபித்தார். (எ-று)

7. கற்றதங் கல்விநூலார் கருத்தினாற் பொன்னாற் கல்லால்
வெற்றிசேர் சூலபாணி மேவிடும் விமானக் கோயிற்
சுற்றிடும்மதில்கள் வாயிற் றாணிறை யறுகாற்பீட
முற்றினர் கொடுங்கை பீட முறையொளிர் கதவுமாடம்.



(இ—ள்) தெய்வத் தச்சனானவன் தான் கற்ற கல்வி நூலாகிய சிற்ப சாஸ்திர விதிப்படியும் தனது கருத்தின் யுக்திப்படிக்கும் பொன்னினாலும். கல்லினாலும் வெற்றி பொருந்திய சூலபாணியாகிய திருக்குமரேசுவரசுவாமி வீற்றிருக்கும் விமானம் பொருந்திய திருக்கோவிலும், நான்குபுறமும் சூழ்ந்து வளைக்கும் திருமதிலும், கடைவாயில்களும், தூணிறைந்த அறுகாற்பீடங்களும், முத்தினாற்செய்த கொடுங்கைகளும், பிரகாசிக்கின்ற கதவுள்ள மாடங்களும். (எ-று)

8. தெய்வநல் வேள்விச்சாலை குண்டமண் டலஞ்சிறந்த
சைவச்செந் தழல்வளர்க்குஞ் சுருவையுஞ் சமித்துந்
[தந்தும்
மெய்வகை வேதநூல்க ளாகமம் விளம்பிடங்கள்
செய்யமடப் பளிகளோடே திருமக ளிருக்கை செய்தான்.

(இ—ள்) நல்ல தெய்வங்கள் அவிர்ப்பாகம் நுகர்கின்ற யாகசாலைகளும், யாககுண்டங்களும், சைவச்செந்தழல் ஓங்கி வளருகின்ற சுருவச்சமிதைகளும், மெய்யாகிய வேதநூல்களும், ஆகமங்களும் விளங்கும்படியான பொற்கூடங்களும், செவ்விதாகிய திருமடப்பள்ளிகளும், இலக்குமி வசிக்கும் அழகிய திருக்கோவிலும் அமைத்தான். (எ-று)

9. கருதினோர் வினையகற்றும் கணபதி தனக்குந்
[தொண்டர்
பெருமை பெற்றிடவே லேந்தும் பிள்ளைக்கும்
[நடனஞ் செய்யு
மொருவ நால்வர்க்குண்மை யுரைத்திட கல்லா
குருவிற்கும் பிதாகுற்றந்தீர் தண்டிக்குங் கோயிற்
[செய்தான்.

(இ—ள்) துதிக்கின்ற அடியார்கள் தீவினைகளைப்போக்குகின்ற கெஜமுகக் கடவுளுக்கும், தொண்டர்களைக்காக்க வெற்றி வேலேந்திய பாலசுப்பிரமணியருக்கும், பொன்னம்பலத்தில் நடனமாடும் சபாநாயகருக்கும் கல்லால விருக்ஷத்தின்கீழ்

15. தனதுள கல்வியின் கருத்தாங் சங்கரனாலயத்தில்
நினைவரிதாகும் வண்மை நிரைசெய்து நிகரிலாத
நனைமலிக் கடம்பணிந்த நாதனுக்குரைக்க நாடி
வினையமாங் கல்வியானை மிகுதியாய் வியந்துரைத்
[தான்.

(இ—ள்) தேவதச்சனான விசுவகர்மனும் தானுணர்ந்த சிற்ப சாஸ்திர நிர்ணயத்தாலும், மனயுக்தி சாதுர்யத்தாலும் திருக்குமரேசுர சுவாமியினுடைய திருவாலயத் திருப்பணியை நினைவிற்கும் எட்டாத வண்ணம் பூர்த்திசெய்த உற்சாகத்தை ஒப்பில்லாத பெருமை மிகுந்த கடம்ப மாலையையணிந்த வடிவேல் ஏந்தும் முருகக்கடவுளாகிய எமதையனிடம் முறைசெய்யவும் அக்கடவுளும் சிற்பிதனைப் புகழ்ந்து அகமகிழ்ந்து ஆச்சரியத்தை அடைந்தார். (எ-று)

திருப்பணிச்சருக்கம் முற்றும்.

---

## ஆறுவது நகரணிச்சருக்கம்.

1. பற்பல வாகுஞ் சிவதரு மஞ்செய் பவைகேட்டே
யற்புத மெய்தி முனிவர்கள் பின்னு மரன்மைந்தன்
நற்பதி செய்த வகையுரை யெனவன் னகர்செய்த
பொற்பினை யுரைசெய வாயிர நாவும் போதாதே.

(இ—ள்) பலபல விதமாகிய சிவபெருமானுக்குச் செய்த தர்மங்களைக்கேட்டு ஆச்சரியமடைந்து நைமிசாரண்ய ரிஷிகள் இன்னமும் கேட்கின்றார்கள். அரனுடைய குமாரராகிய சுப்பிரமணியக்கடவுளால் நல்ல வளமை பொருந்திய பட்டணத்தைச் செய்த வகுப்பைச் சொல்லவேண்டுமென்று கேட்க, சூதபுராணிகர் அந்த நகரம் புதுக்கிய பொலிவைச் சொல்ல ஆதிசேஷனுடைய ஆயிரம்நாவும் போதாது. ஆகிலும் சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று சொல்லத் தொடங்கினார். (எ-று)

2. என்னினு நீங்கள் கேட்க விரும்பினி ரென்பாலே
யன்ன தினாலுமக் கன்பினி லியானு மறைகின்றேன்



துன்னிய மாரனுங்களை வந்து தொடராத
வின்னிய மங்கொடு கேட்டரன் றாளுக் கியல்பாவீர்.

(இ—ள்) இப்படிக்கேட்கின்ற நைமிசாரண்ய ரிஷிகளுக்கு சூதபுராணிகர் சொல்லுகிறார். நீங்கள் என்னிடத்தில் கேட்க விரும்பினதினால் உம்முடைய அன்பினால் சொல்லுகின்றேன். கிட்டிய மன்மதனுடைய பஞ்சபாணம் வந்து உம்மையணுகாமல் இனிதாகிய நியமத்தை உட்கொண்டு கேட்டால் பரமசிவத்தினுடைய திருவடிகளுக்கு உரியவராவீர்கள். (எ-று)

3. அமரர்க ளுய்தற் காலம துண்டோன்றன் கோயி
லியையவர் தச்சன் செய்வதற் கழகா யிசைவர்கக்
குமரனின் னகரஞ் செல்கென வீதி கோபுரமுங்
கமழ்பொழின் மதில்சூழ் சிற்ப னூற்படி கற்பித்தான்.

(இ—ள்) தேவர்கள் உயிர் வாழ்வதற்கு ஆலகால விஷத்தை புசித்த பரமசிவனுடைய கோயிலை தெய்வத் தச்சனை அழகாகவும், இசைவாகவும் செய்வதற்கு பாலசுப்பிரமணியக் கடவுள் இந்த நகரத்தை புதுக்கென ஆக்ஞாபிக்க விசுவகர்மாவானவன் வீதிகளையும், கோபுரங்களையும், வாசனை வீசுகின்ற சோலை சூழ்ந்த மதில் அகழியுடனே சிற்பநூல்படி சிருஷ்டித்தான். (எ-று)

4. நாற்றிசைச் சவுக்கஞ் சந்திகண் மேனிலை நடமாட
மேற்றிகழ் கொடிகள் மாளிகை சூளிகை மேவுமில்
கூற்றினை யுதைத்தோன் னேர்நிலை மேடை கூடங்கள்
வீற்று வீற்றுக வேதிகள் வேத சாலைகளும்.

(இ—ள்) நான்கு பக்கங்களிலும் சதுரமாகிய பலதெருக்கள் கூடுமிடத்தையும், மேன்மாடங்களையும், பெண்கள் நடனஞ் செய்கின்ற இடங்களையும், வானத்தையளாவிய ஒளி வீசுகின்ற கொடிகளையும், மாளிகைகளையும், யானைக்கொட்டாரங்களையும், எமனை உதைத்த பரமசிவனுடைய தேர் நிறுத்துகின்ற மேடையாகிய கூடங்களையும் பந்தி பந்தியாக வேதிகைகளையும் வேதமோதுகின்ற பாடசாலைகளையும் உண்டாக்கினான். எ-று)

யாக நீர்வந்து நிரம்பிய வயல்கள் தோறும் நெற்பயிர்கள் சங்குகள் மாருமல் சஞ்சரிக்கும், மதகுகள் இப்படியாக எல்லாம் உண்டாக்கினுன். (எ—று,

11. அண்டர்கள் வியப்ப வளர்ந்தெழுமாகமமுஞ் சோலை
வண்டிசை முற்றும் நெருக்கிய மாபலவின் சோலை
மண்டி நெருக்கிய நெட்டிலை வாழை மாசோலை
கண்டு தருங்கழைச் சோலையு மாம்படி கற்பித்தான்.

(இ—ள்) தேவர்களும் சந்தோஷிக்க வளர்ந்த உன்னதமுள்ள கமுகந் தோப்புகளும், வண்டுகளின் இசையும், பலாச் சுளைகளில் ஈயின்கூட்டம் மாருத பலாத்தோப்புகளும் நெருங்கி நீண்ட இலைகள் பொருந்திய வாழைத் தோட்டங்களும், கற்கண்டைத்தருகின்ற கருப்பஞ் சோலைகளும் உண்டாகும்படி செய்தான். (எ-று)

12. கன்றை நினைந்து கரந்த பசுத்தொழுவின் கூட்டம்
மென்றழலார் பலர் தங்குறு மண்டபத் தின்கூட்டம்
நன்றியி னமையும் பந்தவி தான நற்கூட்டம்
நின்றுறு தேரணிக் கூட்டமு மோங்க நியமித்தான்.

(இ—ள்) கன்றுகள் வயிறு நிரம்ப பால்குடித்து மிகுதியும் கறக்கின்ற பசுக்களுக்கு தொழுவங்களும், யாகம் செய்யும் பிராமணர்கள் இருக்கும் அநேக மண்டபங்களும், நன்மை பொருந்திய பந்தல் விதானங்கள் அநேகம் அணி அணியாக தெருக்கள் அநேகம் அமைத்தான். (எ-று)

13. வண்டரு மன்றினடித்தவர் தொண்டர் மடங்கூடக்
கண்டன னற்றளி ருந்திடு கற்பகக் காவீட்டங்
கொண்டன் நகரிற் குறைவருசெல்வங் கொளக்கல்வி
யண்டர்வியக்கு மிலக்கண முறையே யமைத்தானே.

(இ—ள்) குற்றமாகிய பாவங்களெல்லாம்தீர்ந்து அடியார்களுக்கு மோட்சம் கொடுக்க கனகசபையில் நர்த்தனம் செய்த பரமசிவனை பூஜை செய்யும் அடியார்களுக்கு மடங்களும் உண்டாக்கி தளிர்பொருந்திய கற்பக பூங்காவனமுடைய அமராவதி பட்டணம்போலும் குறைவற்ற செல்வமுண்டாகி தேவர்களும் கண்டு மகிழ்ச்சி அடையும்படி அமைத்தான். (எ-று)



14. ஆறணி சடையான் விழாவினுக் கடையவிர் வட்டம்
வீறிய வெண்சா மரைகொடி சத்திரம் மேற்கட்டு
நாறிய பூமணி யாடிகள் மரகத நற்தட்டு
வீறிய தங்கக் குடமுதலனைத்தும் விதித்தானே.

(இ—ள்) கங்கையைச் சடையிலே தரித்திருக்கும் பரமேஸ்வரர் திருவிழாவிற்கு வீதி அலங்காரம் செய்ய ஆபரணப் பட்டாடைகள், ஆலவட்டங்கள், வெண்சாமரைகள், இடபக்கொடிகள், குடைகள், மேற்கட்டிகள், புஷ்பங்கள், இரத்தினச் சரங்கள், நிலைக்கண்ணுடிகள், மரகதத்தட்டுகள், குடங்கள், முதலியவற்றை யுண்டாக்கினுன்: (எ—று)

15. கார்தவழ் பொழில்சூ ழெருக்கத்தம் புலியூர் கவினுரு
மேர்மலிகும ரேசுவரம் வரும் ராஜேந்திரன் நல்ல
பேர்பெறுமா திருக்கணே சுரமென்னப் பெயரோங்கி
யார்தரு மிப்படி யெந்த நகருக்கு மழகுண்டே[illegible]

(இ—ள்) மேகங்கள் தவழாநின்ற பூங்காவனங்கள் சூழ்ந்திருக்கும் எருக்கத்தம்புலியூர், அழகு பொருந்திய குமரேசுரம் ராஜேந்திரபுரம், புகழ்பரவிய கணேசுவரமென்றும் இப்படி பெயர்பெற்று விளங்கியது இந்த ஸ்தலம். இந்த ஸ்தலத்தினுடைய அழகு எந்த ஸ்தலத்திற்கும் இல்லை. (எ—று)

16. திருநக ரத்தைச் சிறப்பொடு செய்த திறந்தன்னைப்
பெருமையின் விசுவ கருமன் வணங்கி பேசித்தா
னொருவனுந் தேவருலகம் போகவுரைக்குங் கால்
முருகனுந் திருவிழா முடித்தபின் னேகென
[மொழிந்தானே

(இ—ள்) இந்தப் பட்டணத்தை இப்படியாக சிறப்பித்த பெருமைகள் எல்லாம் குமாரசுவாமிக்கடவுளுக்கு சித்தத்திலே

5. வேதியர் வேள்விக்காகிய சாலையும் மேலெல்லாம்
பூதியர் அன்பொடு தங்கிய சாலையும் புனைவித்தே
ஏதிலார்க் கன்ன சாலையும் எங்கும் இசைவித்தே
நீதிகள் நிகழ்த்தும் நிலயமும் எங்கும் நிகழ்வித்தான்.

(இ—ள்) பிராமணர்கள் செய்யும் யாகசாலைகள் விபூதி தூளிதம் பண்ணிய பெரியவர்கள் தங்கிய மடங்கள், மாருத கீர்த்தியுள்ள தர்ம அன்ன சத்திரங்கள், அன்புமிகுந்த சிவ பக்தர்கள் இருக்குமிடங்கள் முதலானவற்றைச் செய்வித்தான். (எ-று)

6. கல்வியின் வல்லோர் கூடிய கூடமும் கற்றோர்கள்
மல்கினர் கூடமும் வாரணக் கூடமும் மாபோரின்
வெல்விடு மாபரி கட்டிய கூடமும் விண்டோயும்
செல்லுறழ் மாமயிற் றங்கிய கூடமுஞ் செய்வித்தான்.

(இ—ள்) கல்விமிக்க புலவர்கள் கூட்டங்களாக இருந்து பிரசங்கம் பண்ணும் கூடங்கள் பருவத சிகரம் போலும் புஜபல பராக்கிரமமுள்ள மல்லக செட்டிகள் சிலம்பம்பண்ண சிலம்பக்கூடங்கள், யானைகள் கட்ட யானைக்கூடமும், யுத்தங்களில் வெற்றிகொண்டுவந்த பஞ்சசாரிகைகளும் கற்ற குதிரைகளும் குதிரைச்சாலைகள், மேகமண்டலமளாவிய கொடுங்கையும் ஆகாசமட்டும் உயர்ந்த சிகரங்கள் உடைத்தாய மயிலிருக்கும் மாளிகைகள், மான்களுக்கு கொட்டில்கள் இப்படிப் பலவிதமான சாலைகளும் உண்டாக்கினன். (எ – று)

7. சுருதியை யோதுந் தொழுகுல வேதியர் தொல்வீதி
பெருகிட விற்போர் பேசிடும் மரசர்கள் பெருவீதி
திரவிய மேவிடும் வாணிகர்கள் வாழுந் தெருவீதி
வெருவுத லில்வே ளாளர்தம் வீதியுமே செய்தான்.

(இ—ள்) வேதாத்தியாயனம் பண்ணி சூரியநமஸ்காரமும் செய்த பிராமணர்கள் வீடுகள், மிக்க யுத்தம் செய்த வில்களைக் கையிலே பிடித்த அரசர்கள் வீதிகள், திரவிய சம்பன்னரான வைசியருடைய வீதிகள், மனோதிடமுள்ள வேளாளர் வீதியும் உண்டாக்கினன். (எ—று)



8 கண்வலை கொண்ட கணிகையர் வீதியுங் கார்கோள்
நண்ணிய வாவண வீதியுமேமிகு நன்குரு
மண்மக ளழகிற் கணியென மற்றும் பலசெய்து
விண்ணவர் தொழவே யெருக்கத்தம் புலியூர்
[விதித்தான்.

(எ—று) கண்ணை வலையாகவீசி விட புருடர்களைத் தங்களுக்குள்ளாக்கிய தேவதாசிகள் வீதிகளையும், வச்சிர வைடூரியம் முதலான பற்பல விதமான பலசரக்குகள், பட்டு ஆடைகளும் பிறவும் உள்ள அங்காடி வீதிகள் மண்மகளான பூமாதேவிக்கு ஆபரணமிட்டதுபோல் விளங்கிய பெருமையினை தேவர்களும் கண்டு தொழும் எருக்கத்தம்புலியூரை யுண்டாக்கினன் தேவதச்சன். (எ—று)

9 பல்லம ரிந்திரன் முதலுள பாலகர்கள் மேவு
நல்லாலயங் காரிக்கமர் கோவிலு மன்பாகச்
சில்தமர் புஷ்கலையின்பதி கோட்டமும் திறமான
வல்லமர் கண்ணெழு மாதருக் கில்லமு மமைத்தானே.

(இ—ள்) தேவர்களுக்கெல்லாம் மேலான தெய்வலோக வாசமான இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்னும் எட்டுபேருக்கும் அவரவர் திக்குகளிலே கோவிலும் வைரவருக்கும், பூரணைபுஷ்கலை நாயகரான ஐயனுக்கும் ஆலகால விஷம் பொருந்திய சப்த மாதர்களுக்கும் கோவில்கள் அமைத்தான். (எ—று)

10. வண்டமர் பூமலர் வாவிகள் கூபம் மலர்க் கேணி
கண்டிடு மேரிகள் கம்புள் தங்கிய கால்வாய்கள்
ஒண்டொரு நெற்பயி ரோங்கும் வயல்சங்
[கொருவாத
வண்டிய மாமத கும்பல னைக வமைத்தானே.

(இ—ள்) வண்டுகள் பொருந்திய புட்பங்கள் நிரம்பிய குளங்கள், கிணறுகள், மலர்க்கேணிகள், ஏரிகள் கானங்கோழிகள் சஞ்சரிக்கும் கால்வாய்கள், அக்கால்வாய்கள்வழி

தெரியும்படி வணங்கிச் சொல்லி விசுவகர்மா என்று தேவத் தச்சன் தேவலோகத்திற்குச் செல்ல விடைகேட்க அப்பொழுது திருக்குமரேசுவர சுவாமி திருவிழா முடிந்த பிறகு போகலாம் என்று சொன்னவளவில் மகா சந்தோஷமடைந்து புதுமைக்கள் உண்டாக வேண்டுமென்று மனதிலே நினைத் தான். (எ—று)

17. நாட்டியப் பாவை சிலசில சாமரை நகைத்தாடப்
பாட்டிசை வீணைகள் பண்ணொடுபாட முழவங்கை
யாட்டிட மத்தளத் தாளச்சயமொடு நடித்தாடக்
கோட்டிக ளிவ்வண்ணம் பின்னிலை தேரிற்கொளச்
[செய்தான்.

(இ—ள்) சிலபதுமைகள் நாட்டியமாட, சிலபதுமைகள் வெண்சாமரம்போட, சிலபதுமைகள் நகைத்து அபிநயம் செய்ய, சிலபதுமைகள் பாட, சிலபதுமைகள் வீணைவாசிக்க, சிலபதுமைகள் மத்தளம்கொட்ட இப்படி அநேக விதமாய் கூட்டங் கூட்டமாக இருந்து சிரகர சரீர அமைப்புடனே இவ்வாறு ஆட நிலைத்தேர்கள் விசுவகர்மா உண்டாக்கினான்.

நகரணிச்சருக்கம் முற்றும்.

---

## ஏழாவது திருவிழாசருக்கம்.

1. மாதல நலத்தினது வண்மையை யுரைத்தீ
ரோதரு விழாவினுய ருண்மையை யுயர்ந்த
மேதையர் வணங்க வருண்மேன்மையை யளிக்கும்
நாதமொழி யென்னமிக நகைத்திதை யுரைக்கும்.

(இ—ள்) இவ்வண்ணம் திருஎருக்கத்தம்புலியூர் ஸ்தல மகிமையை எங்களுக்குத்தெரிய திருவுளம்பற்றினீர். அது கேட்டு மிகுதியும் ஆனந்தத்தை யடைந்தோம். இப்போது அந்தஸ்தலத்தில் கிருபா சமுத்திரமாக எழுந்தருளி இருக்கும்



திருக்குமரேசுர சுவாமியின் திருவிழாச் சிறப்பையும், அதை தெரிசனம் செய்தவர்கள் பெற்றபேற்றையும் எங்களுக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று நைமிசாரண்ய முனிவர்கள் கேட்க சூதமகாரிஷி சொல்லுகிறார். (எ-று)

2. ஆதவனுக் குகந்தநல மானகுட மென்னு
மாதமதில் வாலமதி வாழ்சடில ருக்கு
வேதநெறி யேகுமரன் மேன்மைபெற வேண்டி
மேதகு மகிழ்ச்சியின் விழாச்செய நினைத்தான்.

(இ—ள்) சூரியனுக்கு மிகவும் உகந்த மாசி மாதத்தில் சந்திரசேகரரான பரமசிவனுக்கு வேதமானது சொல்லிய விதிப்படி குமாரசுவாமிக்கடவுள் மிகுதியும் மகிழ்ச்சியுடனே திருவிழாச்செய நினைத்தான். (எ-று)

3. சனகன்முத னல்வர்கள் ததீசிதவ மிக்க
முனிவர்க டுதித்த கௌசிகனொடு மொழிந்த
வனகரெனு மியோகியர்கள் புலிப்பதனு மனந்த
வனத்திலுள பராசர்துரு வாசரொடும் வந்தார்.

(இ—ள்) இப்படியாக நினைத்தபோது சனகன், சனேந் திரன், சனற்குமாரன், ததீசிரிஷி, கௌசிகரிஷி, அநகரிஷி, வியாக்கிரபாதரிஷி பதஞ்சலிரிஷி, பராசரிஷி, துருவாசரிஷி, முதலானவர்கள் வந்தார். (எ-று)

4. அரைக் கணத்தினிலாறிரு கோடிநான் முகரைக்
கருக்கொ ளும்படிசெய்தவர் களுக்கெலாம் பதவித்
துரைத்த னங்களைக்கொடுத்து நற்சொருபத்தை
[யுணர்த்தும்
வரத்தி னிற்பல னாகிய வதிஷ்டனும் வந்தான்.

(இ—ள்) அரைக்கணத்திலே பன்னிரண்டு கோடி பிரம்மாவை யுண்டாக்கி யவர்களுக்கெல்லாம் பதவியாகிய அதிகாரத்தையும் கொடுத்து அவர்களுக்கு பிரும்மசொரூபத்தை அறிவிக்கும் வரத்தினால் பலவானாகிய வதிஷ்ட மகாரிஷியும் வந்தார். (எ-று)

5. காற்க ணத்தினிற் பன்னிரு கோடியாங் கனலி
சூற்கொ ளும்படி செய்தவ ரால்நிசி தொலைத்து
மேற்கொ ளும்படி யண்டபித் திகை யெலாம்விளக்க
வார்த்தை யின்பலனு லருள் மரீசியும் வந்தான்.

(இ—ள்) ஒரு வசனத்தினுலே காற்கணத்தில் பனி ரெண்டு கோடி சூரியனையும் உண்டாக்கி பனிரெண்டுகோடி அண்டங்களுக்கு அனுப்பியந்த அண்டப்பித்திகை அந்தகாரத் தையெல்லாம் நீக்கிய சாமர்த்தியம் மிகுந்த மரீசிரிஷியும் வந்தான் (எ-று)

6. ஒருக ணத்தினி லண்டபிண் டங்களை யுதவி
வருக ணத்தினில் மாற்றியே வல்லப நிகழ
தருக ணத்தினிற் றண்ணளி யாலளித் தாகும்
பெருகணத் தவர் சூழ்தரப் பிருங்கியும் வந்தான்.

(இ—ள்) ஒருகணத்திலே அண்டாண்ட சராசரங்களை யுண்டக்கி பின்னும் ஒரு கணத்திலே சகல வற்றையும் உண் டாக்கி ரக்ஷிக்கும் வல்லமையுடைய மகரிஷிக்கூட்டங்கள் சூழ பிருங்கி மகரிஷியும் வந்தார். (எ-று)

7. தனித்த விடை பிங்கலைதனைச் சுழுமுனையி லேற்றித்
தெளிந்தநல் நாசிநுனிசேர் விழியை நாட்டி
யளித்த வனல் மூட்டியதி லாகுமமு தத்தைக்
களித்தயிலு மியோகரொடு காசிபனும் வந்தான்.

(இ—ள்) பிரகாசமான இடைபிங்கலை யிரண்டையும் சுழு முனை வழியேற்றி நாசி நுனியிலே பார்வையை நாட்டி மூலா தாரத்திலே யிருந்த அக்கினியை சந்திரமண்டலமட்டும் உருகச் செய்து அமிர்தத்தை மாருமல் உண்ணும் யோகசாதனமுடைய வர்கள் அனேகர் சூழ்ந்துவரக் காசிபரிஷியும் வந்தார். (எ-று)

8. புண்டரீ கத்தினிற் பொருந்தும் நான்முகன்
தண்டுழாய் மாலொடுஞ் சாரு நாரத
னண்டநா யகனுடனுதி சேடனுந்
தண்டிசார் தருமிகு சங்கு கன்னனுமே.



(இ—ள்) தாமரைப்பூவில் வாழும் பிரமதேவனும் துளப மாலை தரித்த விஷ்ணுவும், நாரதரும், தேவேந்திரனும் ஆதி சேஷனும், தண்டியும் சார்தருஞ் சங்கு கன்னனும் வந்தார் கள், (எ—று)

9. மனுவரசர் பத்தரொடு கந்தருவர் மண்ணோ
ரினிதுற வேவந்தவர் களிருக்குமிட மூனுந்
தனித்தனியா விடுத்தயில் தரித்துள னல்லோரை
யுனிப்பரிய கணத்தினி லுயர்ந்தகொடி யேற்றி.

(இ-ள்) மனுவரசர்கள், பக்த ஜெனங்கள், கந்தருவர், நரர்கள், இவர்கள் சகலரும் வந்து கூடின அளவில் அவரவர் களுக்கு இருக்க இடங்களும், உண்ண உணவுகளும் செய் வித்து நல்ல கணத்தில் கொடியேற்றி வைத்தார்கள். (எ-று)

10. தேங்கமழும் பூந்தொடையுஞ் சேரமணியும்நாற்றி
யாங்கணிரை வீதிதொறு மரம்பை கணிரைத்து
தீங்ககல வாடகமாங் குடத்தினொடு தீபம்
பாங்கினொடு பயிலுமட வார்பதி யினுற்றூர்.

(இ—ள்) வாசனை பொருந்திய புஷ்ப மாலைகளும், நவரத் தின சரங்களும் தெருக்கள்தோறும் பந்தல்களிற்கட்டி அந்தப் பந்தலில் தாறுடன் வாழைகள் கட்டி பூரண தங்கக்குடங்கள் வைத்து குத்துவிளக்குகள், தோரண விளக்குகள் பிரகாச மாக செய்வித்து வீதியில் பெண்கள் இருந்தார்கள். (எ-று)

11. பண்ணிசையி னுறரிய பாடல் புரிகீத
மெண்ணரிய வோசைகளு மெண்டிசையு மெய்த
மண்ணவர்க ணங்களொடு தெய்வமட வார்கள்
விண்ணவரு மேவமிக நெருங்கிவர மேலாய்.

(இ—ள்) பண்ணிசையினுலே பெண்கள் பாடிய கீதா ஞானத்தினுடைய சத்தங்கள் எட்டுத் திக்குகளிலும் செவிடுபட பூலோகத்தார், தெய்வப் பெண்கள், தேவர்கள் இவர்களெல் லாரும் மிகுதியும் நெருங்கி வந்தார்கள். (எ—று).

12. இவ்விதம் விளங்கு மமையத்தினி லியங்கும்
திவ்விய விளம்பிறைச் செழுஞ்சடையின் வைத்து
நவ்வியம் வெம்மைமழு நற்கையி னமைத்தே
அவ்விய மகன்றுள புலித்தோலரைக் கசைத்தே.

(இ—ள்) இப்படியாக இருக்கின்ற சமயத்திலே திவ்விய மான மூன்றாம் பிறையைச் சடையிலே தரித்துக்கொண்டு குற்ற மில்லாத வரிபொருந்திய புலித்தோலை யரையிலே கட்டிக் கொண்டு, மானையும், மழுவையும் கையில் வைத்துக்கொண்டு இருந்தார் திருக்குமரேசுரர். (எ-று).

13. இன்னண மலங்கிருத னாகியிறை யோனு
மன்ன மெனவே நடையி னம்பிகை யினோடு
நன்னகரை மேவி வலம்வந்து மிருநாளின்
மின்னொளிரு விமானமணி கோளரியின் வந்தார்.

(இ—ள்) இப்படி அலங்கிருதனாக இருந்த திருக்குமரே சுரரும் அன்னத்தைப்போலும் நடையையுடைய வீருமுலை அம்மனும் மகா மகிழ்ச்சியுடனே இரத்தின கேடகத்திலேறி, சத்திரசாமர, இடக்கிய, தோரண, வாத்திய, நாட்டிய, தூப தீப அலங்காரத்துடனே ஊர்வலமாக வந்தார் முதல்நாள். இரண்டாம் நாளில் மின்னற்போலும் பிரகாசிக்கின்ற இரத்தினச் சபைபோல மேற்கொண்ட சிங்கவாகனத்தின்மேல் பரமசிவ னும் ஏறியும். (எ—று)

14. ஆனபல வாகுஷினி லானைமுக னுஞ்சொற்
கானமயில் மீதினுயர் காங்கயனும் வந்தான்
ஞானமிகு மூன்றதெனு நாளிலுயர் பூதத்
தீனமகல் தேவர் தொழ வேறியரன் வந்தான்.

(இ—ள்) பலமான பெருச்சாளி வாகனத்தின் மேலே விக்கினேசுவரரும் புலமையுடையோர்களால் சொல்லப்பட்ட வனங்களில் சஞ்சரிக்கும் மயில்வாகனத்தின்மேலே குமார சுவாமியும் ஏறி வந்தார்கள். மூன்றாம் நாளில் பூதவாகனத் தின்மேலே பரமசிவன் எழுந்தருளினார். (எ-று)



15. திக்கிலுயர் நாகமதி னாலெனுந் தினத்தில்
லக்கணியு மைந்ததனி லமர்ந்தினி திருந்தான்
மிக்குயரு மைந்தெனும் விழாவி னிடபத்தின்
முக்கண னிவந்துமை மொழிந்திடவும் வந்தான்.

(இ—ள்) நாலாம் நாள் நாகவாகனத்தின் மேலே பரம சிவன் எழுந்தருளினார். ஐந்தாம்திருவிழாவில் மூன்றுகண்ணினை யுடைய பரமசிவன் ரிஷப வாகனத்தின்மேலே எழுந்தருளி னார். (எ—று)

16. காளமவிர் கண்டர்தின மாறினிற் யானை
நாளதன்மேல் வெண்கயிலை மீதினிலெண் ணாளின்
மீளவுமு லாவுபரி மீதினிலும் வென்றித்
தாளமுழவும் மதிரசாறும் வலம் வந்தார்.

இ—ள்) ஆலகால விஷத்தையுண்டதினால் நீலகண்டம் போலும் பிரகாசிக்கும் கண்டத்தையுடைய பரமசிவன் ஆறாந் திருவிழாவில் யானைவாகனத்தின்மேல் ஏறிவந்தார். ஏழாந் திருவிழாவில் கைலாச வாகனத்தில் எழுந்தருளினார். எட்டாம் திருவிழாவில் குதிரைவாகனத்தின்மேல் ஏறிவந்தார். அநேக வாத்திய கோஷத்துடனே (எ — று).

17. வேதமென லோதுபரி மீதுவலம் வந்த
நாதனவ னாளினில் இரதந்தனினி வந்தே
யாதவனெ முந்தபுவி யாமென விளங்கக்
கீதவிசை தும்புருமுன் னாரதரும் கிளர்த்த

(இ—ள்) நாலு வேதமும் குதிரையாக வரவும், அதை அவர் வாகனமாக எட்டாம் திருநாளில் ஏறி வந்து ஒன்பதாம் திருவிழாவில் சூரிய உதையமாகி அந்தகாரம் நீங்கிய பூலோகம் போலே இந்த எருக்கத்தம்புலியூர் அதிகப்பிரகாசமாய் விளங்க, இரதத்தின் மேலே யேறியபடி யாவரையும் ரக்ஷிக்க ஊர்வல மாக வந்தார் திருக்குமரேசுவரர். இப்படி வரும்போது தும்புரு நாரதர் வீணை வாசித்தார்கள். (எ-று).

(இ—ள்) வானநாட்டில் வாசமான தேவேந்திரன் முதலான தேவர்களும் தாமரைப்பூவில் எழுந்தருளிய பிரம்மாவும், விஷ்ணுவும், நாரதரும், மற்றமுள்ள முனிவர்களும், சித்த வித்தியாதரர்களும், கந்தர்வர்களும், மனுக்களும், பூலோகத்தார் முதலிய சகலரும் கந்த தீர்த்தத்தில் வந்து மூழ்கி வாசனை பொருந்திய கொன்றை மாலை தரித்த பரமசிவனையும் பார்வதி தேவியையும் வணங்கி தரிசனம் செய்து மகிழ்ச்சி அடைந்தார்கள். (எ-று).

24. அருமறை வல்ல வந்தணர் சூழ
வயிலுடைக் கடவுள் நீராடித்
திருமக ளன்னார் குழாந்தனின் வசந்தத்
திருவிழா நடத்தியு மீற்றிற்
பொருள்பல தானம் பத்துள கோடிப்
பொன்னுள வெள்ளி நூருன்
தருமமாங் கபிலை யாயிர விலக்கந்
தருமன தானமும் செய்தார்.

(இ—ள்) அரிதாகிய வேதபாராயணம் செய்த பிராமணர்கள் அநேகம்பேர் சூழ வேலாயுதம் கையிலே தரித்தருளிய திருக்குமரக் கடவுள் அந்த கந்த தீர்த்தத்தில் மூழ்கி லக்ஷிமி போலும் ரூப சவுந்தரியமுள்ள பெண்களுடன் வசந்த திருவிழா நடத்திப் பல பல பொருள் பத்து கோடிக்கு தானம் செய்து பொன்னும் வெள்ளியும் நூறு கோடி தானம் செய்து, கபிலைப் பசு ஆயிர லக்ஷம் தானம் செய்து அளவில்லாத அன்ன தானமும் செய்தார். (எ-று)

25. ஆறணி சடையா மம்பிகை தனக்கு
மாபர ணம்பல வணிந்தும்
பாறுலாம் வேலான் பணிந்தினி தெழுந்துங்
கையினைக் கூப்பியே பரவு
மேறுயர்த் தவனே யெந்தையே யெமனை
யுதைத்தவா புரமெரித் தவனே
நீறணி தோளாய் சங்கரா கௌரி
நாயகா நித்தனே சிவனே.



(இ—ள்) கங்கையைச் சடையிலே தரித்தருளிய திருக்குமரேசுரருக்கும் வீறுமுலை அம்மைக்கும் அநேக ஆபரணங்கள் தரித்தும், பருந்துகள் தன் குஞ்சுகளுடனே சுழன்று தொடர சூரன் முதலாகிய அசுரரை சங்கரித்து அவர்கள் சரீரம் தளர்ந்து. துன்னிய கூர்மையாகிய வேலாயுதத்தைக் கையிலே தரித்தருளிய குமாரசுவாமிக் கடவுள் வணங்கி எழுந்து அஞ்சலித்து ஸ்தோத்திரம் செய்கிறார். ரிஷபவாகனருடரே, எமது கர்த்தனே, காலனைக் காலினால் உதைத்தவரே, முப்புராதிகளை எரித்தவரே, விபூதி யணிந்தவரே, சங்கரா, கௌரிநாயகா, நித்திய கர்த்தனே என்று தோத்தரித்து பின்னும்;

26. தண்மதிக் கொழுந்துங் கங்கையுந் தரித்த
சடையவா நாக குண்டலனே
கண்ணுதல் மூர்த்திக் கரியுரி போர்த்த
தேவதேவே கறைக் கண்டா
விண்ணவர் பரவும் பாதனே கயிலை
வெற்பனே சூல பாணியனே
கண்ணிய சிந்தை யிலாதநற் றக்கன்
வேள்வியைக் கடிந்தவா சிவனே.

(இ—ள்) குளிர்ச்சியாகிய இளம்பிறைச் சந்திரனையும் கெங்கையையுந் தரித்த சடாதரனே, நாககுண்டலனே, நெற்றிக்கண்ணனே, யானையை யுரித்த தோலைப் போர்த்தருளிய மெய்பனே, தேவர்களுக் கெல்லாம் தேவனே, நீலகண்டனே, தேவர்கள் தோத்திரம் செய்த பாதாரவிந்த மூர்த்தியே கயிலாசகிரிவாசரே, சூலபாணியனே, குற்றம் பொருந்திய மனமுள்ள தக்கன் யாகத்தைக் குலைத்தவரே என்றும்;

27. மான்மழு வேந்தும் வரதனே தலையில்
மாலையைப் புனைந்தவுக் கிரனே
கானவிழ் கமலத் தவன்சிர மேந்துங்
கையனே கணங்கட்கு நாதா
தேனமர் கொன்றைச் செஞ்சடை யோனே
பசுபதி சிங்கவே றடர்த்தோய்
மீனகேதனனை விழித்தவா மேரு வில்லியே
யுதாரியே சிவனே.

3. அந்த நற்றலப் பேர்புலி யூரென
வந்த வாறு வகுத்துரை யென்றதாற்
சந்த மார்க்கும ரேசர் சரணிலே
முந்து மன்பினுக் கொப்பவ ரிலையால்.

(இ—ள்) இத்தலத்திற்குப் புலியூர் என்று வந்த கதையைச் சொல்லவேண்டும் என்று கேட்டபடியினலே குமரேசர் பாதத்தில் மிக்க அன்புடைய உங்களுக்கு ஒப்பு இவ்வுலகில் இல்லை என்று சொன்னர். (எ-று).

4. எனநல் லன்போ டியம்பி வெண்ணெய்க்
கனலி லிட்ட தெனவுங் கரைந்து
புனல்மெய் சொரிந்து ரோமம் பொடிப்ப
மனதி லெண்ணியே சூதர் சொல்லுவார்.

(இ—ள்) இப்படியாக அன்புடனே சொல்லி பின்னும் அக்கினியிலே வைத்த வெண்ணெய்போல மனங்கரைந்து ஆனந்தநீர் கண்ணிலே பெருக சரீரத்திலுள்ள ரோமம் புளகிதமாகிச் சொல்லுகிருர். (எ-று).

5. விந்தை வெற்பின் மேற்கிரண் டியோசனைக்
கந்தத் தமைந்த கேதா ரமாம்பதி
யிந்திரன் பதியென இணையிலாச் செல்வமும்
தந்திடு தனமொடு தானியம் நண்ணுமே.

(இ—ள்) விந்த பர்வதத்திற்கு மேற்கே இரண்டு யோசனைக்கு அந்தத்தில் திருக்கேதார மென்னும் பட்டணம். அது செல்வத்திலேயும் தனதானிய வர்த்தனையிலும் தேவேந்திரனுடைய அமராவதி பட்டணம் போலே மிகச் சிறப்பு பொருந்தியது (எ-று.

6. கற்பக மேயென கைதனைக் கொண்டவர்
பொற்பிற் காம னிரதியைப் போல்பவர்
சிற்குணச் சீலரென் றெவரும் செப்பவே
பொற்குணத் தேவ ரதிதிபூ சிப்பவர்.



(இ—ள்) அப்பட்டணத்தில் இருக்கின்றவர்கள் கொடுப்பதில் கற்பக விருக்ஷத்தைப் போலவும், அழகிலே இரதி மன்மதனைப் போலவும், ஞானத்திலே மகா தவசிகளைப் போன்றும் இருக்கும் குணமுள்ளவர்களும், தினம் தேவ, பிதுர், அதிதி பூசனை செய்பவர்களுமாவர். (எ-று).

7. துய்ய வேள்வித் தொழிலோர் பிதிர்கட்குஞ்
செய்யத் தக்கன பூசனை செய்குவோர்
மெய்ய ரேற்பவரின்றி வேளாண் மையிற்
பைய்ய சீவனம் பண்ணுங் கருத்தினர்.

(இ—ள்) பிராமணர்கள் ஆசாரசீலராய் யாகம் முதலியன செய்பவர்கள். பிதிரர்க்குக் கடன்களும், சிவபூசையும் செய்பவர்கள். மெய் பேசுபவர்கள். யாசிப்பவர்கள் அவ்வூரில் கிடையாது. வேளாளர் வேளாண்மை செய்து ஜீவிப்பவர்கள், யாசிப்பவர்கள் இல்லையே என வருத்தமுறுபவர்களாகவும் இருந்தனர். (எ-று).

8. கருதி வேதமு மங்கமுங் கற்றிடும்
பெரியர் நான்காச் சிரமத்திற் பெற்றியோ
ருரிய நற்சிவ புண்ணியத் துண்மையைப்
புரிகுவோர் புரந்தனின் மேவு வோர்.

(இ—ள்) நான்கு வேதமும் ஆறுசாஸ்திரமும் நன்ருகத் தெளிந்து சந்நியாசத்தைப் பெற்றிருக்கும் பெரியவர்கள், வேதாந்தத்தைப் படித்துக் கொண்டிருக்கும் கிரகஸ்தர்களுக்கு சிவபுண்ணியங்களை உபதேசம் செய்து கொண்டிருப்பார்கள். (எ-று).

9. அந்நக ரத்தி னந்தணர் தங்களிற்
சின்மயந் தெளி தீர்க்க தெரிசனன்
பன்னி பெற்றிடு பாலன் சுவேதனு
முன்னும் விஞ்சையி லோங்குங் கருத்துளான்.

(இ—ள்) இப்பட்டணத்தில் பிராமண குலத்தில் வேதாந்த நிபுணனுகி சின்மய நிலை தெளிந்த தீர்க்க தெரிசனன் என்

18 வானின்மட வார்கணட மாடவுயர் தேவர்
கானவிசை வேதவொலி பல்லியங் கறங்க
ஞானமுனி வோர்மகிழ வானநில மேவும்
ஏனைய சராசரமு மெய்தி யெதிர்காண.

(இ—ள்) தெய்வப் பெண்கள் நாட்டியம் செய்ய, தேவர்கள் வேதங்கள் இசையுடனே ஓத, வேத வாத்தியம் முழங்க, முனீஸ்வரர்களெல்லோரும் வந்து சேவிக்க, பூமி ஆகாசம் இதிலுள்ள தீர்த்தங்கள் மற்றுமுள்ள சராசரங்களும் வந்து தெரிசனம் செய்தார்கள். (எ-று).

19. ஐந்துகரு வித்திரள் திறந்தொலி கலிப்பக்
கந்தமலர் கொண்டமரர் கைதொழுது நிற்ப
விந்துமுக வம்பிகையோ டீசன்வலம் வந்தே
மைந்தினுயர் மிக்கவணி மாடமதி னுற்றார்.

(இ-ள்) பஞ்ச வாத்தியங்கள் முழங்க தேவர்கள் புஷ்ப மாரி பொழிய சந்திரனைப் போலும் முகமுள்ள வீருமுலை அம்மனும் திருக்குமரேசுவர சுவாமியும் வலமாக வந்து மேகமண்டலம் மட்டும் உயர்ந்த அழகு பொருந்திய கோவிலிலே வந்து எழுந்தருளினார்கள். (எ-று)

20. தேங்கனிசெம் பாகுதயிர் தோசைபணி யார
மாங்கணிறை வாகவுநை வேதனம ளித்தும்
பாங்கினட வோசையொடு பாடல்செய் வட்ட
மோங்குகவ ரித்திரளு லாவவினி துற்றார்.

(இ—ள்) தேன் பொருந்திய தித்திப்பு மிகுந்த வாழைப் பழம், பலாப்பழம், மாம்பழம், பாகு, தயிர், தோசை, பணியாரம் கும்பல் கும்பலாகக் கொட்டி நிவேதனம் செய்து மத்தள தாளம் சப்திக்க, நாட்டியமாட, பாடுபவர்பாட, ஆலவட்டம்வீச, வெண்சாமரம்போட, திருக்குமரேசுரர் இருந்தார். (எ-று).

21. வாசமலர் சந்தனதாம் பூலவகை யெல்லா
மீசனுப சாரமோ டியற்றி யேகுகின்றார்



ஆசைமிக வெண்வகையி னங்கவகை தாழ்ந்து
மேசற மகிழ்ச்சியிற் பொலிந்தினி திருந்தான்.

(இ—ள்) வாசனை பொருந்திய சந்தனம், புஷ்பங்கள், தாம்பூலம் இந்த வகைகளெல்லாம் உபசாரம் செய்து அஷ்டாங்க விதமாகத்தொழுது சகலரும் நிறைந்திருக்க மகிழ்ச்சியுடனிருந்தார் திருக்குமரக் கடவுள். (எ-று).

22. சகத்துளோர் புகழு மெருக்கத்தம் புலியூர்
சிவன்றனை யையிரு நாளின்
மகத்தினி லிடப வோரையின் மலையான்
மகளொடுங் கந்ததீர்த் தஞ்சூழ்
புகழ்ச்சிசெய் வித்தரன் மண்டபந்தன்னிற்
போந்துநற் புண்ணிய மூர்த்தி
மிகுத்திட நன்மை தீர்த்த நல்குதலும்
நதியெலா மதனின் மேவியவே.

(இ—ள்) இப்பூவுலகில் தபோதனர்கள் ஸ்தோத்திரம் செய்யும் எருக்கத்தம்புலியூரில் வாசமாக எழுந்தருளி இருக்கும் பரமசிவனை பத்தாம் நாள் மக நக்ஷத்திரத்தில் இடபலக்கினத்தில் பர்வதராச புத்திரியான பார்வதி தேவியுடனும் எழுந்தருளச் செய்தார்கள். அத்திருக் குமரேசுரர் கந்த தீர்த்தஞ் சூழ்ந்த விதமான மண்டபத்திலிருந்து மிகுந்த நன்மைகள் அடியார்களுக்கு உண்டாக தீர்த்தம் கொடுத்தார். அப்பொழுது சகல நதிகளும் தங்களுக்குப் பரிசுத்தமும் வேண்டிய வரங்களும் உண்டாக இந்த கந்த தீர்த்தத்தில் வந்தன. (எ-று).

23. வானவுட் டமரரு மிந்திரன் முதலோர்
மலருறை யந்தணன் மாயன்
றேனகு வீணை முனிவனே முதலோர்
சித்தர் சத்தியர் கந்தருவர்
மானவ மாமன் முதலுளோர் கந்த
தீர்த்தமு மருவி நீராடி
கானவிழ் கொன்றைக் கண்ணியோன் றன்னைக்
கவுரியைப் பணிந்தனர் களித்தார்.

(இ—ள்) அன்புடனே குமாரசுவாமிக் கடவுள் இப்படியாகக் கேட்டவுடன் பரமசிவன், முன்னமும் இப்படியே வழங்கி வந்தது. நீ கேட்டபடியினாலே பின்னும் அதற்கு அதிகமாகச் சிறப்பைக் கொடுத்தோம் என்று இனிய வார்த்தை சொல்லி இருந்தார். (எ-று).

33. கருவிகளைந் தொலித்திடவே கணநாதர் சேவிப்ப
பருவரையன் மகளுடனே பரிசனமும் மிகச்சூழப்
புரியைவலங் கொண்டழகா யெருக்கத்தம் புலியூரி
லருள்வடிவா யினிதிருந்தா ரனவரதம் விளங்கிடவே.

(இ—ள்) பஞ்சவாத்தியங்களும் முழங்க கணநாதர் சேவிக்க பர்வதராஜ புத்திரியாகிய பார்வதி தேவியுடனே அநேகம் பரிஜனங்கள் சூழ நமரபுரியாகிய எருக்கத்தம்புலியூரை வலமாக வந்து வேண்டிய வரங்களை அடியார்களுக்குக் கொடுக்க கருணையே வடிவாக கோவிலில் வந்து எழுந்தருளி இருந்தார் திருக்குமரேசுவரர். (எ-று).

34. அவிர்சோதி எனப்புயங்க ளாறிரண்டு முகமாறு
மெவர்களுங்கண் டுடன் மகிழவீன்றதாய் தந்தை
[யொடு
தவர்வடிவா யுடனெய்த விமானத்திற் றனெழுந்தே
யுவமையிலாக் கந்தவரை யுற்றனர்மண் ணவர்
[தொழுவே.

(இ—ள்) பிரகாசம் பொருந்திய அதிக ஜோதிமயமாகிய ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாக சகல ஜனங்களும் தரிசனம் செய்ய சிவசன்மாவும் தந்தையாகிய பிரமதத்தனும் மனுசூயையும் தெய்வவடிவாக விமானத்தின்மே லேறிக்கொண்டு தேவர்கள் கண்டு சேவிக்க கந்த பருவதத்திலே போய் எழுந்தருளினார் குமாரசுவாமிக் கடவுள். (எ-று).

35. சொலற் கரிதா மிச்சரிதஞ் சொன்னவருங் கேட்ட
[வரும்
விலக்கரிய தீவினையும் விட்டகல நீடுலகிற்



றுலக்கமுற வாழ்வெய்திப் புகழ்நிறுத்தி சுகவடிவாய்ப்
பலத்திடமாஞ் சிவபதத்தைப் பண்ணவர் போற்றிட
[வாழ்வார்.

(இ—ள்) சொல்லுதற்கரிதாகிய இந்தக் கதையை சொன்னவரும், கேட்டவரும் நீங்குதற்கரிய தீவினைகளெல்லாம் நீங்கி பூலோகத்தில் அதிக வாழ்வு பெற்று கீர்த்தியை நிறுத்தி சுகவடிவாக சிவபதத்தைச் சேர்வார்கள் என்று நைமிசாரண்ய முனிவர்களுக்கு சூதர் சொன்னார். (எ-று).

திருவிழாச் சருக்கம் முற்றும்.

## எட்டாவது சுவேதச் சருக்கம்.

1. இந்த நன்னக ருக்கயி லேந்திய
கந்த னார்கும ரேசக் கனப்பெயர்
வந்த தென்னிற் புலியூ ரெனவர
லெந்த வாறிதற் கெய்திய தோதுவாம்.

(இ—ள்) இந்த நன்மையாகிய ஸ்தலத்திற்கு வேலாயுதத்தைக் கையிலே தரித்தருளிய குமரேசர் கேட்டுக்கொண்ட வரத்தினாலே குமரேசுவரம் என்று பெயர் உண்டாயிற்று என்றார். புலியூர் என்ற பெயர்வரக் காரணம் என்ன? அதையும் எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நைமிசாரண்ய முனிவர்கள் கேட்டார்கள். (எ-று).

2. எனநல் லன்பொடு சூதரை யேத்தியே
வினவ மிக்க சவுன காதியோர்க்
கனகர் சொன்னதை யுன்னியா னந்த
நினைவைக் கொண்டும் நிறைந்திடக் கூறுவார்.

(இ—ள்) இவ்வாறு சூதமகரிஷியைக் கேட்க மிக்க பேரறிவுள்ள சவுனகாதியர்களுக்கு அனகரிஷி சொன்னதை நினைந்து சூதமகாரிஷி ஆனந்த நினைவுடன் பரிபூரணமாகக் கூறுவர். (எ-று).

(இ—ள்) தாமரைப் பூவில் வாசமாக விருந்த பிர்ம்மாவும், தாமரைப் பூப்போலும் கண்ணிணையுடைய விஷ்ணுவும், மதுர மான சகல சாஸ்திர வல்லராகிய முனீஸ்வரர்களும், சகல தேவர்களும், சித்தரும், ஒரு காலங்களிலும் மாருத வேதமும், பஞ்சாட்சரமே பரமென்று சொல்லிய அஞ்செழுத்தை மனதிலே தியானம் செய்வான். (எ-று .

17. கதிரவ னெழுதன்முன் கடலில் வீழ்தன்முன்
விதிமுறை யருக்கிய மேவச் செய்பவ
னதிதி பூசனை புரிந் தகமே மகிழ்ந்துளோன்
பிதுர்தருப் பணமே பெட்பி னாற்றுவோன்.

(இ—ள்) சூரிய உதையத்திற்கு முன்னும் அஸ்தமன காலத்திற்கு முன்னும் விதிப்படி அர்க்கியம் கொடுப்பவன் அதிதிகளுக்கு தினம் பூஜை செய்து அன்னம் கொடுப்பவன். பிதுர்களைக் குறித்து தர்ப்பணம் செய்பவன். (எ-று).

18. அலைபுனற் புணரியி னன்பின் மூழ்கியும்
நிலைசெய வெண்ணீ றுடனிரம் பப்பூசியு
மலைவறு கண்மணி மாலைதூக் கியுஞ்
சிலைவிலான் பூசனை தினமுஞ் செய்பவன்.

(இ—ள்) அலைபொருந்திய ஜலத்தில் உதய காலத்தில் குளித்து நிலமையான முத்தியைக் கொடுக்கும் விபூதி தரித்து உருத்திராக்கம் அணிந்து மலையை வில்லாக வளைத்த பரம சிவனை தினமும் பூசிப்பான்.

19. சீற்றமுங் குறளையுந் தீய வஞ்சனைத்
தோற்றமும் பிறர்மனை விழையாத் தூயவன்
மாற்றிகழ் பொய்மையும் வயிரமு நல்லோர்
போற்றவு மிவை யெலா சிந்தையான்,

(இ—ள்) கோபமும், கோள்சொல்லுதல்முதலானவையும், பொய்யும், வஞ்சனையும், பிறர் மனைவியின் மேல் ஆசையும், அனுச்சாரமும், பெருமையைக் கெடுக்கும் செயலும், வயிரமும் ஒருகாலும் நினையாமல் இருக்கும் நடத்தையைக் கண்டு பெரியோர்களால் புகழப்பட்ட குணமுள்ளவன். (எ-று).



20. தரும சீலத்தின் தன்மையை யறிந்துளோன்
ஒருமை யிந்திய நோன்பிலாச் செய்சிவ
வுருவை சிந்தித் துவக்கும் வணக்கத்தோ
னரிய தீர்த்தங் களாடப் புறப்பட்டான்.

(இ—ள்) தருமத்தினுடைய நிலைமையை நன்றாய் அறிந்தவன். பஞ்சேந்திரியங்கள் வழியாக மனதைச் செலுத்தாதவன். சிவனுடைய சொரூபத்தை மனதிலே தியானிப்பவன். இவ்வாறான சுவேதன் என்னும் பிராம்மணன் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டான். (எ-று).

21. செகம் புகழ் செகன்னாதந் தெரிசித்து
மகிழ்ந் துமேதிருக் காளத்தி வாழ்த்தியுந்
திகழ்ந்த காஞ்சி யேகாம்பரர் தேவியைப்
புகழ்ந்து மாவலிப் பொற்புறத் தெய்தினன்.

(இ-ள்) இப்படிப் புறப்பட்ட சுவேதன் செகன்னாதத் தலம் வந்து பகவானை தெரிசனம் செய்து மகிழ்ச்சியுடனே, திருக்காளத்தி நாதரை தெரிசித்து வணங்கி, காஞ்சீபுரம் அடைந்து ஏகாம்பரேசுவரரையும் காமாட்சி அம்மனையும் தெரிசித்து வணங்கி மகாபலிபுரம் வந்து தெரிசனம் செய்தான். (எ-று).

22. திருமறை வனஞ் சேர்ந்து வழுத்தியுங்
கருமிடற் றோன்சிதம் பரங்கண் டூற்று
மருவி னோர்க்கு நிதிகள் வழங்கியு
மருவி நற்றல மன்பினிற் போற்றியே.

(இ—ள்) அப்பால் திருமறைக்காடு வந்து தெரிசனம் செய்து பின் நீலகண்டரான சிதம்பரநாதர் வாசம் புரியும் சிதம்பரத்தை தெரிசித்து, தில்லை மூவாயிர பிராம்மணர்களுக்கும், அதிதிகளுக்கும் வேண்டிய பொருள்களை வழங்கியும் அப்பாலுள்ள அநேக புண்ணிய ஸ்தலங்களை தரிசனஞ் செய்து துதித்தும். (எ-று).

றொரு அந்தணனுடைய மனைவி சுவேதன் என்றொரு மகவைப் பெற்றாள். அவன் வளர்ந்து கல்வியை அதிகச் சிறப்புடன் கற்று வந்தான். (எ-று).

10. காட்டுமைம் புலனையுங் கரண னான்கையும்
நீட்டு மத்துறை நிறுத்து கின்றவன்
வாட்டனை நிகர்விழி நல்லார் கண்மேற்
பூட்டிடா வறிவுளன் பொறை யிலொப்பிலான்.

(இ—ள்) அந்த சுவேதன் ஐம்புலாதிகளையும், அந்தக் கரணம் நான்கினையும் அந்தத் துறையிலே நிறுத்திய சமர்த்தன். வாள்போன்ற கண்களையுடைய பெண்களிடம் இச்சையை ஒழித்தவன். பொறுமையில் ஒருவருக்கும் ஒப்பில்லாதவன். (எ-று).

11. இம்மையு மறுமையு மெழில் கொடுத்திடுஞ்
செம்மைசேர் வேள்விகள் செய்யு மன்புளான்
வம்மினென் றமரரை மறையினா லழைத்தே
அம்மலென் றவிர்ப்பதம் அளிக்கு மாற்றலான்.

(இ—ள்) இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே மோட்சமும் கொடுக்கின்ற யாகத்தைச் செய்யும் அன்புள்ளவன். அப்படிச் செய்யும் யாகத்தில் வேதமந்திரத்தினாலே தேவர்களை யழைத்து அவிர்ப்பாகங் கொடுக்கும் பெருமையை யுடையவன். (எ-று).

12. மண்டிரை புன்றழல் வாயுக் காயமும்
விண்டலத் திரவியும் விதுவுமி யாவையும்
மண்டியு மண்டிடா விதமு மாகிய
வொண்டவப் பொருளினை யுணருஞ் சிந்தையான்.

(இ—ள்) பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம், சூரியன், சந்திரன் தனியே நின்ற சீவன் இவைகளெல்லாம் மண்டியும் மண்டாமலிருக்கும் தத்துவத்துக்குப் பொருளாகிய வஸ்துவை யறிந்த சிந்தையுள்ளவன்- (எ-று).



13. அருக்கனை நமஸ்கரித் தாயுஞ் சிந்தையான்
மருக்கொளா மலரிட்டு வலம் புரிந்துளோ
னிருக்கொடு வேதமோர் நான்குமின் சொனூல்
வருக்கமுங் கற்றின மகிழும் வாஞ்சையான்.

(இ—ள்) சூரிய நமஸ்காரம் செய்து நல்ல புஷ்பங்கள் கொண்டுவந்து அர்ச்சனை செய்தும் சிவதரிசனம் செய்து கோவிலை பிரதக்ஷணம் வந்து ருக்வேத முதல் நான்கு வேதமும் எல்லா நூல்களும் ஓதி மகிழும் ஆசை யுள்ளவன். (எ-று).

14. யாகமனைத் தையு மாய்ந்து கண்டவன்
பாகெனப் புராணமும் பண்பிற் கற்றவன்
கோகனகப் பதக் குரவன் சொல்லிய
வேக காயத்திரி யேத்து நாவினன்.

(இ—ள்) இருபத்தெட்டு யாகமும் ஆராய்ந்து கரைகண்டவன். பதினெண் புராணமும் விசாரணை செய்தவன். தாமரைப்பூப்போலும் சிவந்த பாதமுள்ள குருவுபதேசமாகிய காயத்திரியை மறவாத நாவை உடையவன். (எ-று).

15. முத்தழல் வளர்ப்பவன் மோன ஞானியா
யெத்திறம் வேண்டினு மினிதிற் செய்பவன்
சுத்தமா னதிகளிற் றோய்ந்து நன்குற
வத்தலத்திடை தவமாற்று மாண் புளான்.

(இ—ள்) மூன்று காலமும் அக்கினி வளர்ப்பவன். மவுனியான ஞானவான்களுக்கு எது வேண்டினும் கொடுப்பவன். மகா தீர்த்தங்களிலும், நதிகளிலும் மூழ்கி அங்கங்கு இருந்து தவம் செய்பவன்.

16. கஞ்சமுன் விரிஞ்சனுங் கமலக் கண்ணனுஞ்
செஞ்சொலில் முனிவருந் தேவர் சித்தரும்
மெஞ்சலில் வேதமு மியம்பிடு மெழுத்த
தஞ்சமே பரமென வகத்தி னுன்னுவான்.

23. பொற்க ணனுயிர் போக்கியே பூமியை
முற்படி தந்த வன்திரு முட்டத்தி
னற்பி னித்திய தீர்த்தத்தி னுடியுந்
தற்பரன் பெருந் தேவியைத் தாழ்ந்துமே.

(இ—ள்) பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு பாதாள லோகத்திற்குப் போன இரணியாக்ஷனைக் கொன்று மறுபடியும் பூமியை எடுத்து வந்து விரித்து நிறுத்தியவராக க்ஷேத்திரமான திருமுட்டத்தில் நித்திய தீர்த்தத்தில் மூழ்கி நித்தியேசுவரரையும் அம்பிகையையும் வணங்கினுன்.

24. கள்ள விழ்துழா யாதி வராகனை
தெள்ளித் தேத்தி தெரிசனஞ் செய்துபோய்
வெள்ளா ருடி யுதையத்தின் மேலுச்சி
யுள்ளால் கந்த தீர்த்தமுற் ருடினுன்.

(இ—ள்) கள்ளாகிய தேன்வழிந் தொழுகும் துளசி மாலையை யணிந்த ஆதிகேசவரைத் தோத்திரம் செய்து பிறகு. வெள்ளாற்றிலே சென்று மூழ்கி உதையத்திற்கு மேலாய் உச்சிக்குள் செங்கமலர் நிறைந்த கந்ததீர்த்தத்தில் வந்து மூழ்கினுன். (எ-று).

25. கந்த தீர்த்தக் கரையிற் பிதிர்பிண்ட
மந்தண னல்கிடு போதி னவன்குல
முந்தை யோர்கள் பரம முனிவராய்
வந்துகைக் கொண்டு வாங்கியிவை சொல்லுவார்.

(இ—ள்) இக்கந்த தீர்த்தக் கரையில் சுவேதன் பிதுர் பிண்டம் கொடுத்தான். கொடுத்த உடனே அவன் குலத்திலுள்ள பிதிர்க்கள் பரம முனிவராய் வந்து வாங்கிக்கொண்டு சொல்லுகிருர்.

26. முருக னுண்டாக்குந் தீர்த்த
மொழியினுற் சொன்ன போதே
பிரம்ம பாதகங்க ணீங்கி
பிரமன்றன் பதமுண் டாகும்



பெருகுமித் தடத்திற் ருேய்ந்தார்
பலத்திடுஞ் செல்வ மோங்கிப்
பரவையிற் படுக்குஞ் சங்க
பாணியன் பதத்தைச் சேர்வார்.

(இ—ள்) முருகன் உண்டாக்கிய தீர்த்தப் பெருமையை வாயினுலே சொன்னவர்களுக்கு சொன்னபோதே பிரம்மகத்தி தோஷம் நீங்கி பிரமபதத்தை அடைவார்கள். இத்தீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்கு மிக்க செல்வம் உண்டாகி பூமியில் வாழ்ந்திருந்து கடலில் பள்ளி கொள்ளும் சங்க பாணியான விஷ்ணு பதத்தை அடைவார்கள். (எ-று).

27. ஒருதுளி தீர்த்தங் கொண்டா
லுலகமோர் குடைக்கீ ழாள்வா
னிருதுளி கொண்டா னுகி
லிமையவ ருலகை யாள்வான்
பெருகுமுத் துளியே கொண்டாற்
பிரமன்றன் னுலகை யாள்வான்
வருதுளி நாலே கொண்டால்
வரகதி வகுக்க லாமோ.

(இ—ள்) இந்த தீர்த்தத்திலே ஒருதுளி யுட்கொண்டால் உலகத்தை ஒருகுடைக்கீழாள்வான். இரண்டு துளிகொண்டால் தேவர் உலகத்தை யாள்வான். மூன்று துளி கொண்டால் பிரமலோகம் ஆள்வான். நாலு துளி கொண்டால் அவர் பெறும் பேறு நம்மால் சொல்ல முடியாது. (எ-று).

28. இத்தடத் தீர்த்தம் தோய்ந்தோர்
ரெழில்துளி யுடம்பிற் பட்டால்
முற்றிய வியாதி யெல்லாம்
முறிந்திடு மணிமா வாதி
சித்தி களெல்லாம் வந்து
சேர்ந்திடு மரண நோயும்
சத்துவ மிலாமற் ரூந்தந்
தானு மாற்றிடுமா மன்றே.

34. பத்தி யாகப் பணிந்து வெள்ளாற்றினி
லுத்தர முகஞ்செல் விடத்துற் றன்பினல்
வித்தக னினிதாடி வியன் றவ
மத்த லத்தி னுற்றேசெய் வதாயினன்.

(இ—ள்) இவ்வாறு தெரிசனம் செய்து பரமசிவனை வணங்கி யெழுந்து வெள்ளாற்றிலே உத்தரவாகினியாகப் போகின்ற விதத்தில் குமாரபுரிக்கு உத்தர திக்கில் மகாபக்தி யுடனே சுவேதனகிய அந்தணன் சென்று அன்புடனே ஸ்நாநாடி அத்தலத்தில் தவம்செய்யத் தொடங்கினன். (எ-று).

35. மாசிலாத மகரந் துலா முயர்
காசில் கார்த்திகை மாதமுங் காலமே
யாசிலா னுத்தர மாநதி யாடியும்
பேசுங் கந்தப் புனலும்பின் னுடுவான்.

(இ—ள்) குற்றங்களைத் தீர்த்து நன்மையைக் கொடுக்கும் தைமாதம், ஐப்பசிமாதம், பாவங்களைப் போக்கும் கார்த்திகை மாதம் இம்மூன்று மாதமும் காலையில் சூரிய உதையத்துக்கு முன் சுவேத நதி என்று முனீஸ்வரர்களால் சொல்லப்பட்ட வெள்ளாற்றில் மூழ்கிப் பின்பு வந்து கந்த தீர்த்தமாடுவான். (எ-று).

36. முக்க ணனு முதல்வியுஞ் சேர்விடம்
புக்கும் போற்றி வலங்கொண்டு புண்ணியன்
தெக்கண முகமூர்த்தி முனஞ் செப
மக்க மாலை யினற்பண் ணினனரோ.

(இ—ள்) சந்திரன், சூரியன், அக்கினி இவைகளை மூன்று கண்ணகப் படைத்த சர்வலோக கர்த்தனை பரமசிவனையும் சகல லோகத்திலுமுள்ள அண்டபிண்ட சசாசரங்கள் அனைத்தையும் பெற்றும் கன்னிகைப் பருவமுள்ள இளமுலையாகிய விருமுலை அம்மனையும் கோவிலிலே போய்த்தரிசனம் செய்து தருமார்த்த காமிய மோக்ஷங்களையும் சனகாதி முனிவரர்களுக்கு உபதேசம் பண்ணி தக்ஷிண முகமாய் இருந்துள்ள தக்ஷிணமூர்த்தியை தெரிசனம் செய்து அவர் சன்னிதி முன் ருத்திராக்க மாலையினலே பஞ்சாட்சர ஜபம் செய்தான்.



37. அன்ன தானமுதற் பலதானந் தான்
மின்னுஞ் செஞ்சடை வேதிய னூர்தின
முன்னிச் செய்பவன் மைந்தர் முதற்செல்வ
மென்ன வேண்டி யதியாவையு மெய்துவார்.

(இ—ள் அன்னதானம், சொர்னதானம், வஸ்திர தானம், பூதானம் கோதானம் இவை முதலான தானங்களை எல்லாம் சிவந்த ஜெடாதரரான திருக்குமரேசுரர் இருக்கும் குமராபுரியிலே செய்தவர்களுக்கு புத்திர பௌத்திரர்களும் வஸ்திராதி பூஷணங்கள் எல்லாம் எவைவேண்டினும்கைகூடும். (எ-று).

38. எத்தலங் குமரேசர் புரத்தி னுக்
கொத்த தென்னவு மோதிய சூதனை
வித்தக னினிமெய்த் தவஞ் செய்தமை
யுத்தம வுரை யென்னவுரை செய்வான்.

(இ—ள்) இப்படி மனதிலே நினைக்க வேண்டியவெல் லாம் கைகூடும். குமாரபுரிக்குச் சமானமாகிய ஸ்தலம் இந்தப் பூவுலகில் உண்டோ? இல்லை என்று சொல்லிய சூதரைப் பார்த்து சகல விற்பன்ன விவேகமுள்ள சுவேதன் செய்த தவத்தைத் திருவுளம் பற்ற வேண்டுமென்று கேட்ட முனீஸ்வரர்களுக்குச் சொல்லுகிறார். (எ-று).

சுவேதச் சருக்கம் முற்றும்.

---

## ஒன்பதாவது சுவேதன் தவச் சருக்கம்

1. இயலார்தரு மெருக்கின்புவி யூர்மேற்கிரு கடிகைக்
கயலார்தரும் வெள்ளாற்றின் கரையில்முனி
[வோர்கள்
பயிலாதவ மகமாமிவை படித்தேய யவண்வைகப்
புயலார்வளம் பொழிலொன்று பொருந்தும்படி
[வைத்தான்

(இ—ள்) இந்த தீர்த்தத்திலே மூழ்கினவர்களின் மேலே இருக்கும் ஜலத்துளி யாரொருவர் மேல் பட்டதோ அவர் சரீரத்திலே முதிர்ந்த வியாதியும் அகன்றுவிடும். அணிமா முதலாகிய அஷ்டமா சித்திகளெல்லாம் வரும்- மரணமான வியாதியும் பலம் அற்று ஒருக்காலும் இல்லாமற் போய்விடும். (எ-று).

29. முருகனுர் செய்த தீர்த்த
முழுகுதற் கடியை வைத்தால்
பிரமபாதக நோய்க் கெல்லாம்
பிரளய விடியை வைத்தான்
அருகிய அன்பினுலே யாசையா
யொருக்காற் ருேய்ந் தான்
பெருகிய பிரமானந்தப் பெருக்கினில்
முடியத் தோய்ந் தார்.

(இ—ள்) கந்தசுவாமியினுல் உண்டான தீர்த்தத்தில் முழுக வேண்டுமென்று எத்தனை தூரங்களிலே இருந்தவர்களாகிலும் இத்தீர்த்த மகிமையைக் கேட்டு ஒரு அடி எடுத்து வைத்தவன் பிரம்மபாதகம் மூதலான சகல வியாதிக்கெல்லாம் பிரளயகால இடியை வைத்தவனுவன். அன்பினுலே மிகுந்த ஆசையுடனே மூழ்கினவர்கள் பேரானந்தக் கடலிலே மூழ்கினவராவார்கள். (எ-று).

30. ஒருசொவிற் றேவராச போக முற்றிடு முணர்ந்து
பெருகிய முனிவரான பேரும் நற்செல்வந் தன்னில்
மருவியே யிருந்த பேரும் வண்டமிழ்க் கற்றபேரு
முருக னுண்டாக்குந் தீர்த்த மூழ்கின பேர்களன்றே.

(இ – ள்) இந்த கந்த தீர்த்த மகிமையை ஒருதரம் சொன்னவருக்கு தேவராச போக முண்டாகும். இந்த தீர்த்தத்திலே மூழ்கி முனிவரானவர்களும், மிக்க செல்வமுடையரானவர்களும், வித்வான்களாக ஆனவர்களும் எண்ணிக்கை யற்றவர்களாவார். (எ-று)

31. பூமி யாகாசத்துள்ள புண்ணிய நதிகளெல்லாம்
மேமமாயிருக்க நோக்கி யிறைஞ்சிடுஞ் சரவணத்துள்



நாமமோ டாறு முகனென னளிறயில் பாணியானேன்
தூய்மையா மிந்தத் தீர்த்தத் துளடங்கின வெனிற்
[சொல்வார்யார்.

(இ—ள்) இவ்வுலகில் உள்ள நதிகளும், மேலுலகத்திலுள்ள நதிகளும், பரிசுத்தமான தீர்த்தங்கள் முதலானவைகள் எல்லாம் மற்றும் பரிசுத்தமாகி முக்கியத்துவம் உண்டாகும் பொருட்டாக வந்து நமஸ்கரித்து சிலாக்கியம் பெறப்பட்ட கிருபையை அளிக்கும் சரவணப் பொய்கையிலே ஆறு முகமும் பன்னிரண்டு கையுமாக உற்பத்தியாகி வேலாயுதத்தைக் கையிலே தரித்தருளிய குமாரசுவாமிக் கடவுள் தம[illegible] யுதத்தால் உண்டாக்கிய தீர்த்தமாகையால் அப்பெருமையை எவர்களாலும் சொல்ல முடியாது. (எ-று).

32. ஒப்பில் தீர்த்தக் கரையி னுவப்பிபொடு
தப்பிலாமற் றருப்ப ணஞ்செய் ததாற்
றிப்பிய வுருவாய் வந்து சேர்ந்தன
மிப்படி யிந்தச் திர்த்தத்தின் மேன்மையே.

(இ—ள்) இப்படி ஒப்பில்லாத தீர்த்தக் கரையிலே சந்தோஷத்துடனே தர்ப்பணஞ் செய்த படியாலே திவ்வியருபம் எங்களுக்கு வந்து கிடைத்தது. ஆதலின் இந்தத் தீர்த்தத்தின் மகிமை மகா விசேஷமானது. (எ-று).

33. அன்பிற் றீர்த்தஞ் சுவேதர்க் கறிவித்துத்
தென்புலத் தோர்சிவ பதத்தெய் தலும்
மின்பமா மித் தலத்துக் கிணையிலை
யென்பதுங் கண்டிறையைத் தெரிசித் தான்.

(இ—ள்) இப்படியாக கந்த தீர்த்த மகிமையை சுவேதனுக்குத் தெரியச் சொல்லி பிதுர் தேவதைகள் சிவபதம் சேர்ந்தார்கள். இந்த ஸ்தலத்திற்குச் சமானமாக வேறுமொரு ஸ்தலம் உண்டோ என்று சுவேதன் திருக்குமரேசரைத் தெரிசனம் செய்தான். (எ-று).

MADRAS
11004

(இ—ள்) இயற்கையாகிய புகழினைப் படைத்த எருக்கத் தம்புலியூருக்கு மேற்கே இரண்டு நாழிகை தூரத்தில் கெண்டை மீன் உலாவும் வெள்ளாற்றின் கரைமேலே முனிவோர்கள் தவம்செய்து யாகம் முதலானதைகளைக் சொல்லிய சாஸ்திரங் களைப் படித்து வாசஞ் செய்வதற்கும் மிகுந்த அழகாக மேகங் கள் சஞ்சரிக்கும் உன்னதம் உண்டாகிய ஒரு பூங்காவனம் உண்டாக்கி வைத்தான். (எ-று).

2. அத்தோப்பின் பெருமை தனையார்கொ லறிந்தே
வித்தார மதாக விசைப்பார் விபுலத்திற்
சற்றுகிலு மறிந்தோ ரிலையென்று லதனுக்
கொத்தேயுரை செயும்பேறிலை யுயர்மா முனிவோய்.

(இ—ள்) அந்த தோப்பினது அழகாகிய பெருமையை யாராகிலும் அறிந்து இந்த பூமியில் சொல்லுகின்றவர்களில்லை. ஆகையால் பெரியோர்களும் அந்த அதிசய மகிமையை சொல்ல முடியாதென்று சூதமகாரிஷ, முனிவர்களைப் பார்த் துச் சொல்லுகிறார். (எ-று.

3. வானத்தி னுபர்ந்து நீண்டு
வளர்ந்திடுந் தேங்கி னைப்பண்
கானத்தி னுபாம் வண்டு
களித்துத்தான் சுற்றுந் தோற்ற
மானத்தி னுயருங் கொல்லன்
வந்திரும் பாற்பூண் செய்து
தானத்தெங் கின் மேலிட்ட
தகையென விளங்கிற் றன்றே

(இ ள்) ஆகாயமட்டும் உயர்ந்து நீண்ட தென்னை மரத் தின் நடுவே, கீதா கானத்திலே மிகுதியும் இசை பொருந்திய வண்டுகள் மதுபானங்கள் செய்து மகாசந்தோஷத்தை அடைந் தும் மந்தகாசமாக அம்மரங்களைச் சுற்றிச் சுற்றிவரும் தோற்றம், கொல்லன் நமக்கு ஆதரவாகவும், லோகோபகாரமாகவும் இருக்கும் தென்னைமரங்கள் ஒடிந்துவிடாமல் இரும்புகளைத் தகட்டாக அடித்து அத்தகடுகளை எடுத்து சுற்றிக்கட்டினதுபோல இருந்தது. (எ-று).



4. அண்டமா முகடுமுட்டி யரம்பைகள் வளர்ந்து பின்னும்
மண்டலம் தன்னைப்பார்த்து வளைந்துதா னிற்குந்
[தோற்ற
மொண்டவ மிகுதியாலே யுடம்பெடுத் தவரேற்றுனேக
கண்டிடில் வணங்காதாற்கு கற்பித்தல் போலுமன்றே.

(இ—ள்) அண்டமாகிய ஆகாச முகடு முட்டவளர்ந்த வாழைகள் பின்னும் பூமியைப் பார்த்து வளைந்த தோற்றமா னது யொருமையாகிய தவசிலே மிகுந்த பெரியோர்களைக் கண்டு, நம்மிடம் ஏற்கவந்தவனுக்கு நாம் வணங்கத் தேவை யில்லை என்று வணங்காமற் போனவர்கள் பூமியிலே சகலரும் காண பூமியைப் பார்த்து தலைகுனிந்து போவார்கள் என்று காட்டியதுபோல் இருந்தது. (எ-று).

5. மேக மண்டலத்தை முட்டி வீறியே பாளை விட்டுப்
பூகமும் பழத்தைச் சிந்திப் பொழிந்துதான் விளங்குந்
[தோற்றந்
தேகமு மனித்தமான தன்மையா லறிவோர் செல்வ
மோகையதா கப்பேற துதவிய தியாக மொக்கும்.

(இ—ள்) மேகமண்டலமட்டும் கமுக மரமானது வளர்ந்து பாளைகள் விட்டுப் பாக்குகள் குலை குலைகளாகப் பழுத்து குப்பல் குப்பலாக வுதிர்ந்த தோற்றம் அறிவுள்ளவர்கள் தேக மனித்த மானதினுலே அறத்தைத் தேடிக் கொள்ளாதவர் களுக்குப் பரலோகம் கிடைக்காதாகையால், மனுசந்தோஷத் துடனே தியாகம் கொடுக்கிறவன் போல் இருந்தது. (எ-று).

6. தடையிலா துயர்ந்த ஆல்தான்
தழைத்து முன்னிலையை நீக்கி
யிடைநுனி யெலாந் தளிர்த்த
விலைகளால் விளங்குந் தோற்றம்
தடையினுல் நெடுந் தூரத்திற்
றங்கிய கணவன் சார்ந்து
மிடைவதாற் கற்பு மங்கை
மேலிற்பட் டணிந்த தொக்கும்.

(இ—ள்) மிகுதியுங் கிளைகளோடும் வளர்ந்து தழைத்த ஆலமரங்கள் முன்னிருந்த இலைகளெல்லாம் உதிர்ந்துவிட மறுபடியும் சிவந்த துளிரால் நிறைந்திருந்த தோற்றம் நல்ல உத்தம பதிவிரதையானவள் நெடுநாட்களாக அதிகதூரம் போயிருந்த தனது புருஷன் வருகிற வார்த்தை கேட்டு மிகுதியுஞ் சந்தோஷமாகி சமீபமாக வந்தமாத்திரத்தில் முன்னிருந்த பழைய வஸ்திரத்தைக் களைந்து விலையுயர்ந்ததான சிவப்புப் பட்டாடை உடுத்திக்கொண்டது போல் இருந்தது. (எ-று).

7. பலவித மரங்களெல்லாம் பகர்ந்ததோப்பாகி சூரால்
மெலிபவர் வெயிலைநீக்கி வீற்று வீற்றிருந்த தோற்றம்
நலிவுதான் வெகுவாய்க்கூடி நணுகிடுங் குடியை
[யெல்லா
மலைதவிற் செல்வமுற்றோர் மதித்துக்காத் திடலே
[போலும்.

(இ—ள்) இப்படிப் பலபல பெயரினையுடைய மரங்களெல்லாம் தோப்பாகி சூரியனால் காயப்பட்ட பொடி மணலிலே வருந்திய அவதியை மனிதருக்கு நீக்கி குளிர்ச்சியாகிய நிழலைக்கொடுக்க அங்கு அங்கு வெகு ஜனங்கள் அவதி தீர்த்துக்கொண்ட தோற்றம், இளைத்துப்போய் வந்த குடியை அறிவிலே உயர்ந்த செல்வ முள்ளவர்கள் வந்தவர்களை ஆதரித்து அவர்களுடைய இளைப்பைத் தீர்த்து ஆயாசங்களைத் தீர்த்துவைக்கும் தாதாவைப்போல் இருந்தது (எ-று).

8. வெண்டாழைகள் செந்தாழைகள் மீதெங்கி னங்கள்
வண்டானமும் விளையாடு வவாவித் திரளாகி
விண்டாவிய கமுகினொடு பலவுமிக நிறையுங்
கண்டாரதை யகலாதவர் களையுந்தெளி விக்கும்.

(இ—ள்) வெண்டாழை மரங்களின் மேலும் செந்தாழை மரங்களின்மேலும் தாமரை தடாகங்களில் விளையாடிய அன்னப்பட்சிகளும் நாரைகளும் பறந்துவந்தே சிறகுலர்த்துகின்றதல்லாமலும் ஆகாசமட்டும் அளாவ வளர்ந்த கமுக மரங்களில் பழுத்த பாக்குக் குலைகளும், நெருங்கி யுயர்ந்த பலா



மரங்களிற் பெரிய பழங்களும் குடங்கள் போலே இருந்தது. பழுத்துத் தானே வீறித்தேன்கள் ஒழுகிய பரிமள வாசனையைக் கண்டவர்கள் அவ்விடத்தைவிட்டு அகலாமல் அதிலுள்ள பலாச்சுளைகளைத் தின்று அவர்கள் ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். (எ-று).

9. வாசந்தவழ் மணமொன்றிய மலருந்தளிர் கனியும்
வீசுஞ்சிறு வளிகொண்டுள விளங்கும்வன நாப்பண்
மாசில்மறை யவனுங்குறு முனிவன்வரக் கண்டு
ஆசில்பதமலர் மீதினிலன்பாய் வணங்கி னுனல்.

(இ—ள்) வாசனை பொருந்தா நின்ற புஷ்பசாதிகளும் நல்ல துளிர்களும் இசைந்திடத் தென்றல் காற்றுலாவிய வனத்தின் நடுவே சுவேதனானவன், தேவாங்குஷ்ட பிரமாணமாகிய அகஸ்தியர் வருவதுகண்டு எழுந்து பாதாரவிந்தத்தில் மிக்க அன்படனே வணங்கினான். (எ-று).

10. கடலுண்டற் றிலைநின்றிடல் கருதுங்குறு முனிமுன்
னுடலொன்றிய புளகத்தொடு தொழல்கண்டவ
[ருலகிற்
றடமொன்றிய வனத்தில்மிகு தவமின்றுசெய் யெனலுந்
திடமொன்றிய தவர்சொற்படி செய்கின் றனனன்றே.

(இ—ள்) சகரசக்கரவர்த்தி மகா கர்வமாக தனது பட்டணத்தில் வந்த அகத்தியரை வந்து வணங்காததினால் சகரர்களால் கெல்லப்பட்டக் கடலைக்குடித்து வளரும்படிச் செய்தருளிய குறுமுனிவரான அகத்தியரை சுவேதன் வணங்கி சரீர புளகத்துடனே நின்றதைக் கண்டு அகத்தியர் சுவேதனே இவ்வனத்தில் தவம் இயற்று. உனது தவம் சித்திக்கும், என்று சொன்னவுடன் அவர் சொற்படி சுவேதன் தவம் செய்யத் தொடங்கினான். (எ-று).

11. நன்மாமண நதிநீர்கொடு நாதன்முடி மீதி
னன்றொடொறு மெடுத்தாட்டிட வெள்ளா றெனவான
பொன்னுடரும் பணிநாடரும் புவிநாடரும் பின்பு
மன்னுதர வோடன்பினில் மகிழ்ந்தாடுவா ரதிலே.

(இ—ள்) இப்படி தவம் பண்ணிய சுவேதன் நல்ல பரிமள வாசனை பொருந்திய வெள்ளாற்றிலே தீர்த்த மெடுத்துக் கொண்டுவந்து தினம் தினம் பரமசிவனுக்கு அபிஷேகம் பண்ணியபடியினாலே வெள்ளாறெனப் பெயராயிற்று. அந்நதியிலே தேவலோகத்தாரும் பூலோகத்தாரும் அன்புடனே வந்து நதியிலே தோய்வார்கள். (எ-று).

12. தவபூசனை செபபூசனைத் தனிஞானமே மறவா
நவபூசனை யுளபூசுரர் முதலோ ரதிநாளுஞ்
சிவபூசனை செயலாவது திடமாதவர் செய்யு
முவபூசனை நிறைவானதி யொவ்வாத தற்கிணையே.

(இ—ள்) இந்த நதியிலே தவம் செய்கின்றவர்கள் ஜெபம் பண்ணுகின்றவர்கள், ஞானபூசனை செய்பவர்கள், பிராமணர்கள் முதல் யாவரும் வந்து சிவபூஜை செய்வார்கள். இத்தீர்த்தத்திற்கு மகாமுனிவர்கள், பிரம்மரிஷிகள் தவம் செய்யும் ஆகாச கங்கையும் இதற்குச் சமானமாகாது. (எ-று).

13. அரமாதர்கள் புரமாதர்கள் றனமாதர்கள் முதலோர்
விரைநாண்மலர் கொண்டர்ச்சனை விருப்பாம்படி
[செய்து
நுரையார்புன லதின் மூழ்கியேநுவலும் மலமாயைக்
கரையாவிரு வினைநீங்கியே கண்டார் பரகதியே.

(இ—ள்) தேவரம்பையர், பூலோகத்துப் பெண்கள், நாகலோகத்துப் பெண்கள் இவர்கள் வாசனை பொருந்திய அன்றலர்ந்த புஷ்பங்கள் கொண்டுவந்து பக்தியுடனே அர்ச்சனை செய்து நுரைகளோடும் கூடிய இந்த வெள்ளத்திலே மூழ்கி மலமாயையாகிய நீங்காத இருவினையும் நீங்கி அளவிறந்தவர்கள் பரகதி யடைந்தார்கள். (எ-று).

14. வெள்ளாறது தோய்ந்தாலுடன் விண்ணோர்கடம்
[முருவே
யுள்ளாரிவ ரினமாமென விமையோரரு குறலாற்
கள்ளார்குழ லறமாதர்கள் கவினார்நர ரென்றே
தள்ளாதுட னுறவாடுவர் தனிமாதவ முறலால்.



(இ—ள்) இப்படி விளங்கிய வெள்ளாற்றிலே மூழ்கினவர்கள் செல்வத்துடனே இருந்து அந்திய காலத்தில் தேவரூபமாகி தேவர்களுடனே கூடி இருப்பார்கள். அதிலுள்ள தெய்வப்பெண்கள் இதிலுள்ள தேவர்கள் என்று மனோரம்மியமாகி மனிதர்கள் என்று தள்ளாமல் தேனோடும் கூடிய புஷ்பமாலை தரித்த அளகபாரமும் சொர்ன கலசம் போன்ற தனங்களும் சேரக்கட்டி சரசமாக விளையாடுவார்கள். (எ—று).

15. விசையுடன் றன்மேற்றள்ளி வெள்ளாறுவருந்
[தோற்றம்
அசைவி லாஆணவத்தை நீக்கியருமுருவ மின்றி
நசையறி யாமைகோபம் நகையகங்கார மில்லாப்
பசையெனு மறிவைக்கண்டோர் பண்புளம் போன்ற
[தன்றே.

(இ—ள்) சுருக்குடனே வந்து பெருக விசையாய் நுரைகள் சூழ தெளிவாய் வந்த வெள்ளாற்றின் தோற்றம் அசைவில்லாத ஆணவத்தைத் தள்ளி அருவமும் உருவமும் அல்லாமற் ஆசை, அறியாமை, கோபம், நகை, அகங்காரம் ஆகிய குற்றம் தீர்த்து விளங்கிய அறிவைக் கண்டவர்கள் உள்ளத்தைப் போலே இருந்தது. (எ-று).

16. கமலஞ்செங் கழுநீரல்லிக் கடும்புனன் மேன்மிதந்து
சமமதாய் வருந்தோற்றந்தான் றருமையில் வேனஞ்
[சாழி
நமனுட் னேக்குங்கண்ணார் நார்மேற் காயம்பார்த்து
விமலமாய்ப் படுத்துக்கொண்ட விதத்தினை யொக்கு
[மன்றே.

(இ—ள்) தாமரை, செவ்வல்லிப் புஷபங்கள் மிகுதியும் திரம்பி மிதந்து வருகிற தோற்றம் கூர்மையாகிய வேலையும், நஞ்சையும், கடலையும், எமனையும் சமானமான கண்களையுடைய பெண்கள் நீரின்மேல் ஆகாயத்தைப் பார்த்துப் படுத்துக்கொண்டு நீந்தி வருவது போலே இருந்தது, (எ—று).

17. குழைகள் மேலிட்டுக் கொண்டு கரையினினுரைக
[டள்ளத்
தழைவொடு முருத்திரைந்து தாழ்ந்துபள் ளத்தின்
[வீழ்ந்து
விழைவுடன் மெல்லவேறி வெள்ளாறுவருந் தோற்
[றந்தான்
கிழவனை யொத்ததென்று கிட்டினர் பரவலுற்றார்.

(இ—ள்) மூங்கிலைத் தடியாகத் தாங்கிக்கொண்டு இரு பக்கமும் நுரைகளைத் தள்ளி அலையினாற் மேற்றிளைந்து இரங்கி அப்பள்ளத்திலே வீழ்ந்து ஆசையுடனே மேட்டிலேறிவருந் தோற்றம், தடிகையிலே ஊன்றிக்கொண்டு நடக்கும் கிழவனைப் போலே இருந்தது. (எ-று).

18. கரநாக மீதிலம்பு கலந்து தான்வருகை யாலுந்
தரைமாதர் தனங்களெல்லாந் தடவியே வருதலாலுந்
திருவான மனைவிவந்த செல்வத்தினாலு மெந்தன்
கருமாற்று வெள்ளாறந்தக் கண்ணனுக் கொத்ததன்றே.

(இ—ள்) மலைபோன்ற கையினையுடைய யானை மறைய நீர் பெருகிய படியினாலும், கரனாகிய இராக்கதன் சரீரம் மறைந்து தேவலோகத்துக்குப் போக அஸ்திரம் தொடுத்தபடியினாலும், பூலோகத்துப் பெண்களுடைய தனங்களை எல்லாம் தடவிக்கொண்டு அலையாகிய கைகொண்டு வருகையாலும் ஆகாயத்திலிருந்து வந்த செல்வமாகிய நீர்பொருந்தி யிருந்தபடியாலும்; தரைமாதராகிய கோபிகா ஸ்திரீகளின் தனங்களைக் கையினாலே தடவிய படியாலும், மகாலக்ஷ்மியாகிய பாக்கியம் பெற்றிருப்பதினாலும் கருமாறச் செனனம் வராமல் காக்கின்ற தன்மையாலும் மகாவிஷ்ணுவை ஒத்திருந்தது. (எ—று). கருமாற்று செனனம் வராமற் காப்பது ஆற்றிற்கும் கண்ணனுக்கும் உவமையாதல் காண்க.

19. சிலம்பினிற் பிறந்தேநீண்டு திரும்பவு மடங்கிப்போந்து
அலம்பிய பரவையிற்போ யசைவிலாப் படம்விரித்து



விலங்கி வில்லுமிழும் பானுவெனுமணி விடுக்குமாறு
குலங்களில் மிகுந்தே யோடும்குலப்பாம்புக் கொத்த
[தன்றே.

(இ—ள்) இவ்வெள்ளாறு பாம்புபோலத் தோற்றமளித்தது. மலையிலே பிறந்து நீளமாகி திரும்பவும் மடங்கி மடங்கி நடந்து சத்தம் பொருந்திய கடலிலே போய் விசாலமாகிய படம் விரித்துப் படத்துக்குச் சிரமணியாய் மிக்க பிரகாசமுள்ள சூரியனை வைத்துக்கொண்டு ஆசையினாலே பாம்புக் குலங்களுக்குச் சமானமாக இருந்தது. (எ-று).

20. நனைநாண் மலரிட்டன் பொடுநதி யாடியபுனிதர்
வினைதீர வனபகைதீர் வனமிடிதீர்வதோ ரரிதோ
நினையாமலே நினைக்குஞ் சிவலோக முதற்பதவி
தனையேயவர் பெறலாலது தடையாமெனு மறையே.

(இ—ள்) தேன்பொருந்திய புஷ்பங்களைக் கொண்டுவந்து பக்தியுடனே அர்ச்சனை செய்து வெள்ளாற்றிலே மூழ்கினவர்களுக்கு தீவினைகளெல்லாமகலும் பகைகள் வராது. தரித்திரம் தீரும். நினைப்பதற்கு அரிதான சிவபோகம் முதலான பதவிகளெல்லாம் எளிதிலே கிடைக்கும். (எ-று).

21. தினம்வை கறைதனி லேயெழில் சேரமணமார்
புனலார் கடமொடு கோமயமுடனே புகனதியின்
றனதாகிய பதமேல் வெளிதனிலே கழுவியபின்
முன மாசமனதிகளும் முறையாடியு மப்பால்,

(இ—ள்) தினம் தினம் பிராதக் காலத்திலே எழுந்து மணமலர்கொண்டு குடத்திலே ஜலமும் எடுத்துக்கொண்டு கோமயமும் கொண்டு வெள்ளாற்றங் கரையிலே போய் கரசரணாதிகள் அலம்பிக்கொண்டு ஆசமன முதலாகியவை யெல்லாம் செய்து சரீர சுத்தியும் செய்து கொண்டும்.

22. அகந்தான் சுத்தமொழிதான் சுத்தந்தொழில் சுத்தமுமாகி
நிகழ்ந்தே பினுந்தூயதாவது நிரப்பிச் செயுமாந்தர்

புகுந்தேமிகு வெள்ளாறதில் தோய்ந்தே புலியூரில்
திகழ்ந்தாரெனிற் சிவனுவது திண்ணமிது திண்ணம்.

(இ—ள்) மனோசுத்தி, வசனசுத்தி, கிரியாசுத்தி, இப்படி மூன்று சுத்தியும் செய்துகொண்டு பின்னும் நிர்மலமாகிய அநேக சுசி பூதமாய் வெள்ளாற்றிலே வந்து மூழ்கி எருக்கத்தம்புலியூரில் வந்து திருக்குமரேசுரர் தரிசனம் செய்தால் ருத்திர கணேசுரராவது நிச்சயம் என்று சொன்னார். (எ-று)

23. அத்தன்மைக டனையுமறிந் தகலாம லங்கே
மெத்தும் மிதமென்றே மிதுமாவனந் தனிலே
சித்தம்மசை வறவேதவஞ் செயுநாடனி லொரு
சத்தம்புறமாம் வகை இருந்ததோர் வரியே.

(இ—ள்) இப்பேர்ப்பட்ட மகிமையை யறிந்து சுவேதனை வன் புஷ்ப பரிமள மிகுந்த இவ்வனம் தவத்திற்கு யோக்கியமான இடமென்று சித்தமானது அசைவற்று தவம்செய்தான். அப்படித் தவம் செய்கின்ற நாளையிலே ஒருநாள் இருட்டாகிய மலைமுழஞ்சியிலே ஒருபுலி இருந்தது, (எ-று).

24. கதமொன்றிய கொடுவாள்வரி கரைசிந்திய மூரல்
மிதமிஞ்சிய அயில்கொண்டது மிருகங்களை யுணவே
சிதைவொன்றிய மனமானது தீயைவிழி யின்கண்
ணுதிர்கின்றது பகுவாயுடைத் தானதொரு புலியே.

(இ—ள்) அந்தப் புலியானது மகாகோரமாகிய வாள் போலும் வரியாகிய ரத்தங்கள் ஒழுகிய சிங்கப்பற்கள் வேல் போலுமுடைத்தாய் எதிர்ப்பட்ட மிருகங்களை எல்லாம் கொன்று தின்போம் என்ற மனது முண்டாகி அக்கினிச் சுவாலை வீசும் கண்களையும் பெரிய வாயையும் உடையது. (எ-று).

25. கொடிதாகிய புலிகண்டனர் குமரேசனை நினையா
வடிவேறிய திரிசூலமும் வலமாகிய பரனே
பொடிபூசிய முதலேபுர நகைசெய்திடு புகழாய்
அடியேன்நல முய்யும்வழி வகையேதன அழையா.



(இ—ள்) இப்படிக்கொத்த புலி மகாகோபமாய் வருவதைக்கண்டு குமரேசனை நினைத்து கூர்மையுண்டான சூலாயுதத்தை வலது கையிலே தரித்த பரமசிவனே, விபூதி பூசிய சரீரமுள்ள இணையில்லாத வஸ்துவே, திரிபுராதிகளை நகைத் தெரித்தவரே, என்னை பராமுகமாய் விட்டீரே நான் எப்படி பிழைப்பேன் என்று மனங்கலங்கினுன் சுவேதன்.

26. எனவேதுதி செயவேதுய ருடனேயெதிர் வேடன்
தனுநாணொடு கணைசேர்வன தனையேநிகர் கரியோன்
சினமாகிய பெயர்கண்டக னென்றேன்மிகு திறலோன்
முனமேவிய யரனுரரு ளெனலாகவே மொழிவான்.

(இ—ள்) இப்படியாக ஸ்தோத்திரம் செய்து விசாரப்பட்ட சுவேதன் முன்னே சிவகடாக்ஷத்தினுலே கண்டகன் என்னும் ஒருவேடன் வந்து வில்லிலே நாணேறிட்டு அம்பு தொடுத்து, தனக்குத்தானே நிகரான அதிக பராக்கிரமம் உள்ளவன் பிராமணனைப் பார்த்து சொல்லுகிறுன். (எ-று).

27. அஞ்சேலரு மறையோயென தடல்பா ரெனவிரைவாய்
பஞ்சானனன மிசையேயிடி படல்போலென வுரையா
மஞ்சார்வரை நிகர்தோளுற வணங்கிச்சிலை விடலும்
நெஞ்சூடுளம் புகுந்தேயுட னீத்தேகின கணையே.

(இ—ள்) ஏ! பிராம்மணரே!! பயப்படாதீர். எனது வல்லமையைப்பாரும் என்று வில்நாணியை விசைபார்த்து அம்பினுலே அப்புலியை எய்தான். அது சிங்கத்தின் மேலே இடிவிழுந்தாற்போல் நெஞ்சிலே புகுந்து அப்பாற்போனது. புலி இறந்து கீழே விழ்ந்தது.

28, அதிரத்தன் குரல்விட்டெதி ரலறித்தரை மீதி
னுதிரத்தொ டுயிர்விக்கியும் விழலுற்றிட முனிவன்
மதியிற்றில வலியிற்புலி மடியப்புரி செயலுக்
கெதிரொப்பவ ரிலரால்மற் றெவருக்கு முருவே.

(இ—ள்) இக்கதையை யறிந்தவர்கள் சிவத்துதியின் உண்மையை உணர்ந்தவராவார்கள். மற்றவர்கள் அறியாதவர்களாய் அவமாய் தரித்திரப்பட்டு மோக்ஷம் அடையார்கள், புலிக்காலராகிய வியாக்கிரபாதர் தவத்திலே மேம்பட்டு சிவனை பூசை செய்து ஸ்தோத்தரித்து ஆனந்த நிருத்த தரிசனம் கண்டார். (எ-று)

35. முதலாமுகந் தவம்பின்னுகம் முதிருந்தொழில் மகமே
யிதமாமதின் பின்னுமுக மிறைபூசனை யதினே
விதியாவது கலியாமுக மெவராயினு மேலாந்
துதியாவது செயவேயவர் துன்பந்துக ளாமால்.

(இ—ள்) கிருதியுகத்திலே தவம் செய்தும், திரேதாயுகத்தில் யாகங்கள் செய்தும், துவாபரயுகத்திலே சிவபூஜை செய்தும், கலியுகத்தில் ஸ்தோத்திரம் செய்தும் எவர்களாகிலும் இவ்வாறு நடந்திருந்தார்களானால் அவர்களின் சகல பாபங்களும் நிவர்த்தியாகி மகாநோய்களெல்லாம் தீர்ந்து சகல சித்திகளும் உண்டாகி மோக்ஷம் அடைவார்கள். (எ-று)

36. மறையோர்முத லொருநால்வர்க டொழில்வேறுசெய் [வருணர்
கறைசேர்மிட றுடையானது சரிதத்தினைக் கழறும்
நிறைவோர்வசம் நிறைந்தேதிரு நிற்பான்மற் றவரும்
பொறையோடும் மிருந்தேமிகு போகத்தினைத் [துய்ப்பார்.

(இ—ள்) பிராமணர் முதல் நான்கு வருணத்தவரும் மற்றும் வேறு வேறு தொழில்கள் செய்யாநின்ற ஜாதியினரும், நீலகண்டரான பரமசிவன் சரிதத்தை, படிக்க, படிக்கக்கேட்டு, ஸ்தோத்திரம் செய்தவர்களிடத்தில் மகாலக்ஷுமி வாசம் செய்வாள். பொறுமை குடியிருக்கும். அவர்கள் சகல போகங்களையும் அனுபவிப்பார்கள். (எ-று)

37. எனவோதிய யுயர்சூதனை முனிவோரெதிர் தொழுதே
அனகாதிப ருடையாயுன தறையுஞ்சொலைக் கேட்டே
வினையான திரிந்தேகின மேலாமுறு பதவி
தனையே யறிந்தனமேலொரு தவமும் பிறிதிலவே



(இ—ள்) இப்படிச் சொல்லியருளிய சூதமகாரிஷியை முனீஸ்வரர்கள் அனைவரும் வணங்கி அனகர் முதலானவர்களுக்கும் கர்த்தனே தேவரீர் அருளிச்செய்த சிவகதையைக் கேட்டு சகலபாபங்களும் தீர்ந்தது. மேலாகிய பதவியையும் அறிந்துகொண்டோம் என்று சொன்னார்கள். (எ-று)

சுவேதன் தவச்சருக்கம் முற்றும்.

---

## உச்சினி வேந்தன் குட்டந்தீர்ந்த சருக்கம்.

1. மதியாறு வனைசோதி குமரேச னிசையா
விதமாக விருகாதி னிடவாயி னிடையே
துதியாக வருவீர்க ளெனவோது சூதன்
பதவாரி சந்தொட்டு முனிவோர்கள் பகர்வார்.

(இ—ள்) சந்திரனையும், கங்கையையும் முடியிலே தரித்தருளிய திருக்குமரேசுவரர் அனுக்கிரகம் செய்த கதையாகிய அமிர்தத்தை இரண்டு கரத்தினிலிட வாயிடையே புகட்டுவது போல சொல்லிய சூதமகாமுனியினுடைய தாமரைப்பூப் போல உள்ள உபயபாதங்களிலே நமஸ்கரித்து முனிவர்கள் சொல்லுவார்கள். (எ-று).

2. மனமான திடரான புலன்வீதி வழிபோய்
நினையாம லொருகாதை நிலையாக மொழிவாய்
கனமான மறையான கடல்வீழு முகிலே
யெனவார்வ மிகுசூத னிபல்காதை மொழிவான்.

(இ—ள்) மனமானது இடரான பொறிவழியே போய் வேறொன்றையும் நினையாமல் ஒரு சிவகதை சொல்ல வேண்டுமென்றுகேட்க அப்போது சூதமாமுனிவர் வேதமாகியசமுத்திரத்திலே போயிறங்கி அர்த்தமாகிய ஜலத்தைபானம்செய்து ஞானமாகிய பயிர் தழைக்க சிவகதையாகிய அமிர்தத்தை வருஷித்த மேகமாகிய சூதர் மனமகிழ்ந்து சொல்லலுற்றார். (எ-று)

3. ஓங்கிடும் உச்சினி யெனும்நகர்க் கிறைவன்
தாங்குறும் மாந்தரைத் தாயெனப் புரப்போன்
பாங்குறும் கள்வர் என்றூர் புலிப்பகை
நீங்கிடும் நீதியோன் னிலைமையாய் நடப்போன்.

(இ—ள்) கீர்த்தி மிகுந்த, உச்சினி பட்டணத்திற்கு ராஜாவானவன் அந்த நாட்டிலுள்ள ஜனங்களை ரக்ஷிப்பதில் தாயைப் போன்றவன் பக்கத்துள கள்ளர்கள் முதலானவர்களின் பயங்களை நீக்கியும்நீதி தப்பாமல் அரசாட்சி செய்பவன். (எ-று)

4. இயம்பும்ஒன் னூர்முடி யிடறு தாளினன்
வயம்பெறு புலியென மன்னும் வீரத்தான்
கயந்தனை நிகரெனக் கண்ட சீற்றத்தான்
நயந்தனை நிதந்தரு நளினக் கண்ணினன்.

(இ—ள்) சத்துருக்கள் வந்து வணங்கும் பாதத்தையுடையவன். புலியைப்போன்ற வீரமுள்ளவன் மதங்கொண்ட யானையைப்போன்ற கோபமுள்ளவன், விஷ்ணுவைப்போன்ற கருணையுடையவன். (எ-று)

5. பூங்கணைச் சிலையனைப்போன்ற பொற்பினன்
வாங்கு தெண்டிரை வலிகொளும் ஆணையான்
நீங்கரும் புகழ்செறி நியம மியாவையு
மோங்கறஞ் செய்திற லுவக்குஞ் சிந்தையான்

(இ—ள்) புட்பபாணமும், கரும்புவில்லுமுள்ள மன்மதனைப்போல அழகுள்ளவன், அலையுள்ள சமுத்திரதைப்போல சரியான ஆணையுடையவன், தன்னைவிட்டு நீங்காத கீர்த்தியாகிய சகல தருமங்களையும் நாள்தோறும் அபிவிருத்தி செய்பவன். (எ-று).

6. கூறருங் குன்றெனுங் குவவுத் தோளினு
ளூறிலோர் கடன்கொண் டாளு மன்புளான்
நீறணி நுதலினு னீலகண் டர்தமக்
கேறுபூ மாலைக ளேற்றும் பத்தியான்.



(இ—ள்) சொல்லுதற்கரிய பர்வதம் போன்ற தோளையுடையவன். ஆறிலோர்பங்கு தான் வாங்கிக்கொண்டு மற்ற ஐந்து பங்கை குடிகளுக்குக்கொடுத்து ரக்ஷிப்பவன், விபூதி நீங்காத நெற்றியையுடையவன். நீலகண்டரான பரமசிவனுக்கு சாஸ்திரங்களில் விதித்திருக்கும் புஷ்பங்களை மாலையாக்கித் தரிப்பிப்பவன். (எ-று).

7. பொறியுடற் பஃறலைப் பொருந்து கட்செவிக்
கறையெயிற் றுராச்சுமை வையங் காத்துளா
னறைகழற் காலினு றுதலர்க் கன்பினல்
மறுவிலாப் பாலனம் வழங்கும் வண்மையான்.

(இ—ள்) பொறியுள்ளசரீரமும் பகுப்பாயிருக்கிற ஆயிரம் ஆயிரம் தலையும் கண்ணே செவியும், விஷம் பொருந்தியபல்லும் உள்ள ஆதிசேஷனல் தாங்கிய பூமியைத்தாங்கி ரக்ஷிக்கின்றவன். வீரகண்டாமணி தரித்த காலையுடையவன், ஏழைகட்கு பாலும் அன்னமும் கொடுத்து ரக்ஷிக்கின்றவன். (எ-று)

8. செந்தழற் கருமமுஞ் செய்திடுந் தவங்களும்
அந்தணர் செய்திட அரும்பொரு ளீந்துளோன்
நந்தலில் முனிவரர் தம்மை நாடொறும்
வந்தனை செய்தடி வழுத்து மாண்புளோன்.

(இ—ள்) அக்கினி கோத்திரமும், தவமும் செய்துள்ள பிராமணருக்கு வேண்டிய திரவியம் கொடுப்பவன், குறைவில்லாத தவத்தினையுடைய முனீஸ்வரர்களை நாள்தோறும் வந்தனைசெய்து வாழ்த்தும் பெருமை கொண்டவன். (எ-று)

9. செங்கதி ராமெனத் திகிரி யொன்றினல்
பொங்குநீர் கடற்புவி புரக்கு மாட்சியா
னெங்கணுங் கலியெனு மிருளிரா மல்வாள்
தங்குவெண் மதிக்குடை தரித்தகொற் றத்தான்.

(இ—ள்) சூரியனைப்போல ஒரு ஆக்ஞாசக்கரத்தினலே சமுத்திரம் சூழ்ந்த பூமியெல்லாம் ரக்ஷிக்கின்றவன். தான்

ஆளும் ராஜ்யமெல்லாம் கலியாகிய தரித்திரமென்னும் இருள் நீங்கிப்போக சந்திரவட்டக்குடை நிழலால் ராஜ்யபாரம் செய்பவன். (எ-று)

10. சென்னெறிக் கதிரவன் தென்றிசை மயங்கினும்
சொன்னசொற் றிறம்புத லிலாத தூய்மையான்
பொன்னணி யறமெனும் புரிசை சூழ்நிலே
மன்னிய கல்விநீ ரகழியை வைத்துளான்.

(இ—ள்) செவ்விதாகிய மார்க்கந்தப்பாமல் நடக்கிற சூரியன் திசைதப்பி நடந்தாலும் தான் சொன்ன சொல் தப்பாதவன். பொன்னினாலே செய்த ஆபரணம் தரித்தது போலே தர்மமாகிய சுற்றுக்கோட்டைக்கு கல்வியாகிய அகழி வைத்திருப்பவன். (எ-று)

11. வாட்டிற மிகவுள மன்னர் மன்னவன்
நீட்டுவை வேறலே நெடுங்கைக் கொண்டவன்
காட்டினி லிருந்த கடும்புலிக் குழாத்தை
வீட்டிடும் புகழ்மலே விளக்குப் போன்றுளான்.

(இ—ள்) சத்துருவை சங்கரிக்கும் மகாவீரத்துடன் வானவன் திறமைகொண்டவன். தீட்டப்பட்ட கூராகிய வேலே கையிலே தாங்கியிருப்பவன். காட்டிலேயிருந்து ஜீவஹிம்சை செய்யும் சிவந்த கண்ணிலேயுடைய புலிக்கூட்டங்களேயெல் லாம் வேட்டையாடிக் கொன்றவன். கீர்த்தியை மலேமேல் வைத்த விளக்குப்போலே வைத்திருப்பவன். (எ-று)

12. மழைநிறை வாரிபுகப் படியும் மங்குலி
னெழுமடங் கேற்ப வாக்கியும் வண்கையா
னுழுமது வண்டின மிசையொடு பாடிய
செழுமலர்த் தாரிலேச் சேர்க்கு மார்பினன்,

(இ—ள்) மிகுந்த நீரோடுங் கூடிய சமுத்திர நீரைக் குடித்து மேலே எழுந்து மின்னி மலேயின்மேலே பொழியும் மேகத்தைப்போலே ஏழுமடங்கு அதிகமாக எற்கின்றவர்களுக் குக் கொடுப்பவன். வண்டுகள் காலினலேயுழுது இசையுடன்



ராகங்களேப்பாடி தேனேக்குடித்துப் புரையேறி களேத்துச்சுற்றிய செழுமையாகிய மாலேயைத்தரித்த மார்பையுடையவன். (எ-று)

13. கடநா கமெட்டும் விடங்கலந்த களநாகமெட்டும்
திடமாக பரிக்கும்பாரம் தீர்ந்திடச் சுமக்குந்தோளா
னடநாக மென்றுங்கொற்ற வரசரிற்பணியா தார்கள்
முடியான திமைக்குந்தாளான் முத்தரைப்பழிக்கத்
[தாளான்

(இ—ள்) மதம்பொருந்திய அஷ்டகஜங்களும், விஷங்களே யுடைய அஷ்டமா நாகங்களும், தாங்கிய பூமியை பாரம்தீர தனது தோளினலே சுமந்து ரக்ஷிப்பவன், கொல்லும் தன்மை யுள்ள யானேயைப்போலே பலம்பொருந்திய அதிவீர பராக்கிரம முள்ள அரசர்சளில் வணங்காத சத்துருவாகிய அரசர்களின் கிரீடங்கள்பட்டு தப்பாத தண்டை வீரவெண்தாயத்துகள் போல் பிரகாசமான பாதத்தையுடையவன். பெரியோர்களே யாவரேனும் தூஷணமாகப்பேச சகிக்காதவன். (எ-று)

14. திசைகளீ ரைந்து மோங்க சீரெனு முத்தை வாரி
நசையின விரைக்கு மாபோல் நராதிபர் தொழுதே
[கைகா
லசைவிலா தொடுக்க வேர்வை யாகமா முற்று
[மோடப்
பசையினர் கொடுக்கும் பொன்னேப் பாவலர்க்
[களிப்பா னன்றே.

(இ—ள்) பத்துதிசையிலும் தனது கீர்த்தியாகிய முத்தை வாரியிறைப்பதுபோலே பல அரசர்களே கைகால் அசைவில்லா மல் ஒடுக்கி பயமுண்டாக்கி சரீரமெல்லாம் வேர்வை ஒழுகச் செய்து வாங்கிய திரவியத்தை கல்விமான்கள் சந்தோஷிக்க மட்டில்லாமல் கொடுப்பவன். (எ-று)

15. பொறியின்விடயம் புலனகும் புத்திவிடயம் பொறியாகும்
அறியு முயிர்க்கு விடயமாய் வருமப்புந்தி கூடத்தற்

(இ—ள்) அப்படி விழுந்த புலியானது கேட்டவர்கள் கண்டவர்கள் பயப்படத்தக்கதாய் குரல் விட்டலறி தரையிலே உதிரம் பெருகி உயிர்போன மாத்திரத்தில் கண்ட சுவேதன் கண்டகன் என்னும் வேடனின் மனோபலமும் வளமையும் வலியையும் புலியைக்கொன்ற சாதுர்யமும் கண்டு இவனுக்கு இணையாக வேறொருவரும் இல்லை என்றான். (எ-று)

29. எனவோதிடு மவன்முன்னமே யெழில்வாணியு
[மெதிராய்க்
கனவானிடை மொழியானது கழறும்மினி வேடன்
முனியாய்மிகு மனகாதிப முனிவோர்தமி லிறையாங்
குனிமேருவில் லுடையார்கும ரேசனருள் கூடும்.

(இ—ள்) இப்படியாகச் சொல்லியிருந்த சுவேதன்முன்னே சவுந்தரியமிகுந்த ஆகாசவாணி எதிராக ஆகாசத்திலே நின்றும் இவ்வேடன் முனீசுவரனாகிய அனாதி முனீசுவரர்களுக்கெல்லாம் மேலாவான். மகாமேருவை வில்லாக வளைத்த குமரேசுவரர் கிருபையும் வந்து கைகூடும் என்றது. (எ-று)

30. அறிஞர்புக ழும்புலிய னடியாயழ கேறும்
நெறிநீறிடு மெய்மையடி யார்தம்மி றைகூடும்
பொறியார்புல னோர்வழியே புகுத வுயர்வெய்தும்
பெருமானட மேயெதிர்கா ணுறு மிப் பேரால்.

(இ—ள்) அறிவு விளங்கிய ஞானவான்கள் தோத்திரம் பண்ணும்படி புலிகால் உண்டாகியது தேசுத்திற்கழகாய் மோக்ஷ வீட்டிற்கு வழிகாட்டிய விபூதி தரிக்கும் அடியார்மீதிலே பக்தி உண்டாகியது பஞ்சபொறிகளிலும் சத்தாதிவிடயம் ஒரு வழியே புகுத உயர்ச்சியாகிய நடனம் காண அது கிடைக்கும். (எ-று)

31. இதுமாதல மெனலாலிதில் வருவாரெதிர் வழிபா
டதனாலுயர் புலியூரென வரையும்படி செய்வா
ரிதைநீயறி யெனவேமறை பொழுதில்மறை யவனு
மதியாதவ முயரும்பல மெல்லாம்வரு மென்றே.



(இ—ள்) இந்த வியாக்கிரபாதருக்கு அனுக்கிரகம் செய்த படியினாலே இது புலியூரென்று சொல்லப்படுகின்றது. இதை நன்றாய்த்தெரிந்துகொள் என்று ஆகாசவாணி சுவேதனுக்குச் சொல்லிற்று. சுவேதன் சந்தோஷமடைந்து ஆகாசவாணியின் அனுக்கிரகப்படிதான் நிறைவென்று எண்ணினான். (எ-று)

32. இறும்பூதினை யடைந்தேமன மின்பக்கட லாழ்ந்தே
நறும்பூவணி குமரேசனின் நற்றாளினைக் கூடும்
பெறும்பேறடை பவர்பேற்றினை பெற்றாலென மகிழ்வுற்
றிறந்தாகிய காலத்தினுக் கிரங்கி யிருந்தனனே.

(இ—ள்) இப்படியெண்ணி சுவேதன் மனோதிடமாய் மகிழ்ச்சிக்கடலிலே மூழ்கி தும்பை, மந்தாரை, கொன்றை முதலிய புஷ்பங்களைத் தரித்தருளிய திருக்குமரேசுரரை பூசை செய்தவர்கள் அடைந்தபேற்றை மனதிலே நினைத்து நமது எண்ணம் கைகூட எத்தனை காலம் செல்லுமோ என்று சிந்தனை செய்திருந்தான். (எ-று)

33 எதிர்வீழ்தரு புலிபானவை யிறைநாமமே யுளமா
யதிர்வான்மிசை வருமானமீ தவிர்தேவனி னுருவாய்
துதியாமறை யவனோடெதிர் சொல்லாடியே யெழலுங்
கதியாகிய யுயர்வானவ ருலகேறின கடிதின்.

(இ—ள்) எதிரே அடிபட்டு வீழ்ந்த புலியானது சிவஸ் தோத்திரம் காதிலே வீழ்ந்தபடியினாலே அதுவே பரமகதிக்கு வழியாய் தேவதுந்துபிமுழங்க ஆகாயத்திலிருந்து வந்தவிமானத்தில் தேவருபமாகி சுவேதனிடம் நீர் சிவஸ்துதி செய்தது எனது காதில் விழுந்தபடியால் எனக்கு இக்கதிகிடைத்தது என்று சொல்லி தேவர் உலகத்தைச் சேர்ந்தது. (எ-று)

34. சிவநாமமே புகழ்வார்திற லறிவாரதை யறியார்
அவநாசமே யடைவாரிட ரகலார்புலிக் காலன்
தவமாமுயர் வுற்றுஞ்சிவ சரிதத்தினை யுரைத்தே
யுவமானமி லருள்சேர்நட மெதிர்காணுத லுற்றார்.

கறியும் விடயஞ் சீவனும் அதுவும் பிரம்ம விடயமாம்
நிறையும் பிரம மொன்றினுக்கு நிகழா விடய மெனு
[மறிவான்.

(இ—ள்) விடயத்தை அறியப்படட பொறிகள் விடயமாகாது பொறியை அறியப்பட்ட கரணம் பொறிகளாகாது. கரணத்தை அறியப்பட்ட சீவன் அந்தக்கரணமாகாது. சகலத்தையும் அறியும் பிரம்மம் சீவனாகாது. இப்படி விளங்காநின்ற பிரம்மமே சகலத்துக்கும்மேலாம் என்பதைஅறிந்தவன். (எ-று)

16. விடக்கை விரும்பும் புலியுமெழில் மேலாய் விளங்கு
[மோர்பசுவும்
மடக்கி வெறுப்பை யொருதுறையி லருந்த தண்ணீ
[ராவகன்ற
படத்தை விரித்தேயெ லிதனக்குப்பைய நிழல்க
[ட்டினைக் கொடுக்க
கிடக்கும்கரிமா வொடு சிங்கம் கீர்த்தி செங்கோல்
[செலுத்திடுவான்.

(இ—ள்) தீனியாகிய விடக்குகளை இம்சிக்கும் புலியும், மேலாய் விளங்கிய பசுவும் பகையில்லாமல் ஒரு துறையிலே தண்ணீர் குடிக்கும். விசாலமாகிய படத்தைவிரித்து பாம்பானது ஆடிய நிழலிலே எலியானது நிழலுக்கு ஒதுங்கியிருக்கும், யானையும் சிங்கமும் ஓரிடத்திலே சஞ்சரிக்கும். (எ-று)

17. கறுத்துச்செறியும் பிறவரசர்களிப்பை நீக்குங்
[கடூரத்தான்
வெறுக்கைவேண்டி வந்தவர்க்கு வெறுக்க வளிக்குந்
[தியாகத்தான்
மறுத்துச்சொலாத வாசகத்தான் வந்தகுரவர்க்
[கன்பினன்
நிறுத்து மனதிற் சிவனடியார் நேசந்தனைப்
[பிரியாதான்.



(இ—ள்) கோபித்துவந்த சத்துருக்களிடம் சந்தோஷங்கள் போக ஜயித்துத் திரவியங்களை வந்த யாசகர்களுக்கு போதும் என்னும்படி கொடுக்கும் தியாகத்தான். சொன்ன சொல் பிசகாதவன், குருபக்தியுள்ளவன், சிவனடியார்களின் மேலன்பு வைத்து நடத்துபவன். (எ-று).

வேறு.

18. ஆறுநற்றொழி லந்தணர் முதலினோர் நடப்பத்
தேறுமவரவர் ஒழுக்கம் திறமாமெனச் செய்வோ
றுறுபூங்குழல் நங்கை யர்தங்கட்குக் கற்பு
வேறுபடாவகை புரப்பவன் சுவேதனும் வேந்தன்.

(இ—ள்) ஆறுதொழிலுடனே கிருத்தியம்செய்த பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்கள் அவரவர்கள் நடக்கை தப்பாமல் நடக்கச்செய்கின்றவன். வாசனைபொருந்திய புஷ்பமாலையைத் தரிக்கும் அளகபாரமுள்ள பதிவிரதைகளை கற்புதவறுமல் பாதுகாக்கின்றவன் இவ்வாறு, குணம்பொருந்திய சுவேதனன் என்றொரு அரசன் இருந்தான். (எ-று).

19. இந்த வண்மைக ளெலாம்பெறு மரசனுக் கினிதாய்
வந்த காதலி யொருவரு மிணையிலா மடந்தை
யெந்தலோ கத்துங்கற்புள வனிதையை இசைப்போன்
சுந்தரச்சுவேதன் சொற்படி நடக்கும் சுசீலையாம்.

(இ—ள்) இப்படியாகிய வண்மைகள் உடைத்தான அரசனுக்கு அன்புள்ள மனைவி எந்த உலகத்திலும், ரூபத்திலும், குணத்திலும், தயவிலும் இவளுக்குச் சமானமாக ஒருவரும் இல்லை. பதிவிரதைகளையெடுத்துச் சொல்லுமிடத்து சுவேதன் மனைவி சுசீலைக்கு நிகர் ஒரு பெண்களும் இல்லை என்பார்கள். (எ-று).

வேறு.

20. குறுமுனிவன் சுவேதனிடத் துற்றபோது
குணக்கடலை யெனவிவரைக் கும்பிட்டேத்திப்
பிறைநுதற்செங் கனிவாய்நீர்ச் சேலுக்கொத்த
பிணைவிழி நெட்டிலை வாழைத்தண்டேயூர்கள்

கறையடிமா கரிக்கோடு முலையதான
கன்னியர்கற் பெடுத்துரைத்துக் காட்டுமென்று
பறையவவர் சொன்னபடி யவளிருந்தாள்
பகர்வனதை முனிவரரேகேட்பீர் நன்றாய்.

(இ-ள்) இப்படிப்பட்ட சுவேதனிடத்திலே அகத்தியர் வந்தார். அவரைக் கண்டபோதே எழுந்திருந்து நமஸ்கரித்து குணமாகிய கிருபா சமுத்திரமேயென்று அனேக ஸ்தோத்திரம் செய்து சொல்லுகிறார். மூன்றாம் பிறைபோலே நெற்றியும் கோவைப்பழம்போலே அதரமும், சேல்கெண்டையைப்போலே கண்ணும், நீண்ட இணைபொருந்திய வாழைத்தண்டுபோலே தொடையும், யானைக்கோடு போன்ற ஸ்தனங்களுமுடைய பெண்களுடைய கற்புலக்ஷணங்களைச் சொல்லவேண்டுமென்று கேட்க அவர்சொன்னபடியே அவள் இருந்தாள் அதை நாம் உங்களுக்குச் சொல்லுகின்றோம். என்றார் சூதர். (எ-று)

21. ஒருபுருடன் மிகுந்தவழ காயிருந்திடினு
முவப்பாகவவனை நினைந்து ருகினாளேல்
வெருவருகா டதிலுழன்று கவலையுற்று
வெறித்தோடி மிகத்திரியும் பேயேயாவள்
மருவியமா புருடன்வெகு பசியால்வாட்
மனமகிழ்ந்து கருணையிலா தருந்துவாளேல்
திருகுசினத் தழற்கண்முக னீண்டகொம்புந்
திரியும்பெரும் பன்றியுமாய்த் திரிவளன்றே.

(இ-ள்) ஒருபரபுருஷன் மிக்கஅழகாயிருந்தால் அவனைக் கண்டு ஆசைப்பட்டு காமவிகாரத்தினாலே மனதிளகிசம்போகம் செய்தவள் பேயாகி பயங்கரமான காட்டிலே வெறித்தோடி அலைந்துதிரிவள், கொண்ட புருடன் மிகுந்த பசியினால் வாடியிருக்க அதனால் விசாரமில்லாமல் மனோசந்தோஷத்துடனே தான் அன்னம்புசித்தவள் அக்கினிபோன்ற கண்ணும் நீண்ட மூக்கும் திருகு கொம்பும், பெருத்த உடலுமான பன்றியாகி மலங்களைப் புசிப்பள்.



22. பெருகணவன் மிகுசினமாய் கோபித்தாலும்
பின்னு மெதிர்வார்த்தை களைப்பேசாதாளாம்
கருகுமனத்தவராகி யடித்தாலுஞ்
கவலையிலாதிருந்துமிகக் களித்திடுவார்கிடையா
வரியவனம் புசித்ததுமீந் தகப்பட்டால்
அமிர்தமின்று பெற்றனமென்றக மகிழ்ச்சிபெறுவார்
மருவுமவர்தனைப் பார்க்கில் மறித்துப்பாரார்
மரைமலர்தன் னடியையே பார்ப்பார்தாமே.

(இ-ள்) கொண்டபுருஷன் மிகுந்த கோபமாகிவைதால் எதிர்வார்த்தை சொல்லாமல் இருப்பவளாயும் பின்னும் அதிக கோபமாகி அடித்தாலும் மனதில் வருத்தமில்லாமல் மகிழ்வடைவாள். அவன் புசித்துமீந்த அன்னம் அகப்பட்டால் தேவாமிர்தம் கிடைத்தது என்று மிகவும் மகிழ்வுடன்புசிப்பாள். இக்கற்புடைப் பெண்களை அறிவீனர்களாகிய புருடர்கள் எவராகிலும் பார்க்கில் அவர்களைப்பாராமல் தாமரைப்பூப்போன்ற தமது பாதங்களைப்பார்த்து நடப்பார்கள். தனது கணவனைத் தவிர வேறு எவரைப் பார்த்தாலும் முகம் பார்த்துப் பேச மாட்டார்கள். (எ-று).

23. அனியகிர கத்தினிற்போ யொருவரோடும்
அன்பான வார்த்தைகளைச் சிறிதும்பேசா
ளினியகண வன்றுயிலே புரியுமட்டும்
இருந்துமிகத் தான்மகிழ்ந்தே பின்படுப்பா
ளினியவெழிற் தேசத்திற் சென்றவவன்
வருமட்டு எழிலுங் கொள்ளாள்
கனியுமலர் தனைநினைத்துத் தொழுவதல்லாமல்
கண்ணுதலோன் றனைமுதலாய்க் கருதிடாரே.

(இ-ள்) அயல் வீட்டிற்குச் சென்று ஒருவருடனும் அன்பான வார்த்தைகளைச் சற்றாகிலும் பேசாள். புருடன் நித்திரை செய்யும்வரை இருந்து பின் தூங்குவாள். புருடன் அன்னிய தேசம் சென்றிருந்தால் திரும்பி வரும்வரையில் அலங்காரம்

செய்துகொள்ளாள். தன் கணவனைத் தெய்வமெனத்தொழுவதல்லால் பரமசிவனையும் முதலாக நினைக்கமாட்டாள். (எ-று)

24. அழகைவிரித் திடுதிருமங் கலியம்நீத்த
வணங்ககளப் பந்தியினை வைத்தாளாகில்
நிழலைமுனிந் திடுமழற்கண்டிருக் கோடுற்ற
நீண்டமருப் பெருமைதனையு கைத்தோன்வந்து
தழுவியணைத் தொருவாமல் பாசங்கொண்டு
தனைப்படுத்திக் கும்பிபா கத்திற்பங்கக்
குழியிலவன் புருடனைக்கொண் டுய்ப்பாரென்று
குவலயத்திற் கற்புநூல் கூறுமன்றே.

(இ—ள்) திருமங்கலியம் இல்லாத கைம்பெண்களின் தலையில் அளகபாரமிருந்தால் அவளை நிழலைப் பார்த்து கோபிக்கும் அக்கினிபோன்ற கண்ணும் திருக்காய் முறுக்கிக் கொண்டிருக்கும் கொம்பினையுடைய எருமைக்கடாவின் மேலேறிய எமன் அன்புசெய்து உபசரியாமல் பாசக்கயிற்றினாலே கட்டிக்கொண்டுபோய் நரகக்குழியிலே போடுவான் என்று கற்புநூல் சொல்லும். (எ-று)

வேறு.

25. இந்தநற் கற்புநூ லிதைசுவே தனுக்கேயுரைத்து
அந்தமில் குறுமுனியறையும் போதவன்றன்
சிந்தனை செய்யும் கற்புளதேவியுந் தெரிந்தே
முந்துறு வாணகை யாளவன்கூட முன்னுவாள்.

(இ—ள்) இவ்வாறு பதிவிரதைகள் இருக்கும் தன்மையை சொல்லிய கற்புநூலை அகத்தியர் சுவேதனுக்குச்சொல்ல அதை அவன் மனைவி கேட்டு சந்தோஷமடைந்தாள். (எ-று).

26. அன்பு மிக்குள கற்பினுக் கருந்ததி யன்னா
ளின்ப மிக்குளா ளவளொடு மெய்திடு நாளின்



முன்புசெய் வினைத்தொட ரதனால் மகவின்றி [முயன்று
என்ன பாதகஞ் செய்தனமோவென்றே யிசைப்பார்.

(இ—ள்) இப்படி அன்புமிக்க கற்புடைய மனைவியோடும் கூடி சுகங்கள் அனுபவித்திருக்கும் நாளையில் பூர்வத்தில் செய்த தீவினையினாலே புத்திரனில்லாமற் அதிக விசனமேற்பட்டு என்னபாதகம் செய்தோமோ என்றிருந்தான். (எ-று)

27. இருக்குங் காணரி தாயவர்க் காயினு மிறைஞ்சுங்
குருக்கட் காயினு மறுமுகர்க் காயினுங் கொடித்தேர்
அருக்கர்க் காயினு முமையவட் காயினு மைந்து
கரத்தர்க் காயினுங் காணுறு மடியவர்க் கெனினும்.

(இ—ள்) இருக்குவேதமும் காணுதற்கரிதாகிய பரமசிவனுக்காகிலும், பரமசிவனைத் தோத்திரம்செய்து தொழுகின்ற குருக்களுக்காயினும், ஆறுமுகக்கடவுளுக்காகிலும், கொடியாகிய இடபமுடைய ரதாரூடரான சூரியனுக்காகிலும், ஈஸ்வரிக்காகிலும், ஐந்துகையினையுடைய விநாயகமூர்த்திக்காகிலும் சிவபூசைசெய்யும் சிவனடியார்க்காகிலும். (எ-று).

28. முனிவர்க்காயினும் மிமையவர்க் காயினு முயன்ற
பனவர்க்காயினும் பகலவர்க் காயினும் படித்த
வினையர்க்காயினும் பாதகம் புரிபவர் விடியாத்
துனிமிகக் காரிருள் பாழ்நரகத்தினிற் றுய்ப்பார்.

(இ—ள்) முனிவர்களுக்காயினும், தேவர்களுக்காயினும், குழந்தைகட்காயினும், பழுதறக்கற்ற வித்வான்களுக்காகிலும், பாதகமாகிய பொல்லாதவைகளைச் செய்தவர்கள் தரித்திரப்பட்டு பின்னும் ஒருகாலமும் விடியாத இருளாகிய பாழ்நரகத்திலே வீழ்வார்கள். (எ-று).

29. இவர்கள் பாதகந்தன்னி லேற்றமா யிருப்பது
தவர்களுக் கெல்லாந் தலைவனாய் தண்ணளிசுரக்கும்

35. ஐயனாலயத்தில் வந்தே யைங்கணை மயக்கத் தாலே
நையுநுண் ணிடையார் தம்மை நண்ணவே நினைத்தா
[னாகில்
வெய்யெம தூதர்வந்து மடித்து வாயனற் கட்சிந்தி
வெய்ய கோபத்தால் மாட்டி வேலினாற் குத்திவீழ்ப்பார்

(இ—ள்) ஆலயத்திலே வந்து சிவதரிசனம் பண்ணி பிரதக்ஷணம் செய்கிறபோது பெண்களைக்கண்டு ஆசைகொண்டு மன்மத பாணத்திலே மெலிந்து அவர்களைச்சேர நினைத்தானாகில் அவனை எமகிங்கிலியர்கள் வந்து மடித்த வாயுங் கண்களில் தீப்பொறியும் பறக்கக் கோபித்து வேலினாலே குத்தி நரகத்திலே தள்ளுவார்கள்.

36. விடையவ ருமையோர் பாகன் வேதகீதத்
[தன்கங்கைச்
சடையவன் றரிக்கும் பூவை தானணிந்திட நினைத்தால்
கொடிய சண்டாளன் தாதிற் கூடிய குவலயத்தில்
முடவனூமைய தாய்வந்து மூடமாய்ப் பிறப்பரன்றே.

(இ—ள்) பரமசிவன் தரிக்கின்ற பூவை தான் எடுத்து அணிந்துகொள்ள நினைத்தால் அவன் பாவியான சண்டாள ஜென்மமாகி பூமியில் மூடவனூமையாகி மூடமாகவும் திரிவான். (எ-று).

37. தீர்த்தத்தி லுமிழ்ந்த பேரைத் தீயுமிழ் நரகந் தன்னிற்
சேர்த்தகைத் தூதர் தம்மைச் சீச்சியென் றுரைத்துக்
[கட்டி
கூர்த்தத்தின் வ்ருத்தஞ் செய்யக் கும்பியிற் கிடத்தினால்
[நாம்
தீர்த்தெதைச் செயினுந் தீராதம் மடையோர்க்
[கென்னும்.

(இ—ள்) யாதாமொருவராயினும் தீர்த்தத்தில் உமிழ்ந்தார்களேயானால் அவர்களை எம தூதர்கள் மகாபாவியென்று பாசத்தினாலே கட்டி சூலத்தினாலே குத்தி நரகத்திலே போடுவார்கள். அம்மகாபாவியைக் கையினாவே தீண்டினவன் என்று



அந்த எமதூதரை நகரத்திலே போடுவார்கள். அவர்களை அதிலே கிடக்கும் கிடம் நாமவரை அண்டித்தின்றால் அதை எப்படித் தீர்த்துக்கொள்வோமென்று அண்டாது. (எ-று).

38. கோவிலி னுமிழ்ந்த பேரைக் கும்பிபா கத்தில் வீழ்த்தித்
தீவிர மாகத் தின்பாய் தீர்க்க மீதென் றுரைக்கப்
பாவிக டன்னைப் புசித்துப் பயந்தரு வருத்தே கிடம்
நாவினிற் சுவையும் பாரா நடுக்குற்றுக் கிடக்குமன்றே.

(இ—ள்) கோவிலிலே எச்சில் உமிழ்ந்தவர்களை எமதூதர்கள் நரகத்திலே தள்ளி புழுக்களைவிட்டுத் தின்னென்றுசொல்ல இவன் மகாபாபி தின்னலாகாது என்று அருவருத்து புழுக்கள் தனது நாவால் ருசியும்பாராமல் நடுக்கமுற்றுக்கிடக்கும். (எ-று)

39. இன்ன பாதகங் களிலென்ன செய்தோமோ
தன்னையே நிகர்க்குங்குரு சரண்தொழு திலை
அன்ன பாதகந்தனை யகற்றிக் கொளுமென
உன்னியே வந்தரசவர்க் கவருரைத்தார்.

(இ—ள் இப்படிக்கொத்த பாதகங்களில் நாம் என்ன பாதகத்தைச் செய்தோமோ, எப்பேர்பட்ட பாதகமானாலும் நமது குருவினிடத்திற்சொல்லி அதைத்தீர்த்துக் கொள்வோம் என்று நினைத்து வந்து குருவினது பாதத்தில் வணங்கி தனது வியாகூலத்தைச் சொல்லிக்கொண்ட அரசனுக்குக் குருவானவர் மிக்க கிருபையுடனே அருளிச்சொல்லுவார். (எ-று!.

40. கற்பமனுகற்பமுப கற்பமென்றொரு கருதுமக
கற்பமெண்ணான் காகுங் கற்பஞ்
சொற்றிடுசத்தியோ சாதத்தாலேற்றுவாம மந்திரத்
துருட்டித் தற்புடத்தாலுலர்த்தி யெடுத்தே
எற்றிடும் கோரத்தாற்சுட் டீசானம் விளம்பி
யெடுத்தமைப்பது வேயாகு மனுகற்ப
முற்று மூலரணிய கோமயத்தை யெடுத்து
மொழியு மகோரத்தினாற் சுட்டிடுதல்முறையே

சிவனுக்கத்தமாய் செய்திடும் தீமைக ளதனை
எவர்களாகிலும் பார்த்த பேருட னரகாழ்வர்.

(இ—ள்) மேற்சொன்னவர்களுக்குச் செய்த பாதகத்தினுமேலான பாதகமானது தவம் செய்பவர்களுக்கெல்லாம் தலைவனாகி கிருபை சுரந்தொழுகிய மேகமாகிய சிவனுக்குப் பொருளாகிய ஞானிகளுக்கு ஒருவன் பாதகம் செய்தவர்களைப் பார்த்தவர்களும் மாநரகத்திலே வீழ்வார்கள். (எ-று).

30. விடையவ னிருக்குங் கோவில் விளக்கெரியாமற் [கைபட்
டிடையினி லவித்தபேரை யெடுத்து மாநகரத்துய்ப்பக்
குடைய தாயிருந்த கீடங்கிட்டிய வவனைத்துய்த்தா
லிடைவிடாப் பாவமென்றே யெண்ணித் துன்னு [திருக்கும்.

(இ—ள்) இடபவாகனரான பரமசிவன் எழுந்தருளி இருக்கும் கோவிலில் வைத்திருக்கும் திருவிளக்கைத்தெரியாமற் பராமுகமாய் கைபட்டவித்தபேரை எம தூதர்கள் கொண்டு போய் நரகத்திலே போடுவார்கள். அப்படித் தள்ளுண்டு கிடக்கின்றவரை அதில் இருக்கும் புழுகூட அவனைக்கிட்டிப் புசித்தால் மகாபாபமென்று புசியாமல் இருக்கும் (எ-று).

31. ஆலயந் தன்னில் வந்தே அவிழ்த்தவர் கூழை தன்னை
வேவியிடு கும்பி பாக மென்னுமா நரகம் வீழ்த்தி
மாலுள யெமதூதர் மாதிரமெனு மோரெட்டின்
பாலினி லிருந்து காத்துப் பயத்தினைச் செய்வ ரன்றே.

(இ—ள்) ஆலயத்திலே வந்து மயிரையவிழ்த்து உதறினவர்களை வேவியிட்டிருக்கும் நரகத்திலே தள்ளி மேகம்போல சரீரமுள்ள யமதூதர்கள் எட்டுத்திக்கிலும் இருந்துகொண்டு பயமுறுத்துவார்கள். (எ-று).

32. வந்தடி யிட்டுக் கோவில் மரத்தினைத் தறித்த பாவி
சிந்திடும் மூளை யெல்லாஞ் சிறுகவே தின்னென் [றுய்த்தால்



பந்தியா யிருந்து கீடம் பசியெலாம் போகப் பிந்தி
முந்தியீதென் றென்றோதி புசித்திடும் மகிழ்ச்சியாலே.

(இ—ள்) கோவில் மரத்தை வெட்ட வேண்டுமென்று வந்து மரத்தை வெட்டினவனை மகாபாவியென்று அவன் சரீர மாமிசங்களையெல்லாம் புழுக்கள் புசிக்க புழுக்கள் நிரம்பிய நரகத்திலே தள்ளுவார்கள். அப்புழுக்கள் பந்தி பந்தியாக இருந்து அதன் பசிகளால் பிந்தி முந்தி என்று புசித்து சந்தோஷமாக இருக்கும். (எ-று).

33. கோவிலினி ருந்த வில்வக்குறுந் தளிரெடுத்தே மற்றத்
தாவுமெய்ப் பூசைக் கென்றே தரித்திடிற் கும்பிபாக
மேவுமில்லாக ஆழ்வர் வெடித்த சொல்லார் கனன்று
மூவடி வேலாற் குத்தி முடுக்கிய பின்பு தானே.

(இ—ள்) ஆலயத்திலே வைத்திருக்கும் வில்வத்தளிரை தன் சிவபூசைக்கு வேண்டுமென்று எடுத்துக்கொண்டு வந்து தரித்தவனை யெமபடர்கள் கடூரமான வார்த்தைகள் சொல்லி கோபித்துக்கொண்டு மூன்று கவரான சூலத்தாலே துரத்திக் குத்தி பின்பு கும்பிபாகமாகிய நரகத்திலே போடுவார்கள். (எ-று).

34. சங்கர னிலாத வூரிற் றனிக்குடி யிருந்தா னாகிற்
கிங்கிலி யர்க்கா யூனை வளர்த்தவன் கேடில் பாவி
கங்குலிற் காமமாதி கவலைகள் வந்து மூடு
மங்கிய வாழ்வுஞ் சோரும் மரணநோய் முடுகுமன்றே.

(இ—ள்) சிவனுடைய ஆலயமில்லாதவூரிலே யிருந்தானேயாமாகில் அவன் அன்னத்தைப் புசித்து சரீரத்தை வளர்த்தது எம கிங்கிலியர்களுக்கு வளர்த்த சரீரம் அவன் மகாபாவி. அவனுக்கு காமக்குரோத மோகலோப மதமாச்சர்ய முதலான கவலைகள் வந்து மூடி தரித்திரமும் வந்து மூடும் மரணநோயும் வந்து பிறவியில் அழுந்துவான். (எ-று).

(இ—ள்) கற்பமென்றும், மனுகற்பமென்றும், உபகற்பமென்றும், மககற்பமென்றும் நான்கு வகைப்படும். இது செய்யும்படி தர்ப்பையினலே உச்சிபண்ணியதிலே சத்தியோசாதமந்திரத்தினலே கோமயத்தை எடுத்து கோசலம்விட்டுப் பிசைந்து வாமமந்திரத்தினலே உருண்டை செய்து தற்புருடமந்திரத்தினலே அதை உலர்த்தி எடுத்து அகோர மந்திரத்தினலே சுட்டு ஈசான மந்திரத்தினலே எடுத்து வைத்துக்கொண்டது கற்பம். அனுகற்பமாவது உலர்ந்த கோமயத்தையெடுத்து அகோர மந்திரத்தினலே சுட்டு எடுத்து வைத்துக்கொள்வது.

41\. சுட்டிடு சாம்பலைத் துகிலா லரித்தே யானீ
சொரிந்துருட்டிய கோரத்தாற் சுடுதலுப கற்ப
மட்டு நியமித்திலாவச் சாம்பலைலா மெடுத்து
வயங்கிடவே தரிப்பது நல்ல கற்பமாகும்
மிட்டமுட னிவ்வகைய பூதிதன்னை யெடுத்தணிவார்
பிறவிதனை யெடுத்தெறிவ ரெல்லாம்
விட்டபெரியவர் தானுநீற்றை விட்டால்
நல்லவரல்லரென்றே விளம்பு மாகமமே.

(இ—ள் சுட்டுக்கிடந்த சாம்பலை வெள்ளைச்சீலையினலே அரித்துகோசலம்விட்டுபிசைந்து உண்டையாக்கியகோரமந்திரத்தினலேசுட்டுஎடுத்து வைத்துக்கொள்ளுகிறது யுபகற்பமென்பது நியமகமில்லாத சாம்பலைக் கொண்டுவந்து தரிப்பது யககற்பமென்று சொல்லுவது. இப்படிச்சொல்லிய விபூதியை எடுத்துத் தரித்துக்கொண்டவர்கள் பிறவியைத் தள்ளினவராவார்கள். எல்லாவற்றையும் துறந்தவர்களும் விபூதியைத்துறந்தால் மோக்ஷம் கிடையாது. அவர்கள் நல்லவர்கள் அல்ல என்னும் ஆகமங்கள்.

42\. நத்தியிடு சத்தியோ சாதமதியினில் நந்தை
பத்திரைசுரபி சுசீலையொடு சுமனை
யித்தகைய பேர்பெற்று வந்திடு நல்லுணர்வோ
ரிதன்சாதி வகையறிந்தே யெழினீறுபுனைவார்



அத்தனொடு மனைசுற்றத் தாரைஅழித்திட்டே யறியாத
கற்புகளை யழித்தவரைக் கூடிப்
பத்தியிலா தருந்துநீர் பந்தலிற் றீவைத்துப்
பாதகங்கள் புரிந்திடினும் பாறியகன்றிடுமே.

(இ—ள்) ஆசையுடன் சத்தியோசாத முதலான ஸ்தானங்களில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை இவ்வகையான சாதிவகையினையறிந்து விபூதி தரிப்போர்கள், நல்ல அறிவினையுடையவர்கள். மகாபாதகமாகியவர்கள் யாரெனில் ஆலயங்களை இடித்தல். உறவினர்களுக்குத் துரோகம் செய்தவர்கள், கற்புடையவர்களைக் கெடுத்தவர்கள், தண்ணீர்ப்பந்தல், தருமச்சாவடி இவைகளைக் கொளுத்தினவர்கள் இப்படிப்பட்ட மகாபாதகங்களைச்செய்தவர்கள்பாவம்நீங்கி பரமகதியடைவார்கள். (எ-று). பூதியணிபவர்

43\. இவ்வகைத் திறநீற்றினை யெவர் தரித்தாலு
மெவ்வகைத்திற நல்வினை யெலாம் வந்து சேருஞ்
செவ்வகைத்திறல் ஞானமுஞ் சித்தியும் சேரும்
மெய்வகைத் திறனுகிய நாற்பொருள் விளங்கும்.

(இ—ள்) இப்படி விளங்காநின்ற விபூதியை யாவரேனும் தரித்தார்களேயானல் அவர்களுக்கு அனேகவிதமாகிய யோகங்களும், ஞானங்களும், சித்திகளும் எவற்றிலும் அதிகமாகிய சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவியும் உண்டாகும். (எ-று).

44\. ஆதியந்தமு மளப்பரி தாயவன் றன்னை
யாதுகேட்பினு மிமைப்பினிற் றருவது போல
வோதுநற் குணமொடு சமதமாதி களெல்லாம்
பூதியைத் தரித்திடும் பொழுதேவந்து பொருந்தும்.

(இ—ள்) ஆதியந்தமு மறியாத பரம்பொருளாகிய பரமசிவனை பக்தி செய்யும் அடியார்கள் மனதில் எதைச் சிந்தித்துக் கேட்டாலும் கேட்டபொழுதே அவர் கொடுப்பதைப்போல சகலகலையும் சமதமாதி முதலானதும் வந்து கூடுகிறது. யாவும் விபூதியைத் தரித்துக்கொண்டவுடனே வந்து கைகூடுகிறது. (எ-று)

57. அப்பொழு தினிலேமுத்தா லணிபெறு முலைகறுத்தாள்
ஒப்பிலெப் பொழுதுங் கூர்ந்த சிறுபசி தீரவுண்பாள்
முப்பொழு துங்கொள் மொய்ம்பினுற் றுயில்
[சேர்வாள்
மெய்ப்படி வந்தான் மெத்த வெளுத்தனள் புளிக்கு
[வந்தாள்

(இ—ள்) அப்படி கர்ப்பந்தரித்தபோது முத்துமாலை தரித்த முலைக்காம்பு கறுத்து, சிறுபசியும் உண்டாகி, அற்பமான அன்னம் உண்டு, மூன்றுகாலமும் தள்ளாமையால் மிக்க நித்திரை யுண்டாகி, சரீரமெல்லாம் வெளுத்து புளிப்புமேல் அதிகப் பிரியமுள்ளவளாய் இருந்தாள். (எ-று)

58. இந்தமா வயர்விற் கேற்ற விலக்கண முழுதுங்கொண்டு
சிந்தனை மகிழ்ந்த தாயின் திருவயிற் றுததி தன்னிற்
கந்தமா வமுர்த வித்து கலந்திடும் தன்மை யோடு
யந்தமா யடங்குமா போல மர்ந்தனன் மைந்தனம்மா.

(இ—ள்) மசக்கைக் கேற்ற விதங்களெல்லாம் உண்டாகி மிக்க மகிழ்வுற்று, தாய் வயிற்றிலே சமுத்திரத்தில் அமிர்தம் இருந்தது போல அமர்ந்திருந்தான். (எ-று) மைந்தன்.

59. இன்னணம் பத்துமாத மிருந்ததாய்க் கன்றே யாழ்ந்த
தன்னிக ருததிவெய்யோன் றலை யளித் ததுபோல்
[வெண்மை
துன்னிய சங்குக் கெல்லாந் துறையெனுஞ் சலஞ்ச
[லங்கள்
மன்னுமுத் தளித்தாற்போல மைந்தனை யினிதினீன்றாள்

(இ—ள்) இப்படியாகப் பத்துமாதம் கர்ப்பத்திலிருந்து தனக்குத்தானே நிகரான நீரிலேயிருந்து சூரியன் உதயமாகுதல் போலவும் வெண்மை மிக்க சங்குகளுக்கெல்லாம் மேலாய சலஞ்சலமானது. முத்தை ஈன்றது போலவும் மகாசந்தோஷத்துடனே மகவைப் பெற்றாள். (எ-று)



60. புண்ணிய வனத்திற் காட்டிற் புகுமுழை யாற்றின்
[கோட்டிற்
கண்ணுழை யாதசோலை யதனிடைக் கவலைநீத்துப்
பண்ணிய தவத்தோர் நீங்காப் பதவியி லிருக்குந்தேவ
ருண்ணிறை மகிழ்ச்சியோடு முதவினு ராசீர்வாதம்.

(இ—ள்) புண்ணிய விருக்ஷங்களான மந்தாரை முதலான மரத்தின் கீழே தவம் செய்பவர்களும், காட்டிலே இருந்து தவம் செய்பவர்களும், ஆற்றிலேயும், காத்திரங்களாயிருக்கிற கொம்புகளிலே யிருந்தும், கண்ணிற்குத் தெரியாத தோப்புகளிலே யிருந்து தவம் செய்பவர்களும், சகல கவலைகளும் மறந்து மகாதவத்தை யுடையவர்களும், தேவர்களும், மிக்க சந்தோஷத்துடனே சுவேதனுடைய புத்திரன் தீர்க்காயுள் உடையவனுக சகல சத்துருக்களையும் ஜெயம்கொண்டு எல்லா பாக்கியமும் பெறுக என ஆசீவதித்தார்கள். (எ-று)

61. தனையன் பிறந்தபொழு தேயறத்தின் றகுதிநாலெட்டது
[பிறந்த
மனதினெழுந்த வறிவுபொறை வாய்மை தூய்மை
[யன்படக்க
மினிய குண வைராக்கிய மின்பஞானம்
உபாதி யின்மை
இனிய நிறை வுடன் சமைத்தே எவையும் விளங்கிப்
[பிறந்ததே

(இ—ள்) இந்த புத்திரன் பிறந்தபோது முப்பத்திரண்டு தருமமும் மற்றெவையும் மனதிலே எழுந்த அறிவு பொறுமை, சத்தியம், தூய்மையாகிய சுத்த அடக்கம், இனிய குணங்கள், வைராக்கியம், ஞானம், உபாதி நிறைவு இவை முதலான சகல நன்மைகளும் அவனுடனே பிறந்தது. (எ-று)

62. ஈன்ற பொழுதை விடமகிழ்ச்சி யின்பமெண்
[றுண்டென வுரைத்தா
ரான்ற திருவள் ளுவநயினுரதுபோ லெனக்கும்
[தந்தைக்கும்

45. காலமூன்றினு மிரண்டினு மதியினுங் கருதிப்
பாலநேத்தி ரன்றனை யுணர்கிலும் புலப்படான்
நாலுவேதமு மற்றுள கலைகளு நவிலும்
பாலிதாமெனும் பூதியின் சிறப்புமப் பரிசே.

(இ—ள்) செல்காலம் நிகழ்காலம் எதிர்காலம் அறிந்து அறுபது வருடத்தில் பன்னிரண்டு மாதத்தில் விரதங்கள் பூசைகள் தோத்திரங்கள் அறிந்து செய்யாதவனுக்கு யாதொரு சித்திகளும் பலன்களும் கைகூடாததுபோல நாலுவேதமும் அறுபத்துநாலு கலைகளும் சொல்லிய விபூதியைத் தரியாதவனுக்கும் யாதொரு பலன்களும் கைகூடாது. (எ-று)

46. மாற்குநான் முகன்றனக்கும் வானவர்க்கு மன்பதைக்கும்
வேற்கை யோனுக்கும் வெள்ளைவாரணத் திருப்பவற்கும்
ஏற்கு வெண்ணிலாச் சடைய்வரு ளெனச்சொல்லும்
நீற்றை யன்பிஞல் பூசிடில் நிமலர் பேறுண்டாம்.

(இ—ள்) மகாவிஷ்ணுவுக்கும், பிரம்மாவுக்கும், தேவர்களுக்கும், மனிதர்களுக்கும், குமாரசுவாமியை ஒத்தவர்க்கும், தேவேந்திரனுக்கும் மற்றுமுள்ள பேர்களுக்கும் முன்சொன்ன விபூதியைத்தரித்தால் மூன்றும் பிறையைத் தரித்த சடாதரராகிய சிவபெருமானுடைய அருளிஞல் கைலாச பதவியுண்டாகும். (எ-று)

47. நன்றியே முதலாகிய நற்குண மெல்லாங்
கொன்று பாதகம்புரிந்த வராயினுங் கொடுத்தே
யென்றுங் கீர்த்தியைப் பெற்றவர்தமை யிகழ்ந்தவரும்
வென்றியாகிய பூதியைத் தரிக்க வீடுறுவார்.

(இ—ள்) செய்த நன்றியை மறந்தவன் சற்குணங்களை விட்டு துர்க்குணத்துடனே மகா பாதகங்களைச் செய்தவன் சகல தானதர்மங்களையும் செய்து கீர்த்தியைப் பெற்ற உத்தம புருஷரை இகழ்ச்சி செய்தவன் முதலிய பாதகர்களாஞலும் விபூதி தரித்தார்களே யாஞல் அவர்கள் மோக்ஷமடைவதற்கு சந்தேகமில்லை. (எ-று)



48. பூதி தன்னையே செங்கையிற் பொற்புட னேந்தி
யோது மன்பினிற் புனற்றெளித் தொருமையிற் குழைத்தே
தீதில் புண்டரமாயினுந் திகழ்கடுகள வெனினும்
காதல் தந்திட வணிபவர் கயிலையின் வாழ்வர்.

(இ—ள்) இப்படி விபூதியை எடுத்து இடது கையிலே வைத்து தண்ணீர்விட்டுக் குழைத்து திரிபுண்டரமாகத் தரித்தாலும் தனக்கு மனம் தோன்றினபடி தரித்தாலும் பரமசிவன் வாசம் செய்யும் கைலாயத்திலே இருப்பார். (எ-று)

49. ஏற்கு நெற்றி மார்பிருவிலா இருபுற முழங்கை
யேற்கு மாறுருப்பிருக வர்ப்புறங்கள் மீதினில்
நோக்க மூன்றுடையான் திருநீற்றினை நொடியிற்
றேக்கவே யணிந்திடுபவர் சிவகதி சேர்வார்.

(இ—ள்) சிரசு, நெற்றி, மார்பு, நாபி, முழங்கால், தோட்கள் இரண்டு, முழங்கை, மணிக்கட்டுகள், கண்டம், உபயபாரிசம், அபரமுச்சி இத்தானங்களில் திருநீற்றை விதிப்படித்தரித்தவர்கள் சிவகதி பெறுவார்கள். (எ-று)

50. சுந்தரக் கனிவாயிஞ டுணைவனீ றதனை
மந்திரத்தொடு தரிப்பினு மதுதனை மறந்து
தந்திரத்தொடு தரிப்பினுந் தகையிலா தியன்ற
வந்தரத்தொடு தரிப்பினு மமலனே யாவர்.

(இ—ள்) அழகாகிய கனிபோன்ற வாயினையுடைய பார்வதி நாயகஞகிய பரமேசுவரருடைய விபூதியை மந்திரத்துடனே தரித்தாலும் மந்திரத்தை மறந்து தந்திரத்திஞலே யாகிலும், யந்திரத்திஞலே யாகிலும் தரித்துக்கொண்டானே யாஞல் அவனே சிவன் ஆகும் என்று ஆகமங்கள் செப்பும் (எ-று)

51. உளவுபோ லொருத்தன் குடிக்கே யுலைவைத்த
விளகனீங்கிய நெஞ்சினிற் கபடஞ்செய் திருத்தல்
களவும் பொய்மையுங் கருக்குலைத்திட தீவைத்த
லளவிலாத பாதகங்களு மரன்பொடி யறுக்கும்.

(இ—ள்) உளவுபோலே வெகு இஷ்டமாக இருந்து ஒருவன் குடியைக் கெடுக்க நினைத்தவன், கபடம் செய்கின்றவன், களவு பொய் யுரைத்தவன், கருக்குலைத்தவன், தீவைத்தல் முதலிய பாதகங்கள் செய்திருந்தாலும் ஒருதரம் விபூதியையெடுத்து தரித்துக்கொண்டால் அம்மகா பாதகங்கள் எல்லாம் நீங்கி புண்ணியத்தைக் கொடுத்து மோக்ஷம் கிடைக்கும்.

52. ஆகையா லிந்தத் தன்மையை யுளநீ
றணிந்திடிற் பாதக மனைத்தும்
போகுமேயதன் பினீங்கள் மாதவத்தைப்
புரிந்திடிற் புத்தி யுண்டான
வேகமாமதலை வந்துதித்துங்க
ளிச்சையைத் தீர்ப்ப னென்றுரைத் தான்
தாகமோகங் கடலைத் தணித்தின்ப
சாகரத்துய்த் திடுமென்றார்.

(இ—ள்) இப்படிப்பட்ட விபூதியை அன்புடனே எடுத்துத் தரித்துக் கொண்டால் சகல பாபங்களும் போகும். பின் இருவரும் தவம் செய்தீர்களே யானால் நற்புத்தி யுண்டான தலையுடைய புத்திரனுண்டாம் என்று சுவேதனுக்கு தாகமோகங்களைத் தீர்த்து நன்மையாகிய சமுத்திரத்திலேயமுத்தி ரக்ஷிக்கும் என்று சொன்னார். (எ-று)

53. திக்கெலாம் புகழ் செல்வமுங் கல்வியுஞ் சிறந்த
வொக்கநீதியு முயரறி வெத்தனை பெற்றுந்
தக்கதாகிய விருமைக்கும் பயன்றருந் தகுதி
மக்களின்மையால் மனனவன் மனமிக நொந்து

(இ—ள்) எட்டுத் திக்கிலும் கீர்த்திபெருகும் செல்வமும் வித்தையும் சிறப்பு தங்கிய உறவினர்களும், நீதியும் உயர்ந்த அறிவும் எத்தனை அதிகமாக இருந்தாலும் இகத்திலே கீர்த்தியும் பரலோகத்திலே மோட்சமும் கொடுக்கும். புத்திரனில்லாத நம் வாழ்வு என்ன வாழ்வு என்று சுவேதராஜன் மனம் மிகவும் நொந்தான். (எ-று)



54. மட்டிலாச் செல்வமனைத்தினு மாசையை மறுத்து
விட்டமைச் சரேமேதினி காத்திட வமைத்து
மட்டுவார்குழல் மனைவியுந் தானுமாய் வனத்திற்
கிட்டிநான் றவம்செய்வதே கிரியையாய்ப் பிடித்தே.

(இ—ள்) இவ்வாறு சுவேதன் நினைத்து தனது பொருள்கள் யாவும் விடுத்து தனது இராஜ்யத்தை மந்திரிமார்களிடம் ஒப்புவித்துவிட்டு தானும் தன் மனைவியுமாக வனம் சென்று தவம் செய்வதே என்று உறுதியாகப் பிடித்தான். (எ-று)

55. மழைதவழ்ந்து யரும்மலைகளும் வேடரு மாவும்
முழையுஞ் சீயமு மான்புலியுடன் பறவை
விழையும் வேய்களுங் கிழங்கொடும் கனிபொய்கை
தழைகொள் மாவனந் தன்னிலே தவமுயன்றன்றே

(இ—ள்) மேகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற உயர்ந்த மலைகளும், முழைகளும் வேடரும் சிங்கங்களும், யானைகளும், புலிகளும் நெருங்கி சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஆசையுடனே பட்சிசாலங்களும், விருட்சங்களும் நெருங்கியிருக்கும் மூங்கில்களும் இருக்கும் காட்டில் கனிகள், கிழங்குகள், குளங்கள் அநேகம் மிகுந்த காட்டில் சுவேதன் தன் மனைவியுடன் தவம் செய்தான். (எ-று)

56. அரிய மாதவம் செயுநாளவிர் மதிச்சடையோன்
றெரிவை முன்னமோர் முதியராய் சிவந்தமாங்கனியை
யுரிய மைந்தனைப் பெறுகென யுதவியே யகல
பரிய வேந்தனுக் குரைத்துணப் பிள்ளை யுண்டானாள்

(இ—ள்) இப்படி இருவரும் அரிதான தவம் பண்ணிக் கொண்டிருக்கும் நாளையில் ஒருநாள் பிரகாசம் பொருந்திய மூன்றும் பிறைச் சந்திரனைத் தரித்தருளிய பரமசிவன் ஒரு விருத்தராய் வந்து ஒரு சிவந்த மாங்கனியைக் கொடுத்து நல்ல புத்திரனைப் பெறுவாய் என்று சுவேதனின் மனைவியிடம் சொல்லி மறைந்து போனார். கனியைப் பெற்று தன் கணவனிடமு முரைத்து அக்கனியைத் தின்றாள். அதிலிருந்து கரு தரித்தாள். (எ-று)

மூன்று நயனத் தவரடியார் மொழியால் பெரியனென்
[பதுதான்
றேன்று கின்ற மதலேதனக் காளுல் மகிழ்ச்சி தொலே
[யாதே

(இ—ள்) பிறந்தது ஆண் என்று கேட்டதாயும் தந்தையும் அதிக மகிழ்வெய்துவது, சகலமும் கற்று ஒரு சபையிலே அஞ்சாமல் பதில் சொல்லும்போது இவன் கல்வியிற் பெரியவன் என்று சகலரும் சொல்லக் கேட்டபொழுது வள்ளுவர் சொன்னபடி பரமசிவன் அடியார் நல்ல புத்திரன் உண்டாவான் என்று சொன்ன அருளினுல் உதித்த புத்திரன் ஆகையால் தாய்தந்தை அடைந்த மகிழ்வை நம்மால் சொல்ல முடியாது. (எ-று)

63. கூறும் யாழினிசை யினிது குழலினேசை யினிதென்
[னத்
தேறுமவர் சொல்நீக்கித் தெருண்ட வனேக்குந்
[தந்தைக்கு
மாறிலா மகிழ்வுபெற மழலே மொழிந்த மமிழ்தினுக்கும்
வீறுமினிமை பெறக்கூட விசைந்து மகிழ்ச்சிபல செய்
[தார்

(இ—ள்) யாழினிசை இனியது, குழலினிசை இனியது என்று தன் குழந்தையின் மழலேச்சொல் கேளாதவர் சொல்லுவார்கள். அதை நீக்கி தனது புத்திரன் மழலேச் சொல்லாகிய அமிர்தத்தைக் கேட்டு சந்தோஷம் அடைந்தார்கள். (எ-று)

64. பெரியோர் கேண்மை யெனக்கவினுர்
பிறையும் போல வளருநா
ளொருமை யாகக் காமவன்ம
னென்று பேர்தரித் திட்டார்
பெரிதாய் நடாத்தி விலங்காதி
பிணியால் வருமெக் கவலேகளும்
அரிதாயிருந் தோரைந் தாண்டு
திரங்பி வாழுமமை யத்தில்



(இ—ள்) சகல சாஸ்திர புராணங்களும் கற்றறிந்த பெரியோரிடத்திலே பயின்றவன் புத்தி எப்படி உயருமோ அதுபோன்றும் வளர்பிறைச் சந்திரன் போலவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மிருகங்களின் பயமும், ஏனேய தோஷங்களும் வராமல் பரிகாரங்கள் செய்து கொண்டும், பெரியோர்களால் காமவன்மனென பெயரிடப்பட்டு ஐந்து ஆண்டு வளர்ந்தான். (எ-று)

65. புண்ணிய வுவாவிற் பொங்கும் கடலென மகிழ்சசிபூத்த
வண்ணலு மணி பொன்ளுடை யந்தண ருவப்ப நல்கி
யுண்ணிறை யன்புகூர வுலகத்தை விடுத்த ஞானக்
கண்ணினேர் தமக்கு மன்னங் கனிநெய் பாலுடனளித்
[தான்.

(இ-ள்) பூரணச் சந்திரனேக் கண்ட கடல் பொங்கி உயர்வது போல சுவேதனும் வேதியர்களுக்குப் பொன் முதலிய தானங்கள் உவக்கக் கொடுத்தும், ஞானம் மிக்க பெரியோர்களுக்கும், சிவனடியார்களுக்கும், ஏழைகட்கும், ஏனேயோர்கட்கும் அறுசுவையுடன் அன்னதானம் செய்வித்தான். (எ-று)

66. அந்தமா நகர்க்குடி யனேவருமந்தகன் கண்ணினேப்பெற்று
வந்தபோ தவன்பெற்றிடு மகிழ்ச்சி போலவே வாரிச்
சிந்தை யாசைகளர்தரத் திரவிய மெடுத்து வானீர்த்
தந்த மேகங்கள் போல தடைபடா தெவர்க்குந்
[தந்தார்.

(இ—ள்) அப்பட்டணத்தில் வாழ்கின்ற குடிகள் யாவரும் சுவேதனுக்கு புத்திரன் உதித்த மகிழ்ச்சியைக் கேட்டு தாங்கள் அடைந்த மகிழ்ச்சியெனக் கொண்டு கண்களில்லாத குருடன் கண்களிரண்டையும் பெற்ற சந்தோஷத்தைவிடப் பன்மடங்கு எய்தி வந்தவர்களுக்குத் திரவியம் முதலானவைகளே எல்லாம் தடையின்றி வருஷிக்கும் வானம்போல வாரி வாரிக் கொடுத்தார்கள். (எ-று)

73. சீதவார் புனற் சடையணி சிவபரனிரங்கி
நீதிசேரிறை கனவினிற் சித்தராய் நிகழ்த்தும்
போதுதீர வெருக்கத்தம் புலிநகர்க் கெனவக்
காதை யோதென வுவகையாற் கட்டுரைக்கின்றான்.

(இ—ள்) கங்கையைச் சடையிலே தரித்த பரமசிவன் மனமதில் இரக்கம் வைத்து சுவேதனின் கனவில் ஒரு சித்தராய் வந்து சுவேதனே இவ்வியாதிதீர எருக்கத்தம்புலியூர் என்னும் தலத்திற்கு வந்தாயானால்தீரும் என்றும் அதன்மகிமையை நன்றாக உனக்கு எடுத்துச் சொல்லுகிறோம் என்று சொன்னார். (எ-று)

73, எருக்கத்தம் புலியூரினி லிழைத்த பாதகங்கள்
முருக்கிக் கொல்லுவ தன்றியே முத்தியிற் கூட்டாச்
செருக்கிப் பாதக மன்னிய தேயத்திற் செய்தோர்
கருக்கொளா வகையப் பதிவந்தன்றிக் கரையா.

(இ—ள்) இந்த எருக்கத்தம் புலியூரிலே செய்த பாதகங்கள் அவனைக் கெடுத்துக் கொன்றுவிடும். மோக்ஷத்தில் ஒருக்காலும் சேர்க்காது மற்ற ஸ்தலங்களிலே செய்த பாவமானது இவ்வெருக்கத்தம் புலியூர் என்னும் ஸ்தலத்திற்கு வந்து தீர வேண்டும். இந்த ஸ்தலத்தைவிட்டு எந்த ஸ்தலத்திற்குப் போனாலும் தீராது. (எ — று)

75. பருதிமான் கிரணமெங்கு மாய்நிறைந்து
பரந்திருந் தாலுமுத் தமமா
யுரியதன் சிலையில் விளங்கியே கனலை
யுதிர்த்திடுந் தன்மைபோ லுலகிற்
பெரியதாய் விளங்குந் தலந்தனில் மிகுந்த
பெற்றியா யிருப்பனே யெனினு
மரியயிவ் வெருக்கத்தம் புலியூரினி
லதிகமாய் விளங்குவ னம்மா.

(இ—ள்) இவ்வுலகத்தில் அநேக ஸ்தலங்களில் பரமசிவன் ஒருவன் தானே இருப்பான். சூரியன் ஒருவனே



தன்கிரணங்களை சகல கல்லிடமும் பிரவேசிப்பித்தாலும் சூரிய காந்தக் கல்லிடம் அதிகமாகப் பிரகாசிப்பதுபோல இவ்வெருக்கத்தம்புலியூரில் பரமசிவன் அதிக மேன்மையுடனே இருப்பான். (எ-று)

76. கயிலையி னிருந்ததமதுசிற் கணத்தோர்
கணேச்சுரப் பதியினி லிருப்பின்
அயிலெடுத் தவன்றன் சொரூபமே
ஆவரரைக் கணம்ப்பதி யிருந்தாற்
றயிலை யுற்றாலுஞ் சமாதி நிஷ்டையதாந்
துட்டருமோர் பொழுதிருந்து
பயிலவே யவர்களமர ராவதற்குப்
பாரதிலை யுற லிலையே.

(இ—ள்) கைலையிலிருக்கும் சிவகணத்தவர் இக்கணேசுரப் பதியில் வந்திருப்பார்களே யானால் அக்குமரசுவாமி சொரூபம் பெறுவார். அரைக்கணம் இத்தலத்தில் இருந்தாலும் இரவு வேளைகளில் தங்கி நித்திரை செய்தாலும், சமாதி நிஷ்டை கூடினவராம், துஷ்டர்களும் இத்தலத்திருந்தால் அவர்கள் தேவர்கள் ஆவதற்குச் சந்தேகமில்லை. (எ-று)

77. பத்தர் தம்மிலும் பார்வதி தன்னிலும் விருப்பம்
நித்த மேவிய வப்பதி தன்னையே நினைப்பின்
மெய்த்துயர்ப் பிணி விலகியே மேன்மையுங்
[கொடுப்பா
மத்தலத்தினின் பெருமை யாருரைப்பவ ரளந்தே.

(இ—ள்) விபூதி உருத்திராக்க மணிந்து சிவத்தியானம் செய்யும் பக்தர்களிடத்திலும், பூஜை செய்பவர்களிடத்திலும், பார்வதி யிடத்திலும் இருக்கும் விருப்பத்திலும் அதிகமான விருப்பமுள்ள இக்குமாரபுரியை ஒருக்கால் நினைத்தவர்களுக்கு சகல துயரமும் சகல வியாதியும் தீர்ப்போம். சகல மேன்மையும் கொடுப்போம் என்று பரமசிவனே விளம்பினான் எனில் இதன் பெருமை எவரால் சொல்ல முடியும். (எ-று)

வேறு.

67. மன்னன் முன்பு மந்திரி மார்கள் தொழுதே
யன்னை யாகிய நின்றனை விட்டதா லழுன்ற
வின்ன லெய்தினம் தீர்தரவெழு கெனவேண்ட
முன்னுஞ் சாதுரங்கத்தொடு முரசதிர் திமிலே.

(இ—ள்) இவ்வாறு இருக்கும்பொழுது அரசன் முன் மந்திரிகள் வந்து அடிவணங்கி தாயாகிய தங்களைப் பிரிந்ததினால் மிகுதியும் மனம் நொந்தோம். தாங்கள் வந்து அரசதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்ட, பேரிகை முதலானதுகள் முழங்க யாவரும் நகரத்திற்குப் பிரயாணமானார்கள். (எ-று)

68. அந்த மாசலஞ்சலஞ் சங்கமலம் பியதுடியே தாரை
ஐந்து மாமானின் கொம்பு நாட்டியத் தொழிலுக்கொத்து
வந்த மத்தளமே கண்டை மல்லரி கத்தி காளஞ்
சிந்தினு ரம்பம் போலத் திசை யெலாம் வாழவென்றே.

(இ—ள்) அழகிய சங்கநாதங்தள் டமருகங்கள் தாரைகள் மானின் கொம்புகள் நாட்டிய பரதந்தப்பா மத்தளங்கன் கண்டை மல்லரி, கத்தி, காளம் இதனுடைய சப்தங்கள் சமுத்திர கோஷம்போல திசைகள் எங்கும் ஒலித்தது (எ-று)

69. வருகின்றான் மன்னனென்னலு மாந்தர்கள் மகிழ்வாய்த்
திருநகர்ப் பரப்பலங்கரித் தெதிர்ந்தனர் சிறப்பாய்
அருமை யாக்கினை பரிசனத்தவரை யாதரித்து
உரிமையாய் யணியாடைகளு முதவின னுவப்பாய்.

(இ—ள்) இப்படி சகல ஆடம்பரத்துடனே அரசன் வருகின்றான் என்று நகர்மக்கள் நகர முழுவதும் அலங்கரித்து எதிர்கொண்டு தரிசனம் செய்தார்கள். வந்தவர்களுக்கு மிக்க சந்தோஷத்துடன் மன்னன் ஆடைமுதலானவைகள் கொடுத்து உவந்தான். (எ-று)

70. உரிய மைந்தனுங் காமவன்மனொடு முவந்த
பிரிய மானதன் காதலிற் பெண்ணரசோடு



மரிய மாமணிக் கோவிலி னரசர்தா டொழவே
திருவினன்தன் சிறுவனைக் கல்வியிற் சேர்த்தான்.

(இ—ள்) இவ்வாறு வந்தவர்களுக்கு வெகுமதி செய்து மிகுந்த உரிமையான புத்திரனை காமவன்மனுடன் தன் காதலியான பெண்ணரசியுடன் அரண்மனை வந்து சேர்ந்தான். பின் நல்ல சுபதினத்தில் சகல கலைகளும் வல்ல குருவினிடத்தில் வித்தை கற்கச் செய்வித்தான். (எ-று)

71. பல்குபல கலைக்கடல் பயிற்று குருவின் கணிடை
பண்டுசெய் தவத்தின் வலியால்
கல்வியுள தெவ்வளவும் வந்ததென பின்னுக
கற்படை விற்றொழி லெலா
மல்லல் மிகுதந்தை தனிலுயுர்வு வந்திடவு
மங்கையர் மணங்கள் புரிவித்
தெல்லையில் நல்லரசு மெய்த முடிசூட்டியவன்
இன்ப மோடிருந்த பொழுதே.

(இ—ள்) எல்லா கலைகளிலும் வல்ல குருவிடத்திலே செய்த தவப்பயனாலே எல்லா வித்தைகளும் பயின்று பின் தகப்பனின் மேலாக சிலம்பம் பயின்று, பெண்களின்மீது இச்சை கொண்டு மயங்கிவிடாமல் சுந்தரமான பெண்ணை மணம் செய்வித்து பின் அரச பட்டாபிஷேகமும் செய்வித்து சுவேதன் மனம் மகிழ்ந்திருக்கும் நாளில். (எ-று)

72. முந்துதீவினை முதிர்ச்சியால் சுவேத ராஜனுக்குச்
சிந்தை நொந்திட முகமெலாம் வெண்குட்டஞ்செறிய
வந்ததாலவன் மதியணிச் சடையவன் றன்னை
யந்தியும் பகலும் துதித்தடியிணைகள் தொழுதான்.

(இ—ள்) இப்படியிருந்த சுவேதராஜனுக்கு பூர்வத்தில் செய்த தீவினையினாலே முகமெலாம் வெண்குட்டமாகியது. அதனாலே மனம் மிகவும் நொந்து பரமசிவனை இரவும் பகலும் சிந்தித்து வணங்கிச் கொண்டிருந்தான். (எ-று).

78. குமர ரமரும் புரிதனி லொருவற்கனங் கொடுத்தால்
அமர ராகுவரது நமக்கருத்திய தாகுந்
திமிர மாவினை நீங்குமோ ரிரவதிற் சேரிற்
சமர மாமுகப் பகடுகைத்தோன் பதிசாரார்.

(இ—ள்) இப்படிப்பட்ட மகிமையை யுடைய குமரபுரியிலே ஒருவருக்கு அன்னம் கொடுத்தவர் தேவராகுவர். அது நமக்குக் கொடுத்ததேயாகும் அதில் ஒரு இரவு தங்கி இருந்தவர்கள் செய்த தீவினையெல்லாம் ஆதித்தனைக் கண்ட இரவு போல நீங்கிவிடும். அவர் எருமைக்கடா வாகனமுடைய எமதர்மனுடைய பட்டணம் சேரார். (எ-று)

79. அருணலந் திகழுருவாகிய கிலந்தனி லுல்
வருணரே முதல் வந்தவர் வல்வினை மாற்றிப்
பொருணயந் தவமளித் தேயெழிற்பூண் முலைத்தேமற்
றருண மங்கையொடு மாகுவங் கணேச்சுரந் தன்னில்.

(இ—ள்) இத்தலத்தில் இருபை ரூபமாகி பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்கள் முதல் யார் வந்தாலும் அவர்கள் வினைகள் எல்லாம் தீர்ந்து திரவிய முதலானவைகள் எல்லாம் பெருகும்படி கொடுத்து தேமற்படர்ந்த ஸ்தனபாரமுள்ள பார்வதியுடன் கணேச்சுரத்தில் நாமும் இருப்போம் என்றார்.

80. பவமற்றுதற் கஞ்செழுத்தன்றி வேறிலை நோய்
கவலைதீருதற் கப்பதியா மதைக் கண்டோர்க்
கவமகன்றிடு மட்டமா சித்தி வந்தெய்துந்
தவமிகுத்திடு மதனையா ருரைப்பவர் சகத்தே.

(இ—ள்) சென்ன மரணத்தைப் போக்கி மோக்ஷத்தைக் கொடுப்பது பஞ்சாக்ஷரமே யல்லாமல் வேறில்லை. இத்தலத்தைக் கண்டவர்களுக்கு அவலமானது போய் அஷ்டமா சித்திகளெல்லாம்வரும். தவம்கைகூடிவரும். இச்சிவனின் பெருமையை பூலோகத்தவர் அறிந்து உரைக்க மாட்டார்கள், (எ று)



81. அத்தலத்தினம் மாலயந் தனக்கு முன்னுக
மெய்த்தவத்தினு லுயர்கந்த தீர்த்தமும் விளங்கும்
சித்தமொன் றியங்கதனிடை மூழ்குவோர் திருவும்
வித்தை முத்தியுஞ் சித்தியுஞ் தினம்சொலும் வேதம்,

(இ—ள்) இத்தலத்தில் நம்முடைய ஆலயத்திற்கு முன்பாக சத்தியமாகிய தவத்தினலே உயர்ந்த கந்ததீர்த்தம் விளங்கி இருக்கிறது. அத்தீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்கு திரவியமும், வித்தையும், முத்தியும் சகல சித்திகளும் உண்டாகும் என்று வேதமானது தினம் தினம் சொல்லும். (எ-று)

82. சிந்தைசெய் பொருளும் வந்துகை கூடுஞ்
செல்வமும் கல்வியும் வளரும்
நந்தலிலென்னுர் நாசமாம் பின்னர்
நாடிய முத்திவந் தெய்தும்
அந்தணர்க்கியன்ற மாத்திர மளித்து
யகமகிழ்ந் தஞ்செழுத் தோதிக்
கந்தமார்க் கமல மலர்மிக விளங்குங்
கந்த தீர்த்தத்தில் மூழ்கினுர்க்கே.

(இ—ள்) நினைத்த பொருளெல்லாம் வந்து கைகூடும். செல்வமிக வுண்டாகும். வித்தை சகலமும் வரும். சத்துருக்கள் நாசமடைவர். மோட்சம் கிடைக்கும். இந்த கந்த தீர்த்தத்தில் பிராமணர்களுக்கு தன்னுல் இயன்றவளவு தானம் செய்து மூழ்கினுர்களுக்கு. (எ-று)

83. நந்தமக்கி னிதாந்தீர்த்த முற்றுடி
நலந்திகழ் தவளவெண் ணீறணிந்து
புந்திசெய்யக் கவடம் புனைந்திசையப்
பூசனை புரிந்தெழுத் தைந்துஞ்
சிந்தை யினினைந்து கோயிலை முக்காற்
செழுவலஞ் செய்துளோர் பூவி
னெந்தமா வருணத்தவர்க ளாயினு
மிணையிலா முத்திபெற் றிருப்பார்.

(இ—ள்) நமக்கினிதான தீர்த்தமாகிய கந்ததீர்த்தத்தில் மூழ்கி விபூதி தரித்துக்கொண்டு உருத்திராக்கமு மணிந்து சிவ பூசை செய்து பஞ்சாக்ஷர தியானத்துடன் மூன்றுதரம் கோவிலைப் பிரதக்ஷணமாக வந்து எம்மைத் தெரிசித்தவர் எந்த சாதியினராயினும் அவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். (எ-று)

64. அருமறை யறியாப் பழமலைப் பதியி னமரர்கள்
[முனிவரர் வந்தே
யொருமையாந் தவத்துக்குரியமா தலமெமக்
[குரையென வவர்கள் கூறத்
திருமுடி திகழு மெருக்குவெண் மலரே சிவலிங்கமென
[வருள் வடிவாய்ப்
பெருமையா மெருக்கத் தம்புலி யூராய்ப் பேசவும்
[வைகினும் பிறங்க.

(இ—ள்) அரிதாகிய வேதமும் அறியாத விருத்தகிரி என்னும் தலத்திலே முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும் வந்து பரமசிவனை நாங்கள் செய்தவத்திற்கு யோக்கியமான தலம் சொல்லவேண்டும் என்று கேட்க, அவர்கள் காண பரமசிவன் சிரக்கம்பம் செய்ய சிரசிலே இருந்த வெள்ளெருக்கம் பூவே சிவலிங்க ரூபமாகி அவர் அருளே அந்த வடிவமாய் அமர்ந்த படியினாலே அந்த இடம் எருக்கத்தம்புலியூர் என்று பெயராக அதில் விளங்கி இருந்தோம் என்றார். (எ-று)

85. மூன்றுநற் குரோசங் கணேச்சுர முகப்பாகு
மான்ற வெல்லையிற் றங்கினோரியாவரு மமரர்
தோன்று கோயிலின் னருகிருப்பவ ரராத்துயில்வோரா
மான்றருங் கொடுமுடி யறிபவ ரயன்வடிவாவார்

(இ—ள்) இந்த எருக்கத்தம்புலியூருக்கு மூன்று குரோச மட்டும் எல்லை. அதில் இருப்பவர் எல்லாம் தேவர்கள் ஆவார்கள். அக்கோயிலைச் சுற்றிக் குடியிருப்பவர்கள் விஷ்ணுவேயாவார்கள். அதன் கோபுரம் காண குடியிருப்பவர்கள் பிரம்மதேவன் ஆவார். (எ-று)



86. இன்னணந் தீர்த்த மகிமையுந் தீர்த்தத்
தெழில்பெறு மேன்மையு மிலிங்கந்
துன்னிய மூர்த்தி கரமு நன்ருகச்
சொன்னபின் மறைந்தன ரன்பாய்
மன்னவன் தாழ்ந்த மடையினிற் புனல்போல்
மாதிரந் தெரிவ தாகக்
கன்னவிற் றிரடோள் காளையர் சூழக்
கணேச்சுரப் பதியினில் வந்தனனே.

(இ—ள்) இவ்வாறு தீர்த்த மகிமையும் அதனுடைய சிறப்பும் இலிங்கத்தினுடைய மூர்த்தி கரமும் நன்ருகத் தெளியச் சொல்லி மறைந்தார் சுவேதன் மிகவும் மனம் மகிழ்ந்து தாழ்ந்த மடையிலே இறங்கின தண்ணீர்போல திக்குகளெல்லாம் கீர்த்தி பரவ பர்வத சிகரம் போலும் புஜபல பராக்கிரமுமுள்ள அனேகம் பதாதிகள் சூழக் கணேச்சுரப்பதி வந்தான்.

87. தூயவம்புயக் கந்ததீர்த்தத் தினிற் றேய்ந்து
நேயமுற்று மாபதிதனை நிதந்தொழு திட்டான்
ஆயபத்தியால் கனவிடை அரன் முனங்காண
மேயசித்தராய்க் காட்டலும் விழாச்செய வெண்ணி.

(இ—ள்) மன்னன் கந்த தீர்த்தத்தில் அன்புடனே மூழ்கி நேமநிஷ்டையுடன் பரமசிவனை வணங்கி நியமமாக இருக்கும போது பரமசிவன் கனவிலே சித்தராக வந்து சுவேதனே நமக்குத் திருவிழா செய்வாயாக என்று பரமசிவன் சொன்னார். அதன்படியே அச்சிவனை மனதினாலே தியானித்து பிராமணர்கள் சைவர்கள் இவர்கள் மனது மகிழ்ச்சிபெற தானங்கள் கொடுத்து பங்குனி மாதத்தில் திருவிழாச் செய்ய மனதிலே நினைத்து அதற்குரிய திட்டம் செய்தான். (எ-று)

88. இனிய வோரையிற் கார்த்திகை தன்னிற் கொடி
[யேற்றி
முனிவர் 'போற்றிடத் திருவிழா முறைப்படி முடி
[யேற்றி
கனியு மன்பொடு பூரணை யுத்திரங் கடவுளைப்
[போற்றி
புனித தீர்த்தமும் வழங்கிடப் புரிந்தனன் புகழோன்.

(இ-ள்) பிராமணர்களை வரவழைத்து சுப லக்கினத்திலும் கார்த்திகை நக்ஷத்திரத்திலும் நான்கு எட்டாமிடங்கள் சுத்தியாக சுபக்கிரகங்கள் பார்வையுள்ள லக்கினத்தில் கொடியேற்றி ஆகமப்படி தப்பாமல் திருவிழா நடத்தி அன்புடனே பௌர்ணமியும் உத்திர நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் தீர்த்தமும் வழங்கப் பூசை பண்ணினான் திருக்குமரேசுரருக்கு. (எ-று)

89. தளிர்புரை மலர்ச்செம் பாதர்ப்பதியிடை விடாமல் [வேந்தன்
குளிர் மலர்க் கந்தமாடியே குன்ற வில்லி
யளிமகிழ் சிறந்த சன்னி தானத்தி னன்பாய் வந்து
தெளிதருஞ் சோதியான திகம்பரன் றன்னைவாழ்த்தும்

(இ—ள்) சிவந்த தளிர்போலும் தாமரை பூப்போலும் சிவந்த பாதமுடைய பரமசிவன் இருக்கும் ஸ்தலத்தை நீங்காமல் தினமும் கந்த தீர்த்தத்தில் மூழ்கி மலையை வில்லாக வளைத்த திருக்குமரேசுரர் சன்னிதானத்தில் வந்து திகம்பரரான கடவுளைத் தோத்திரம் செய்தான். (எ-று)

90. பாழிவெண் புலிக்கால் மூர்த்தி பதஞ்சலி வசிஷ்டர் [வெற்றிக்
கோழியங் கொடியோனந்தக் குமரனைப் பெற்ற [வன்னை
யாழியங் கையிற் கொண்ட வகத்தியன் புலத்தியன்று
னேழுகம் பூசைகொண்ட வெருக்கத்தம் புலியூரானே.

(இ—ள்) இடம் பொருந்திய வரியும் வெண்மையுமுள்ள புலிக்காலுள்ள வியாக்கிர பாதரும் பதஞ்சலியும் வசிஷ்டரும் கோழிக் கொடியுள்ள குமாரசுவாமியும் பார்வதியும், அகத்தியரும். புலஸ்தியரும் இப்படி இவர்கள் கையினாலே ஏழுலகம் பூசைகொண்ட எருக்கத்தம் புலியூரமர்ந்தருளிய பரமசிவனே என்று தோத்திரம் செய்கிறான். (எ-று)



91. சங்கரா சிவனே போற்றி தழலுள கையா போற்றிப்
பொங்கரா மதியினோடு பூங்கொன்றை யணிந்தாய் [போற்றிக்
கங்கரா சலத்தின் போர்வை களிப்புடன் தரித்தாய் [போற்றி
யங்கரா வென்னப்பிடிக்கு மந்தகனுதைத்தாய் [போற்றி.

(இ—ள்) சங்காரா சிவனே, மழுவை கையில் தரித்தவரே, சர்ப்பத்தையும், சந்திரனையும், கொன்றை மாலையையும் தரித்த ஜடாதரனே! தலையும் கையுமுள்ள மலைபோன்ற யானையை உரித்துப் போர்த்திக் கொண்டவரே! முதலையைப் போலப் பிடிக்கவந்த இயமனை உதைத்துத் தள்ளினவரே! எனத் தோத்தரித்தான். (எ-று)

92. வேதமுறை யிட்டுமறி யாதபர மன்றனை
மேன்மை யொடுரைத்து விழாவைச்
சீதமதி யுற்றசந் தானவரை யின்மிகு
சிறப்பொடு நடத்தி வரவே
நீதிமிகு முத்தம குணநிதி யெனப்புகழ்
நீறணி யருட்கட வுளாலப்
பூதல மதிக்கவரு குட்டமு மகன்றினிய
பொற்பினை யடைந்தன னரோ.

(இ—ள்) வேதமானது அனேககாலம் முறையிட்டும் அறியாத பரமசிவனை தோத்திரம் செய்தும் சந்திரோதயமான சந்தான பர்வதத்திலும் அதிக சிறப்பாய் திருவிழா நடத்தியும் உத்தம குணநிதியான திருக்குமரேசுரர் கடாக்ஷத்தினாலே பூலோகத்திற் சகல ஜனங்களும் ஸ்தோத்திரம் பண்ண வெண் குட்டம் நீங்கி அழகிய தேகம் பெற்றான் சிவேதன். (எ-று)

93. அரிய வந்தணர்க் கையிருகோடி செம்பொன்னும்
பெரிய பாரங்கள் பீடுறு மாடை யாபரணம்
விரியும் பூமியு முதற்பல தானங்கள் வியப்பத்
தெரியு மன்புடன் வழங்கினன் றெய்வமா தலத்தின்.

பின்னுயர் பிற்பாசத்திற் பிதுர் சிரார்த்தஞ் செய்தும்
பொன்முதற் றானஞ்செய்துந் துவாரகை போற்றினனே

(இ—ள்) தென்கடற் கரையைச்சேர்ந்த கன்னிக்கோட்டுத் தீர்த்தத்திலே மூழ்கி அதன்மேல் பாலுள்ள பிற்பாசத்திற் பிதுர் சிரார்த்தம் செய்து பொன் முதலான தானமும் கொடுத்து அப்பால் துவாரகையில் வந்து பகவானை தெரிசனம் செய்து தோத்திரம் செய்தான், (எ-று)

9. வாரணா வாசி யாடி வதரிகாச் சிரமம் போற்றி
சீர்வரை யகோ பிலந்தான் செகன் னாதஞ் சென்று
[வாழ்த்தி
நீர்புனை சடையார் காஞ்சி நிமலனு மனையைத்
[தாழ்ந்துங்
கார்திகழ் மிடத்தாற் சோணாசலம் வீரட்டங் கண்டான்.

(இ-ள்) அப்பால் வராணசியிலே மூழ்கி பிறகு வதரிகாச்சிரமத்திலே வந்து தோத்தரித்து பின் பாக்கியங்களைக் கொடுக்கும் அகோபிலத்தையும் தெரிசனம் செய்து ஜெகன்னாதத்திற்கு வந்து தெரிசனம் செய்து ஆத்திமாலையை சடையிலே தரித்தருளிய ஏகாம்பரேசுரர் வாசமாகிய காஞ்சிபுரத்திற்கு வந்து காமாட்சி அம்மனைத் தெரிசனம் செய்து அருணாசலேசுவரர் மகிழ்ந்திருக்கும் திருவண்ணாமலையை தெரிசனம் செய்து திருவதிகை ஸ்தலமான வீரட்டானமுந் தெரிசனம் செய்தான். (எ-று)

10. காருட னதியினாடிக் கடவுளைப் போற்றித் தில்லை
யூரினிதுற்று மற்றித் தீர்த்தம துகந்துமாடி
யார்வமிக் கூரக் கண்ணிற் கணியென நடனங்
[கண்டும்
பேர்மிகு முதுகுன் றேத்தித் திருமுட்டம் வணங்கிப்
[பின்னர்

(இ—ள்) பின் கருட நதியிலே ஸ்நானம் செய்து பரமசிவனையும் தெரிசனம் செய்துகொண்டு சிதம்பரத்தைக் கண்டு



சிவகெங்கையிலே ஸ்நானம் செய்துகொண்டு கண்கள் படைத்ததற்குப் பிரயோசனமான நடன சபையையுங் கண்டு தெரிசனம் செய்து பின் விருத்தாசலம் வந்து பழமலையாரைத் தெரிசனம் செய்து கொண்டுத் திருமுட்டம் வந்தான். (எ-று)

11. தொண்டருக் கருள்செய்யுந் தொழிலெனத் தோகை
[யோடு
மண்டருக் கமுதஞ்ச மாமெமக் கென்னக் கொண்ட
கண்டவர் தங் குமரேசத்தைக் காண்டலுங் களிப்பா
[னந்தங்
கொண்டன னெட்டங் கத்தால் வணங்கினன்
[கோமகன்றான்.

(இ—ள்) அடியார்களுக்கெல்லாம் கிருபையை கொடுக்கப் பார்வதியுடனே கூடிக்கொண்டு பிர்மா, விஷ்ணு முதலானவர்களுடைய பயங்களை எல்லாம் தீர்த்து ரக்ஷித்த நீலகண்டரான திருக்குமரேசுவரர் எழுந்தருளி யிருந்த குமரேசத்தைக் கண்டான். (எ-று)

12. தளிர்புரை மலர்ச் செம்பாதச் சதியிடை விடாமல்
[வேந்தன்
குளிர்மலர்க் கந்ததீர்த்த மாடியுங் குன்றவில்லி
வளமுலாஞ் சன்னதிக்கண் மகிழ்வொடும் வணங்கி
[வாழ்த்தித்
தெளிதருஞ் சோதிமூர்த்தித் தெரிசனங் கண்டுவந்தான்

(இ—ள்) இளந் துளிரினும் மிருதுவான தாமரைப் பூப் போலும் சிவந்த பாதமுடைய திருக்குமரேசுரர் சன்னிதானம் விடாமல் கந்த தீர்த்தத்தில் மூழ்கி சிவதரிசனம் செய்து மகிழ்வுடன் நமஸ்கரித்து தியானித்து ஆனந்தம் அடைந்தான். (எ-று)

13. நாடொறும் வருடகாலம் நன்மழையெனக் குளிப்ப
வாடகம் வெள்ளியானை பூதானங் கபிலையன்பா
மோடரிக் கண்ணா ரில்லம் பற்பல வுவப்பாய் நல்கி
யாடரங் காடினார்க்கு முபசாரங் கருதிச் செய்தான்.

(இ—ள்) அரிதாகிய வேதத்தைப் பாராயணம் செய்யும் பிராமணருக்குப் பத்துகோடி திரவியம் தானம் கொடுத்து பெரிய பாரமென்னும் தொகைப்படி ஆபரணமும் வஸ்திர தானமும் கொடுத்து பின்னும் பூதானம். முதலான தானங்களும் கொடுத்தான் எருக்கத்தம்புலியூரில் சுவேதன். (எ-று)

94. பத்த யானையானமா விரதங்களோ சூழச்
சித்த ரானவ ரருளினுற் செயமெலாம் பெற்று
வித்த கன்றனை யரிதினில் விடைகொண்டு போற்றிப்
பத்தி யாகிய தன்னக ரெய்தினன் பரித்தே.

(இ—ள்) மதங்கொண்ட யானைபோலும் பராக்கிரமமுள்ள அனேக ரதங்கள் குதிரைகள், பதாதிகள் சூழ எழுந்திருந்து சித்தர்களுடைய கிருபாகடாக்ஷத்தினுலே சகல செயங்களையும் பெற்று பரமசிவனை விடைகொண்டு ஸ்தோத்திரம் செய்து மகா பக்தியுடனே தனது நகரம்போய்ச் சேர்ந்து ராச்சிய பரிபாலனம் செய்தான். (எ-று)

95. இந்தமாதலத் தெருக்கத்தம் புலிநக ரெய்தி
வெந்திறல் மன்னன் குட்டநோய் தீர்ந்தமை விரித்தோ
ரிந்தவாசகங் கேட்டவர் வியந்தவ ரிருந்தவர்
சிந்தை வேண்டிய போகமுஞ் செல்வமுஞ் சேர்வார்.

(இ—ள்) இப்படிப்பட்ட எருக்கத்தும்புலியூரிலே சுவேத ராஜன் ஸ்தலவாசம் செய்து தீர்த்தமாடி சிவதெரிசனம் செய்து குஷ்டரோகம் தீர்ந்த கதையை விஸ்தாரமாகச் சொனனவரும், கேட்டவரும், சந்தோஷப்பட்டவரும், பக்கத்தில் இருந்தவரும், மனதில் வேண்டிய போக மெல்லாம் அனுபவிப்பர். சகல பாக்கியமும் வரும் என்று நைமிசாரண்ய வாசிகளான முனீசுவரர்களுக்கு சூதமகாரிஷி சொன்னுர் (எ-று)

வெண்குஷ்டம் தீர்த்தபடலம் முற்றும்.

---



## 11. இராசேந்திரச் சருக்கம்.

1. திருந்தநால் வருணத் தோருஞ் செய்தொழிற் செல்வ [மோங்கி
யருந்தவத் தறிவு நூல்க ளியாவையு முணர்வோ ராகி
வருந்திடா தெவருங் கற்ற மாசகல் பெரியோ ரான
விருந்துட னினித ருந்தும் மேன்மையாம் பாண்டி நாடே.

(இ—ள்) பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் இவர்கள் தங்கள் தங்கள் தொழில் முறையினுலே அளவிறந்த செல்வமுண்டாகி அரிதாகிய தவங்களைச் சொல்கின்ற அறிவு நூலாகிய ஞானசாஸ்திரங்களைத் தெரிந்து சகல ஜனங்களும் வேண்டிய மாசற்ற சகல நூல்களையும் அறிந்த பெரியோர்களான விருந்துகளுக்கு மனம் சந்தோஷிக்க அறுசுவையுடனே அன்னமும் அவர்கள் பின்னும் வேண்டியதெல்லாம் கொடுக்கும் பாண்டிய நாடு. (எ-று)

2. விளங்கு மன்னுட்டி னுப்பண் ணிரண்டு யோசனை [விசாலம்
வளங்கொளு மதுரையாகு மாட மேனிலை கடோறு
மிளங்கொடி யனையார் பாட வின்னிசை நீங்கா [வேந்தன்
களங்கமில் கீர்த்தி ராஜேந் திரனெனுங் கல்வி மிக்கான்.

(இ—ள்) இப்படி தருமத்துடன் விளங்கிய நாட்டின் மத்தியிலே இரண்டு யோசனை விசாலமுடையதாய் அலங்காரம் பொருந்திய மதுராபுரி என்னும் ஒரு பட்டணம் விளங்கியிருந்தது. அப்பட்டணத்தில் மேனிலை மாடங்களில் வல்லிசாதக் கொடிபோலும் அழகு பொருந்திய பெண்களிருந்து யாழ் வீணை யிசையுடனே வாசிக்கிறது நீங்காமல் இருக்கும். அதில் கீர்த்தி பொருந்திய வித்தைகளிலே சிறந்த இராஜேந்திரன் என்றொரு மன்னன் இருந்தான். (எ-று)

3. மனுநெறி யுணர்ந்து செங்கோல்
வளைவுரு வகைநி றுத்தித்
தனுவினுற் கூடார் தங்கள்
தனுவையும் வணக்க வல்லான்

பனிவிசும் பமரர் கூட்டும்
வேள்விகள் பலவும் செய்தோன்
இனியவன் மாந்தற் கெல்லாம்
இணையிலாக் குணத்தின் மிக்கான்.

(இ—ள்) மனுசாஸ்திர வழியே. செங்கோல் கோணாமல் நடத்தி தன் வில்லினாலே சத்துருக்களை ஜெயித்து அவர்கள் திறை செலுத்தி வணங்கச் செய்பவன். பனி பொருந்திய ஆகாயத்தில் வாசமான தேவர்கள் அவிர்ப்பாகம் வாங்க யாகங்கள் செய்பவன். சகலஜனங்களையும் தனது உயிரைப் போலே பாதுகாப்பவன். இதர மன்னர்களிலும் இணையில்லாத குணத்தை யுடையவன். (எ-று,

4. தருமமே விச்சை கொண்டோ
னுதாரத்திற் றலைவ னானோன்
குருவுடன் பிதுர்க டேவர்
குறிப்பொடுபூ சனைசெய் வோனே
கருமிடற் றிறைவன் பாத
கமலத்தின் கருத்தாம் வண்டின்
முருகுறும் தேனை யுண்டு
மொழிவுறு மகிழ்ச்சி யுள்ளோன.

(இ—ள்) தர்மத்தில் மிக்க இச்சையும் உதார குணத்திலே தனக்குச் சமானமாக ஒருவரு மில்லாதவனும், குருபூசை, பிதுர்பூசை, தெய்வபூசை நித்தியஞ் செய்பவனும், நீலகண்டரான பரமசிவனின் பாதகமலத்தில் தன் மனமாகிய வண்டு அதன் கிருபையான தேனை பானம் செய்வித்து அவ்வானந்தத்தை ஒழியாத மகிழ்ச்சி யுடையவன். (எ-று)

5. சராசர மனைத்து மீன்ற தாயெனுங் கவுரிக் கன்பாய்ப்
பராவிடும் விரதம் பூண்டோன் பண்ணிசைக் கவிதை [வல்லான்
தராதலம் புரக்குநாளிற் றனயரைப் பெற்றிலானால்
விராவிய துன்பத்தோடும் விரதங்கள் வகுத்துச் [செய்தான்.



(இ—ள்) சராசரமாகிய அனைத்தையும் பெற்ற தாயாகிய பார்வதிதேவியைப் பூஜித்து தொழுவதே விரதமாகப் பிடித்தவன். பண்ணோடுங் கூடிய கீதாகானம் சகல வித்தைகளெல்லாம் வல்லவன். இப்பேர்ப்பட்ட பாண்டிய ராஜனானவன் நீதி தப்பாமல் அரசு செலுத்தி உலகத்தைக் காக்கும் நாளில் புத்திரன் இல்லாமல் மிக்க வியாகூலமாகி விரதங்கள் செய்தான். (எ-று)

6. மந்திரித் தலைவர் தம்மை மதுரையைக் காக்கச் செய்தே
வெந்திறல் வேந்தன் தீர்த்த யாத்திரை மேவி யாடச்
சந்திலாப் புனித மிக்க தனுக்கோடி வாரியாடிச்
சிந்தனை வெறுப்பத் தானம் தெய்வ வேதியர்க்குச் [செய்தான்.

(இ—ள்) மிக்க யோசனையையுடைய மந்திரிகளை யழைத்து மதுரையை ரக்ஷித்துக் காக்கும்படி செய்து தான் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டு சகலபாபங்களையும் போக்கும் தனுக்கோடி தீர்த்தமாடி பிராமணர்கள் மனம் சந்தோஷிக்கும் வண்ணம் தானங்கள் செய்தான், (எ-று)

7. அரக்கரை வென்ற பாவ மகற்றிய ராம லிங்கம்
விரைக்கம லத்தாள் போற்றி மீண்டும்தென் றிசை [யின் மிக்க
தரைத்தல மாவனந்த சயனத்தின் மச்ச தீர்த்த
முரைத்தசங் கற்பத்தோடு மாடினா னுவப்பதாக

(இ—ள்) இராவணனைக் கொன்று மற்றைய இராக்கதர்களைக் கொன்ற பாபம் போக்க பூஜை செய்து பாபத்தைப் போக்கிக்கொண்ட இராமலிங்கத்தை தெரிசனம் செய்துகொண்டு பின் புறப்பட்டு தெற்கு முகமாக வந்து அனந்தசயனத்தில் மச்ச தீர்த்தமாடி சங்கற்பத்துடனே தானமும் செய்தான். (எ-று)

8. தென் கடற் கன்னிக் கோட்டு தீர்த்தமுமாடி மேல்பால்
மன்னுகோ கன்னமெய்தி மணிகண்டர் தம்மை [வாழ்த்திப்

(இ—ள்) பலப்பல பேதமாகச் சொல்லிய ஆயுத சிலம்பங்கள் சகலமும் கற்றவர்கள் மகிழ்ச்சிபெற தகப்பனினும் அதிக வித்தை கற்றும் மனுநீதி சாஸ்திரமும் அறிந்து சகலமும் தெரிந்தவுடனே இராஜன் விவாகமும் செய்வித்து இராஜ்யத்தை ஆளும்படி செய்து எப்பொழுதும் மறவாத சிந்தையால் பரமசிவனை துதிசெய்து அரசாட்சி செய்துகொண்டிருந்தான். (எ-று)

19. வேதியர்க ளாதிமல வேந்தன்மக நீதியை
வியந்திட விராச முனியாய்
மாதிலொரு பாகன் வழிபாடு தனையேமுயல்
மார்க்கமு மிகுந்து மணிவாய்
வீதிநகர் மேவிவெகு நாளதலி னிருந்துதின
மிகுந்த தருமங்கள் புரித
லாதலினு யர்ந்த விராசேந்திர புரமெனும்
பெயருமான துலகிலே.

(இ—ள்) இவ்வாறு இருக்கையில் பிராமணர் முதலானவர்கள் சித்திராங்கதனுடைய பெருமையும் தருமமும் கீர்த்தியும் கொண்டாட ராஜேந்திரன் ராஜமுனியானதினால் விருபாலை அம்மனும் திருக்குமரேசுரரும் கருணைகூர ரத்தின மாட மாளிகை கூடகோபுரங்களுள்ள ஸ்தலத்திலே இருந்துகொண்டு அநேக தருமங்கள் செய்துகொண்டு ஸ்தலவாசம் செய்ததினால் இராஜேந்திர பட்டணம் என்னும் பெயராய் விளங்கியது. (எ-று)

20. மீதிலுள தூள்திரண் மீதில்விழவே புரியின்
மெய்வினை களியாவு மகலு
நீதியுள கோவின் மகனாகி யுயராசனாய்
நீறணியு மீசர் நிலையஞ்
சோதிமிகு தீபமிடு தூயவர்கள் தீயவினை
தூரமுறு மாதர்புடை சூழ்
ஆதியென மானமிசை யேகியொரு கோடிபெரு
மாதவர்கள் சேருல கமே.



(இ—ள்) இத்தலத்தில் வீதிகளில் படிந்த தூள் திரள் விழுந்தவர்கள் சரீரத்திலுள்ள தீவினைகளெல்லாம் போய் விடும். அவர்கள் ராஜாவின் வயிற்றிலே பிறந்து அரசாட்சி செய்வார்கள். பரமசிவன் ஆலயத்தில் தீபம் வைத்தவர்கள் பாவங்களெல்லாம் தூர விலகிப்போகும். தவிர அநேகம் தெய்வப் பெண்கள்சூழ விமானத்தின் மேலேறிப் போவார்கள். (எ-று)

21. அன்பின்மிகு பூசனையி னுபரணமே
யதிக மாபரண மீதுமதிக
மின்பமிகு கோவில்செய வினதிக
மீசனரு ளின்சரிதையே கவிதையாய்த்
தன்புனித வாயினிசை செய்தபுகழ்
மேலவைக டானதிகமில் லையெனவே
முன்புமறை யாதிதுதிப் பெருமை யென்றதை
முயன்று பெறவேணு மெனவே.

(இ—ள்) சகல தர்மங்களிலும் அதிகம் சிவபூஜை செய்வது. அதைவிட அதிகம் ஆபரணம் செய்து சாத்துவது. அதைவிட அதிகம் கோவில்கட்டி வைப்பது. அதைவிட அதிகம் சிவபிரதிஷ்டை செய்வது. அதைவிட அதிகம் சிவகதைகளை ஏகசித்தமாக தோத்திரம் செய்வது. இதைவிட அதிகம் வேறொன்று மில்லையென வேதாகம புராண சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. (எ-று)

22. திங்களணி செஞ்சடையர் தேவியொடு மேவுதிரு
வாலயம் வலங்கொ ளறிஞர்
துங்க முளதாம் பரிய மகப்பலன் அடிக்கொரு
தொகையே கருமை சூழவொருகா
லங்க முருள் செய நினைய சங்கரர் புகழுளச்
சரிதமுரை செய்து வந்தே
மங்கையொரு பாகனை வணங்கி வலங்கொள்பவர்கள்
மான்மழுவு மேந்துரு வராவரே.

(இ—ள்) இப்படி இராஜேந்திரனென்பவன் நாள் தோறும் வருடகாலத்து மேகம்போல சுவர்னதானம், வெள்ளிதானம், யானைதானம், பூதானம்: கபிலை, கன்னிகாதானம், கிரக தானம் இவ்வாறு அநேக தானங்களை மயானத்தில் நிர்த்தனம் செய்யும் பரமசிவனுக்குப் பிரீதியாகப் பிராமணருக்குக் கொடுத் தான். (எ-று)

14. இன்னண மளப்பி னன்மை செய்து தன்னகருக்
[கெய்த
மன்னவ னினைக்கும் போதினுகாய வாணியிவர்க்குத்
தென்னவாவித் தலத்திற் சிவனருளான் மைந்தன்
தன்னையும் பெறுவாய் நீயுந்தரி தவவேட மென்ன.

(இ—ள்) இப்படி அளவில்லாத நன்மைகள் செய்து தன்னுடைய நகரத்துக்குப் போகவேணுமென்று ராஜனானவன் நினைத்த மாத்திரத்திலே அப்போது ஆகாசவாணி சொல்லு கிறாள். பாண்டிய ராஜனே இந்த ஸ்தலத்திலே சிவகடாக்ஷத் தினலே நல்ல புத்திரனைப் பெறுவாய் நீயும் தவவேடம் தரித்துக் கொள்வாய் என்றாள். (எ-று)

15. இனியநல் லுரையைக் கேட்டு யிறையவன் மகிழ்ச்சி
[மிக்காய்
பனிமதி நுதலியோடுங் கணேச்சுரப் பதியின் வைகுங்
குனிவரை வில்லினர்க்குத் திருப்பணி குறைவில்
[லாமல்
முனிவர்போல் வேடம்பூண்டு நகர்வள முற்றுஞ்
[செய்தான்

(இ—ள்) இப்படியாக ஆகாசவாணி சொன்ன மாத்திரத் திலே ராஜனானவன் கேட்டு மிக்க மகிழ்ச்சியாய் பிறைபோலும் நெற்றியினையுடைய தன் மனைவியுடனே கணேச்சுரப் பதியிலே யிருந்து திருக்குமரேசுரருக்குத் திருப்பணி குறைவில்லாமல் செய் தான். முனிவரைப் போலே தவவேடம் கொண்டான் (எ-று)



16. வேதமுறை யிட்டறிய வோது பரமற்கினிதின்
[மேதினி வியப்ப விழாச்
சீதமதி நற்குல மன்னவ னியற்றிவரு நாளது
[சிறப்பு மிகவே
நீதிமிகு முத்தம குணநிதி யெனப்புகழ நீறணியருட்
[கடவுளார்
பூதல மகிழ்ச்சி பெறவே மதலை பொற்பொடு பிறந்
[தனன் மிகுந்த புகழால்

(இ—ள் வேதமானது சதாகாலமும் முறையிட்டும் அறிதற்கரிதாகிய பரமசிவனுக்கு அதிக மகிழ்ச்சியாக பூமியி லுள்ளவர்கள் சந்தோஷிக்க சந்திர வம்சகுல சிலாக்கியமான பாண்டியன் இராஜேந்திரன் திருவிழாச் சிறப்புடனே செய்த பலத்தினலே திருக்குமரேசுரர் கிருபையினல் சைவமும் விபூதி யும் மிகுந்து விளங்க உத்தமகுண நல்புத்திரனைப் பெற்றெடுத் தான். (எ-று)

17. சித்தனு மிராமன் றிறலென நானிலம்
தத்துவ ஞானமும் சாற்றிய கீர்த்தியும்
பத்தர்போ லிவர்க்கும் பலிக்க வெண்ணியே
சித்திராங் கதனெனப் பெயருஞ் செப்பினன்

(இ—ள்) சகலர்களாலேயும் ஸ்தோத்தரிக்கப்பட்ட ஸ்ரீ ராமனைப் போன்ற திறமையும், பலமும், ஞானமும், கீர்த்தி யும், ஜெயமும் பத்தராயவர்க்கு உண்டானதுபோல உண்டாக என்று ஆசீர்வாதம்செய்து நரேந்திரராஜன் தன் புத்திரனுக்கு சித்திராங்கதனென்று பெயரிட்டான். (எ-று)

18. பல்பல கலைக்கடல் படைக்கல வித்தொழில்
பயிற்று மவர்தாம் மகிழ்வுற
மல்லல்மிகு தந்தை தனிலுயர்வு வந்திடவு
மங்கல மணம் புரிவித்து
எல்லை யரசும் மதலையெய்த முடிசூடி யவ
னேவினகர் காவல் புரிய
வல்லி யொருபாக னடி மறத்தலின்றி யிரை
மன்னு பதமுன்னி னனரோ.

(இ—ள்) அர்த்த சந்திரனை சடையிலே தரித்தருளிய பரமசிவன் தேவியோடும் உகந்திருந்த ஆலயத்தை வலமாகப் பிரதக்ஷணம் செய்தால் அடிக்கொரு அசுவமேதயாக பலம் வரும். அருமையாக வண்டைப் போல உருண்டு அங்கப் பிரதக்ஷணம் செய்து சிவன்கோவிலை வலமாக வந்தால் அவர்கள் மான்மழு தரித்துக்கொண்ட ருத்திர கணேசர் ஆவார்கள். (எ-று)

23. ஆதிபரன் மேவு திருவாலய மியற்றினவ
 ரெய்துபய னுரைசெய எளிதோ
 சோதி வடிவான சிவலோக மதின்மேவியவர்
 சொரூப மகலாது நிறைவார்
 நீதிபெறு மாசரிதை யோது பவர் பாற் கருணை
 நிறையநிதி பெருகிவர உலகில்
 மாதிடுெரு பாகனருளான மொழிகூற
 வுமைமாது மகிழ்வாழி யெனுமே

(இ—ள்) ஆதிபரமேசுவரர் மகிழ்ந்து வாசம் செய்யும் சிவாலயம் ஜீர்ணோத்தாரணம் செய்தவர்கள் சிவலோகத்தைச் சேர்ந்து தேவரூபம் பெறுவார்கள். சிவசரிதத்தைச் சொல்லிய கல்விமான்களைப் பார்த்துக் கருணை கூர்ந்து இருப்பவர்கள் செல்வம் நீங்காமல் சிரஞ்சீவியாக இருப்பார்கள். (எ-று)

24. தேனின் மலராயிரமே சேர் பலமோர் நீலமலர்
 [தேடுமதி னுயிரமதா
 மானதொரு வாரிச மதாயிரமே நூறிதழினை
 [ததினுயிர மிதழ்
 தானதிக மேதவள தாமரை யினுயிரமே காரதி
 [கமே கனகமர்
 கானமலர் மேலதிக மேதுமிலை யோதுகவி தானிக
 [ராவதே துலகினே

(இ—ள்) தேன் பொருந்திய புட்பங்கள் ஆயிரம் எடுத்து அர்ச்சனை செய்வதற்கு சமானம் ஒரு செங்கழுநீர்பூ. அது ஆயிரம் பூவிற்குச் சமானம் ஒரு தாமரைப்பூ. அது அதற்கு ஆயிரத்திற்குச்



சமானம். ஒரு நூறிதழ்த்தாமரை இது ஆயிரத்துக்குச் சமானம் ஆயிரம் இதழ் தாமரை இது ஆயிரத்துக்குச் சமானம் ஒரு வெண்டாமரைப் பூ. ஒரு வெண்டாமரைப் பூவிற்குச் சமானம் இப்பூ ஆயிரம் காட்டிலிருக்கும் ஒரு கொன்றைப் பூவிற்குச் சமானம். இப்பூ ஆயிரத்திற்குச் சமானம் அடியார்கள் பாடும் ஒரு பாமாலையாகும். (எ-று)

25. இச்சரிதை திங்கள்குல னெய்தி மகவெய்து கதை
 யோது மியல்புள்ள பெரியோர்
 துச்ச மறுபத்தியொடு கேட்பவர்கள் தொல்சரிதை
 தன்னை மிகவாய் மகிழ்வோர்
 இச்சைபெற நற்பொருள்கள் கொடுப்பவர்க ளீதெழுதி
 வைக்கு மியல்புள்ள திறலோ
 ரெச்சமிகு மிந்திா சீரெய்தி யுலகெ வையினு
 மென்று மகலாத மர்வரே.

(இ—ள்) சந்திர குலத்தில் பிறந்த இராஜேந்திரன் இந்த ஸ்தலத்திலே வந்து புத்திரனைப் பெற்று கீர்த்திபெற்ற கதையை படித்தவர்களும், அதை அன்புடனே கேட்டு, சந்தோஷப் பட்டவர்களும் அக்கதையைக் கேட்டு திரவியம் கொடுத்தவர் களும், இதை எழுதி வைத்தவர்களும் சகலபாக்கியங்களும் உண்டாகி தேவேந்திராதி போகத்துடனே இப்பூவுலகில் வாழ்ந்திருப்பர். (எ-று)

26. என்று முயர்வாய தலமீசனருளி னினிய தீர்த்த
 [வியல் சூதனுரையா
 நன்றியை வியந்து முனிவருடல் குளிர்ப்பவுளம்
 [நன்மை மிகவே மொழிகுவார்
 குன்றினை வளைத்த குமரேசர் புகழாமமுது
 [கொள்ள வருள்செய்த வுனையே
 என்று மறவாத வகை செய்தனை யெனப்
 [பரவி யேகினர்க ளின்பமிகவே.

(இ—ள்) எக்காலமும் உயர்ச்சி பெற்ற தலத்தில் சிவ கடாக்ஷத்தினுலே இனிதாகிய தீர்த்த முக்கியத்தையும் தலமகி மையையும் சிவ புண்ணியத்தையும் சொல்ல, இவ்வாறு

சொல்லிய திருக்குமரேசுரர் புகழாகிய அமிர்தத்தை காதின் வழியாய் சரீரங்களெல்லாம் குளிர்ச்சியாகக் கேட்டு மகிழ்ச்சி பெற்ற முனிவர்கள் எங்களுக்கு ஒருநாளும் தங்களை மறக்காம லிருக்க அனுக்கிரகம் செய்தீர்கள் என்று சூதமகரிஷியைப் பார்த்துச் சொன்னார்கள். அவரும் தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்தார். (எ-று)

இராஜேந்திரச் சருக்கம் முற்றிற்று.

## 12. முனீஸ்வரர் சருக்கம்.

1. புரத்தைப் புன்னகை யாலெரித் தவப்புண் ணியர்
றெருக்கத் தம்புலி யூரெடுத் துச்சொல் கதைதான்
கருத்திற் கொள்முனி வோர்கணத் திற்சென் றதனிலே
யிருக்குச் சொல்தவ மியற் றங்குற வெண்ணினர்

(இ—ள்) சந்திர சூரியர் சகடமாகவும், பூமி ரதமாகவும் தேவர்கள் குத்துக்காலாகவும், ஆகாசம் கொடுங்கையாகவும், மந்தரகிரி வில்லாகவும், ஆதிசேடன் நாணாகவும், மகாவிஷ்ணு அம்பாகவும் திரிபுர சங்காரம் செய்யப்போன காலத்தில் இவர்கள் சகலரும் நம்மால்தான் ஜெயம்பெறப் போகிறார் சிவன் என்று அவரவர் எண்ணும் எண்ணத்தை அறிந்த சிவபெருமான் திரிபுரர் வாழ்கின்ற மூன்று நகரத்தையும் இராட்சத வீரர்களையும் சிறுநகையால் எரித்தும் சிவபூசை செய்த அம்மூன்று பேரை மாத்திரம் எரிக்காமல் நிறுத்திய புண்ணிய மூர்த்தியாகிய பரமசிவன் வசிக்கின்ற எருக்கத்தம்புலியூர் ஸ்தல மகிமையைக் கேட்ட முனீசுவரர்கள் அப்பொழுதே வந்து முறைப்படி தவஞ் செய்வதற்கு எத்தனப்பட்டார்கள். (எ-று)

2. இனத்தொடு சென்றலர் பூவெடுத்துத் தொன்னதினீர்
தனித்துக் கொண்டிட மேனைத்துத் தான்பெறவே
மனத்திற்கொள் சிவமே வனத்திற் செய்தவமே
தினத்திற் செய்மகமே சிவத்தினைச் செய்புமே.



(இ—ள்) இப்படியாக எண்ணி கூட்டங் கூட்டமாகக்கூடி வந்து மலர்ந்த புஷ்பங்களை எடுத்துக்கொண்டு வந்து வைத்து பழமையை விளக்கிய தீர்த்தத்திலே மூழ்கி சரீரசுத்திசெய்து கொண்டு மனம்குளிர தியானம் செய்தே வனத்தில் இருந்து தவம் செய்வது யாகம் செய்வதிலும் அதிகமாகும் அதிலும் சிவபூஜை செய்வதே உறுதியாம் என்றார். (எ-று)

3. இகத்துக்கு மிதுவே பரத்துக்கு மிதுவே
மகத்துக்கு மிதுவே மறைச்சொற்கு மிதுவே
புகழ்ச்சிக்கு மிதுவே புரத்திற்கு மிதுவே
செகத்திற்கு மிதுவே சிவத்திற்கு மிதுவே.

(இ—ள்) ஏகாக்கிர சித்தனாய் மனத்தை நிலையிலேநிறுத்தி பஞ்சேந்திரிய வழியிலே செல்லாமல் சிவபூசை யாகாதிகள் செய்வதே தவம். இகத்துக்குமிதுவே நிலை, பரத்திற்குமிதுவே பொருள். யாகத்திற்குமிதுவே. வேதத்திற்குமிதுவே. கீர்த்திக்குமிதுவே. கிரமத்திற்குமிதுவே. பூலோகத்திற்குமிதுவே. சிவத்திற்குமிதுவே அரிதாகிய பொருளாகுமென்றார். (எ-று)

4. ஆதலா லிந்த தவங்களே பெரிதென்
றவனியோ ரமரர்மா முனிவோர்
சீதவார் கமலத் தரிமுத லோர்கள்
திறம்பெறும் கணேச்சுரத் துற்றுச்
சூதமா யொருவர் நேத்திரத் தாலுந்
தொடர்வரி தாகியே மறைந்து
நீதியா யிருந்து தவங்களைச் செய்த
நிலைமையை சொல்லுதற் கரிதோ.

(இ—ள்) ஆகையினாலே இந்த தவங்கள் பெரியதென்று பூலோகத்தார் தேவர்கள், முனீஸ்வரர் குளிர்ச்சியாகிய கமலாசனனை பிர்மா, விஷ்ணு முதலானவர்களும் திறமாகிய கணேச்சுரப் பதியிலே வந்து நிட்சேபத் திரவியம்போல ஒருவர் கண்ணிலேயும் இவர்கள் இன்னார் என்று தெரியாமல் மறைந்திருந்து தவங்கள் செய்த நிலைமையை எம்மாலும் சொல்லுதற் கரிதாம். (எ-று)

5. மயிலின் ரூபமா யன்னமாய் கருடநல் வடிவாய்
குயிலின் ரூபமாய் கிள்ளையாய் பூவையின் குலமாய்ச்
செயலிற் றீர்த்தமூற் றுடுமீ னென்னவுஞ் சிவன்முன்
பயிலு நற்றவத் தருக்களு மாயினர் பரிவால்.

(இ—ள்) இப்படிச் சொல்லா நின்ற தேவர்கள் மயிலைப் போலும், அன்னத்தைப் போலவும், கருடனைப் போலவும், கிளிகளைப் போலவும், நாகணவாய்ப் புள்ளை போலவும், அநேக ரூபமாகி கங்கை தீர்த்தத்திலே மூழ்கி ஈக்கள் போலவும், பரமசிவன் முன்னாக சஞ்சரிக்கும் பல தேவர்கள் பலவித விருட்சங்கள் போலவும் இருந்தார்கள்.

6. திரங்களா யிவ்வா றொழுகுநாட் டிருந்திய வனத்திற்
பரிந்தி டற்கொரு வேடர்ப் பறவையைப் பிடிக்க
மரங்க டோறுமே கண்ணியும் வலைகளு மார்த்துங்
கரங்களிற் கவணுங் குணிலுங்கொண்டுமே காண்பார்.

(இ—ள்) இப்படி யிருக்கும் நாளிற் அவ்வனத்திலே யிருக்கின்ற வேடர்கள் இப்பறவைகளைப் பிடிக்க வேணுமென்று மரங்கள்தோறும் கண்ணியும் வலைகளும் கொண்டுபோய் கட்டி பக்ஷிகளை கவணினா லெறிந்துங் குறுந்தடியினா லெறிந்தும் கொலைசெய்ய எத்தனித்தார்கள்.

7. இனிப்புட் டாங்கியே யிடந்தொறும் வைத்திசை
[யெழுப்பும்
குனித்து வில்லம்பு கூட்டியு மறைந்து கொல்வதனை
நினைத்துக் கண்ணிமையாது பார்த்திருப்பர் பின்னிடத்
தனக்குழாங் கௌதாரி சிச்சிலியெலா மார்த்து

(இ—ள்) அந்தந்த இனங்களுக்குத் தக்க சாதிக்குருவிகளை வேறு இடங்களில் கருவித்து வைத்துக்கொண்டு அவைகளை விட்டுக் கூப்பிடச்செய்து அதனால் அதன் இனங்களை வருவித்து மறைந்திருந்து அம்பு எய்து கொல்லுவதை நினைத்து. அது கலங்கிக்கூப்பிடும் அதனை மறைந்திருந்து கண்ணிமைக்காமல்



பார்த்திருப்பார். இவைகளைக் கண்டு அன்னப் பக்ஷிகள் கௌதாரிகள், சிச்சிலிக் குருவிகள் இவைகளெல்லாம் கூப்பிடத் தலைப்பட்டன. (எ-று)

8. ஓடிப் போனதைப் பார்த்து இலைத் தலையினி லுச்சத்தில்
கூடிக்கொடு தம்பட்டமா குறுந்தொடி யடிப்பர்
நாடிக்காணுணைப் பரமனை நாடொறும் நினைத்துத்
தேடிக் கண்ணினா னெறிகிலாச் சிதடராம் வேடர்.

(இ—ள்) இப்படிக் கூப்பிட்டு ஓடிப்போன பட்சிகளை வேடர்கள் காட்டிலே நுழைந்து மறைந்திருக்கிறது. அவைகள் வெளிப்பட வேணுமென்று தலைகளிலே தழைகளை சொருகிக் கொண்டு கொம்பு, தம்பட்டங், குருந்தடி இவைகளை அடிப்பார்கள். வந்து காட்சி கொடுக்கும் பரமசிவனை தெரிசனம் பண்ணாமல் ஒருக்காலும் நினையாமல் தேடித் தோத்திரம் செய்து கூப்பிட்டு மறியாத மூடரான வேடர். (எ-று)

9. செய்யும் வஞ்சனை கொடுமைகட் ககப்படாத் திறத்
[தால்
னையு முள்ளத்தார்க் குண்பன வடைந்திடா வாற்றால்
கையின் வாளுங் கோடரியுங் கொண்டு கார்பொழிலை
வெய்ய வெட்டியே விற்றுண விருப்ப மேவும்

(இ—ள்) இப்படி அநேக வஞ்சனைகள் செய்தும் பட்சிகள் இடைக்காதபடியினாலே மனமானது மிகுதியும் நொந்து உண்ப தற்கு உணவொன்றும் இடைக்காததினால் மனம் வாட்டங் கொண்டு கையில் கொடுவாள், கோடரி முதலியவற்றை எடுத் துக்கொண்டு மேகங்கள் சஞ்சரிக்கிற உயர்ந்த மரங்களை வெட்டி விற்று ஜீவனம் செய்வோம் என்று வெட்ட எத்தனித் தார்கள். (எ—று)

10. கொலைஞர் மாமுனி வரரெனுந் தருக்களைக் குறைப்ப
நிலையிடந் தோறு மெய்தியே நெடுமர மேறித்
தலைக டோறினும் பார்க்குங்காற் சங்கர னருளாற்
கலைவலோ ரெலாங் கண்களிற் றோன்றிடா தமர்ந்
[தார்

(இ-ள்) இப்படிக் கொலை செய்யும் தொழிலையுடைய வேடர்கள் முனிவர்களாகிய மரங்களைவெட்ட வேண்டுமென்று மரங்கள்தோறும் சுற்றிப்பார்த்து அம்மரங்களின் மீதேறி மேலுள்ள கிளைகளை யெல்லாம் வெட்டும் சமயத்தில் பரமசிவன் அனுக்கிரகத்தினல் சகல கலைகளும் வல்ல முனிவர்கள் வேடரின் கண்களுக் ககப்படாமல் மறைந்தார்கள். (எ-று)

11. பலகை தூண் சரமாமென பார்த்தன வெல்லா
மிலது எவன் செய்வோ மெனவுமவ் வனத்தின்
[முன்னிருந்த
நிலமரங் களைவெட்டி நீக்கிடலு மாமுனிவோர்
தலமதை விடாததெவ் வாறெனத் தளர்ந்தார்.

(இ—ள்) இது பலகையாகும், தூணுகும், சரமாகும், இது உத்திரமாகும் என்று பார்த்ததெல்லாம் கண்ணுக்குக் காணுமல் போய்விட்டது. இனி கழியாவலும வெட்டி ஜீவனம் செய்வோமென்று வெட்டத் தலைப்பட்டார்கள். அப்படி வெட்டிய மரத்தில் முனிவர்கள் இத்தலத்தைவிட்டு நீங்காமல் தவம் பண்ணுவதற்கு எவ்வகை செய்வோமென்று மனந்தளர்ந்தார்கள். (எ-று)

12. அன்ப ருள்ளத் தினிடை யருதருள் வடிவா னேன்
துன்ப நீங்கிடத் தோன்றி முன்கூறிடு முனிவீர்
இன்ப மிக்கதா மெமக்கு மித்தலத்திற் காம்
[வினையாங்
கொன் பொதிந்திடக் கூறுவோ முபாயமுங்
[கொண்டே

(இ—ள்) அடியார்கள் உள்ளத்தினிடை விடாமற் இருந்து கிருபை செய்யும் தயாள ரூபமானவர் திருவுள்ளம் பற்றி உங்களது மனக்கவலையைத் தீர்ப்போம். எமக்கு இத்தல மிருதியும் விருப்பமானது உங்களது தவத்திற்கு இடையூறு வாராவண்ணம் உபாயம் சொல்லுகிறோம் என்றார் பரமசிவன். (எ-று)



13. கொடு விலங்கொடு வேடருங் குறுகிடார் வன்மரம்
நெடு மரங்க ளென்றவர் கொலாநிலை யதுவாகுங்
கடு விடங்களு மகன்ற வெள்ளெருக்கெனுங் காவாம்
வடிவ மாகுவீர் மாசிலா விருப்பதி னமக்கே.

(இ—ள்) கொடுமையாகிய துஷ்ட மிருகங்கள் சேராது வேடரானவர் வெட்ட மாட்டார்கள். நிலையாயிருப்பது விஷங்கள் அணுகாது. இவ்வாறுன வெள்ளெருக்கம் வனமாக வடிவமாகுவீர். நமக்கு அதில் விருப்பம் அதிகம் என்றார் பரமசிவன். (எ-று)

14. என்ப தோதியே மலைமகடனெடு மெம்மான்
பின்மா முனிவோர்க் கெல்லா மருள்வளந் தோன்ற
முன்பு காணவே யாலயம் புகுந்தனன் மொழிகேட்
டின்பவாரிதி மூழ்கினர் வேண்டிய தெய்த.

(இ—ள்) இப்படியாகச் சொல்லி பர்வதராஜபுத்திரியுடனே எமது கர்த்தனை திருக்குமரேசுரர் முனிவர்களுக் கெல்லாங் கிருபைசெய்து அவர்கள் காண கோவிலில் போய் புகுந்தார் இப்படிப் பரமசிவன் சொல்லியதைக் கேட்டு முனிவர்கள் ஆனந்தக் கடலிலே மூழ்கி நாம் வேண்டிவந்த காரியம் நிறைவேறியது என்று சந்தோஷமானார்கள். (எ-று)

15. சென்னி கீழுற வூன்றியே திகழ்சடை வேராய்
மன்னி மற்றங்கவுறுப் பெலாம் மரமிலை காய்பூ
வென்னவே யெருக்காகியே யிணையிலாச் சிவத்தை
யுன்னி யானந்த வுருவென நீறணிந் துற்றார்.

(இ—ள்) இப்படி ஆனந்த வாரிதியிலே மூழ்கியிருந்த முனிவர்கள் தலைகீழாக சடையெல்லாம் வேராகவும் மற்ற உறுப்புக்களெல்லாம் மரம் இலை காய் பூ என எருக்கமரமாகி விபூதி தூளிதம் செய்துகொண்டு சிவத்தை தியானம் செய்து தவம் செய்தார்கள். (எ-று)

மதங்க சூடா மணியை மன்றல் புரிந்தண் ணலுடை
பதங்க ளொடோறும் பரவியே பலதல மேவ நினைந்தார்

(இ—ள்) இப்படியாகப் பாடிக்கொண்டிருக்கின்ற நாளையிலே ஒருநாள் சதங்கை பாடக முதலான ஆபரணாதிகள் தரித்த அதிரூப சௌந்தரியமுள்ள மதங்க சூடாமணியென்னும் பெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டு திருக்குமரேசர் பாதத்தை தோத்திரம் செய்துகொண்டு இருக்கும் நாளையில் ஒருநாள் இந்த பூமியிலே அநேக சிவாலயம் உள்ளதையும் தெரிசனம் செய்ய வேண்டுமென்று நினைத்தார். (எ-று)

22. விடைக்குமரேசரைப் பணிந்து விடைகொடு பல
[பதியின்
சடைப்பர மன்றமரன்றா டொழுது தண்ணிசையாற்
[றுதித்துக்
கடைக்கண் வலையார் மாயைக் கவலைகெட வருள்
[சூலப்
படைக்கரன் றன்னால வாய்ப்பதி ஞாங்கர் நண்ணினார்

(இ—ள்) இடபவாகன ரூடரான திருக்குமரேசுவரரை வணங்கி விடைகொண்டு அநேக சிவாலயங்களைத் தரிசனம் பண்ணி இசையுடனே சிவகீர்த்தனைகள் பாடித்துதித்து மான் போலும் வெறித்த பார்வையையுடைய பெண்களின் மாயையில் அகப்படாமல் கிருபை செய்து ரக்ஷிக்கும் மதுராபுரியைச் சேர்ந்த ஓரிடத்தில் தங்கியிருந்தார் யாழ்ப்பாணர். (எ-று)

23. கோபுரம் மடங்கள் சாலக் கொடிமதில் மாட மோங்கு
மாபுரக் கூடற் கண்டு மண்பட வணங்கி நின்று
வேய்புரைத் தோளி பங்க னென்றுமென் னரியை
[யெல்லாம்
வேகமாம் பரியதாகக் காட்டும் பரனென்று
[மிசைத்தார் பண்ணின்.

(இ—ள்) கோபுரங்கள், மடங்கள், சத்திரங்கள், மண்டபங்கள், கொடிகள் உயர்ந்திருக்கும் மதில்கள் மேல்வீடுகள்



இப்படி அலங்காரமாகவுள்ள மதுராபுரிப்பட்டணத்தைக்கண்டு வணங்கி எழுந்து யாழைக் கையிலே எடுத்துக்கொண்டு வேய்புரைத்தோளிபங்கனென்றும் மெதுவான சரீரமுள்ள நரிகளை பஞ்சசக்தியும் பதினெட்டுசாரியும் கற்ற குதிரையாகப்பாண்டியன் முன்னே காட்டிய பரமசிவன் என்றும் பண்ணுடனே பாடினார். (எ-று).

24. இசையாழ்ப் பாண ரன்பு மிரக்கமு மறிவு மிக்க
நசையையு முணர்ந்து சொக்க நாதரின் னகரில்
[வைகும்
வசையிலாப் பத்தர்க் கெல்லாம் வாழ்கென கனவில்
[சொல்வி
விசையமுத் தமனை விரைவினி லிங்கழையு
[மென்றார்.

(இ—ள்) இசையுடனே சிவபெருமானுடைய துதிகளைப் பண்ணினாலே பாடிய யாழ்ப்பாணருடைய அன்பும் இரக்கமும் அறிவும் பாடுகிறதில் ஆசையும் இப்படி இவையெல்லாம் சித்தத்திலே தெரிந்து சொக்கநாதர் மதுரையிலுள்ள சிவபக்தர்க்கெல்லாம் கனவிலே தோன்றி இசையிலே மகாவல்லபம்மிக்க யாழ்ப்பாணரை நீங்கள் சீக்கிரமாகச்சென்று இங்கு அழைத்து வாருங்கள் என்று பரமசிவன் திருவுளம் பற்றினார். (எ-று)

25. புலரியி லெழுந்து நல்ல புண்ணியர் பலருங் கூடி
யலரிவெண் மதிதீ முக்க ணானவ ரிரவில் வந்தே
யிலகிட வருளிச் செய்த தென்னென வதிச யித்தே
மலைவிலா தெழுந்து போந்து மனப்படி வாய்ப்பக்
[கண்டார்.

(இ—ள்) இப்படி கனவுகண்டு சிவபக்தர்கள் யாவரும் ஓரிடத்திலே கூடி சூரிய, சந்திர, அக்கினி என்னும் மூன்று கண்ணினையுடைய பரமசிவன இரவில் கனவில் தோன்றி மொழிந்தது என்ன அதிசயம் இதைப்பார்ப்போம் என்று யாழ்ப்பாணரைக் கண்டார்கள். (எ-று)

16. சிறு பறவைகள் பூவதாய்ச் சேர்வதிற் காயாம்
பெரு பறவைகள் பெரியவைந் தருவெனப் பெறுதல்
மறுவில் ஞானமே வெள்ளெருக் கானநல் வடிவாய்
நெறிய வெண்ணீறு பூதியவுருவாய் நிற்பதாகும்.

(இ—ள்) சிறியதாகிய பட்சிஜாதிக ளெல்லாம் பூவாகவும் காய்கள் போலவும், பெரிய பறவைகள் பெரிய மரமாகவும் குற்றமற்ற ஞானவானந்தமே பரிசுத்தமான வெள்ளெருக்க மரவுருவாகவும் வெண்மையான விபூதி பூசிய ரூபமாக நிற்பதைப்போல முனீஸ்வரர்கள் தவம் செய்யும் விதம் இருந்தது. (எ-று)

17. இந்த மகிமையென விளங்கும் எருக்கத்தம்புலி யூரில்
வந்து தித்து யாழ்ப்பாணர் பாலமதிபோல வளர்ந்து
சந்தமிகு கல்வியெலாஞ் சாலமகிழ்ந்திட வோதி
விந்தையிசைப் பண்ணனைத்தும் விரகினுடனே
[யறிந்தார்

(இ—ள்) இப்பேர்ப்பட்ட மகிமை பொருந்திய எருக்கத்தம் புலியூரில் யாழ்ப்பாணர் வந்து பிறந்து பால சந்திரனைப்போலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வித்தைகளும் கற்றறிந்து முப்பத்திரண்டு இராகமும் அறுபத்தி நாலு கலைகளும் பதினெட்டு பண்ணும் நன்ருகக் கற்றறிந்தார். (எ-று)

18. பயிற்று கின்ற குரவர்களும் பாணருடை கல்வியிசை
நயத்தைமிக மனத்துன்னி நாதனருளெனத் தெளிந்து
வியப்புடனே சிவகீர்த்தி மேதினியின் மிகவோங்கத்
தயக்கடலினவர் துதியை யிசையாலே சாற்றென்ருர்

(இ—ள்) யாழ்ப்பாணருக்கு வித்தைகள் கற்பிக்கும் குருவானவர் பாணருடைய வித்தையையும் இசையையும் பார்த்து இது பரமசிவன் அருளல்லாமல் நாம் கற்பிப்பதினுல் மட்டும் அல்ல என்று எண்ணி மகிழ்வுடனே சிவகீர்த்தி பூமியில் மிகுதி



யும் பரவதயா சமுத்திரமான பரமசிவனுடைய துதியையாழிலே இசைத்து பண்ணுடனே பாடுவாய் என்று ஆசீர்வதித்தார். (எ-று

19. அன்றுமுதல் குமரேச ரமர்ந்தசன் னிதிமுன்பு
சென்றுபணிந் தெழுந்தே சிரசின்மேற் கைகுவித்து
குன்றுதலிலா மனதாய்க் கோவில்வலங் கொண்டருளி
மன்றினடம் புரிந்தோனை வாழ்த்த யாழ்க்கைக்
கொண்டார்.

(இ—ள்) அன்று முதல் யாழ்ப்பாணர் திருக்குமரேசர் சன்னிதி முன்னே வந்து வணங்கி சிரசின்மேல் கைகூப்பி அஞ்சலித்து மனமானது மிக்க ஒருமையுடனே கோவில் வலமாக வந்து சன்னிதி முன்னே நின்று சபையில் ஆனந்த நர்த்தனம்செய்த பரமசிவனைத் தோத்தரித்து யாழைக் கையிலே யெடுத்தார் (எ-று)

20. கரியுரிபோர்த் தவனென்றுங் காரியகா ரணனென்றும்
அரியயன்றே டுதற்கெட்டா வண்ணலென்றும் பாண்டி
[யர்க்கு
நரிபரியாக் கியவெங்களுதை னென்றுந் தந்தியினுற்
றெரியவிரா கத்துடனே தெளிந்திசைபா டினர்பண்ணுல்

(இ—ள்) யாழைக் கையிலே எடுத்துக்கொண்டு தந்திக ளெல்லாம் சரியாக வகுத்து சிவகீர்த்தனையினுலே தாருகா வனத்து முனிவர்கள் அனுப்பிய யானையை யுரித்து போர்த்துக் கொண்டவரென்றும் காரிய காரணர் என்றும் பிர்ம்மா, விஷ்ணு தேடியும் காணுத கர்த்தனென்றும் பாண்டியனுக்கு தென்ன வன் பிர்ம்மராயன் நிமித்தமாய் நரியை குதிரையாகக்காட்டிய பரமசிவன் என்றும் தெளிந்த அறிவுடனே பிசகாமற் தினந் தோறும் பாடினுர். (எ-று)

21. இதங்கள் மேவிய விசையே யெழுப்பிடு நாளினி
[லொருநாட்
சதங்கை பாடக மிலங்குந் தையலரில் சௌந்தரிய

26. அய்யனே கலைவல் லானே யாலவாய் நகர்க்கு வம்மின்
உய்யுமல் லறிவோர் கூற வுகந்தவர் நயந்தே கூடப்
பய்யவே நடந்து சென்று பரமனைப் பணிந்து போற்றிச்
செய்யமா மறையோர் முன்பு செவ்வியி னிருந்து
[சொன்னார்.

(இ—ள்) அனைவரும் யாழ்ப்பாணரைக் கண்ட மாத்திரத்திலே யாழிசையிலே வெகு வல்லமையுள்ள ஐயா மதுரைப் பட்டணத்திற்கு வரவேண்டுமென்று அறிவுள்ள பெரியோர்கள் சொல்ல அவர்களுடனே நடந்து சென்று சொக்கநாதர் சன்னிதியின்முன்பு சென்று,வணங்கி சிவப்பிராமணர் வித்வத்ஜனங்கள் முன்னிருந்து யாழைக் கையில் எடுத்து பண்ணுடனே பாடினார். (எ-று)

27. தற்பரப் பொருளே யென்னுந் தண்ணிசைக் கிரங்கி
[யீய்ந்த
விற்பொலிப் பலகை மீது மேவிமெய்ப் பக்தி யோடு
பற்பல தினங்க ளித்துப் பரமனை விடையே கொண்டு
சொற்பயில் மாடக் கூடற் றொன்னக ரகன்றா ரன்றே.

(இ—ள்) தற்பரனே ஆனந்தக்கடலே யென்றும் யாழினாலே வாசிக்கின்ற இசைக்கு இரங்கி சோதிப்பிரகாசமான பலகை ஒன்றில் ஆசனமாக இருந்து வாசிப்பதற்குக்கொடுத்தார். சொக்கநாதர் கொடுத்த பலகையை வாங்கிக்கொண்டு கர்ணாமிர்தமான அனேக இசையைப்பாடி ஸ்தோத்தரித்து மதுரையைவிட்டு அப்பாற் சென்றார் யாழ்ப்பாணர். (எ-று).

28. அண்டரும் பணியுஞ் சம்பு வாலயம் பலவும் போற்றித்
தெண்டனிட் டருளளிக்கும் தீர்த்தங்கள் பலவு மூழ்கிக்
கண்டனக் கினிய வாரூர்க் கடவுளைக் கண்டு தொண்
பண்டரு மிசையினாலே பாடினர் யரிவாலம்மா. [டின்

(இ—ள்) சகல தேவர்களையும் நீங்காமல் ஸ்தோத்தரித்து சிவனுடைய ஆலயங்களை அநேகமாக தெரிசனம் பண்ணி யாழ் வாசித்து கண்ணுக்கு இனிதான ஆலயமும் கோபுரங்களும் மதில்களும் உள்ள திருவாரூர் தியாகராசரையும் பணிந்து தொண்டினால் அன்பு கூரப் பண்ணுடனே பாடினார். (எ-று)



29. அன்புட னனுதினமு மிவ்வாறங் கமர்ந்திடு நாட்டன்
[னில்
என்புபெண் ணாகத்தென்ன னிடரறுத் தருளப்
[பாவாம்
நன்புகழ்ப் பதிகம்பாடும் ஞானசம் பந்தன் சீர்கேட்
டின்பமுற் றெழுந்தங்கங்கு மிறைத்தலம் பரவிச்
[சென்றார்.

(இ—ள்) அன்புடனே இந்தப்படி தினமும் பாடிக்கொண்டு இருக்கும் நாளில் எலும்பைப் பெண்ணாகவும் பாடி பாண்டியன் வெப்பந் தீர்த்தருளிய திருஞானசம்மந்த மூர்த்தியினுடைய தேவாரப்பதிகச் சிறப்பைக்கேட்டு அவரை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிசனம் செய்யப் புறப்பட்டுவரும் மார்க்கத்தில் இருக்கும் சிவஸ்தலங்களையும் தெரிசனம் செய்து வந்தார். (எ-று)

30. காழியம் பெருமான்பாத கமலமும் கண்ணுற் றங்கு
மூழியஞ் செயுமன்போடு முள்ளமு முருகி நல்ல
வேழிசைத் திகழ் யாழ்ப்பாணர் இறைஞ்சினர்
[தமிழதான
வாழியங் கரைகண்டோனு மனமகிழ்ந் தினிது
[சொல்வார்.

(இ—ள்) இவ்வாறு யாழ்ப்பாணர் சீர்காழியில் சம்பந்த மூர்த்தியைக் கண்டு அவருடைய பாதகமலத்தை வணங்கி அவரிடம் ஊழியம் செய்ய வேண்டும் என்று மனமார நினைத்தார். கண்ட சம்பந்தர் மனம் இளகி சொல்லலுற்றார். (எ-று)

31. பழுதிலா வினிய நல்லிசை யாழ்ப்பாணரே வண்டு
[தும்பி
யுழுதுபாண் மிழற்றுங் கொன்றை யொளிர்மதி
[சடைக்கணிந்த
மழுவலான்றன் மேனுமும் வழுத்துச் செந்தமிழை
[யெல்லா
மெழுதருங் கரத்தாற் பண்ணி னிசையெலா
[மிசைத்தா ரன்றே.

திருப்பதிகம்பாடி யாழ்ப்பாணர் கையிலே கொடுத்தார். அந்தத் திருப்பதிகத்தை கையிலே வாங்கிக்கொண்டு பண்ணுடனே பாடினார். அப்பதிகத்தின் இராகமும், பண்ணும், இசையும் நம்மால் சொல்லி முடியாதென்றார் சூதமகாரிஷி. (எ-று)

37. இனியநல் லிசையின் சீர்கேட் டிவ்வுலக கத்திலீச
னனிபுகழ் துதியுமைப்போ னவில்பவர் கிடையா
[தென்னப்
பனிமலைப் புதல்வியோடும் பால்விடை யேறிவந்த
குனிவரைச் சிலையா னென்பன் றன்னைக் கையாற்
[கூப்பி நின்றார்.

(இ—ள்) யாழ்ப்பாணர் இனிதாகிய இசையினாலே இப்பதிகம் பாடியதைக் கண்டு ஞானசம்பந்தர் அருகிலே சிவபக்தர்கள்வந்து உம்மைப்போல தேவாரம் பாடியவர்கள் கிடையாதென்று பர்வதராஜ புத்திரியுடனே வெள்ளையாகிய இடபத்தின் மீதேறி மலையை வில்லாக வளைத்த பரமசிவனைப்பாடிய ஞானசம்பந்தரை தோத்தரித்து கும்பிட்டு நின்றனர். (எ று)

38. ஞானசம் பந்த ரென்று நவிலரு மகண்டாகார
மானசங் கரனைப் போற்று மரியயாழ்ப் பாணரன்பின்
கானமும் நயமுங் கண்டு கனிவுடன் புகழ்ந்தா ரென்று
ஞாலமில் சிவநா மத்தின் பெருமையா ரியம்ப வல்லார்.

(இ—ள்) திருஞானசம்பந்த ரென்றவர் அகண்டாகார பரிபூரணமான சிவபெருமானை ஸ்தோத்திரித்த, பண்ணிசைத்த யாழ்ப்பாணரை பக்தர்களும், ஏனையோரும் இவருடைய கானமும், நயமுங்கண்டு புகழ்ந்தார்களென்றால் இவருடைய பெருமையை யாவரே உரைக்கவல்லார். (எ-று)

39. இப்படிச் சிலநா ளங்க ணிருந்தவ ரோடெழுந்தே
மைப்படி கண்ணாள் பங்கன் மகிழ்தல மனைத்தும்
[போற்றி
யொப்பிலா வினிய ஞான சம்பந்த னுயர் மணத்தின்
மெய்ப்புக ழுடன்யாழ்ப்பாணர் மேவினர் முக்தியன்றே



(இ—ள்) இப்படியாக சிலநாள் எருக்கத்தம்புலியூரிலே இருந்து மறுபடி அவருடனே இத்தலம்விட்டு எழுந்து பின்னும் அநேக தலங்கள் தெரிசனம் செய்து ஞானசம்பந்தர் மணம் செய்தபோது அவருடனே மோக்ஷமடைந்தார் யாழ்ப்பாணர். (எ-று)

40. ஆதலா லீசநாமமதனை யிவ்வுலகந் தன்னி
லோதினோர் பெருமை நம்மாலுரைத்திட முடியாதெந்த
நீதியாம் பெரியோர் தாமுநிலே பெருமுமை யோர்பாக
சோதியா மென்றே நாளும் தொழுபவர் கடவுளாவார்.

(இ—ள்) ஆகையினாலே சிவநாமத்தை இப்பூமியில் உதித்த பெரியோர்கள் வாழ்த்தி யடைந்த புகழை நம்மால் சொல்லி முடியாது. அப்பேர்ப்பட்ட பெரியோர்களை நாம் வணங்கி தெய்வம் ஆவோம் என்றார் சூதமகாரிஷி. (எ-று)

41. சாதியிற் கடையரே யாயினும் தவத்தோர் தமக்கிட
[ரிழைத்தவ ரெனினும்
போதனையிலாத புல்லராயிடினும் புகலருமீச
[னுமத்தை
யாதியாஞ் சிவசங்கர விமலவம்பிகை பங்கவென்
[ றொருகால்
நீதறவுரைக்கிற் றீவினையகன்று சேர்குவர் முத்தியி
[லம்மா

(இ—ள்) சாதியிலே கடையரோ யானாலும் பெரியவர்களை தூஷண வார்த்தையாகச் சொல்லியவர்கள் ஆனாலும் உபதேசம் பெறாதவர்களாயினும் சிவநாமத்தை ஆதியாகிய சிவ சங்கரா அமலா அம்பிகைபாகா என்று ஒருதரம் சொன்னாலில் பாபங்களெல்லாம் நீங்கி முத்தியைப் பெறுவர். (எ-று)

42. ஆவினை யுரித்தோ னாயினும் நீறுமக்கமு மணிந்திடில
[வனைச்
சேவினிலேறு மரனென வணங்கிச் செவ்விய
[நாவினாற் றுதித்துப்

(இ—ள்) குற்றமில்லாத இனிய இசைபொருந்திய யாழ்ப் பாணரே வண்டு தும்பியுழுது இராகம் பாடிய கொன்றை மாலையையும் பிரகாசம் பொருந்திய சந்திரனையும் சடாமுடியிலே தரித்துக்கொண்டு மழுவை கையில் ஏந்திய பரமசிவன் மேல் நாம் பாடிய தேவாரமாகிய தமிழை பண்ணுடனே பாடுவீர் என்று சொன்னார் ஞானசம்மந்தர். (எ-று)

32. விஞ்சைய ரிமையோர் மிக்கமேவு தும்புரு யிசைக்கும்
வஞ்சமி லிசையோ சொல் மாருதி யிசையோ
[நெடுஞ்
செஞ்சொற்சேர் தண்கை வீணைத்திற மலியிசையோ
[வென்று
கஞ்சன் மாலரியுஞ் சொல்ல விசைத்தொழில்
[காட்டினாரே.

(இ—ள்) இவ்வாறு சம்பந்தர் சொன்ன உடனே யாழைக் கையில் எடுத்துக்கொண்டு தந்திகளை சமமாய் நிறுத்தி பண்ணுடனே பாடினார். இவ்விசையை மகாவிஷ்ணுவும் பிர்ம்மாவும் கேட்டு இது கந்தருவர் இசையோ, தும்புரு விசையோ என்று சொல்லும்படி பாடியதை ஞானசமபந்தர் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்தார். (எ-று)

33. புகழ்செறி யடியாரோடும் புகலியம் பதியின் வேந்தர்
நகைநில வணிவோன்வாழு நற்றலம் பலவும் போற்றி
யகமகிழ் வுடனே பொன்னி யாற்றினின் வடபா
[லேறிச்
செகதலம் புகழ்யாழ்ப் பாணர் செனனலூர்
[நொக்கிச் சென்றார்

(இ—ள்) கீர்த்தி பொருந்திய சம்பந்தர் பதினாயிரம் சிருக் கூட்டத்துடனே எழுந்து பரமசிவனிருக்கும் அநேக சிவாலயங்களை தெரிசித்துக்கொண்டு காவேரிக்கு வடக்கு முகமாகக் கரையேறி யாழ்ப்பாணர் ஜெனனமான புலியூரை நோக்கி வந்தார். (எ-று)



34. தெய்வமா தலம தானதிகழ் குமரேச் சுரத்தைச்
சைவமே லாக்கு ஞான சம்பந்த ரினிது நோக்கி
யுய்வகை யறிவோர் காண வொளிருநல் லஷ்டரூப
மெய்வள ரண்ணல் கோவிற்புக்கு வீழ்ந்தெழுந்து
[மேலாய்.

(இ—ள்) தெய்வீகம் விளங்கிய மகாஸ்தலமாகிய குமரேசுவரம் என்னும் பெயர் விளங்கிய ஸ்தலத்தைக் கண்ணால் கண்டு சைவமெல்லாம் ஒரு ரூபமாய் மேலாக விளங்கி வந்த ஞானசம்பந்தர் மிகவும் மகிழ்ச்சிபெற்று வேதாந்த சாஸ்திர நிபுணரான அறிவோர்களும் தோத்திரம் செய்யாநின்ற சிவன் இவ்வாறு அஷ்டரூபமாகிய திருக்குமரேசுரர் கோவிலிற் சென்று வணங்கினார். (எ-று)

35. கையெனுங் கமலங் கூப்பிக் கண்கணீர் சொரிய நின்று
மெய்யெலாம் மயிர்பொடிப்ப வீறுமன்புடன் விழித்து
மையணிகண்டா தொண்டர் மனமணி விளக்கே
[யெங்கள்
ஐயனே யென்று போற்றி யருள்வல மூன்றுஞ்
[செய்தார்.

(இ—ள்) இப்படி வணங்கி எழுந்த ஞானசம்பந்தர் சிரசின்மேல் இருகரங்கள் கூப்பி ஆனந்தக்கண்ணீர் சொரிய நின்று சரீரம் புளகாங்கிதமாய் கண்களை விழித்துப்பார்த்து நீலகண்டர் அடியார்கள் மனதில் விளங்கிய இரத்தினதீபமே, எமது கர்த்தனே என்று ஸ்தோத்தரித்து மூன்றுதரம் பிரதக்ஷிணமும் வந்தார். (எ-று)

36. நெறிதரு மினிய பூதப்படையுளாய் நிமலா சுத்த
வறிவினிலறிவே யென்று மன்புடன் பதிகம் பாடிச்
செறி புகழணி யாழ்ப்பாணர் செங்கையி லீய நல்ல
குறியிசைத்தா ரதைக் கூறலாந் தகைமைத் தன்றே.

(இ—ள்) வழிபாட்டுடனே சூழ்ந்து நின்று பூதப்படையையுள்ளவனே, நிமலனே, சுத்தமாகிய அறிவிற்கு மறிவே என்று

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 25 | வரனை | வரனின் |
| 11 | கடைசி | மருகு | மறு |
| 12 | 7 | ளிடக்தில் | ளிடத்தில் |
| 21 | 1 | பெண்னை | பெண்ணை |
|  | 15 | இரண்டாவது | இதை அடிக்க |
|  | 16 | மூன்ரு | இரண்டா |
| 22 | 13 | முன்மூ | மும்மூ |
| 24 | 12 | மழையாக | மழை |
|  | 22 | என்ன | என்னவே |
|  | கடைசி | ரட்சிக்கும் | ரட்சிக்கும் இவ்வூர் |
| 25 | 21 | மார்வ | ஆர்வ |
| 26 | 11 | சொரிமுத்தம் | முத்தம் |
|  | 21 | தேன்பொருக் | தேனமர்ந் |
|  | 21 | வண்டுகள் | வண்டு |
| 27 | 23 | குறைவர | குறைவற |
| 28 | 21 | உயந்திடு | உயர்ந்திடு |
|  | கடைசி | வீழல் | விழல் |
| 29 | 21 | யும்யானை | யானை |
|  | 19 | சீதம் | கீதம் |
| 30 | 7 | இருய | இருப் |
| 33 | 12 | மவர்சோ | மலர்ச்சோ |
|  | 24 | கொவ்வை | கொவ்வை |
| 34 | 10 | இன்புறு | எந்த |
| 35 | 2 | குற்றறா | குற்றதா |
| 38 | 16 | சொலலற் | சொல்லற் |
| 41 | 5 | னெல் | னெல்லா |
|  | 7 | தாலே | தால் வென்னை நிறமாம் |
|  | 8 | னெரு | எரு |
|  | 9 | வீழ்ந் | வீழ்ந்தே |
|  | 10 | துருத் | உருத் |
|  | 10 | வெனத் | வென்னத் |
|  | 22 | ராசி | ராகி |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 43 | 19 | சந்திய | சந்தியா |
| 54 | 12 | சந்தர | சந்திர |
|  | 18 | ஒருத்த | ஒருத்தர் |
| 58 | 7 | வேனுகலம் | வேனுகம் |
|  | 17 | பூனா | பூனா |
| 61 | 14 | திடாக்மல | திடாமல் |
|  | 25 | தாராரகி | தாரராகி |
| 64 | 3 | தற்புருடர | தற்புருடா |
|  | 15 | நிறைவரே | நின்ற |
|  |  | சகல | சகலமு |
|  | 17 | கத்தங்புலி | கத்தம்புலி |
| 67 | 19 | இல்லை. | இல்லை உணர்வாலே. |
|  | 24 | மதங் | மாதங் |
|  | 25 | முனனிய | முன்னிய |
| 69 | 3 | கல்வினை | கல்வியினை |
|  | 24 | கல்லா | கல்லால் |
| 73 | 10 | யிசைவர்க்கக் | யிசைவாக |
| 79 | 11 | விதிப்படீ | விதிப்படி |
| 83 | 22 | கிளர்த்த | கிளத்த |
|  | 26 | புலியூர் | புலியூர் |
| 84 | 10 | சிறந் | சிறந் |
| 87 | 27 | தலையில் | தலையாம் |
| 89 | 7 | டென்ருல் | டென்றூர் |
|  | 26 | யினியிரு | யினிதிரு |
| 90 | 24 | மனு | அனு |
| 93 | 19 | வோர் | வோர்களே |
| 94 | 11 | ஒருவருக்கும் | ஒருவரும் |
|  | 16 | அம்மலென் | அம்மவென் |
| 95 | 29 | மெஞ்சலில் | எஞ்சலில் |
| 96 | 6 | செய்வார் | செய்வார்கள் |
|  | 26 | யெலாசிந்தை | யெலாம்பொருந்து சிந்தை |
| 97 | 2 | யிந்திய | யிந்திரிய |
|  | 13 | புறம் | புரம் |
| 98 | 25 | பீதிர்க் | பிதிர்கள் |
|  | 17 | கமல | கமலம் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 99 | 25 | ரெழில் | எழில் |
| | 18 | வரகதி | வருகதி |
| 100 | கடைசி | மேமமா | ஏமமா |
| 101 | 23 | மின்பமா | இன்பமா |
| 103 | 7 | விகித்தில் | விடத்தில் |
| 104 | 4 | முதலானதைகளைச் | முதலானவைத் |
| | 18 | ரிஷ | ரிஷி |
| 104 | கடைசி | தகட்டாக | தகடாக |
| 107 | 14 | அன்ப | அன்பு |
| | 15 | லுண்டற்றிலே | |
| 109 | 16 | அல்லாமற் | அல்லாமல் |
| | 23 | நார் | நார |
| | 26 | செவ்வல்வி | செவ்வ |
| 110 | 13 | கரநா | கரஞ |
| 111 | 11 | வினைதீர | வினைதீர் |
| | 15 | அர்ச்சனா | அர்ச்சனை, |
| | கடைசி | நூய | நூய் |
| 112 | கடைசி | யேதன | யேதென |
| 113 | 8 | தனு | தன |
| | 12 | மூன்னே | முன்னே |
| 114 | 12 | முனனே | முன்னே |
| | 20 | காணுறு | காணு |
| | 22 | தேசுத் | தேகத் |
| | 27 | வரை | வறை |
| | 28 | மறைபொழு | யறைபொழு |
| 118 | 3 | என்றூர் | ஒன்றூர் |
| 123 | 19 | இசைப்போன் | இசைப்பின் |
| 127 | 21 | துனி | துணை |
| 131 | 26 | ம்கோா | மகோர |
| 132 | 14 | மிட்ட | இட்ட |
| | 21 | யககற்ப | மககற்ப |
| 139 | 26 | நிறைவு | இன்மை |
| 140 | கடைசி | நிரங்பி | நிரம்பி |
| 143 | 5. | வந்லு | வந்து |

பூவிலே நறுநீர் கொண்டு பூசித்துப் போனக மளித்
[துளோர் பெருமை
மூவிலைப் படையான் வில்லி ஞரியே முயன்றதை
[மொழிந்திடப் பாற்றும்.

(இ—ள்) பசுவை யுரித்த நீசராகிலும் நெற்றியில் விபூதியும் சிரசிலும் காதிலும் கழுத்திலும் ருந்திராக்கமும் தரித்துக் கொண்டு இருந்தானேயானுல் அவனை இடபவாகன ரூடரான பரமசிவன் என்று வணங்கித் தோத்திரித்து புஷ்பம் முதலியவற்ருல் பூஜித்து அன்னமும் கொடுத்தவருடைய பெருமையை பரமசிவன் வளைத்த மலையாகிய வில்லிற்கு ஏறிட்ட நாணுகிய ஆதிசேடனுலே சொல்லக்கூடும். ஏனையோராலே சொல்ல முடியாது என்று நைமிசாரணிய முனிவோர்களைப் பார்த்து சூத மகாரிஷி சொனனுர். (எ-று)

43. மாத மூன்று மழைகள் பொழியவே
யேத நீங்கி யிடர்கள் ஒழியவே
போத வானந்தம் பொற்புட ஞேங்குகச்
சீத வாரடி யார்கள் செழிக்கவே.

(இ—ள்) இவ்வுலகத்தில் மூன்று மழைபெய்ய, இடையூறுகள் ஒரு குற்றமுமில்லாமல் நீங்கிப்போக, ஞானவானந்தம் உயர்ந்து அடியார்கள் மிகுதியும் தழைத்து வளர. (எ-று)

44. யெங்க ணுஞ் சிவபூஜை யிலங்குக
சங்க ரன்புகழ் தாலத் தியம்புக
வங்க மேமுதல் பூமி வளருக
பங்க மேயாக பாதகம் பறக்கவே.

(இ—ள்) இந்த பூலோகமெல்லாம் சிவபூஜை நடந்தேற, அவர் கீர்த்தி தழைக்க சிவகதைகளை சகலரும் படிக்க, வெள்ளி முதலான சகல வஸ்துக்களும் பூமியும் வளர்ந்தோங்குக. பஞ்ச பாதகங்களும் விலகிப்போக. (எ-று)

45. காம கோப மயக்கம் கரையவே
ஏம லாப மோடின்பம் பெருகவே



நாம வஞ்செழுத் தோங்கி நலந்தர
தீமை செய்பவர் செய்கை சிதறவே.

(இ—ள்) காமக்ரோத லோப, மோக. மத, மாச்சர்யம் அகன்றுபோக பொன் முதலான சகல வகைகளும் பெருகி வளர பஞ்சாட்சரம் மிக்க பிரபலமாக விளங்குக. சிவதருமங்களுக்கு விரோதம் செய்கின்ற மகாபாபிகள் தொடுக்கும் காரியங்களெல்லாம் சிதறிப்போக. (எ-று)

46. வந்த னையடி யார்களு மல்கவே
நிந்த னைசெயும் நீசர மூந்திடப்
பந்த பாவமும் வெருவிப் பயந்திடச்
சந்த மாமனத் தாமரை மல்கவே.

(இ—ள்) சதிவந்தனை செய்யும் அடியார்கள் மிகுதியும் கூடி சுகானுபோகம் அனுபவிக்கவும், சிவ நிந்தனை செய்கிற பாவிகள் கெடுதியடையவும், பாசபந்தவிருள் விலகிப்போக, ஹிருதயகமலமானது மலர்ந்து ஞானோதயம் விளங்கியிருப்பார். (எ-று)

47. வாழி யம்புய மாதுகா யத்திரி
வாழி யம்புயன் மாலொடு வான்பதி
வாழி யம்பிகை காதல ரடியார்
வாழி யம்புய மாதவர் வாழியே.

(இ—ள்) செந்தாமரைப் பூவில் வசிக்கிற மகாலெட்சுமி வாழ்க, காயத்திரியாகிய சரச்வதி வாழ்க, தாமரைப் பூவில் எழுந்தருளியிருக்கிற பிர்ம்மா வாழ்க, சகலலோக ரக்ஷகரான மகாவிஷ்ணு வாழ்க, தேவர்களுக்கு அதிபதியாகிய அமராபதி பட்டணத்தில் வசிக்கும் தேவேந்திரன் வா[illegible]கர்மங்களை யும் வளர்ந்தேறச் செய்யும் பார்வதி [illegible]ஸ்வரர் வாழ்க, சிவ கதாப்பிரசங்கம் செய்யும் பேரியோர்களும் நீடூழிகாலம் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

சுபம்.

11041